www.padippakam.com

# இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி

இ. சிவகுருநாதன்




படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி

இ. சிவகுருநாதன், எம்.ஏ.,
பிரதம ஆசிரியர் : தினகரன் (கொழும்பு)

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-600 108.

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : டிசம்பர் 1993
(C)

விலை : ரூ. 30

PROGRESS OF TAMIL JOURNALISM IN SRI LANKA
"ILANKAIYIL THAMIL PUTHINA PATHIRIKAIYIN VALARCHI"
by R. SIVAGURUNATHAN

| | | |
|---|---|---|
| First Edition | : | December 1993. |
| Pages | : | 230 |
| Size | : | 18 × 12.5cm. |
| Types | : | 10 Point |
| Binding | : | Duplex Board |
| Price | : | Rs. 30/- |
| Published by | : | Kumaran Publishers<br>27, 2nd Street, Kumaran Colony,<br>Vadapalani,<br>Madras-600 026. |

Printed by : SURYA ART PRINTERS
Madras-24.

படிப்பகம்

www.padippakam.com



**Dedicated To :**

Late ESMOND WICKRAMASINGHE

படிப்பகம்

www.padippakam.com



Late D. R. WIJEWARDENA
GIANT OF JOURNALISM
IN SRI LANKA

படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

இலங்கையின் தமிழ்ப் புதினப் பத்திரிகைகள் தோன்றி வளர்ந்த வரலாற்றினை அறிவதிலும், ஆராய்வதிலும் ஒரு பத்திரிகையாளனுக்கு ஆர்வம் தோன்றுவது இயல்பானதே. இத்தகைய ஆர்வம் எனது நெஞ்சிலே நெடுநாட்களாய் ஊன்றியிருந்தது. இவ்வார்வமே ''இலங்கைத்தமிழ்ப் புதினப் பத்திரிகை வளர்ச்சியில் 'தினகரன்' என்ற ஆய்வுக் கட்டுரையை நான் எழுதுவதற்குத் தூண்டுகோலாயிற்று.

எனது இவ்வாய்வு ஆறு பகுதிகளைக் கொண்டது. இதன் பகுதி ஒன்று 'தகவல் தொடர்பின் தோற்றம் வியாப்தி-உலக நிலைக் கண்ணோட்டம்' என்ற தலையங்கத்திலே அமைந்துள்ளது. உலகிலே வெகுஜனத்தொடர்பு சாதனங்கள் எவ்விதமான சூழ்நிலையிலே உருவாயின என்றும், அவற்றிலே பத்திரிகையின் தோற்றம் எதத்கைய படிமுறைகளுக்கூடாக வளர்ச்சி எய்திற்றென்றும் இப் பகுதி விவரிக்கின்றது. ஆதாரபூர்வமான குறிப்புகள் இல்லாவிடினும் தமிழ்ச் சமூகத்திலே வரலாற்றுக்கப்பாற் பட்ட காலங்களிலிருந்தே தகவல் பரிமாறும் அமைப்பு இருந்திருக்க வேண்டும் என்பதனை இந்தப்பகுதி நிறுவுகின்றது.

கி. மு. 131'ல் ரோமாபுரியின்பிரஜைகளால் நகரத்தில் பிரதான சதுக்கமான 'போரம்' எனும் அரங்கில் கையால் எழுதி வைக்கப்பட்ட மட்டைகளே பத்திரிகை என்ற தொடர்பு சாதனத்தின் ஆரம்பமெனலாம். படிப்படியாகவே அச்சுக்கலை உலக வியாபிதமுற்றது. இலங்கையில் தகவல் பரிமாற்றம் நீண்டகாலமாக நிலவிவந்ததெனினும் மேலைநாட்டார் வருகையின் விளைவாகவே இலங்கையில் பத்திரிகை என்ற உருவில் தொடர்புச்

www.padippakam.com



சாதனம் கிடைத்தது. இவை போன்ற விஷயங்களைச் சான்றாதாரங்களுடன் முதலாவது பகுதி விளங்குகின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய அந்நியர்கள் இலங்கையினைக் கைப்பற்றிய போதிலும் அவர்களின் கவனம் முக்கியமாக வியாபாரத்திலேயே செலுத்தப்பட்டிருந்தது பழைய மரபுகளை இவர்கள் தலையிட்டுக் குலைக்க விரும்பவில்லை. தகவற் சேவையை சீரமைப்பதில் மட்டுமே அக்கறை காட்டினர். 19-ம் நூற்றாண்டில் மிஷனரி இயக்கம் உலகெங்கும் மக்கள் வாழ்விலே பாரிய மாற்றங்களைச் கொண்டு வரலாயிற்று. பத்திரிகைகளின் தோற்றம் இவ்விளைவுகளுள் ஒன்று. இதோடு ஒட்டி சமயப் பிரசார துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்படலாயின. இலங்கையில் புதினப் பத்திரிகைகளின் சகாப்தம் 'கவர்மென்ட் கசெற்'றோடேயே ஆரம்பமாயிற்று. 1832'ல் 'கொழும்பு ஜேர்னல்', 'த ஒப்ஸேவர்', 'அட்வைஸர்', 1837'ல் 'சிலோன் குறோனிக்கிள்' என்ற தொடரிலே இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகையான 'உதய தாரகை' வெளிவரலாயிற்று. இதன் விளைவாக புதிய இயல்புகள் தோன்றின. தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் சீரான தோற்றத்திற்கும் வித்திடப்பட்டது. மேற்கூறிய தகவல்களை வரலாற்றுப் பின்னணியோடு இணைத்து ஆராய்கிறது. பிரித்தானிய ஆட்சிக்கு முன்னர் இலங்கைத் தமிழரிடையே தகவல் தொடர்பு வளர்ச்சி, மிஷனரிகளின் வருகை, அவர்களின் பணி' என்பது இரண்டாம் பகுதி.

'இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சி' என்ற மூன்றாம் பகுதி பிரித்தானிய ஆட்சியினால் இலங்கையில் விளைந்த அரசியல், சமுதாய, பொருளாதார மாற்றங்களின் ஊடாக இடம் பெற்ற பத்திரிகை வளர்ச்சிப் போக்கினை இனங்காட்டுகின்றது. மத்தியதர வர்க்கத்தின் தோற்றம், அச்சியந்திர வருகை, மதப்பிரசாரம் என்ற கட்டுகளின் விளைவு தோற்றுவித்த துண்டுப்பிரசுரங்கள், பத்திரிகைகள்

www.padippakam.com



ஆகியன எத்தகைய தர்க்கத்தை விளைவித்தன என்பதை இப்பகுதி விவரிக்கின்றது.

குறிப்பாக 'உதயதாரகை' பற்றிய ஆய்வுடன் 'உதயாதித்தன்', 'உரைகல்' என்ற பத்திரிகைகளின் தோற்றத்திற்கான வரலாற்றுத் தேவையும் ஆராயப்படுகின்றது. 'வித்தியாதர்ப்பணம்', 'இலங்காபிமானி', 'இலங்கைப் பாதுகாவலன்', 'இலங்கை நேசன்' வெளியான சமுதாயப் பின்னணியோடு நாவலர் இக்காலப் பகுதியில் இத்தொடர்பு சாதனங்களோடு கொண்டிருந்த தொடர்பும், பரிசீலிக்கப்படுகின்றது. சமுதாய, சமய வளர்ச்சியில் அக்கறை காட்டிய பத்திரிகைகள் அரசியலிலும் தம்மையறியாது பங்கு கொள்ளலாயின. நாவலர் பணியை 'உதயபானு' பத்திரிகை தொடரலாயிற்று. இந்தத் தொடரின் தர்க்க ரீதியான விளைவாக 1889-ம் ஆண்டிலே 'இந்து சாதனம்' தொடங்கப்பட்டது. பரசமய, விதேசிய எதிர்ப்புக் குரலோடெழுந்த 'இந்து சாதன'த்தின் பணி குறிப்பிடத்தக்கது. இக்காலத்திலே 'முஸ்லீம் நேச'னும் தோன்றுவது தவிர்க்க முடியாத தேவையாயிற்று. மேற்காட்டிய விஷயங்களை ஆதார பூர்வமான சான்றுகளுடன் இம்மூன்றாம் பகுதி நிறுவுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் பல்வேறு விதங்களிலும் முதன்மையும் முக்கியத்துவமும் பெற்றிருந்தது. பத்திரிகைகள் துறையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு மாற்றங் கொண்டது. உலக மகாயுத்தம், சுதந்திரப், போராட்ட இயக்கங்கள் என்ற நிகழ்வுகளினூடே மக்களின் அபிலாஷைகளும் வெவ்வேறு இயல்புகளை அடையலாயின. அரசியற் சுதந்திரத்தை நோக்கி இலங்கையரின் சிந்தனை வேகம் பெறலாயிற்று. இந்த சிந்தனைப் பிரவாகத்தின் வகை மாதிரியாகத் திகழ்பவரே 'தினகரன்' ஸ்தாபகர் டீ. ஆர். விஜேவர்த்தன. இந்திய தேசிய இயக்கத்தின் தாக்கத்துக்குட்பட்ட இவர் தொடக்கிய பத்திரிகைகளும் இக்கருத்தைப் பிரதிபலித்தமை

படிப்பகம்

www.padippakam.com



இயல்பே: 1930'ல் 'வீரகேசரியும்', 1932'ல் 'தினகரனும்' 1966'ல் 'தினபதியும்' தொடங்கப்பெற்றன. இப்பத்திரிகைகளின் வளர்ச்சியூடே 'தினகரன்'வகுத்த பாத்திர முக்கியத்துவம் உட்பட்ட மேற்கூறிய அம்சங்களை 'தினகரனின் தோற்றமும், தோற்ற கால வளர்ச்சியும்' என்று நான்காம் பகுதி உள்ளடக்கியுள்ளது.

தேசிய உணர்ச்சியும், இயக்கங்களும் பத்திரிகைத் துறையினை எவ்வாறு பாதித்தன என்பதையும், தேசிய இயக்கப் போக்குகளுக்கு எவ்வெவ்விதத்திலே களம் அமைத்துத்தந்தன என்ற விவரத்தையும் ஐந்தாம் பகுதி உட்பொருளாகக் கொண்டுள்ளது. தமிழ் மக்களின் அரசியற் சிந்தனைகள் எவ்வாறு அவர்களின் பத்திரிகை வாயிலாக, குறிப்பாக 'தினகரன்' மூலம் வெளிப்பாடு செய்யப்பட்டன என்பதை வரலாற்றுப் பின்னணியில் இப்பகுதி ஆராய்கின்றது. இதுவரை காலமும் இந்தியத் தாக்கத்திற்குட்பட்டிருந்த பத்திரிகைகள் அதனை விலக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளில் தினகரனே முன்னின்று இலங்கைப் படைப்பாளிகளுக்கு கைகொடுத்தது என்பதோடு, தேசிய இலக்கியம், மண்வாசனை, நவீன இலக்கியத்திற்கான பரந்த தளமிடல் என்ற கோட்பாடுகளை ஏற்று முன்னெடுத்துச் சென்றது என்பதையும் ஐந்தாவது பகுதியான 'இலங்கையின் தேசிய வளர்ச்சி நிலைகளும், தினகரனும்' என்ற தலையங்கம் விரிவாகவே ஆராய்கின்றது.

ஆறாவது பகுதியிலே, 'தினகரனும், இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சியும்' எடுத்துச் சொல்லப்படுகின்றது. 1932'லிருந்து தினகரன் எத்தகைய இலக்கிய செல்நெறிகளை தனது இயல்பாகக் கொண்டிருந்தது என்பதனை அதில் வெளியான கதை, கட்டுரை, கவிதைகள் மூலம் இப்பகுதி ஆராய்கின்றது. இந்திய தாக்கத்திற்குட்பட்டிருந்த 'தினகரன்' எவ்விதம் இலங்கைத் தமிழிலக்கியத்தையும், தேசிய இயக்கத்தோடிணைந்த 'தேசிய இலக்கியக் கோட்பாட்டையும்' ஏற்று இயங்கிற்று? பின்னர் புதிய

www.padippakam.com



தலைமுறை எழுத்தாளர்களை உருவாக்கிற்று? எவ்வாறு ஆய்வுத்துறை, பழந்தமிழிலக்கியம், புதுத்தமிழிலக்கியத்தின் பல்வேறு பிரிவுகள், மொழிபெயர்ப்புகள் இஸ்லாமிய இலக்கியம், நாட்டார் வழக்கியல், சமய இலக்கியம், நாடக சினிமா இயக்கங்கள், விமர்சனத்துறை ஆகிய பன்முகங்களிற்கும் தளமாயமைந்தது? என்பதனை அதனை உள்ளடக்க மூலமும், சமகாலப் பத்திரிகையான 'வீரகேசரி'யோடு ஒப்பிடுதல் மூலமும் இப்பகுதி நிருபணம் செய்கின்றது.

இந்த ஆறு பகுதிகளோடு முன்னுரை, முடிவுரை உட்பட தேசிய சுவடிக்கூடத்திலிருந்து பெறப்பட்ட தகவல்களடங்கிய பின்னிணைப்புகளும் இவ்வாய்வினுள் அடங்கியுள்ளன.

## 2

இவ்வாய்வு முதுமாணிப் பட்டத்துக்காகச் செய்யப்படும் புலமைநெறி சார்ந்த ஒன்று. இது காய்தல் உவத்தலின்றி எழுதப்படவேண்டுமென்பது விதியாகும்.

ஆனால் முன்னுரையில் ஆய்வாளன் தன்மை நிலை நின்று சிலவற்றைக் கூறுவதும் மரபு.

அந்த மரபினைக் கைக்கொண்டு நான் கூறவிருப்பவை, எனது ஆய்வின் தொடக்கம், நிறைவு பற்றிய விடயங்கள் மாத்திரமன்று. அந்த ஆய்வு நிறைவு பெற்று அத்தியாயங்களாக எழுதி முடிக்கப்பெற்ற பின்னரும், மீண்டும் இரண்டாம் முறையாக எழுதவேண்டி வந்த வரலாறு பற்றி நான் குறிப்பிடுவது அத்தியாவசியமாகின்றது. இவ்வாறு இந்த ஆய்வு முடிவுகள் இரண்டு தடவைகள் எழுதவேண்டி வந்தமை 1983'ல் தமிழர்க்கு ஏற்பட்ட துன்பநிலை பற்றிய வரலாற்றின் ஓர் அடிக்குறிப்பு ஆகும்.

1983 ஜூலை 25' இன் துன்ப நினைவுகளை என்றென்றும் தமிழன் ஒவ்வொருவனுக்கும் நினைவுறுத்திருக்கும் அழியா ஓவியமாக இது நிலைக்குமென்ற

www.padippakam.com



நம்பிக்கையும் எனக்குண்டு. அன்றைய நிகழ்வுகள் என்னிடம் ஏற்பட்ட உணர்வுகள், மனம் பட்ட சஞ்சலம் என்றும் என்னையும் தமிழ் மக்கள் அனைவரையும் வதைத்துக்கொண்டேயிருக்கும். என் உடலும் உயிரும் ஒல்றாக இருக்கும்வரை மட்டுமல்ல, அதற்குப் பின்னரும் ஏதாவது இருந்தால் நிச்சயமாக இவ்வுணர்வுகள் நீங்கமாட்டா.

எத்தனை சோதனைக்குள்ளிருந்து கொண்டு இக்கட்டுரையை நான் வரைந்தேன்? அமைதியாகவிருந்து எழுத வீடு வாசலில்லை. உடுக்க உடையில்லை. நான் படித்த நூல்களில்லை. சிறுபராயத்திலிருந்தே சேர்த்து வந்த சுமார் ஐயாயிரம் நூல்ப்பிரதிகளுக்கு மேல் இன்றில்லை. நான் எழுதிய பேனாவே இல்லையென்றால் என் நிலை என்ன? நடுத்தெரு நாராயணனாக ஒரு சில மணி நேரத்திற்குள் என்னை ஆக்கி விட்டார்கள் அந்தக் குண்டர்கள். சகல ஐஸ்வரியங்களுடனும் சகல சம்பத்துகளுடனும் ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தேன் என்று நான் கூற வில்லை. நான் சாதாரண பத்திரிகையாளனாக வாழ்ந்து வந்தவன். இக்கட்டுரை எழுதியபோது தினகரனில் எனது இருபத்தெட்டாவது ஆண்டு. இந்த இருபத்தெட்டாண்டு களில் இருபத்துமூன்று ஆண்டுகள் ‘தினகர’னின் ஆசிரியராக இருந்தேனெனினும் பத்திரிகை எழுத்தாளனாகவே வாழ்ந்தேன்.

ஜூலை 25-ந் தேதி காலை 10-00 மணியளவில் கொழும்பு வெள்ளவத்தைப் பகுதி தாக்கப்பட்டபோது எனது இல்லமிருந்த இராமகிருஷ்ண வீதி முதலில் தாக்கப்பட்டது. எனது வீட்டை உடைத்தார்கள், கொள்ளையடித்தார்கள், பின் தீயிட்டார்கள்.

‘தினகரன்’ காரியாலயத்துக்கு காலையில் சென்ற நான் குழப்பம் தொடங்கியதும் உடனடியாக வீடு திரும்ப முடியாத நிலையிலிருந்தேன். பஸ்களிலிருந்து தமிழரை வெளியே இழுத்து அடித்தார்கள். சிலர் கொல்லப்பட்டனர். ஊரடங்குச் சட்டம் இரண்டு மணிக்கு அமுலானதும் பொலிஸ் பாஸுடன் வாகனத்தில் வீடு சென்றேன்.

www.padippakam.com



வழியில் காடையர் கூட்டமொன்று வழி மறித்தது. சாரதியின் சமயோசித புத்தியால் உயிர் தப்பினேன். வீட்டின் ஒரு பகுதி சொக்கப்பனைபோல கொழுந்து விட்டெரிந்து கொண்டிருத்தது. கதவுகள் திறந்தபடியே கிடந்தன. பூச்சட்டிகள் உடைந்து அவற்றின் மேலே நூற்றுக்கணக்கான ஆட்கள் நடந்து சென்றது போன்ற குறிகள் காணப்பட்டன. மனைவியோ குழந்தைகளோ உள்ளே இல்லை. அறைக்குள் எட்டிப் பார்த்தேன், கட்டிலுக்கு மேலே ஏதோ கும்பலாகக் கிடந்தது. திகைத் தேன். மனைவி பிள்ளைகளைக் கொலை செய்துவிட்டுச் சடலங்களைச் சேலையால் மூடிவிட்டார்களோ என்று அஞ்சினேன். கைகளை மெதுவாக வைத்துத் தடவிப் பார்த்தேன். உள்ளே ஒன்றுமில்லை. தியாகப்பிரம்மத்தின் சமாதியில் நல்லை ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பி ராகபிரான் பூஜைசெய்து எமக்குக் கொண்டு வந்து தந்த மகளின்ருத்ர வீணையின் மேலே துணிகளைப் போட் டிருந்தார்கள். (பின்னர் காடையர்கள் இதனை முறித்துக் குப்பையில் போட்டிருந்தார்கள்.)

குடும்பத்தினர் தப்பிவிட்டார்களென்ற மகிழ்ச்சியில் உடனே அவர்களைத்தேடிச் சென்றுவிட்டேன். போகும் போது என் புத்தக அலுமாரிகள் சாம்பராகிக்கொண் டிருந்ததைக் கண்டேன். நான்கு வருடங்களாக நான் பாடு பட்டு எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரையும் சாம்பரோடு சாம்பராகிக் கொண்டிருந்தது. எதையும் செய்ய முடியாத நிலையில், தட்டச்சில் பொறிக்கக் கொடுத்த பிரதி, அரசகரும மொழித்திணைக்களத்தில் கடமையாற்றும் சடகோபனிடம் இருக்கின்றதுதானே என்று என்னைத் தேற்றிக் கொண்டு ஓடினேன்.

அகதிமுகாமில் சடகோபனைக் கண்டபோது கேட் டேன். அவர் ''எல்லாத்தையும் கொளுத்தி விட்டார்கள்'' என்று கூறியதும் திகைத்தேன். என் உள்மனம் அழுதது. என் செய்வது? என் விதிவசம்? விதி எனக்கு எப்போதும் சதி செய்கின்றது போலும் என்று நினைத்து அழுதேன்.

www.padippakam.com



இப்படித் துன்பப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் தான் ஒருவர் 'டைப்பிஸ்ட்' சடகோபனின் வீடு எரிய வில்லை என்றார். அவரது வீடு வெள்ளவத்தையில் கள்ளரும், காடையரும் எந்நேரமும் உலவும் ஒரு பகுதியில் ஒரு முடுக்கில் இருந்தது. எவ்வித அச்சமுமின்றி விடிந் ததும், விடியாததுமாக அவ்வீட்டுக்குச் சென்றேன். ஒட்டக் கூத்தருக்கு இரட்டைத்தாள்பாள் என்றது போல, பலகை கள் அடித்துவீட்டுக்கதவு மூடப்பட்டிருந்தது. அண்டை வீட்டாரிடம் கேட்டேன். ''பொருட்கள் உள்ளே இருக் கின்றன. பொலிஸார் பலகை அடித்துச் சென்றுள்ளனர், சடகோபன் இனி வரமாட்டார். ஏற்கனவே வீட்டு உரிமை யாளருடன் அவருக்குத் தகராறு உண்டு, வீட்டுக்கார ரையோ பொலிஸாரையோ பிடித்து உங்கள் பொருளை எடுக்கலாம்'' என்றனர். முன்னதாகவே தெரிந்திருந்தால் என் கட்டுரையை மீட்டெடுப்பது சுலபமாக இருந்திருக் குமே என்று எண்ணிக் கொண்டு அந்த வீட்டுக்காரரைத் தேடி அலைந்தேன். அவரோ பொலிஸார் தலையிட்ட தால் தலைமறைவாகி விட்டார். எவ்வளவோ முயன்றும் ஆள் அகப்படவில்லை.

இதற்கிடையில் ஒரு நாள் பொலிஸார் அந்த வீட்டுக்குள் புகுந்து தட்டச்சுப்பொறிகளை மட்டும் எடுத்து லொறியில் கரவெட்டிக்குச் சடகோபனிடம் அனுப்பிவிட்டார்கள் என்று அறிந்தேன். காகிதங்களாதல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பொலிஸில் சென்று விசாரித்தபோது அவற்றைப் பொலிஸார் பழைய காகிதம் விற்பவர் ஒருவருக்கு விற்றுவிட்டதாக அறிந்தேன். கரவெட்டியைச் சேர்ந்தவரும், சடகோபனை அறிந்தவரு மான பொலிஸ்காரர் ஒருவரே இதனை என்னிடம் தெரி வித்தார். வேதனைப்பட்டேன். வேறு என்ன செய்வது?

இதற்கு மேலும் தேடுதலை விடுத்து இரவு பகலாக எழுதத்துணிந்தேன். எங்கெங்கு தகவல் எடுத்தேன் என் பதும் தெரியும். அமெரிக்கன் சென்டர், லேக் ஹவுஸ் நூலகம், பொது நூலகம், பிரிட்டிஷ் கவுன்சில், இந்தியத்

படிப்பகம்

www.padippakam.com



தூதரகம், புராதன சுவடிகள் திணைக்களம் ஆகிய வற்றின் அதிகாரிகள் உறுதுணையாகவிருந்தனர். இவ் வகையில் என் இலட்சியம் நிறைவெய்தியதாக மகிழ்ச்சி.

ஆனால் நான் முதலில் எழுதிய பிரதி தொலைந்தது எனக்குப் பெரும் வேதனையாகும். இது என்றுமே நீங்காது. அப்பிரதியை எழுத எனக்கு உறுதுணையா யிருந்து வழி நடத்தியவர் மறைந்த பேராசிரியர் க. கைலாசபதி. இவருக்கு எவ்வாறு என் நன்றியைத் தெரிவிப்பது? முதுமாணிப்பட்டம் பெறவேண்டும் என்று உற்சாகப்படுத்தியவர் என் சகோதரியின் கணவரான, தந்தை போன்ற சபாபதி தியாகராஜா. என் கஷ்டங் களைக் கேட்பதற்கு முன்னரே இவர்கள் அமரத்துவம் எய்தி விட்டனர். இவர்களுக்கு என் அஞ்சலி.

ஆராய்ச்சிக்கட்டுரையை இழந்த நிலையில், இனி என்ன செய்வது என்று ஏங்கியிருந்த போதே திருப்பி யெழுதுமாறு உற்சாகமூட்டி உதவியளிக்க முன்வந்தார் உபவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள். இவரது ஆலோசனையும் வழி நடத்தலுமின்றி இக்கட்டுரையை நான் தயாரித்திருக்கவே முடியாது. மாணவப்பருவத்தி லிருந்தே என் வழிகாட்டியாகவும், ஞானகுருவாகவும் இருந்து எனக்குப் பலவழிகளிலும் உதவிய இவருக்கு என் அஞ்சலி.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, எனது நிலையை உணர்ந்து, தன் வேலைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு எனக்கு உதவியவர். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கொழும்புக்கு வந்தபோது கூட எனக்கு ஆலோசனை கூறினார். இவருக்கு எனது நன்றி.

பேராசிரியர் சி தில்லைநாதன், கலாநிதி. பொ. பூலோகசிங்கம், கலாநிதி. அ. சண்முகதாஸ் திரு. க. நவசோதி ஆகியோர் எனக்குப் பல வழிகளில் உதவிய வர்கள். இவர்களுக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்விஷயத்தில் எனக்கு உதவிய நண்பர்களுள், எழுத்தாளர் செ. யோகநாதனுக்கு விசேஷமான நன்றி.

படிப்பகம்

www.padippakam.com



தெரிவிக்கவேண்டும். தபால்சேவைகள் சீர்கெட்டுப்போன காரணத்தால் பஸ்மூலமே கட்டுரைப் பகுதிகளைக் கொழும்பிலிருந்து தினமும் கொடுத்தனுப்பினேன். இவற்றைப் பெற்று ஒழுங்கு படுத்தித் தட்டச்சில் பொறிப்பித்த இவருக்கு நன்றி.

கல்முனை சித்திக் காரியப்பர், சோவியத்தின் நொவஸ்தி காரியாலயத்தைச் சேர்ந்த பி. முத்தையன், முன்னாள்ஈழமுரசு,சுமுரசொலி எஸ். திருச்செல்வம் (எஸ்தி), நாவலாசிரியர் கே. டானியல், 'தினகரன்' யாழ்ப்பான நிருபராக இருந்த எம். செல்வராஜா ஆகியோர் பல வழிகளில் உதவியவர்கள். குறுகிய காலத்தில் தம்சிரமத்தையும் பொருட் படுத்தாது தட்டச்சில் எழுத்துப் பிரதியைப் பொறித்துத் தந்த நண்பர்கள் யாழ். கச்சேரி கி. பவானந்தனுக்கும், இலங்கை வானொலி எ. ஜெகநாதனுக்கும் எனது விசேஷ நன்றி. இந்த ஆய்வுக்கட்டுரையை புத்தக வடிவத்தில் பல்கலைக் கழகத்துக்குச் சமர்ப்பிக்க உதவிய நாவலாசிரியர் செங்கை ஆழியானுக்கு என் நன்றிகள் உரியன.

என் குடும்பத்தாருக்கு குறிப்பாக என் மனைவி தனரஞ்சிதமணிக்கு விசேடமாக என் நன்றியைத்தெரிவிக்க வேண்டும். பத்திரிகைக் காரியாலயத்தில் பெரும் பொழுதைக் கழித்துவிட்டு ஒரு சில மணிநேரமே என் குடும்பத்தினருடன் இருந்து வந்தேன். கட்டுரை வேலை தொடங்கியதும் இந்த ஒரு சிலமணி நேரம் தானும் இவர்களுடன் கழிக்க முடியாதிருந்தது. எதற்கும் சலிக்காது பொறுமையுடன் குடும்பப்பொறுப்பை ஏற்று நடத்திய இவருக்கு என் இதய நன்றி.

# 3

ஈழத்தில் தமிழ்ப் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சியிலே 'தினகர'னின் பங்களிப்பு என்ன என்பதனையே முக்கிய குறிக்கோளாக இவ்வாய்வு கொண்டுள்ள போதிலும் எனது நாட்டிலே வெகுசனத்தொடர்பு சாதனங்கள்

www.padippakam.com



ஆதிகாலத்திலிருந்து எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதனையும், குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகள் எத்தகைய சூழ்நிலையில் தோன்றி வளர்ச்சி கண்டன என்பதனையும் இலங்கைத் தமிழ் மக்களிடையே இந்த வெகுசனத் தொடர்பு வளர்ச்சிக்குத் 'தினகரன்' எவ்வாறு உதவி உள்ளது என்பதனையும் காலவரன் முறை அடிப் படையில் எடுத்தாயப் பெற்றதாக இக்கட்டுரை அமைந் துள்ளது.

ஆறுமுகம் சிவனேசச்செல்வன் முதுமாணிப்பட்டத் துக்குச்சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரைவீரகேசரி1930'ல்ஆரம் பிக்கப்பட்டது வரையுள்ள வரலாற்றைக் கூறினாலும், 'தினகர'னை டி. ஆர். விஜேவர்த்தன ஆரம்பித்த நோக் கத்தையும் இம்முயற்சியின் தாக்கத்தையும் தமிழ் மக்கள் அறியவேண்டும் என்று நினைத்தேன். ஏனென்றால் அரசியல் ரீதியில் 'தினகர'ஸின் உதயம் மிக முக்கிய மானது. 1932 வரை எந்தச் சிங்களவரும் பத்திரிகை நடத்த முன்வரவில்லை. விஜேவர்த்தன ஆகிய சிங்களக் கனவான் ஏன் தமிழ்ப்பத்திரிகை நடத்த முன் வந்தார்? நிச்சயமாக வியாபார நோக்கம் இவருக்கு இருக்கவில்லை. தேசிய ரீதியில் தமிழரும் சிந்திக்க வேண்டும். தேசிய நீர்ப்பிரவாகத்துடன் இவர்களும் சேர்ந்து போக வேண்டும்! ஒன்றுபட்ட நாடாகச் சகல இனத்தவருக்கும் சொந்தமான நாடாக, பல்வேறு இனங்கள் வாழ்ந்தாலும் எல்லோரையும் தன் பிள்ளைகள் என்று ஏற்கும் நாடாக இலங்கை என்றென்றும் திகழ வேண்டும் என்று அவர் விரும்பினார். அதாவது தமிழ் மக்கள் அன்று கொண் டிருந்த மனவியல்பு ஒரு காலத்தில் பிரிவினை இயக்கங் களைக் கூட உருவாக்கிவிடலாம், என்ற தீர்க்க தரிசனம் அவருக்கு இருந்தது. எனவே ஐக்கிய இலங்கையை உறுதிப்படுத்த வேண்டும் என்று விரும்பிய முதல் சிங்களத் தலைமகன் டி. ஆர் விஜேவர்த்தன என்பதனை உணர்ந் தேன். ஆதலின் இவரது பணியைத் தமிழ் மக்களும் பிறரும் அறிய வேண்டும் என விரும்பியே இவ்வாய்வை மேற்கொண்டேன்.

—இரத்தினதுரை சிவகுருநாதன்
கொழும்பு.

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


பக்கம்

முன்னுரை 5

**பகுதி : ஒன்று**

தகவல் தொடர்பின் தோற்றம் வியாப்தி-
உலகக் கண்ணோட்டம் 17

**பகுதி : இரண்டு**

பிரித்தானிய ஆட்சிக்கு முன்னர் இல்ங்கைத் தமிழ
ரிடையே காணப்பட்ட தகவல் தொடர்பு முறை
மிஷனரிகளின் வருகை, அவர்தம் பணி பற்றிய
ஓர் அறிமுக நோக்கு 35

**பகுதி : மூன்று**

இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில்
தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சி 58

**பகுதி : நான்கு**

தினகரனின் தோற்றமும், தோற்ற காலச்
சமூக அரசியற் சூழலும் 98

**பகுதி : ஐந்து**

இலங்கையின் தேசிய வளர்ச்சி நிலைகளும்
தினகரனும் 132

**பகுதி : ஆறு**

தினகரனும், இலங்கைத் தமிழிலக்கிய
வளர்ச்சியும் 159

முடிவுரை 192

பின்னிணைப்பு : ஒன்று 199

பின்னிணைப்பு : இரண்டு 221


படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்ப்புதினப் பத்திரிகையின் வளர்ச்சி

## பகுதி ஒன்று :

## தகவல் தொடர்பின் தோற்றம் வியாப்தி- உலகநிலைக் கண்ணோட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

பத்திரிகைத் தொழிலின் வரலாறு மனிதர் ஒருவரோடு ஒருவர் சுதந்திரமாகத் தொடர்பு கொள்ள எடுத்த நீண்ட கால முயற்சியின் வரலாறே. செய்திகளைச் சிரமப்பட்டு எடுத்து இவற்றை வியாக்கியானம் செய்து அர்த்த புஷ்டியுள்ள கருத்தைத் தெரிவிக்க மனிதன் எடுத்த நீண்ட போராட்டத்தின் கதை என்றும் இதனைக் கூறலாம். இவ்வரலாற்றின் ஒரு பகுதி தகவலும் கருத்தும் தடையின்றிப் பரவுவதனைக் கட்டுப்படுத்துவதற்கு உருவாக்கிய அணைகளை உடைத்தெறிய ஆண்களும் பெண்களும் எடுத்த முயற்சியே ஆகும். இக் கதையின் இன்னுமோர் அம்சம், செய்திகளும் கருத்துரைகளும் மக்களைச் சென்றடைவது பற்றியதாகும். கையெழுத்துப் பிரதிகள் காலம் தொடக்கம் அச்சிட்ட பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்கள் இதில் அடங்குவன. இக்கதையினைப் போன்று முக்கியமானவை இதில் சம்பந்தப்படும் பாத்திரங்கள். வெகுசன தொடர்பின் பாரம்பரியம் மக்களினது அரசியல், பொருளாதார, சமூக முன்னேற்றத்தோடு தொடர்பு கொண்டிருக்கும்போது இவை அனைத்தும் அர்த்தம் நிறைந்தவையாகத் தோன்றுகின்றன.[1]

வரலாற்றாசிரியர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போது கிழிந்து செல்லும் நிலையிலுள்ள மஞ்சள்நிறம் படிந்த பத்திரிகைகள், பருவ ஏடுகளின் தொகுப்பை அலசி ஆராய்வது இயல்பு. இந்நாட்களிலென்றால் மைக்கிரோ பிலிம்களை நோக்குவர்.[2]

முன்னொரு காலத்தில் சமகால நிகழ்வுகளாக இருந்தவை இன்று பழைமைக் காட்சிகளாகிவிட்டன. இன்றைய பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி தொலைக்காட்சி செய்தித் தொகுப்புக்கள் பின்னொரு

படிப்பகம்

www.padippakam.com



காலத்தில் நமது வரலாற்றை எழுத முயலும் ஆசிரியருக்கு மிக முக்கியமான தகவல்களாக இருக்கும். நூற்றாண்டு கட்கு முன்பு நிகழ்ந்தவை அன்று வாழ்ந்த மக்களுக்கு மிகவும் நிதர்சனமானவையாகவே இருந்திருக்கும். இன்றைய நிகழ்வுகள் எமக்கு எத்தனை முக்கியமான வையோ அதேபோல அன்றைய நிகழ்வுகள் அன்று வாழ்ந் தோருக்கு இருந்திருக்க வேண்டும். அன்றைய நிகழ்வு களின் விளைவும் தொடர்ச்சியுமே இன்று நாம் காண்பவை.[3]

மனித இனத்தின் நீண்ட வரலாற்றிலே தகவல் அறிவின் திறன் கோலாக இருந்தது. இன்று தகவல் தரப் பத்திரிகை உண்டு; வானொலி உண்டு; தொலைக்காட்சி உண்டு; ஆனால் தொடர்பு சாதனங்கள் என்று நாம் கொள்பவை தோன்று முன்னர் எமது மூதாதையர்கள் எவ்வாறு தகவல்களைப் பரப்பினார்கள்? எத்தகைய தகவல்கள் கிடைத்தன? எவ்வாறு கிடைத்தன? தகவல் ஏன் தேவைப்பட்டது?

தகவல்தொடர்பு வளர்ச்சி பற்றிப் பேசுவதாயின் பத்திரிகை பற்றியே பெரும்பாலும் பேச நேரும். ஏனென் றால் செலவு குறைந்த இலகுவான சாதனம் பத்திரி கையே. பத்திரிகையின் வரலாறு, மனிதன் தகவலைத் தேடி அறிவைப் பெற்ற மார்க்கத்தின் சரிதை என்றும் சொல்லலாம். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு லிம்டன் பிரபு பேனா, வாளிலும் பார்க்க வலியது என்று கூறியிருக்கின் றார். மக்கோலே பிரபு தகவல் சேகரிப்பாளர் வீற்றிருக் கின்ற ஆசனவரிசை ராஜ்யத்தின் நான்காவது அமைப்பு அம்சம் என்றிருக்கின்றார்.[4] இவ்வாறிருந்தும் தகவல் தொடர்புச் சாதனம் முக்கிய கவனம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. மேலை நாடுகளிலே ஓரளவுக்கேனும் வரலாற்றுத் தொகுப்பிருப்பினும் தமிழில் அதுபோன்ற தொடர்பான குறிப்பேடுகள் இல்லை.

www.padippakam.com



தமிழ்ச் சமூகத்திலும் தகவல் பரிமாறும் அமைப்பு ஏதோ வகையில் இயங்கி வந்தே இருக்கவேண்டும். தகவல் இயற்கையோடு இயைந்த ஓர் அம்சம். எத்தித் திரிகின்ற காக்கை உணவு இருக்கின்றது என அறிந்ததும் ஏனைய காகங்களுக்கும் கரைவதன் மூலம் அதனைத் தெரிவிப்பது இயற்கையான செயல். காகம் பறந்து திரிகின்றபோது உணவைக் கண்டுவிட்டால் தானே அதனை எடுத்துப் பதுக்குவோம் என்று மனிதனைப் போல நினைப்ப தில்லை. தன் சுற்றத்தை நினைக்கின்றது. "கா...கா" என்று கரைந்து அழைக்கின்றது. இவ்வொலியின் மூலம் உணவு இருக்கின்றது; "உடனே வந்து உண்ணுங்கள்" என்ற தகவல் அனுப்பப்படுகின்றது. இதனாற்றான் அழகே அற்ற காக்கையைக் கண்ட பாரதி, "அதற்கு இரக்கப்பட வேண்டும் பாப்பா"[5] என்று பாடினாரோ! பறவை, மிருகம், மனிதன் ஆகிய ஜீவன்கள் யாவுமே தகவலைப் பரப்பவும் பரிமாறிக்கொள்ளவும் பல வழி வகைகளைக் கையாள்வதனை நாளாந்த வாழ்க்கையிலே நாம் உணரலாம்.

இயற்கையிலே தகவல் முறை இருந்ததெனினும், மேலை நாடுகளிலேயே திட்டமான முறையில் தகவல் பரப்பும் ஏற்பாடு செய்யப்படலாயிற்று, என்பது தெளி வாகின்றது.

கி. மு. 131ல் ரோமாபுரியின் பிரஜைகள் நகரத்தின் பிரதான சதுக்கமான "போரம்" மைத் தாண்டிச் செல்லும்போது கையால் எழுதப்பட்ட இரு தகவல் ஏடுகள் மட்டை போட்டுத் துலக்கமாகத் தொங்கவிடப் பட்டிருப்பதனைக் கண்டிருக்கலாம். இதனை வாசித்த அறிவாளிகள் பல விஷயங்கள் பற்றிய தகவல்கள் இதில் தொங்கவிடப்பட்டிருப்பதனை அறிந்திருப்பார்கள். "அக்டா டயர்னா"- தின நிகழ்ச்சிகள் - என்று இந்த அறிக்கையைக் குறிப்பிட்டார்கள். இதில் செனட்சபை

www.padippakam.com



நடவடிக்கைகள், அரசாங்க விவகாரங்கள் இடம் பெற்றன. அக்டா பப்ளிக்கா என்பதில் பொதுவான விஷயங்களைக் கூறினர். இன்றைய பத்திரிகையின் முன்னோடிகள் இவையே என்றே வரலாற்றாளர் கொள்வர். கல்வி அறிவுள்ளவர்கள் வாசித்தார்கள். இத்தகையோர் வாசிப்பதனைக் கேட்டு விஷயங்களை அறிந்தனர் பலர். ஏனையோர் வாய்மொழி மூலமாக இவ்வறிவித்தலை அறிந்து கொண்டனர்.[6]

சில வேளைகளில் 'ஸ்கிறைப்' என்ற இலிகிதர் பிரதிகளை எடுத்தார். இரண்டாயிரம் பிரதிகள் எடுத்ததும் உண்டு. பல இடங்களுக்கு அனுப்புதற்காக இவ்வாறு பிரதிகளை எடுத்தனர். இத்தகவல் முறை மறைந்ததும் ஆயிரம் ஆண்டுகள் வரை புதிய முறை உருவாகவில்லை. தகவல் பரிமாறவேண்டும் என்ற **பிரக்ஞையும்** உணர்வும் மனிதனிடம் இருக்கின்றன. இது இயற்கை நியதி. ஓசை **எழுப்புதல்**, முகபாவங்கள், பேச்சு, இசை நடனம், ஓவியம் போன்ற பலவற்றால் இது விளக்கப்படும். உணர்வுகள் அபிலாஷைகள், தேவைப்பாடுகள் மனித நடவடிக்கைகளைத் திசை திருப்பியுள்ளன.[7]

தகவல் வாய்மொழி மூலமே பரவலாயிற்று; வேறு சாதனம் இருக்கவில்லை. தலைமுறை தலைமுறையாகத் தகவல் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. நாடோடிக் கதைகள் இவ்வாறே பரவலாயின. தகவலைப் பரிமாற வேண்டும் என்ற உணர்வு வழிப்பட்ட விருப்பு பதினாயிரம் ஆண்டுகட்கு முன்பு ஓவியங்களாகப் பிரதிபலித்தன. குகைகள், மலைச்சாரல்களில் இவை தீட்டப்பட்டன. இவற்றுள் சில இன்றும் நிலைத்து நின்று அன்றைய சமூகச் சூழலை எடுத்தியம்புகின்றன. அஸிரியா, சிரியா, பாரசீகம், இந்தியா, எகிப்து, சீனா ஆகிய நாடுகளிலே மண்கலங்கள், ஆயுதங்கள், நினைவுச் சின்னங்கள், புதைகுழிகள் ஆகியவற்றிற் பொறிக்கப்பட்ட சித்திர வேலைப்பாடுகளால் கருத்துக்கள் பரப்பப்பட்டன.

www.padippakam.com



காலகதியில் வர்த்தகத்தின் வளர்ச்சிகாணத் தொடங்கியதும் தகவல் அனுப்பும் வழிவகைகள் வளர்ச்சி காண வேண்டிய அவசியம் ஏற்பட்டது. புதிய உலக அமைப்பு உருவாக வேண்டி இருந்தது. கணக்கு விபரங்கள் குறிப்புகள் அவசியமாயின.

கி. மு. 3000ல் இன்றைய தென் ஈராக், கணக்கு முறையைக் கண்டுபிடித்தது. களிமண், பட்டயங்கள், பயன்படுத்தப்பட்டன. எகிப்து, சீனா, இந்தியா ஆகிய நாடுகளும் புதிய முறைகளைக்கண்டுபிடித்தன. பினீஷியர்களே எழுத்து முறையை நாடியவர்கள். இவர்கள் இன்றைய இஸ்ரேல், சிரியா, லெபனான் பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள். எழுத்து முறை இவர்கள் மூலம் வளர்ந்தது. சீனர்கள் காகித உற்பத்தியை அறிமுகப்படுத்தியதும் புதிய சகாப்தம் உருவாகத் தொடங்கிற்று.

மாற்றக்கூடிய அச்சுகள் மூலம் அச்சுப் பதிக்கும் முறையை ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்திய பெருமை மெயின்ஸ் ஸ்டிராஸ்பேர்கைச் சேர்ந்த ஜோஹன் குற்றைன்பர்க் (Johan Gutenberg) என்பவருக்கே நீண்டகாலமாக அளிக்கப்பட்டு வருகிறது.[8] சீன அச்சு முறைமையை இவர் அறிந்திருக்கவில்லை என்பது இன்று பலரால் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவரது முதலாவது பாரிய முயற்சி விவிலிய நூலை அச்சிட முயன்றமையே. இது 1456ல் நிகழ்ந்தது. குற்றைன்பர்க் வாங்கிய கடனைக் கொடுக்காததால் ஜோன்ஸ் பர்ட் வழக்குத் தொடர்ந்து வெற்றிகண்டு அச்சகத்தைப்பொறுப்பேற்று விவிலியத்தை வெளியிட்டாரெனினும் இந்த நூலை 'குற்றைன்பர்க்கின் விவிலியம்' என்றே அழைப்பர்.

15-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியைத் தொடர்ந்து அச்சகம் ஐரோப்பாவுக்கு வரும்வரை எத்தகைய தகவலையும் குறித்த ஒரு நேரத்தில் குறித்த ஒருதொகை மக்களுக்கு அல்லது எல்லோருக்கும் தெரிவிக்கக்கூடிய வழிவகை

படிப்பகம்

www.padippakam.com



இருக்கவில்லை. அச்சியந்திரம் வந்தவுடன் சூழல் ஓரிரவில் மாற்றியமைக்கப்பட்டது என்று கூற முடியாது. சுமார் மூன்று நூற்றாண்டுகள் கழிந்த பின்னரே வெளி உலகில் என்ன நடைபெறுகின்றது என்று சாதாரண மனிதன் அறிந்து கொள்ளக்கூடிய காலப்பருவம் உருவாகிற்று.[9]

தன்னைச் சுற்றியிருக்கின்ற உலகிலே என்ன நடைபெறுகின்றது என்பதனை அறிய மனிதன் இயல்பாகவே முயன்றான். இது உள்ளார்ந்த உந்துதலாகும். நடைபெறுவனவற்றைக் கண்டான். பரிசீலனை செய்தான். கருத்துக்களைப் பரிமாறினான். ''என்ன சேதி?'' என்ற கேள்வி எந்தச் சமூகத்திலும் எழுந்திருக்க வேண்டும். பல விதங்களில் இந்தத் தகவலைப் பெற்றான். அவற்றை உரிய முறையில் பயன்படுத்தினான். 1456க்கு முன்னர் கழிந்த பல நூற்றாண்டுகளில் மனிதன் தகவல் பெற எடுத்த முயற்சிகளும் அதற்குப் பின்னர் எடுத்த நடவடிக்கைகளுமே மனிதன் இருளில் இருந்து வெளிச்சத்துக்கு எவ்வாறு படிப்படியாக வந்தான் என்பதனைச் சொல்லும் சரிதையாகும்.

ஆதிகாலத்திலிருந்து மனிதன் தன் வாழ்க்கையில் பலவற்றைக் கண்டான்; உணர்ந்தான்; கேள்விப்பட்டான்; அனுபவித்தும் வந்தான்; கருத்துக்கள் உருவாகின. இவற்றின் அடிப்படையில் சில தீர்மானங்கள், முடிவுகள் காணப்பட்டன. இவற்றிற்கிணங்கவே செயற்பாடுகளமைந்தன. வீடுகளிலிருந்த போது குடும்பத்தினருடனும் வெளியே நண்பர்களுடனும் பரிச்சயமானவர்களுடனும் இவை பற்றிப் பேசினார்கள். தகவல்களைப் பரிமாறிக் கொண்டார்கள். இத்தகவல்களே செய்திகள் என வர்ணிக்கப்பட்டன. செய்தி என்பது அண்மைச்சம்பவம் ஒன்று பற்றிய அறிக்கை, தகவல்திரட்டு எனலாம். இச்செய்தித் தகவல்களில் சில அர்த்தமற்ற பேச்சு, வதந்தி, வாய்க்கு வந்தபடி கூறியவை (கொஸிப்) என்றும் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆண்களும் பெண்களும் அறியாதவை அல்லது

படிப்பகம்

www.padippakam.com



பூரணமாக அறியாதவை இவர்களைத் தவறான வழியில் செலுத்தியிருக்கலாம். இவை மனிதன் தன் வளர்ச்சிப் பாதையில் கண்ட அனுபவங்கள்.

முன்னாட்களிலும் ஒழுங்கு நீதியற்ற முறையில் தகவல்கள் கிடைக்கப் பெறலாயின. உதாரணமாக இராணுவ அதிகாரிகள், சமயத்தலைவர்கள் சிறு கூட்டத்தின் மத்தியில் பேசியபோது, இவர்கள் தெரிவித்த செய்திகள் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்தி களாயின. ஆனால் இச்செய்திகளை எல்லோரும் அறியும் ஏற்பாடிருக்கவில்லை.

கிரேக்க, ரோமர் காலங்களில் நிலைமைகள் மாறத் தொடங்கின. அறிஞர்களும், சமூகப் பிரமுகர்களும் தகவல் சேகரிக்க முயன்றார்கள். அறிந்தவை பற்றி எழுதி னார்கள். ஆனால் அன்று பல மொழிகள் இருந்தன. எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும் மிகக் குறைவே. எனவே கருத்தைப் பரவலாக்கும் முயற்சி இலகுவானதாக இருக்க வில்லை. பிரதி செய்வதும் மிகவும் வில்லங்கமானதா யிருந்தது. அச்சு முறையில்லை. இது தாமதமான ஏற்பாடாக இருந்தது. அக்கால அறிஞர்கள் தங்கள் சமூகத்தின் பண்பையும் மக்களின் வாழ்க்கை முறை களையும் எழுதிவைத்தார்கள். சிலரின் எழுத்துக்களைப் பிறகும் படிக்கக்கூடியதாக இருந்தது. சிலரின் கருத்துக்கள் வெளியே செல்ல வாய்ப்பே இருக்கவில்லை என்று ரிச்சர்ட் ஜெப் தெரிவித்திருக்கிறார்.

ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையே வாழ்ந்த புகழ் மிக்க கிரேக்க கவிஞர் ஹோமர் தனது இலியட்டிலும், ஒடீஸியிலும் கிழக்கு மத்திய தரைக்கடல் பிராந்தியத்தின் வாழ்க்கை முறையையும் சிந்தனையும் எடுத்துக் கூறியிருக்கின்றார். கிரேக்க நாட்டில் வாழ்ந்த பாரசீகத்தவரான ஹெரொடோட்டஸ் மத்திய கிழக்கிலும் மத்தியதரைக்கடல் நாடுகளிலும்

www.padippakam.com



சுற்றுப் பிரயாணஞ் செய்தவர். இன்று எமது விசேஷ நிருபர்கள் எழுதுவது போல தான் கண்டவற்றை எழுதி வைத்ததால் வரலாற்றின் தந்தை என்று அவரை உலகம் பாராட்டுகிறது. டெமோஸ்தனீஸ், பிளேட்டோ, பைதகரஸ், அரிஸ்டோட்டில், சோக்ரடீஸ், செனேக்கா ஆகியோர் ஏதென்ஸிலும் ரோமாபுரியிலும், சீன நாட்டிலே கொன்பியூஸியஸும் அக்கால நிலைபற்றியும் அதே காலத்தில் பிறநாடுகளில் வாழ்ந்தவர்கள் பற்றியும் சொல்லியிருக்கின்றார்கள்.

ஜூலியஸ் ஸீஸரைச் சிறந்தபோர்முனை நிருபர் எனலாம். இவரது ''கொமன்டரிஸில்'' ரோம் நாடு தென் பிரான்ஸிலுள்ள ''கேர்ல்'' இலும் மத்திய ஐரோப்பாவிலும் கி. மு. **58** முதல் **51** வரை நடத்திய பெருயுத்தங்கள் பற்றி விரிவாக எழுதியிருக்கின்றார். ஏழுதொகுதிகளாக இந்த 'கொமன்டரீஸ்' இருக்கின்றது.[10]

உள்நாட்டு யுத்தங்கள் பற்றியும் சாம்ராஜ்யம் அமைத்தமை பற்றியும் வேறு மூன்று தொகுதியில் அறிவிக்கின்றார்.

புளூடார்க் என்பவர் கி. பி. 100 அளவில் வாழ்ந்த பிரமுகர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைத் தந்துள்ளார்.

கி. பி. முதல் நூற்றாண்டிலே முதலாவது கிறிஸ்தவ பிரசாரகர் என்று கூறும் "பவுல்'' புதுவகையான தகவல்களைக் கொடுத்தார்.

யேசுநாதரைப்போல பெரும் மக்கள் கூட்டங்களுக்குப் பேசத் தொடங்கினார் இவர்கள் கூறிய கருத்துக்களைக் கேட்ட சிலர் குறிப்புக்களை எடுத்திருப்பர். இக்குறிப்புக்களே புதிய 'டெஸ்டமன்ட்' ஆகியன என்பர். மத்தியு மார்க் லியூக் ஜோன் ஆகியோரின் குறிப்புகளும் பயன்படலாயின. **1959**ல் வத்திகானுக்கு ஜனாதிபதி ஐஸன்

www.padippakam.com



ஹோவர்விஜயம் செய்தபோது செய்தி நிருபர்கள் மத்தியில்பாப்பரசர் ஜோன் XX111 "இப்போ அர்ச்சிஷ்ட பவுல் உயிருடன் இருந்தால் இவர் பத்திரிகை நிருபராக இருந்திருப்பார். பத்திரிகை மூலம் கிறிஸ்துவின் போதனைகளைப் பரப்ப முயன்றிருப்பார்" என்றார்.

எழுத்தின் உதவியை மனிதன் நாடு முன்பே தகவல் பரப்பப்பட்டு விட்டது. பலசாதனங்கள் பயன்படுத்தப் பட்டன. ஆபிரிக்கா, பொலினீஷியா போன்ற நாடுகளில் கோறை படிந்த மரக்குற்றிகளில் அடித்து ஒலி எழுப்புவதன் மூலம் தகவல் அனுப்பினார்கள்; இதனை 'ஜங்கிள் டெலிகிராவ்' என்பர். புராதன கிரேக்கத்தில் செய்திகளை எடுத்துக்கொண்டு ஓடுவோர் இருந்தார்கள். கிரேக்கர்கள் கடவுளர் என வணங்கிய ஹேர்மீன் கடவுளரின் செய்திச் சேவகர் எனக் கொள்ளப்பட்டார். ரோமர் மேற்கியூரிக்கு இவ்விடத்தைக் கொடுத்தனர். இந்துக்கள் செய்தி எடுத்துச் சென்று குழப்பம் விளைவிக்கும் நாரதருக்குத் தனியிடம் கொடுப்பர்.

தென் அமெரிக்காவின் அஸ்டீஸ் பிரதேசத்திலும் செய்தி கொண்டு ஓடுவோர் இருந்தனர். 'ரிலே' முறையில் இவர்கள் நீண்ட தூரம் ஓடினர். குதிரையும் சில நாடுகளில் பயன்படுத்தப்பட்டது.

பாரசீகத்திலிருந்து இன்றைய துருக்கி வரை (லிபியா) சைரஸ் மன்னன் குதிரை வண்டிகளில் தகவல் அனுப்பினான். ஜெங்கிஸ்கான் என்ற மங்கோலிய தலைவர் இந்தியா வரை இம்முறையைப் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆறாம் நூற்றாண்டிலே பிரிட்டனில் புகை எழுப்பி சமிக்ஞை கொடுத்தார்கள். அமெரிக்க இந்தியர்களும் இம் முறையைப் பயன்படுத்தினர். எகிப்தியரால் கி. மு. 300இல் புறா மூலம் தகவல் அனுப்பப்பட்டது. ரோம் நாட்டிலும் பாகுதாத்திலும் கி. பி. 1150 அளவில் இம்முறை காணப்பட்டது. ஜப்பான், சீனாவில் 16-ம்

www.padippakam.com



நூற்றாண்டிலேயே இது பயன்படலாயிற்று. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் புறா மூலம் செய்திகளை அனுப்பினர். 19-ம் நூற்றாண்டில் கூட ஒரு சம்பவம் நிகழ்ந்த இடத்திலிருந்து பத்திரிகைக் காரியாலயத்திற்கு புறா மூலம் 'படபிலிம்' அனுப்பப்பட்டது.

இவற்றைவிடப் பொது இடங்களில் நின்று அறிவித்தல், சூழ்கொண்டு ஓடுதல், மணி அடித்தல் ஆகிய வழிமுறைகளுமிருந்தன.

ஆரம்பகாலப் பத்திரிகைகள் ''ஸறியர்'' மேர்கியூறி ஹெரல்ட் டிரிபியூன், மெஸன்ஜர் என்றெல்லாம் பெயரிடப்பட்டதற்கு அன்றிருந்த தகவல் முறைகள் காரணமாக இருக்கலாம்.[11] ரோம் நாட்டின் அக்டா டயர்னா நீங்கலாகத் திட்டமான தகவல் சேகரிப்பு முறை கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலே சீன நாட்டிலேயே தோன்றிற்று என்பர். தாங் வம்சத்தைச் சேர்ந்த ஹுஸான்குசுங் (கி.பி. 712-756) சக்கரவர்த்தியாக இருந்தபோது பல துறைகளிலும் சீனா முன்னேறிற்று. வருடத்தில் இரண்டு முறைகள் பிரதி நிதிகள் சாம்ராஜ்யத்தின் பல பகுதிகட்கும் அனுப்பப்பட்டார்கள். இவர்களது அறிக்கைகள் அனால்ஸ் என அழைக்கப்படும். பிரதிகள் அதிகாரிக்கட்குப் கொடுக்கப்பட்டன.சீனாவில் அப்போது அச்சுமுறை இருந்தது. இதுவே வளர்ச்சி கண்டு பின்னர் தின அறிக்கையாயிற்று. 1830 அளவில் 'பீக்கிங் கசெட்' என்ற பெயரையும் பெற்று 1911 ல் சாம்ராஜ்யம் வீழ்ச்சி காணும்வரை இது வெளிவரலாயிற்று. உலகின் மிகப் பழைய அச்சுப் பிரசுரம் இது என்றே கொள்ளப்படுகிறது. ஏறத்தாழ 1200 வருடங்கள் வெளி வந்தது. பெரும்பாலும் அரசாங்கச் செய்திகளே இதில் இடம் பெற்றன. மார்க்கோபோலோ இந்த அரசாங்க அறிக்கைகள் பற்றிக் குறிப்பிடவில்லை. என்றாலும் இவர் அரசு முறை பற்றித் தனது குறிப்புக்களை விட்டுச் செல்லத் தவறவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



பொது இடங்களிலும் தேநீர்ச்சாலை,சந்தை போன்ற இடங்களிலும் செய்தி சொல்வோரும் இருந்தார்கள். கையில் பெருந்தடியொன்றினைக் கொண்டு செல்வார்கள். இவர்களைக் கண்டதும் மக்கள் கூடிவிடுவர். சொல் பவருக்கு கூடும் மக்கள் பணம் கொடுத்துச் செல்வர். லண்டனில் 17-ம் நூற்றாண்டு வரை இருந்த 'பலாட் சிங்கர்ஸ்' இத்தகையவர்களே, இந்தியாவில் சாதுக்கள் இதனைச் செய்தார்கள். இவர்கள் இன்றும் பின்தங்கிய பகுதிகளில் காணப்படுகின்றனர். கல்வி அறிவுள்ள இடங் களில் பத்திரிகை படித்துச் செய்து பரப்புவர். பிரான்ஸில் 'நோவலிஸ் டேய்' இப்பணியைச் செய்தனர். 14-ம் லூயி மன்னன் கால யுத்தச் செய்திகளை இவர்களே பரப்பினர்.

15-ம் நூற்றாண்டளவில் ஐரோப்பாவில் 'புனோட் ஷ்ட்' 'பிளைஷ்ட்' ஆகியவை தோன்றிவிட்டன. மர 'புளொக்'கில் இதனை அச்சிட்டனர். ஒரு பக்கத்தில் மட்டுமே அச்சுப் பதிவு இருந்தது. ஒரு செய்தி மட்டுமே சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இவையே முதல் முதலாக விற்பனைக்கு விடப்பட்ட செய்திப் பிரசுரங்கள். சந்தைகள், மக்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றில் இவை விற்கப்பட்டன. ஜெர்மானிய ராஜ்யத்திலேயே பெரும் பாலும் இவை காணப்பட்டன. முடிசூடல் வைபவம், போர் நிகழ்ச்சி என்பன இவற்றில் இடம் பெற்றன. ஜப்பானிலும் 'கலாராபான்' என்ற செய்தித்தாள் 16-ம் நூற்றாண்டில் வெளியிடப்படலாயிற்று.

தகவல்கள் இவ்வாறு கொடுக்கப்பட்டனவெனினும் செய்தி சேகரிப்பு பற்றிக் கவனம் எடுக்கப்படவில்லை. ஆட்சியாளர் தமது தேவைக்கே பயன்படுத்தினார்கள். படிப்படியாகச் செய்தித் தொகுப்புகள் உருவாகின. ஒஸ் றியா, ஒல்லாந்து, டென்மார்க், நோர்வே, வட அமெரிக்கா நாடுகள் போன்றவற்றில் இவை காணப் பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



ஐரோப்பாவில் அச்சுயந்திரம் பயன்படத் தொடங்கியதும் அரசாங்கத்தலைவர்களுக்குத் தலையிடி ஏற்படத் தொடங்கிற்று. அதிகாரத்துக்குச் சவால் விடுக்கும் கருத்துக்கள், பிரசுரங்கள் மூலம் பரவி விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது. எட்டாம் ஹென்றி மன்னனின் கீழ் இருந்த கருதினால் வூல்ஸ்லி, அன்று நிலவிய கருத்தை ஓரிடத்தில் தெரிவித்திருந்தார். அச்சுயந்திரத்தை நாம் அழித்தொழிக்க வேண்டும். இல்லாவிட்டால் அது எம்மை ஒழித்துக்கட்டிவிடும் என்றார். இதன். விளைவாக கட்டுப்பாடுகள் சிறிது சிறிதாகப் புகுத்தப்பட்டன.

பொதுமக்களைப் பொறுத்தவரையில், 17-ம் நூற்றாண்டிலேயே புதிய செய்தித்துறை தோன்றிற்று. கபேக்களும், தவறணைகளுமே இவை, பல தரப்பட்டவர்களும் இவற்றிற்கு வந்தார்கள். இங்கே செய்தித்தொகுப்புகள் வைக்கப்பட்டிருந்தன.

வொயிட் ஹவுஸ் இத்தகைய நிலையங்களுள் ஒன்று. 'வொயிட் நியூஸ்' இங்கேதான் உதயமாயிற்று. இதனைத் தொடர்ந்து தோன்றியதே 'வொயிட் விஸ்ட்' என்ற வர்த்தகச் செய்தி அறிக்கை.

எமக்குத்தெரிந்த வரையில் இன்று கிடைக்கும் மிகவும் பழமை வாய்ந்த பத்திரிகை 1609 ல் ஜெர்மனியில் வெளியிடப்பட்டது. எங்கே, எவரால் வெளியிடப்பட்டது என்பது தெரியவில்லை. காகிதம், அச்சு, அச்சுமுறை, அரசியல் சாரம் ஆகியவற்றினைக் கொண்டு இது வட ஜெர்மனியில் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று ஆய்வாளர் கூறுவர். ஸ்டிராஸ் போர்க், கொலோன், பிராங்போர்ட், பேர்லிஸ், ஹம்பர்க், லேசல், லியன்னா, அம்ஸ்டர்டாம், அன்ட்வர்ப் ஆகிய பகுதிகளிலும் அக்காலப் பகுதியில் பத்திரிகைகள் தோன்றின.[12]

முதலாவது லண்டன் பத்திரிகை 1621 இலும் பாரிஸ பத்திரிகை 1631 இலும் வெளிவந்தன. நீதிமன்றப்பத்திரிகையொன்று 1645 ல் ஸ்டொக்ஹோமில் வெளி வந்தது.[13]

www.padippakam.com



18-ம் நூற்றாண்டளவில் பத்திரிகைகள் வளர்ச்சிப் பருவத்தை அடைந்து விட்டன. செய்தித் தகவலுக்குப் பத்திரிகையையே நாடவேண்டிய நிலை உருவாகிற்று.

உலகின் பலநாடுகளிலும் காணப்பட்ட இவ்வியல்புகள் இலங்கையிலும் காணப்பட்டன. மேலை நாட்டவர் வருகையின் பின்னரே பத்திரிகைகள் இன்று நாம் காணுகின்ற முறையில் தோன்றினவெனினும் தகவல் பகிரும் கோட்பாடு நீண்டகாலமாக எமது நாட்டிலும் இருந்து வந்துள்ளது. குறிப்பாகத் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் தமிழ்நாட்டில் காணப்பட்ட இயல்புகள் சேய் நாடான ஈழத்திலும் காணப்பட்டன. டாக்டர் ஜீ. வி. மென்டிஸ் தனது புராதன கால இலங்கை வரலாற்றில் பின்வருமாறு கூறுகின்றார். **''இந்தியாவில் ஏற்பட்ட பெருமாற்றங்கள்; அரசியல், பொருளாதார, கலாசார, சமூக மாற்றங்கள் அனைத்தினதும் விளைவுகளை இலங்கையில் காணக்கூடியதாக விருந்தது'' என்று கூறியிருக்கிறார்.**[14] இந்திய உபகண்டத்தில் நடந்தவை இங்கேயும் நடைபெற்றே தீர்கின்றன. பூகோள ரீதியில் அருகே இருப்பதனால் மட்டுமல்லாது, இந்தியாவிலிருந்தே இலங்கை மக்கள் வந்தாராதவின் இத்தொடர்பு காணப்படுகின்றது.

இலங்கையின் பூர்வீகக் குடிகள் யாவர்? இயக்கரும் நாகருமே ஆதியில் இங்கிருந்தார்கள் என்பது வரலாற்றேடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்படும்உண்மை.[15] இயக்கர் நாகர் என்றால் யாவர்? நிச்சயமாக இவர்கள் சிங்களவர்கள் அல்லர். ஈழத்தில் ஆதிதொட்டு வாழ்ந்த இவ்விரு இனத்தினரும் திராவிடப் பெருங்குடி மக்கள் என்பர். தமிழர் என்றும் கூறுவது தவறாகாது.சிங்களவர் வங்காள தேசத்திலிருந்து இங்கே வந்தார்களென்றே கூறப்படும். அண்மைக்காலத்திலே இவர்கள் ஆரிய வம்சத்தினர் என்று கூறுவதற்காக வடஇந்தியாவிலிருந்து வந்தனர் என்றும் மொழி ஒருமைப்பாடு பல விடயங்களில் காணப்படு

www.padippakam.com



கின்றது என்றும் கூறுகின்றனர். இரத்தவழி உறவு என்ற காரணத்தினால் சட்ட ரீதியான திருமணத்துக்குத் தடை விதிக்கும் உறவு முறையிலான அண்ணன் சிங்கபாகுவும் தங்கை சிங்கவல்லியும் ஒன்று கூடித் தம்பதியராய் வாழ்ந்த தால் தோன்றிய விஜயன் தந்தையால் நாடு கடத்தப்பட்ட போது இலங்கையை அடைந்து குவேனி என்ற இயக்கப் பெண்ணைத் திருமணம் செய்ததால் பெருகிய இனமே சிங்கள இனம் என்பர். சிங்கபாகுவே சிங்கத்திலிருந்து தோன்றியவன் என்பதும் கர்ண பரம்பரைக் கதை.

இந்தியாவிலிருந்தே சிங்களவர் வந்தார்கள் என் பதனை சிங்களவரும் மறுப்பதில்லை. ஆரிய வம்சத்தினர் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைபவர்கள் சிங்கள வர். இந்தியாவில் என்ன நடந்ததோ அதனை இங்கே எதிர்பார்க்கலாம். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த இக் காலத்தில் கூட இந்தியாவில் வாந்தி பேதி, அம்மை நோய் பரவினால் ஒரு சில நாட்களுக்குள் இங்கே பரவி விடும் என்பதனை நாமறிவோம். குறிப்பாகத் தமிழ்நாடு எமக்கு மிக அண்மையில் இருப்பதனால் தமிழ்நாட்டு நட வடிக்கையின் பயனை ஈழத்தில் காணக்கூடும். சாதாரண சேலைப்புடவை அமைப்புகள்கூட இங்கே பின்பற்றப்படு வது சகஜமானது.

இந்நியதிக்கமையத் தகவல் தொடர்பு சாதனங்களும் தமிழ்நாட்டில் தோன்றிய பின்னரே இங்கே தோன்றின. தமிழ்நாட்டில் காணப்பட்ட தகவல் அனுப்பும் முறைகள் அனைத்தையும் இங்கேயும் காணக்கூடியதாக விருந்தது. தமிழ் மன்னர்கள் காலத்தில் பலமுறைகள் கையாளப்பட் டன. முரசு கொட்டுதல், சேமக்கலம் அடித்தல்,கோட்டை மதில்மேல் நின்று சங்கொலித்தல் அன்று அரசர்களால் பயன்படுத்தப்பட்டமுறைகள்.புறாமூலம் செய்தி அனுப்பு தல், குதிரை வீரர் மூலம் ஓலை அனுப்புதல் எல்லாம் தமிழ் மன்னர்கள் கையாண்ட வழிவகைகள் என்பது

படிப்பகம்

www.padippakam.com



சரித்திரக் கதைகளை வாசிக்கும் போது தெளிவாகும். சாசனங்கள், பழையசெப்பேடுகள், இவற்றைத் தெரிவிக்கின்றன. முறையான அரசாங்க நிர்வாகம் இருந்தபோது நிச்சயமாகத் தகவல் தொடர்பு முறையும் இருந்திருக்கவே வேண்டும். தமிழ்நாட்டில் தகவல் தொடர்பின் வரலாற்றை அறிவதற்குப் பல தடயங்கள் உள்ளன.

சங்க காலத்தில் வாழ்ந்த பாணர்கள் முதலிய புகழ் பாடும் கவிஞர் கூட்டத்தினர் அரசன் புகழைப் பரப்புபவர்களாகவே கொள்ளப்படல் வேண்டும். அவர்களது வாய் மொழிப்பாடல்கள் அரசர்களின் வரலாறுகளை எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளன என்பது இப்பொழுது ஏற்கப்படும் உண்மையாகும். சங்கப்பாடல் மரபிற் காணப்பெறும் செய்தியறிவானதென்பது மன்னனுக்குச் சில விடயங்களை மிகைப்படுத்திக் கூறுவதாகும். நாட்டு மக்களின் நிலை இவ்வழியில் எடுத்துக் கூறப்பட்டிருக்கலாம். இவ்வாறு நோக்கு முனையும் பொழுது தமிழ்நாட்டில், வீரயுக காலத்தில் தகவல் பரிமாற்றத்துக்குப் பாடகர்கள் (பின்பு புலவர்கள்) பயன் பட்டனர் என்று கூறலாம்.

அசோகச் சக்கரவர்த்தி காலத்திலிருந்து வளர்ந்து வந்த எழுத்து முறையின் வரலாற்றையும் அந்த எழுத்து முறையின் முதலாவது சான்றாக அமையும் எடிக்ற் கல்வெட்டுக்களையும், அக்கல்வெட்டுக்களின் படிப்படியான வரலாற்றையும் முக்கியமாக பல்லவ, பாண்டிய, சோழப் பேரரசுக் காலங்களில் அவை பயன்பட்ட முறையையும் நோக்கும்பொழுது கல்வெட்டுக்கள், தகவல் சாதனங்களாக அமைந்த முறைமை தெரியவரும். சமண முனிவர்களுக்குக் குகாதானம் செய்த செய்தி முதல், இந்துக் கோயில்களுக்கு வழங்கிய கொடைகள் பற்றிய விவரம் வரை, பிரமதேரஸக் கொடை முதல் காடு திருத்தி நாடாக்கியது வரை, ஆட்சி எல்லையை வரையறுத்தது முதல்

www.padippakam.com



ஊராட்சி முறையை நிர்ணயித்தது வரை பலவற்றுக்கு கல் வெட்டுக்கள் பயன்பட்டுள்ளன. இம்முறையில் நோக்கும் பொழுது கல்வெட்டுக்கள் அரசச் செய்திமடல்கள் என்று கொள்ளப்படத்தக்கவை.

போர்முனைச் செய்திகளைத் தெரிவிக்கவும், ஒற்றர் சேவை நடத்தவும் தகவல் முறை தேவைப்பட்டது. தொடர்பு சாதனம் இவ்வாறு இயல்பாகவே வளர்ந்து வந்துள்ளது. ஆனால் ஈழத் தமிழரின் வரலாற்றினை அறிவது எத்துணை கஷ்டமானதோ அதே போலத் தமிழர்களின் தொடர்பு சாதனங்களின் வரலாற்றை அறிந்து கொள்வதும் கஷ்டமானதே. மேலை நாட்டினர் வருகையுடன் அச்சுயந்திரம் வந்ததால் அச்சகங்களும் பத்திரிகைகளும் தோன்றினவெனினும் தகவல் தொடர்பும் பரிமாற்றமும் நீண்ட காலமாக இருந்து வந்தனவென்று தான் கொள்ள வேண்டும். திருகோணமலையில் திருக் கோணேஸ்வர ஆலயத்தினைக் கொண்டுள்ள பிடரிக் கோட்டையின் வாயிலிலே கல்வெட்டு ஒன்றினைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. ''முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப் பின்னே பறங்கி விடிக்கவே'' என்று தொடங்கும் வாசகம் கல்லில் செதுக்கப்பட்டிருக் கின்றது. அவ்வாலய வரலாற்றையும் எதிர்காலச் செய்தி யையும் நான்கு வரிகளில் மிக அழகாக ஒரு கவிஞர் சொல்லியிருக்கின்றார். இவைபோன்ற கல்வெட்டுகள், செப்பேடுகள் இன்றும் எத்தனையோ இருக்கின்றன.

த—3

படிப்பகம்

www.padippakam.com



## அடிக்குறிப்புகள்

1. Emery Edwin — The Press and America Page XV
Emery Michael
2. Desmond Robert — The Information Process Page X
3. மேற்படி பக். 10
4. மேற்படி பக். 1
5. பாரதியார் பாடல்கள் — பக். 2 வானவில் பிரசுரம்
6. Desmond Robert — The Information Process P. 1
7. மேற்படி பக். 2
8. மேற்படி பக். 11
குளத்தூரன் — தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சி (முன்னுரை)
9. Desmond Robert — The Information Process P. 11
10. மேற்படி பக். 15
11. மேற்படி பக். 16
12. Emery Edwin — The Press and America P. 3
Emery Michael
13. மேற்படி பக். 4
14. Mendis-Dr. G.C. — Early History of Ceylon
15. Parker. II — Ancient Ceylon - New Delhi — 1981 P. 11-15
Pathmanathan Dr. — History of Jaffna
16. Balendra Dr. — Trincomalee Bronzes P. 1.

படிப்பகம்

www.padippakam.com

# பகுதி இரண்டு

## பிரித்தானிய ஆட்சிக்கு முன்னர் இலங்கைத் தமிழரிடையே காணப்பட்ட தகவல் தொடர்பு முறை, மிஷனரிகளின் வருகை, அவர்தம் பணிபற்றிய ஓர் அறிமுக நோக்கு.

www.padippakam.com

இலங்கையிலே தகவல் பரிவர்த்தனை பல்வேறு வகைகளில் நடைபெற்று வந்ததெனினும் இன்று நாம் வெகுஜனத் தொடர்பு சாதனம் என்று கூறும் ஏற்பாடுகள் அன்றிருக்கவில்லை. மேலைத் தேசத்தவர்களே இந்நாட்டில் இவற்றை அறிமுகம் செய்து வைத்தனர். அவ்வகையில் தமிழுலகம் இவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது.

அந்நியர் ஆட்சியின் தாக்கம் என்ன என்று ஆராய முற்படும் மாணவன், போர்த்துக்கேயர் காலத்திலிருந்து எவ்வாறு எமது நாட்டு மக்களின் பண்பாடு படிப்படியாகப் பரிணாம வளர்ச்சி கண்டது என்பதனை அவதானிப்பது முக்கியமாகும்.

வெள்ளைப் பரங்கியர்கள் என்று பாரதி குறிப்பிட்ட மேலைத் தேசத்தவர்கள்[1] 1505-இல் இந்நாட்டுக்கு வந்ததும் புதிய சகாப்தமே ஆரம்பமானது எனலாம். மக்களின் நடை உடை பாவனைகளில் மட்டுமல்லாது நிர்வாக அமைப்பிலும் புரட்சிகரமான மாற்றங்களைக் காணக்கூடியதாகவிருந்தது. காற்றினதும், கடல் அலைகளினதும் எதிர்பாராப் போக்கினாலே போர்த்துக்கேயர் எமது நாட்டுக்கு வந்தார்களாயின் கறுவா மீது அவர்கள் கொண்ட மோகம் அவர்களை நீண்டகாலம் இங்கே வைத்திருந்தது என்று டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா 'பிரிட்டிஷ் படையாதிக்கத்தின் கீழ் இலங்கை' என்ற நூலிலே குறிப்பிட்டிருக்கின்றார்.[2] அரபுக் கடலிலே போட்டியில்லா வர்த்தகர்களாக இருந்த முஸ்லீம் வர்த்தகர்களை முறியடித்து வர்த்தக ஏகபோகம் நாடி வந்த போர்த்துக்கேயர் இலங்கையின் வாசனைத் திரவியங்களால் கவரப்பட்டனர். ஏலம், சாதிக்காய், கராம்பு ஆகிய பொருட்கள் அக்காலத்தில் மிகவும் தேடப்பட்ட

www.padippakam.com



பொருட்களாக இருந்தன. மேலை நாடுகளிலே மழைக் காலம் தோன்றியதும் கடுங்குளிரும், மூடு பனியும் உணவு பெறுவதனை வில்லங்கமாக்கின. அன்று மின்சார வசதிகள் இருக்கவில்லை. குளிர்சாதன ஏற்பாடுகளை அறியாத காலம் அது. உணவுப் பொருள்கள் கெட்டுப்போகாது சேமிக்கும் வழிவகைகள் அன்றிருக்கவில்லை. சரக்குப் பொருட்களையும் உணவு வகைகளை முக்கியமாக இறைச்சி, மீன் போன்ற கெட்டுப்போகும் உணவுப் பொருட்களைப் பதப்படுத்திப் பலநாட்கள் வைத்திருக்கத் தேவைப்பட்டன. தற்செயலாக வந்தடைந்த நாட்டிலே இவை பெருமளவில் இருந்ததனைக் கண்டதும் போர்த்துக் கேயர் மகிழ்ந்தனர். இவற்றை எடுத்துச் செல்கின்ற ஏக போக உரிமை தம்மிடமே இருக்க வேண்டும் என்று விரும் பினார்கள். இதனால் இலங்கையில் தமது ஆட்சியை நிலைநாட்ட முயன்றார்கள். பழைய சிங்கள நிர்வாக முறையை தமது தேவைக்கேற்ற வகையில் மாற்றி அமைத் தார்கள். கோட்டைகள் கட்டப்பட்டன. இலங்கையிலி ருந்த போர்த்துக்கேயரின் தேவைக்காக தேவாலயங்கள் அமைக்கப்பட்டன. கத்தோலிக்க வேதம் நாட்டில் புகுத் தப்பட்டது.[3] சைவமும். பௌத்தமும் அருகருகே வளர்ந்து வந்த நாட்டிலே புதிய மதம் ஒன்று புகுத்தப்பட்டதினால் மக்களிடம் வரவேற்பு இருக்கவில்லை. எனவே பலவந்த மாகப் புகுத்த முயன்றார்கள். இம்முயற்சி வெற்றி அளிக்கவில்லை. நிர்வாகத்தைத் திறம்படக் கொண்டு நடத்த உள்நாட்டவர் ஆதரவு தேவைப்பட்டது. வேறு மொழி பேசி வேறு சமயத்தைப் பேணும் மக்களிடம் அதிகம் எதிர்பார்க்க முடியாதிருந்தது. எனவே சமயப் பிரசாரம் செய்து தங்கள் மதத்தில் சிலரைச் சேர்த்தால் உண்மையான ஆதரவாளர் கிடைப்பர் என்றுஎண்ணினர். ஒரு சிலர் மதம் மாறினார்கள். இன்றுள்ள கத்தோலிக்க சமூகம் இவர்களின் பணியால் தோன்றியதே. எனினும் வர்த்தகப் பெருக்கத்துக்காக ஆதரவு தேட முயன்றனரே

www.padippakam.com



யொழிய நிரந்தரத் தாக்கத்தை இங்கே ஏற்படுத்த வேண்டும் என்ற சிந்தனையேஇவர்களுக்கு இருக்கவில்லை. போர்த்துக்கேய நிர்வாகத்தில் பிரகடனங்கள், அறிக்கைகள் தகவல் சாதனங்களாக இருந்தன. இப்போதும் இவற்றுள் சில விஸ்பனிலுள்ள ஏட்டுச் சுவடி நிலையத்திலும், லண்டன் மியூஸியத்திலும் காணப்படுகின்றன.[4]

நீதி நிர்வாகத்தில் கூட இவர்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. நடைமுறையிலிருந்த நீதி நிர்வாக முறையே பின்பற்றப்பட்டது. வழக்காறுகளுக்கு மதிப்பளிக்கப்பட்டது. கரையோரப் பிராந்தியத்தில் ஓரளவுக்குப் போர்த்துக்கேய நிர்வாகம் பலவற்றைச் செய்யக் கூடியதாயிருந்ததெனினும், உள்நாட்டிலே எதையும் செய்ய முடியாத நிலை இருந்தது. யாழ்ப்பாணமும் வன்னிப் பிரதேசமும் பாரம்பரிய மரபுகளைப் பேணிப் பாதுகாத்தன. தகவல் அனுப்பும் முறைகளும்மாறவில்லை. ஆனால் மேலை நாட்டவரின் சம்பிரதாயப்படி நிர்வாக அறிக்கைகள் தயாரிக்கப்படலாயின. இது புதுமையான ஓரம்சம். பறைசாற்றலும், கல்வெட்டும் காணப்பட்ட ஒரு நாட்டிலே அறிக்கைகள் அறிமுகமானதால் புதிய தொடுவானம் உதயமாயிற்று. தகவலை இவ்வாறு பரப்ப முடியும் என்று அறிவு தோன்றிற்று. கத்தோலிக்க வேதம் விவிலிய நூலைக் கொடுத்து, திருப்பலி பூசையென்றும், பாஸ்க் காட்சியென்றும் மக்கள் ஆலயத்தில் கூடச் செய்த போது தகவல் தொடர்பு வளர்ச்சி காணும் நிலை உருவானது.

கூட்டு வழிபாட்டு முறை, பிரசங்கம் தமிழருக்குப் புதியவை. தேவாலயத்திலோ புதிய வழிபாட்டு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. தாழ்ந்த ஜாதியினரும் ஆலயம் சென்று சமத்துவத்துடன் தொழும் நிலை உருவானது. எனவே மேலும் மேலும் சுதேசிகளின் ஆதரவு பெருகிற்று. வர்த்தக வளர்ச்சிக்காக இவர்கள் எடுத்த நடவடிக்கைகள்

www.padippakam.com



ஓரளவு தாக்கத்தை ஏற்படுத்தினவேயொழிய திட்டமான பெருமாற்றத்தைத் துரிதப்படுத்தவில்லை. என்றாலும் இவர்கள் வந்திறங்கிய இலங்கைத் துறைமுகத்திலிருந்து விஸ்பனுக்கு அனுப்பிய அறிக்கைகள் செய்தி ஏட்டின் முன்னோடி என்றே கொள்ளவேண்டும்.

போர்த்துக்கேயரைத் தொடர்ந்து நிர்வாகத்தை நடத்திய ஒல்லாந்தரும் படிப்படியாகவே தமது ஆட்சி முறைகளை இங்கே புகுத்த முயன்றார்கள். மரபுக்கு இவர்களும் மதிப்பளித்தனர். யாழ்ப்பாணத்து முதலியார்களிடம் கவர்னர் கோர்ஸீலியஸ் சிமன்ஸ்ஸின் ஆலோசனையின் பேரில் கிளாஸ் ஐஸாக்ஸ் காட்டி அங்கீகாரம் பெற்ற தேசவழமை இன்றும் நடைமுறையிலுள்ளது. இது யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கின்ற மலபார் வம்சத்தினரின் சமூக வாழ்க்கை மரபுகள் பற்றிய நிரந்தர தகவல் அறிக்கையாக இருந்தது.[5]

ஒல்லாந்தர் நீதி நிர்வாக முறையைப் புகுத்தியதோடு தகவல் முறைகளையும் சீராக்க முயன்றனர். பட்டேவியாவிலிருந்து முஸ்லீம் சட்டக் கோவையைக் கொண்டுவந்து இங்குள்ள மார்க்கப் பெரியார்களுக்குக் காட்டி அங்கீகாரம் பெற்றதும் அமுல் செய்தார்கள். ''பட்டேனியன் பேப்பர்ஸ்'' இவர்கள் உருவாக்கிய அறிக்கை.அறிக்கைகள் செய்திகளைக் கொடுப்பவை. வழக்கு முன்தீர்ப்புக் கோட்பாட்டை நீதிமன்ற விசாரணையில் அங்கீகரித்ததால் முன்தீர்ப்பு முக்கியமானதாயிற்று. எனவே பட்டேனியச் சட்ட மன்றங்களின் தீர்ப்புக்களும் உள்நாட்டு வழக்காறுகளும் பற்றிய தகவல் ஏட்டில் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. தகவல் சேர்க்கும் முறை கையாளப் பட்டதெனினும் இத்தகவலைப் பொதுமக்கள் தினமும் அல்லது வாரத்துக்கொருமுறையேனும் படித்தறியும் வாய்ப்பு இருக்கவில்லை. அவ்வப்போதே பிரகடனங்கள் செய்யப்பட்டன. நிர்வாக மொழியாக டச்சு மொழி

படிப்பகம்

www.padippakam.com



இருந்ததால் பெரும்பாலும் முக்கிய ஆவணங்கள் அந்த மொழியிலேயே காணப்பட்டன. சுதேசி மொழிகள் பயன் படுத்தப்பட்டனவெனினும், தகவல்துறை வளர்ச்சிக்கு இவை பயன்படுத்தப்படவில்லை.

1658 முதல் 1796 வரை ஒல்லாந்தர் இங்கு ஆட்சி நடத்தினரெனினும் இவர்களின் செல்வாக்கு பொருளா தாரத் துறையிலேயே பரவி இருந்தது. வைத்திய சாலைகள், தொழுநோயாளர் மடங்கள் கட்டப்பட்டன வெனினும் மக்கள் ஆதரவு பெருமளவில் கிடைக்கவில்லை. பலவிதமான வரிகளை விதித்து மக்களைச் சுரண்டினர். தலைவரி, பயிர்வரி, உத்தியோகப்பணம் போன்றவை விதிக்கப்பட்டதனால் மக்கள் வெறுப்படைந்தனர். இந்துக்கள் கொடுமைப்படுத்தப் பட்டனர். திரிசூலத்தைச் சிலுவை என்று காட்டிச் சிப்பாய்களை சைவர்கள் ஏமாற்ற வேண்டியிருந்தது.

விரதம் அனுஷ்டித்தவர்கள், சோறு உண்ண உபயோ கித்த வாழை இலையை கூரையில் சொருகி மறைக்க வேண்டி இருந்தது. காலச்சூழலால் அன்று உருவான பழக்கம் இன்றும் சிலரிடம் காணப்படுகிறது. புரட்டஸ் தாந்து வேதம் பரப்பப்படுவதற்குப் பலவந்த முறைகள் கையாளப்பட்டனவாதலின் இச்செயல் பின்னர் ஆங்கிலே யருக்குப் பிரச்சினையைக் கொடுத்தது. கத்தோலிக்க தேவாலயங்களே மதம் மாறியவர்களுக்குப் பயன்பட லாயின. யாழ்ப்பாணத்திலே தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. சமயத்தின் மூலமாக தனது ஆதரவை ஸ்திரப்படுத்தலாம் என்று கிழக்கு இந்தியக்கம்பனி (ஸி.ஓ.ஸி) நம்பிற்றுப் போலும். இதன் மூலம் ஒல்லாந்தை சக்திமிக்க வர்த்தக நாடாக்க முடியும் என்று நம்பிற்று.

ஒல்லாந்திலிருந்து வந்த டச்சு சீர்திருத்திய மார்க் கத்தை நன்கு அறிந்திருந்த குருமாருக்கு அதனைப் பரப்பும் ஆர்வம் இருக்கவில்லை. பெரும்பாலான

படிப்பகம்

www.padippakam.com



குருமார் இலங்கை மொழிகளை அறிந்து கொள்ள முன்வரவில்லை. ஆதலினால் கிறிஸ்தவ போதனையை அதில் நம்பிக்கையில்லாத உள்ளூர் உபாத்திமாரிடம் விட்டுவிட்டனர். கிறிஸ்தவர்களுக்கே வசதிகள், உத்தியோகங்கள் கிடைத்ததால் இன்று அரசாட்சி செய்யும் கட்சியை ஆதரிப்பவர்கள் போல அன்று பலர் கிறிஸ்தவர்களாக நடித்தனர். ஒருமுறை கிறிஸ்தவ கோயிலில் சோதித்த போது கிறிஸ்தவ புத்தகங்களுடன் சைவசமயப் புத்தகங்கள் இருந்தனவாம். 1766ல் யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவ திரு முழுக்குப் பெற்றவர்கள் 182426 பேர் இருந்த போதிலும் திருச்சபையின் பூரண அங்கத்தினராயிருந்தோர் 64 பேர் மாத்திரமே.[7]

புரட்டஸ்தாந்து மதம் ஆரம்பத்திலிருந்தே புத்தகங்களிலேயே பெருமளவு தங்கியிருந்தது. கத்தோலிக்க திருச்சபை வேதாகமத்தை கவனிக்காது விடுத்து திருச்சபைப் பாரம்பரியங்களை அவதானித்தது. புரட்டஸ்தாந்து இயக்கத்தில் வேதாகம ஆய்வும் பயிற்சியும் முதன்மைபெற்று விளங்கின. புரட்டஸ்தாந்து இயக்கத்தை ஆரம்பித்து வைத்த முக்கிய சிந்தனையாளர்களான மாட்டின் லூதர், ஜோன் கல்வின், உன்றிக் சுலிங்கிலி, பிலிப் மெலந்தஸ் போன்றவர்கள் நூல்களை எழுதித் தமது கொள்கைகளை வலியுறுத்தினர். இந்தச் சமயத்திற்கும் நூல்களுக்குமிடையே இருந்த பிணைப்பு, பிரசாரப் பணிகளுக்கும் அச்சு யந்திரசாலைகளுக்குமிடையே ஒரு நிரந்தரத் தொடர்பை ஏற்படுத்தின. தகவல் பரப்ப அச்சை உபயோகிப்பதில் நம்பிக்கை கொண்டிருந்தவர்கள் இவர்கள்.

தமிழ் வளர்ச்சிக்கு மேனாட்டார் ஆற்றிய தொண்டு அளப்பரியது.[8] இந்த மதங்களின் பங்களிப்பு என்ற விடயம் விரிவான ஆய்வுப் பரப்புடையது. தமிழைப் பொறுத்தவரையில் மட்டுமன்றி வேறு மொழிகளிலும்

www.padippakam.com



மதம் எத்துணை பங்களிப்பைச் செய்துள்ளது என்பதனை உலக மொழிகளினதும் இவற்றில் எழுந்த இலக்கியங் களினதும் வரலாற்றை ஆய்கின்ற மாணவர்கள் உணரத் தவறமாட்டார்கள். குறிப்பாகக் கீழைத் தேசங்களிலே மதமும் இலக்கியமும் ஒன்றுக்கொன்று ஆதாரமாகப் பின்னிப்பிணைந்து வளர்ந்திருப்பதனையும் அவதானிக்க லாம்.

இன்று அரசியல் தத்துவங்களைப் பரப்புவதில் நாடுகள் அக்கறை கொண்டுள்ளன. இதேபோல பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஐரோப்பிய நாடுகள் உலகனைத்திலும் கிறிஸ்தவத்தைப் பரப்ப முயன்றன.

புரட்டஸ்தாந்து மதத்தின் செயற்பாடுகள் குறிப்பாக இச் சந்தர்ப்பத்தில் ஆராயப்பட வேண்டியன. பதினா றாம் நூற்றாண்டிலே இம்மதப் பிரிவு தோன்றிற்று எனலாம். இது வளர்ச்சியடைந்தமைக்கு முக்கியமான காரணம் கத்தோலிக்க திருச்சபை, வேதாகமத்தை அசட்டை செய்து திருச்சபைப் பாரம்பரியத்துக்கு முக்கியத்துவம் வழங்கிற்று என்றே புரட்டஸ்தாந்திகள் கூறுவர். புரட்டஸ்தாந்தி இயக்கத்தில் வேதாகம ஆய்வும், பயிற்சியும் முதன்மை பெற்று விளங்குகின்றன.[9]

கிறிஸ்தவத்தின் இம்மதப் பிரிவை ஆரம்பித்தவர் மார்ட்டின் லூதர். முக்கிய சிந்தனையாளர்கள் ஜோன் கல்வின், உன்றிக் சுலிங்கிலி, பிலிப் மெலந்தஸ் போன்ற வர்கள் பெரும் அறிவாளிகள். இவர்கள் ஆரம்பத்தி லிருந்தே பிரசுர முறையை பயன்படுத்தி எழுதினார்கள். புரட்டஸ்தாந்திகள் தமிழ் நாட்டுக்கு வந்து தமது மிஷினரிப் பணியை ஆரம்பித்தபோது தமிழ் மொழியில் புதிய ஒரு துறையிலே துரித வளர்ச்சி காணப்பட்டது. தமது சமயத்தைக் கீழைத்தேயங்களில் பரப்ப வேண்டு மென்ற பேரவாவுடன் வந்தவர்கள் பத்தலமேயு, சீகன் பால்கு, வில்லியம் கேரி ஆகியோர்—இவர்கள் பிரசுரங்

www.padippakam.com



களின் மூலமே சமயப் பிரசாரம் செய்தனர். யேசு சபைக் குருமார் என்ற கத்தோலிக்க இயக்கத்தினரும் முன்பு சமயப் பிரசாரத்தை ஆரம்பித்தனர். அவர்கள் அச்சியந் திரத்தைப் பயன்படுத்தினார்களெனினும் குறிப்பிடத் தக்க விளைவுகளை அப்பணி ஏற்படுத்தவில்லை. பின்னரே பிரசாரத்திற்குப் பிரசுரம் பயன்படத் தொடங் கிற்று.

மத நிறுவனங்கள் இவ்வாறு செயற்பட அரசியல் நிர்வாக பீடம் அன்று இடம் கொடுத்தது. ஏகாதிபத்தி யத்தின் செறிவை அடிமனதிற் கொண்டு கிழக்கே இயங்கிய நிறுவனங்கள் சமயத்தைப் பயன்படுத்த எண்ணின. மதம் கிழக்குலக மக்களின் வாழ்க்கையோடு பிணைந்துள்ள ஒன்றாகும். மதத்தின் மூலமாக எதையும் சாதிக்கக்கூடியதாகவிருந்தது. இன்றும் சமயம் பயன் படுத்தப்படுவதனை நாம் காணமுடிகிறது.

அதிகாரப் பெருக்கத்திற்கும், விஸ்தரிப்புக்கும் உதவிய மதத்தை ஏகாதிபத்தியம் விரிவடையவும் மேலைத்தேசத் தவர்கள் பயன்படுத்த எண்ணியதில் வியப்பில்லை. போர்த்துக்கேய ஒல்லாந்த ஆட்சிகளின் போது அரசும் மதமும் பிரிக்கப்படமுடியாதபடி ஒன்றாகப்பிணைந்து கிடந்தன. பிரித்தானிய ஆட்சியோடு புரட்டஸ்தாந்து மிஷனரி இயக்கங்கள் இலங்கைக்குள் வர அனுமதிக்கப் பட்டு அவை தொழிற்படத் தொடங்கியதும் ஆங்கில ஆட்சியின் தேவைகள் பலவற்றைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வியக்கங்களைப் பயன்படுத்தக்கூடியதாகவிருந்தது.

மிஷனரிமாரின் பங்களிப்புப் பற்றிப் பேசுகின்றபோது அமெரிக்க மிஷனையே எவரும் மனதில் கொள்வது வழக்கம். அதுவும் மசாசுசெற்ஸ் மாநிலத்தினையும் அங்கு தோன்றிய பக்தி இயக்கத்தையும் மறந்து விடமுடியாது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்காவிலே இருந்த சூழ்நிலை காரணமாக மிஷனரி இயக்கம் உருவாகிற்று.

www.padippakam.com



பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சமயக் கொள்கைகளையும் அரசியல் போக்கையும் விரும்பாத ''பியூறிற்டன்ஸ்'' அமெரிக்காவில் குடியேறினர். இந்த ''பில்கிறிம் பாதர்ஸ்'' புதிய இங்கிலாந்தைத் தோற்றுவித்தனர். அவர்கள் நம்பிய சமயக் கோட்பாடுகளைத் தடையின்றிப் பின்பற்ற இது வசதியளித்தது. குறுகிய காலத்திலே ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.

மசாசுசெற்ஸ் மாநிலம் புத்திஜீவிகளின் உறைவிடமாக விளங்கிற்று. அச்சகம் கூட இங்கேதான் அமெரிக்காவில் முதன் முதலாகத் தோன்றிற்று. இதன் தலைநகரம் பொஸ்டன். இன்றும் இது சிறப்புடைய நகரம். 1690இல் பெஞ்ஜமின் ஹாரிஸ் என்பவர் அமெரிக்காவின் முதல் பத்திரிகையான ''பப்ளிக் ஒக்கறன்ஸஸ்-பொத் போறின் அன்ட் டொமஸ்டிக்'' (Public Occurances Both Foreign And Domestic) என்ற பத்திரிகையை வெளியிட்டனர் 1734இல் பக்தி இயக்கமும் தோன்றிற்று.

இங்கிலாந்துடன் நடத்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிர பங்கு எடுத்த மாநிலங்களில், மசாசுசெற்ஸ் ஒன்று. சுதந்திர உணர்வும் அறிவு வளர்ச்சியும் கொண்ட மக்கள் வாழ்ந்த இடமாதலின் மனித இனத்தின் ஈடேற்றத்திற்காக உழைப்பதே இலட்சியம் என்று கொண்ட பக்தி இயக்கம் ஒன்று இங்கே தோன்றிற்று, என்பது எவருக்குமே ஆச்சரியத்தை அளிக்க முடியாது. சாமுவேல் மில்ஸ் என்பவரின் வழி நடத்தலின் இவ்வியக்கம் வியத்தகு முறையில் வளர்ச்சி காணத் தொடங்கிற்று. மில்ஸுடன் உழைத்த ஜேம்ஸ் ரிச்சர்ட், எல். றொபின்ஸன், எச். லூயிஸ், பி. கிறீஸ் ஆகியோர் மிஷனரிகளின் முன்னோடிகள். பிரதேசங்களுக்குச் சென்று தமது சமயக் கருத்துக்களைப் பரப்புவதற்குத் தங்கள்வாழ்க்கையை அர்ப்பணிக்க முடிவு செய்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



'கொங்கிறிகேஷனல் (Congregational) திருச்சபையால் நியமித்த குழு செய்த சிபார்சை அடுத்து 1810ல் அமெரிக்கன் மிஷன் சங்கம் உருவாகிற்று.[10]

இங்கிலிஸ் கிழக்கு இந்தியக் கம்பெனி வர்த்தகத்திலே தான் கவனம் செலுத்திற்று. வர்த்தகம் பெருக வேண்டும், அதிகாரம் செறிய வேண்டும் என்றிருந்தது. மதத்தில் நாட்டம் கொள்ளவில்லை. மிஷனரிமார் வெறுக்கப் பட்டனர். இந்தியாவில் இவர்களுக்கு ஏற்ற சூழ்நிலை இருக்கவில்லை. எனவே புதிய இடங்களை நோக்கினர்.

இவ்வேளையில் தான் சாமுவேல் நியூவெல் மனைவி குழந்தையை இழந்த கவலையில் இருந்தபோது பம்பாய்க்குச் செல்ல விரும்பிப் புறப்பட்டார். ஆனால் அவரை ஏற்றிவந்த கப்பல் பம்பாய் செல்லவில்லை. நேராக இலங்கையில் காலித்துறையை அடைந்தது. இவ்வாறு நிகழ்ந்தபோது இலங்கை நிர்வாகம் கிழக்கு இந்தியக் கம்பனியிடமிருந்து எடுக்கப்பட்டு பிரிட்டிஷ் அரசின் நேரடி நிர்வாகததுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அன்று கவர்னராக இருந்தவர் றொபர்ட் பிறவுன்றிக் என்பவர் (1812 - 1820). மிஷனரிமாரின் பணிக்கு இவரே ஆதரவு நல்கினார்.

கவர்னரின் அந்தரங்கச் செயலாளராக இருந்தவர் வண. ஜோர்ஜ் பிசெட் என்பவர். இவர் சீமாட்டி பிறவுன்றிக்கின் சகோதரர்.[11] சுதந்திர ஆட்சி நடத்திய கண்டி ராஜ்யம் பிறவுன்றிக்கின் காலத்திலேயே வீழ்ந்தது. இதுவும் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் வந்தது. கவர்னர் நோர்த் தோல்வி கண்ட விஷயத்தில் இவர் வெற்றி கண்டார். இதனால் மூன்றாம் ஜோர்ஜ் மன்னரின் பிறவுன்றிக்கின் இலச்சினையில் கண்டி மன்னரின் முடிசெங்கோல், கொடி ஆகியவற்றினைப் பொறிக்கும் உரிமையைக் கொடுத்துச் சிறப்பித்தார்.

www.padippakam.com



அயர்லாந்தைச் சேர்ந்த பிரவுன்றிக் இராணுவத்தில் சேர்ந்து முதலில் அமெரிக்காவிலேயே கடமையாற்றியவர். இதனால் அமெரிக்க மிஷனரிகள் இவருடன் தொடர்பு கொண்டபோது பகை உணர்ச்சியோ சந்தேகமோ இன்றி அவர்களின் சமயப் பணியை மேற்கொள்ளப் பூரண சம்மதம் அளித்தாரெனலாம். கிறிஸ்தவ சமயத்தைச் சுதேசிகளுக்குப் பரப்புவதே தான் மிகவும் விரும்பிய பணி என்று இவர் குறிப்பிட்டிருக்கின்றார். ஒல்லாந்தருடைய அதிகாரம் மறைந்த பின்னரும் அவர்களுடைய வாழ்க்கை முறையின் தாக்கம் சமூகத்தின் சில தரப்புகளில் காணப் பட்டே வந்தது. எனவே புரட்டஸ்தாந்து பிரசாரமும் சிற்சில பகுதிகளில் தொடர்ந்து நடந்தே வந்தது. அமெரிக் காவிலிருந்து வந்த நியுவெல் யாழ்ப்பாணத்தில் பிரசாரம் செய்வது இலகுவானது என்று தெரிவித்ததால் அமெரிக்கன் மிஷன் சங்கம் யாழ்ப்பாணத்தில் தீவிர கவனம் எடுத்தது.

அமெரிக்கர் கிறிஸ்தவர்களாயினும் இலங்கையை ஆண்டு வந்த பிரிட்டிஷாருக்கு இவர்கள் வேற்று நாட் டவரே. எனவே இவர்கள் கொழும்பில் நிலைபெறுவதனை பிரிட்டிஷ் அரசாங்கம் விரும்பவில்லை. யாழ்ப்பாணத்துக் குச் சென்று பணியாற்றும்படி கூறினார்கள். அமெரிக்கா வுடன் பிரிட்டன் கெத்து உடன்படிக்கையை 1814 ல் செய்து கொண்டதும் இந்நாடுகட்கிடையே நல்லுறவு வளரத் தொடங்கிற்று.[13] இங்கிலிஷ் கிழக்கு இந்தியக் கம் பெனியின் செயல் களமும் இக்காலப்பகுதியில் விஸ்தரிக்கப் பட்டது. வர்த்தகத்தில் வளர்ச்சிகாண்பதோடு குடியேறிய நாடுகளில் கிறிஸ்தவ தத்துவம் பரவ ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் பணிக்கப்பட்டது.[14] இத்தகைய சூழ்நிலையிலேயே 1816 ல் அமெரிக்க மிஷனைச் சேர்ந்த முதல் மிஷனரிமார் நியூ பெரி போர்ட் துறைமுகத் திலிருந்து புறப்பட்டு கொழும்பு வந்தடைந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



யாழ்ப்பாணம் செல்லுமுன்னர் சில காலம் கொழும்பில் தங்கியிருந்து தமிழ் பயின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இவர்களுக்கு ஒல்லாந்தர் பயன்படுத்திய தேவாலயங்கள் கொடுக்கப்பட்டன. முதலில் வண. எட்வர்ட் வாரன் தரை மார்க்கமாகக் குதிரை மீது சவாரிசெய்து யாழ்ப்பாணம் சென்றார். மிஷனரிமாருக்கு வேண்டிய தங்குமிட வசதிகளை இவர் செய்தார். ஏனையோர் பாதுகாப்பாகச் செல்வதற்காகப் பாய்க் கப்பலில் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.வண. ஜேம்ஸ் ரிச்சர்ட்ஸ்; திருமதி. ரிச்சர்ட்ஸ், வண, டானியல் புலவர், வண.பி.ஸி. மைக்கல், திருமதி மைக்கல் ஆகியோரே கப்பலில் வந்தவர்கள்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இன்று இனவெறிச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் பாதுகாப்புக் கருதியே பஸ்ஸில் அல்லாது கப்பலில் அனுப்பப்படுகிறார்கள். 1958 ல் இனக்கலவரம் நடைபெற்றபோது தமிழ் அகதிகள் அனுப்பப்பட்டார்கள். 1958 இலும் இதனைச் செய்து உதவியவர் கிறிஸ்தவத் தமிழரான அல்பிரட் தம்பியையாவே. எனவே, பாதுகாப்பாகச் செல்வதற்கு கப்பலே சிறந்தது என்ற கருத்து அன்றே இருந்தது எனலாம்.

''யாழ்ப்பாணம் வந்தடைந்த மிஷனரிகளில் சிலர் தெல்லிப்பழையிலும் ஏனையோர் சில காலம் யாழ்ப்பாணத்திலும் வாழ்ந்த பின்னர் வட்டுக்கோட்டையில் குடியேறினர். இதனாலேயே இவ்விரு இடங்களும் மிஷனரியின் பெருந்தளங்களாக மாறின எனலாம்.[15]

மிஷனரிமாரின் பணி வெகுவானதாக இருக்கவில்லை. ஒல்லாந்தர் காலத்தில் இருந்த நிலை காரணமாக இவர்களில் நம்பிக்கை கொள்ள மக்கள் தயங்கினார்கள். ஒல்லாந்தர் காலத்தில் பலர் உத்தியோகங்களுக்காக மதம் மாறினர். எனினும் அவர்கள் உண்மையில் கிறிஸ்தவத்தை

படிப்பகம்

www.padippakam.com



ஏற்கவில்லை. பலவந்தப்படுத்தப்பட்டதாலும் சலுகை களைப் பெறலாம் என்றெண்ணியதாலுமே மதம் மாறி னார்கள். ரிச்சர்ட் லவல் என்பவர் லண்டன் மிஷனரி சங்க வரலாற்றில் ஒல்லாந்தரின் பணியைப் பற்றிக் குறிப் பிட்டபோது ஞானஸ்நானம் பெற்றோர் எப்போதும் புத்த பகவானையே வழிபட்டார்கள் என்கிறார்.

இதே நிலைதான் யாழ்ப்பாணத்திலும் இருந்திருக்க வேண்டும். போர்த்துகேயரும் ஒல்லாந்தரும் நீண்ட காலம் ஆண்டார்களெனினும் தமிழர்களைப் பொறுத்த மட்டில் சமூக வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை இவர்கள் ஏற்படுத்தவில்லை. யாழ்ப்பாணப் பகுதி அமெரிக்கர் களுக்குப் பிரச்சினைகளைத் தோற்றுவித்தது. போக்கு வரத்து வசதிகள் இருக்கவில்லை. வைத்திய வசதிகள் இருக்கவில்லை. பிரசவகால மரணம் அதிகமாயிருந்தது. சாதி அடிப்படையில் சமூகம் அமைந்திருந்தது. அடிமை முறை இருந்தது. நிலவுடமை முறை இருந்தது. இப்படி யிருந்தும் மிஷனரிகளின் மனம் தளரவில்லை. திடசங்கற் பத்துடன் சேவையை ஆரம்பித்து நடத்தினர்.

1819 இல் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இரண்டா வது மிஷனரி குழுவே பெரும் தாக்கத்தை ஏற்படுத்திற் றெனலாம்.வண. மைரன் வின்ஸ்லோ, திருமதி வின்ஸ்லோ வ. வூட்வேட், திருமதி. வூட்வேட், வண. லீவைஸ் போல்டிங். திருமதி. ஸ்போல்டிங், டாக்டர் ஜோன் ஸ்டகர், திருமதி. ஸ்டகர் ஆகியோர் யாழ்ப்பாணம் வந் தடைந்ததும் இவர்களது நாட்டம் பல துறைக்குச் சென்றது. பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. மிஷன் தன் முழு ஆற்றலையும் பிரயோகித்தது. மக்கள் மனநிலை யிலும் மாற்றம் ஏற்பட்டது. வாழ்க்கை முறையிலும் இதன் பிரதிபலிப்பைக் காணக்கூடியதாகவிருந்தது. இவர் களைத் தொடர்ந்து பல மிஷனரிமார் வந்தார்கள். ஆசிரியர்கள், வைத்தியர்கள், மதபோதகர்களாக வந்து

படிப்பகம்

www.padippakam.com



தம்பணியால் மக்களின் உள்ளங்களில் அழியா இடம் பெற்றதோடு பல வழிகளில் தமிழும் தமிழ் இனமும் மேலோங்க உதவினர். தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களுள் கலாநிதி. ஹொய்ஷிங்டன், டாக்டர் சாமுவேல் கிறீன், வண. ஹவுலன்ட் ஆகியோர் மறந்திட முடியாதவர்கள். இவர்களில் கலாநிதி புலவர் பத்திரிகை வளர்ச்சியில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தவர்.

பத்திரிகை வெகுஜன தொடர்பு சாதனமாக நன்கு பணியாற்றும் என நம்பியவர். அச்சு யந்திரம் வைத்திருந்த நல்லூர் ஸி. எம். எஸ். மிஷனரியான வண. ஜோசப் நைற்றின் சகோதரி ஆன் என்பவரைத் திருமணம் செய்ததால் பிரசுர வேலைகளை நன்கு அறிந்திருந்தார். பின்னர் 'உதயதாரகை' பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போது பல அரிய சமயக் கட்டுரைகளை எழுதினார். வண. ஸ்போல்டிங் வட்டுக்கோட்டை செமினரி தோன்ற அயராது உழைத்தவர். தொடக்கவிழா வழிபாட்டை இவரே நடத்தியவர். மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டவர். வண. மைரன் வின்ஸ்லோ பத்திரிகையின் முன்னோடியான துண்டுப் பிரசுரங்களில் ஈடுபட்டவர். இவருக்குப் பதிலளிக்கு முகமாகவே சென்னை சதுர் வேத சித்தாந்தச் சபையார் கண்டன நூல்களை வெளியிட்டனர். வின்ஸ்லோவின் தமிழ்-ஆங்கில அகராதி என்றும் இவர் புகழ் பாடும் வட்டுக்கோட்டை. செமினரியின் அதிபராகவிருந்து அரும்பணியாற்றிய கலாநிதி ஹொய்ஷிங்டன் (Hoisington) விஞ்ஞானக் கல்வியில் ஈடுபாடு கொண்டிருந்தவர்.

டாக்டர் சாமுவேல் பிஸ்க்கிறீன் இன்றும் நினைவில் இருப்பவர். மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த ஆஸ்பத்திரி இருக்கும் வரை இலங்கைத் தமிழர் இவரை மறக்க மாட்டார்கள். அமெரிக்க மசாசுசெற்ஸ் மாநிலத்தவராயினும் யாழ்ப்பாணத்தைத் தன் பிறப்பிடம் போலக் கருதி



படிப்பகம்

www.padippakam.com



உழைத்தவர், இவரே. முதலில் வைத்தியகல்லூரி ஆரம்பித்து 1850இல் முதல் இலங்கை டாக்டர்களை உருவாக்கியவர். வைத்தியக் கல்விக்கு வேண்டிய நூல் களைத் தமிழாக்கம் செய்தவர். தமிழ் மொழியில் வைத்திய போதனை ஆரம்பித்த சிறப்பு இவருக்கு உண்டு. கலாநிதி சாமுவேல் ஹவுலண்டும் துண்டுப் பிரசுர வெளியீட்டில் ஈடுபட்டவர். ''உதயதாரகை''யின் ஆங்கில ஆசிரியராகப் பல்லாண்டுகள் கடமையாற்றிய வர்.

அமெரிக்க மிஷனரிமார் இங்கு வந்தபோது இவர்கள் போதித்த கிறிஸ்தவம் இலங்கை மக்களுக்குப் புதிதாக இருக்கவில்லை. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கிறிஸ்து வின் போதனைகளை முன்னரே அறிமுகப்படுத்தியிருந் தனர். ஆனால் அவர்கள் எடுத்த பிரசார நடவடிக் கைகள் பலனளிக்கவில்லை. மக்கள் கிறிஸ்தவத்தை ஏற்கும் மனப்பக்குவத்தை அடையவில்லை. பிரசாரம் செய்தார்களேயொழிய போதனைகளை மக்கள் ஏற்கிறார்களா என்று கவனிக்கவில்லை.

தமிழ் மக்கள் கல்வியில் ஆர்வம் கொண்டவர்கள். எனவே, பாடசாலைகள் தமிழர் சமூகத்தில் முன்னிலை பெற்றன. போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், பள்ளிக் கூடங்களை நிறுவி கல்வி போதித்தனர். எழுத வாசிக்கக் கற்றுக் கொடுத்ததோடு கத்தோலிக்க நெறி, போர்த்துக் கேயர் பண்பாடு பற்றியும் போர்த்துக்கேயர் நிறுவிய பாடசாலைகளில் போதித்தார்கள். மதகுருமார் தேவைப் பட்டதனால் நல்ல மாணவர்களைக் கத்தோலிக்க திருச் சபையின் மடங்களுக்கு அனுப்பிக் குருமார் பயிற்சி அளித்தனர். என்றாலும் இவர்களுடைய முயற்சிகள் பெருவெற்றி அளிக்கவில்லை.

ஒல்லாந்தர் ஆட்சியில் பிரசார வேலைகளையும் பள்ளிக்கூடங்களையும் அரசாங்கமே பொறுப்பேற்று நடத்திற்று.

www.padippakam.com



மதப் பிரசாரம் நடைபெற்றதேயொழியத் தமிழ் மொழி வளர்ச்சி காணவில்லை. தமிழ் இலக்கியம் வளர்ச்சி காணவில்லை.

இந்நிலையில் இலங்கைக்கு வந்த ஆங்கிலக் கிழக்கு இந்திய கம்பெனி கோயிற் பற்றுப் பாடசாலைகளை மூடிற்று. இவற்றில் அக்கறையே காட்டவில்லை.

பிரடெரிக் நோர்த் கவர்னராக வந்ததும், கல்வி வளர்ச்சியில் ஆர்வம் காட்டினார். பாடசாலைகளைத் திறப்பித்தார். ஆனால் நிதி நெருக்கடியால் இவற்றை உரிய முறையில் நடத்த முடியாது போயிற்று, சுதேசிகள் திண்ணைப் பள்ளிகளை நடத்திக் கல்வி கற்பித்தனர்.

கல்வி போதனை சீரழிந்து போன நிலையிலேயே அமெரிக்கன் மிஷன் இதில் அக்கறை கொண்டது. பள்ளிக் கூடங்களை ஆரம்பிக்க முயன்றனர். பள்ளிக்கூடங்கள் மூலமாகக் கல்வியோடு தங்கள் சமயக் கருத்துக்களையும் பரப்பலாம் என நம்பினர். இளம் உள்ளங்களைக் கவர்ந்தால் நிரந்தர பயன் கிடைக்கும் என்ற கருத்து கால கதியில் நிரூபிக்கப்பட்டது. கட்டாயப்படுத்திக் கிறிஸ்தவர்களாக்குவதிலும் நம்பிக்கையால் மதம் மாறச் செய்வதே பயன்தரவல்லது என்று நம்பி சிறுபிராயத்திலேயே சமய அறிவு புகட்டினர். பள்ளிக்கூடங்கள் மிஷனின் செயற்களமாயின. 1819ல் பதினைந்து பள்ளிக்கூடங்களே இருந்தன. 1884 அளவில் 138 தமிழ்ப் பாடசாலைகள் உருவாகிவிட்டன.[16] பெண்களுக்கெனத் தனியே பாடசாலை நிறுவினர். 1824ல் ஹரியட் வின்ஸ்லோ உடுவிலில் மகளிர் கல்லூரியை ஆரம்பித்தார். கல்வி ஞானத்தைப் பெண்களிடையே பரப்பி அறிவு படைத்த சமுதாயத்தை உருவாக்குவதில் உடுவில் அளப்பரிய தொண்டாற்றியுள்ளது.[17]

1865'ல் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையும் நிறுவப் பட்டது. இவ்வாறாகப் பள்ளிக்கூடம் அமைத்து கல்வி

www.padippakam.com



யறிவைப் பெருக்கித் தங்கள் சமயக் கருத்தைப் பரப்ப முயன்றனர்.

முதியவர்களுக்குக் கல்வியறிவு ஊட்டமுடியாது என நினைத்தனர், நேரடியாகக் கிறிஸ்தவத்தைப் போதிப்பதில் அதிக பயன் ஏற்படப் போவதில்லை என உணர்ந்த மிஷனரிமார் வளர்ந்தவர்களைப் பொறுத்தமட்டில் பிரசுரங்கள் மூலம் அவர்களிடம் தங்கள் கருத்தைப் புகுத்தலாம் என்று நம்பினர். துண்டுப் பிரசுரங்கள் பயன் தரவல்லன என உணர்ந்து இதில் நாட்டம் கொண்டார்கள். இதன் விளைவாகவே அச்சு யந்திரம் கொண்டு வரப்பட்டது.

மேலும் மிஷனரிமார் தங்கள் நோக்கம் கை கூட வேண்டுமாயின் தமிழிலக்கியத்தை விருத்தி செய்ய வேண்டும் என்றும் நம்பினர். சுதேச மக்கள் மத்தியில் பெருமளவு நன்மதிப்பைப் பெறுவதற்கு அவர்களது இலக்கியத்தைப் புரிந்து கொள்வது அவசியமாகும். தமிழ்மொழி, சமஸ்கிருதம், ஹிமிறு, லத்தீன், கிரேக்கம் போன்ற ஒரு மூல மொழி. எனவே அது விருத்தி செய்யப்படுவதற்கு எல்லாவிதத் தகுதிகளும் உடையதாகும். ஓர் எழுத்தாளர் பரம்பரையை உருவாக்கி வளர்ப்பது கல்விக்கும் கிறிஸ்தவத்துக்கும் பெருந் தொண்டாக அமையும். இவ்வேலைகளை மேற்கொள்ளவும் அச்சு யந்திரம் தேவைப்பட்டது என்று எண்ணினார்கள்.

மிஷனரிகளுக்கு முன்னர் கிழக்கு நாடுகளுக்கு வந்த புத்தலமேயுஸ் சீகன் பால்கு, வில்லியம்கேரி ஆகியோர் அச்சு யந்திரத்தைத் தம் பிரசாரத்தில் பயன்படுத்தினார். யேசு சபையினரும் தென் இந்தியாவில் பிரசுரங்களை வெளியிட்டுப் பார்த்தார்கள். எனினும் தாக்கம் ஏற்படவில்லை. *1554*’ல் ரோமன் எழுத்தில் கிறிஸ்தவ வினா விடை அச்சிடப்பட்டது. கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாற்றைக் கூறும்போது குலேந்திரன் சபாபதி இவ்வாறே அபிப்பிராயம் தெரிவித்தார்.

www.padippakam.com



ஆனால் டொக்ரினா கிறிஸ்டாம் என்ற கிறிஸ்தவ வினாவிடையே தமிழ் எழுத்தில் முதன் முறையாக வெளி வந்ததென்பர்.[18] இந்தியாவுக்கு அச்சகம் வந்ததும் 'சமாச்சார் டர்பன்', 'இந்தியாவின் நண்பன்' என்ற பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன. இவை மக்கள் மத்தியில் பொதுசன அபிப்பிராயம் ஏற்பட உதவின. ஒல்லாந்தர் காலத்திலும் அச்சுயந்திரம் கொண்டு வரப்பட்டுத் தமிழ் நூல்கள் அச்சிடப்பட்டன. ஆனால் இவை சமயப் பிரசுரங்களாகவே இருந்ததால் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறின.

மிஷனரிமார் அச்சுயந்திரத்தைப் பயன்படுத்தத் தொடங்கியதும் மக்கள் சிந்தனையிலே பாரிய மாற்றம் ஏற்பட்டது. பொஸ்டனிலிருந்த தலைமையகம் இலங்கை மிஷனுக்குச்சென்று பணியாற்றும்படி ஜேம்ஸ்கரட் என்பவரைப் பணித்தது. இவரிடம் அச்சுயந்திரம் ஒன்றினையும் கொடுத்தனுப்பினர். இலங்கையில் அப்போது கவர்னராக இருந்தவர் சேர். எர்ட்வர்ட் பார்ன்ஸ். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் விஸ்தரிப்புக்கு அமெரிக்க மிஷன் வருவது நல்லதல்ல என்று நினைத்த கவர்னர் அச்சுயந்திரம் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்படுவதனை அனுமதிக்கவில்லை. அமெரிக்க மிஷன் பலமுறை மன்றாடியும் கவர்னர் அனுமதி வழங்க மறுத்தார். கரட் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. கரட் இந்தியாவுக்குச்சென்றார். இந்த அச்சுயந்திரத்தைப் பயன்படுத்த முடியாது எனக் கண்டதும் நல்லூர் சீமெம் மெஸ்பிரசாரகர் ஜோசப் நைற்றிடம் விற்றுவிட்டனர். 1826'ல் இது இயங்க ஆரம்பித்தது. துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் மட்டும் அச்சிடப் பட்டன. கவர்னர் பார்ன்ஸ் மிஷனரிகளுடன் ஒத்துழைக்கவில்லை. பல பிரச்சினைகளை உருவாக்கினார்.

இந்நிலையில் இலங்கையின் அரசியலமைப்புப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்

www.padippakam.com



தினால் கோல்புறூக் கமறோன் ஆணைக்குழு 1881'ல் அனுப்பப்பட்டது.[19] அமெரிக்க மிஷனின் பணியை ஆராய்ந்த விசாரணைக்குழு அதன் சேவையைப் பாராட்டிற்று. அரசாங்கம் மறுத்த அச்சுயந்திரத்தை உபயோகிக்க உரிமை தரும்படி மிஷனரிமார் ஆணைக்குழுவிடம் கேட்டனர். அப்போது கவர்னராகவிருந்த சேர். றொபர்ட் வில்மட் ஹோர்ட்டன் (1831-1837) இவ்வேண்டுகோளை அனுமதித்தார். ஹோர்ட்டன் பார்ண்ஸ் போன்றவரல்வர். இராணுவத்தினர் கவர்னராகின்ற பாரம்பரியம் இவரால் உடைக்கப்பட்டது. நல்ல இயல்புகளும் பொது வாழ்க்கைத் துறை அனுபவமும் மிக்கவராயிருந்தார் இவர். லிபரல் கட்சி அரசியல் போக்கைக் கொண்ட இவர் சமூக சீர்திருத்தத்தில் தீவிர சிரத்தை கொண்டிருந்தார்.

அரசாங்கத் தொடர்பில்லாத புதினப்பத்திரிகைகளின் சகாப்தம் சேர். ஹோர்ட்டனின் வருகையுடன் ஆரம்பித்தது எனலாம். இலங்கையின் முதன் முதலாக வெளியிடப்பட்ட பத்திரிகை 'கவர்ன்மென்ட்கெஸட்'டாகும். இதில் இரண்டு பக்கங்களில் அல்லது ஒன்றில் இந்திய சஞ்சிகைகளிலிருந்து சில பகுதிகளையும் சில உள்நாட்டுச் செய்திகளையும் சிலவேளைகளில் உள்நாட்டுக் கவிஞர்களின் கவிதைகளையும் வெளியிட்டனர்.

1832'ல் அரசாங்க ஆதரவுடன் 'கொழும்பு ஜேர்ணல்' ஆரம்பிக்கப்பட்டது. கவர்னர் ஊக்கமளித்தார். சர்ச்சை பத்திரிகையில் இடம் பெறவில்லையென்றால் இவருக்கு மகிழ்ச்சி இராது என்பர். இது அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்டது. அச்சக சுப்றீண்டன் ஜோர்ஜ் லீ ஆசிரியராகவிருந்தார். கவர்னர் ஹோரார்ட்டன் அடிக்கடி விஷயதானம் செய்தார். டிமோன், ஸிபர், புறோ போனோ பப்ளிக்கோ என்ற புனை பெயர்களில் எழுதி வந்தார். இதில் எழுதிய இன்னுமொருவர் மகா வம்சத்தினை மொழிபெயர்த்த ஜோர்ஜ் ரேனர் ஆவர்.[20] லண்டனிலிருந்து எந்த கட்டளையின் பேரில் 1833 இறுதியுடன்

www.padippakam.com



இப்பத்திரிகை நிறுத்தப்பட்டது. தனியார் முயற்சிக்கு இத்துறையை விட்டு விட வேண்டும் என்பதையே காரண மாகக் காட்டினார்கள். இங்கிலாந்திலிருந்து அதிகாரி களை ஜேர்னல் கடுமையாகத் தாக்கியதும் இம்முடிவுக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேக மில்லை.

1834'ல் பெப்ரவரி 4'இல் கொழும்பிலிருந்த சில வர்த்தகர்கள் 'த ஒப்ஸேவர் அன்ட் கொமர்ஷல் அட்வ டைஸர்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தனர். கவர்னரை இப்புதிய பத்திரிகை தாக்கிற்று. நிர்வாகத்தை ஆதரித்துப் பேசும்பொதுசன அபிப்பிராய வெளியீடு ஒன்று வேண்டு மென்று சில வட்டாரங்களில் உணரப்பட்டது. 1837 மே 3' இல் 'சலோன் குறோனிக்கிள்' வெளியிடப்பட்டது. கவர்னரும் அரசாங்க சேவை அதிகாரிகள் பலரும் புனை பெயர்களில் கட்டுரைகள் எழுதினர். இத்தகைய மனவியல்புள்ள கவர்னர் ஹோர்ட்டன் மிஷனரிகள் அச்சுயந்திரத்தைப் பயன்படுத்த அனுமதித்ததில் வியப் பில்லை.

மகிழ்ச்சியடைந்த மிஷனரிமார் தமக்கு அச்சு யந்திரமும் அதை இயக்குதற்கான ஒருவரையும் இலங் கைக்கு அனுப்பும்படி பொஸ்டன் சங்கத்தினரிடம் கேட்ட னர். அச்சு யந்திரத்தை இயக்க அமெரிக்காவிலிருந்து ஈஸ்ட்மன் மைனர் வந்தார். நல்லூர் ஸி. எம். எஸ். மிஷ னுக்கு முன்பு விற்ற அச்சகத்தை மிஷன் மீண்டும் வாங் கிற்று, மானிப்பாயிலே இலங்கை-அமெரிக்க மிஷன் அச்சகம் நிறுவப்பட்டது. அச்சகம் நிறுவப்பட்டதும் இதிலிருந்து நூல்களும், துண்டுப்பிரசுரங்களும் வெளி யிடப்பட்டன. இவற்றாலும் தங்கள் இலட்சியத்தை நிறைவேற்ற முடியாது என்று கருதிய மிஷனரிகள் பத்திரிகையொன்றினை வெளியிட முடிவு செய்தனர். 1841'ல் வெளியான 'உதயதாரகை' என்ற பத்திரிகையே உலகிலே தோன்றிய இரண்டாவது தமிழ்ப் பத்திரிகை.

படிப்பகம்

www.padippakam.com


ஈழநாட்டிலே தோன்றிய முதலாவது தமிழ்ப் பத்திரிகை சென்னையில் வெளியிடப்பட்டது. இதன் பெயர் 'தமிழ்ப்பத்திரிகை' அது சென்னை துண்டுப் பிரசுரக் கழகத்தால் தோற்றுவிக்கப்பட்டது. இதற்கு முன்னர் ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவந்தன. 1802ல் வெளியான இலங்கை அரசாங்க வர்த்தமானி, 1834'ல் வெளியான 'த ஒப்ஸேவர் அன்ட் கமர்ஷல் அட்வடைஸர், 1837ல் வெளியான 'சிலோன் குறோனிக்கிள்' ஆகிய ஆங்கிலப் பத்திரிகைகள் மேல் நாட்டு நாகரீக மோகத்தில் மூழ்கியோருக்கே பயன்பட்டன. 'உதயதாரகை' தமிழ்ப் பத்திரிகைத் துறையில் புதிய இயல்புகளை ஆரம்பித்தது.

படிப்பகம்

www.padippakam.com



## அடிக்குறிப்புகள் :

1. பாரதியார் பாடல்கள் —
2. De Silva Colvin R. — Ceylon under the British occupation Vol. I
3. De. Silva A.V. — The Dutch in Ceylon Page 85.
4. மேற்படி — Page 85.
5. Sri. Ramanathan T. — Thesavalama Page 1.
6. De Silva A. V. — The Dutch in Ceylon Page 85.
7. குலேந்திரன் சபாபதி — கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு
8. வித்தியானந்தன் - கலாநிதி. சு. — இலக்கியத் தென்றல்
9. ஜெபநேசன். எஸ். — அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் பக்கம் 54.
10. மேற்படி — பக்கம் 4.
11. Hulugalle - H.J. — British Governors of Ceylon. Page 33.
12. Root Helen I (2) — A century in Ceylon - A Brief History of the marks of the American Board in Ceylon. Page 6

படிப்பகம்

www.padippakam.com



13. Steinberg Samuel — The United States-Story of the Free People Page 181.

14. Firth CB — An Introduction to Indian church History Page 154.

15. ஜெபநேசன் ச. — அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும் பக்கம் 8.

16, மேற்படி — பக்கம் 27.

17. வித்தியானந்தன். சு. — அமெரிக்கன் மிஷனும் தமிழர் கல்வியும்-உடுவில் மகளிர் கல்லூரி 1941-69 பக்கம் 1.

18. குலேந்திரன் சபாபதி — கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு பக்கம் 33.

19. Nadarajan Prof. T. — Legal system of Ceylonin its Historical setting. Pages, 98, 101.

20. Hulugalle H.O.J. — British Governors of Ceylon Page 55.

படிப்பகம்

www.padippakam.com

# பகுதி மூன்று

## இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சி.

படிப்பகம்

பிரிட்டிஷ் ஆட்சி 1796-இல் ஆரம்பமானபொழுது நாட்டின் சூழ்நிலை வேறாக இருந்தது. 1802-ல் ஏமியன்ஸ் ஒப்பந்தத்துடன் முடிக்குரிய குடியேற்ற நாடானதும், பல புதிய இயல்புகள் தோன்றின. இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களின் தாக்கம் இங்கே செறியலாயின. சீர்திருத்த இயக்கங்கள் இங்கிலாந்தில் கொண்டு வந்த மாற்றங்களின் பிரதிபலிப்பை குடிஆட்சி நாடுகளில் காணக்கூடியதாகவிருந்தது. பிரான்ஸ் நாட்டிலே ஏற்பட்ட புரட்சியின் தாக்கம் எங்கும் காணப்பட்டது. பிரெஞ்சுப் புரட்சி 'பூர்ஜுவா' வகுப்பினரின் கிளர்ச்சியேயாகும். எனினும் பிரான்ஸ் நாட்டில் மட்டுமல்லாது பிற நாடுகளிலும் இதன் கருத்துக்கள் பரவின. பஸ்டில் சிறையை உடைத்து கைதிகளை வெளியே விட்ட நிகழ்ச்சி புரட்சி வழியைப் பிறமக்களுக்கும் காட்டிற்று. 1917-இல் ரஷ்ய நாட்டில் ஜார் மன்னனை ரஷ்ய மக்கள் எதிர்க்கச் செய்தது. பாட்டாளிகளான "புறோலிற்ரேறியட் வர்க்கம்" புரட்சி செய்து சோவியத் ஒன்றியம் உருவானது. கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்றவர்கள் நிச்சயமாக இதில் தாக்கத்தைச் செலுத்தினர். ஏன்? இன்று கூட இக்கருத்து தெரிந்தோ தெரியாமலோ மக்கள் சிந்தனையில் செல்வாக்கைச் செலுத்துகிறது.

இலங்கை, பிரிட்டனின் நேரடி நிர்வாகத்தில் இருந்ததனால் அதன் பகுதி போலவே கொள்ளப்பட்டது. இங்கிலாந்தில் அரசியல் போக்குகள் இங்கே விளைவுகளை ஏற்படுத்தின. 19-ஆம் நூற்றாண்டிலே இங்கிலாந்து பல புதுமைகளைக் கண்டது. இவற்றின் செல்வாக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் எங்கணுமே படிந்தது.

இங்கிலாந்தில் பத்திரிகைத் துறை துரித வளர்ச்சி காணத் தொடங்கிய காலம் இது. பிரிட்டிஷ் அதிகாரிகள்

www.padippakam.com



பிரசுரங்களை நிர்வாக ரீதியில் அறிமுகப்படுத்தத் தொடங்கிவிட்டனர். இலங்கையை ஆளவந்த கவர்னர்களின் மனப் போக்குக்கிணங்க இலங்கையிலும் தொடர்பு சாதன வளர்ச்சி சென்றது.

கவர்னர் எட்வர்ட் பான்ஸூம், கவர்னர் ஹோட்டனும் வெவ்வேறு மன இயல்புகளைக் கொண்டிருந்தனர். இவர்களுடைய கட்டளைகளில் இம்மனவியல்புகளின் சாயலைக் காணக்கூடியதாயிருந்தது. ஆனால் பொது மக்கள் மத்தியில் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் மிஷனரிகளின் வருகையுடனேயே ஆரம்பமாயிற்று எனலாம்.

ஆட்சிபீடம் ஆளப்பட்டவர்களுக்குத் தகவல்-தெரிவித்த வழிவகை பற்றியே இதுவரை ஆராயப்பட்டது. மக்களிடமிருந்து கருத்தை அறிவதில் ஆட்சிபீடம் அக்கறை காட்டவில்லை. தன் கருத்தைப் புகுத்தவே பல உத்திகளைக் கையாண்டது. பிரஜைகள் தம் கருத்தைத் தெரிவிக்க உரிமையும் அளிக்கப்படவில்லை. உரிமையைத் தெரிவிக்க எடுத்த அரசியல் போராட்டத்தின் விளைவாகவே 1948-இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. பிரிட்டிஷ் நிர்வாகத்திலே சுதேசிகள் அரசியல் உரிமை கோரிய போரரட்டம் 1815-இல் கண்டி ராஜ்யமும் இந்திய வம்ச நாயக்க மன்னன் ஸ்ரீ கண்டி விக்கிரம ராஜ சிங்கனும் வீழ்ச்சி கண்டதிலிருந்து ஆரம்பமாயிற்று. அரசனை வீழ்த்த உதவி அளித்த 'அதிகாரி'கள்1817 இலும் 1848-இல் விவசாயிகள் மூலமும் கிளர்ச்சி செய்தார்கள். கிளர்ச்சி வலுப் பெற்றதும் படிப்படியாக சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினராக இலங்கையர் இடம்பெறலாயினர். அரசாங்கத்தில் தமது பங்கும் இருக்க வேண்டும் என்ற சிந்தனைமக்களிடம் ஏற்பட்டது. இச்சிந்தனையே தொடர்பு சாதனங்களை உருவாக்கியது. மேலை நாட்டு மிஷனரிமார் வருகையுடன் இவ்வுணர்வு உத்வேகம் பெற்றது எனலாம்.

www.padippakam.com



1841-இல் 'உதயதாரகை'யின் தோற்றம் ஈழத்தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சியில் ஒரு புதிய சகாப்தத்தையே ஆரம்பித்தது எனலாம். தமிழ் மொழியின் வளம் பெருக மேனாட்டார் ஆற்றிய தொண்டில் மிகச்சிறப்பான அம்சம் பத்திரிகை என்ற வெகுஜனத் தொடர்பு சாதனம் உருவாகியமையே. 'உதயதாரகை'யைத் தொடர்ந்து பல பத்திரிகைகள் தோன்றின. தமிழ்மொழி தமிழிலக்கியம் இவற்றினூடாக வளர்ச்சி கண்டதோடு தமிழர் அரசியல் போக்கும் மாற்றம் கண்டது. இப்பத்திரிகைகள் வழியாகத் தமிழ் இனத்தின் அரசியல் வரலாற்றை அறிந்துகொள்ள முடியும்.

குரும்பசிட்டி கனகரத்தினம் என்பவர் இதனைச் செயல் வழியாகக் காட்டியுள்ளார். தனிச்சிங்களம் புகுத்தப்பட்ட 1956-ம் ஆண்டிலிருந்து தமிழ் மொழியுரிமைப் போராட்டம் நடைபெற்று வந்தது சம்பந்தமான பத்திரிகைச் செய்திகளை இவர் சேகரித்துத் திரட்டாக்கினார். இப்புத்தகங்கள் தமிழாராய்ச்சி மகாநாட்டிலும் உலகத் தமிழர் நிறுவனம் மொரிஷயஸில் நடத்திய கண்காட்சியிலும் வைக்கப்பட்டன. சமய வளர்ச்சிக்காகப் பிரசார நோக்குடன் கொண்டு வந்த அச்சுயந்திரங்கள் கிறிஸ்தவ ஆகம நூல்களைப் பதிப்பிக்கவே முக்கியமாக உதவின வெனினும் பிரச்சினைகள் எழுந்தபோது துண்டுப்பிரசுரங்களை வெளியிடவும் பயன்பட்டன. இத்துண்டுப் பிரசுரங்கள் சக்தி மிக்கனவாகவிருந்தன.[1]

மிஷனரிமாரும் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டனர். பத்திரிகை மூலமாக இவ்வேலையைத் திறம்படச் செய்யலாம் என்று நம்பியதால் பத்திரிகையை ஆரம்பித்தனர். மிஷனரிகள் பத்திரிகைகளைத் தொடங்கி கிறிஸ்தவப் பிரசாரம் செய்ததும் ஆத்திரம் கொண்ட சுதேசிகள் தாமும் தொடங்கினார்கள். பல இந்துப்பத்திரிகைகள் தோன்றின. சமயப் பிரசாரத் தேவை நீங்கியதும் சிறிது சிறிதாக இவை அரசியல் சமூகப் பொருளாதாரத் துறைகளுக்கு

படிப்பகம்

www.padippakam.com



முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கின. இவ்வாறு இயங்கிய போது சில பத்திரிகைகள் தேசியத்தன்மையையும் பெறத்தவறவில்லை.

பத்திரிகைகள் தோன்றி வளர்வதற்கு முக்கியமான ஒரு காரணம் இவற்றைப் பயன்படுத்த வல்ல ஒரு வர்க்கம் உருவானதேயாகும். இதனை மத்திய தர வர்க்கம்[2] மேலை நாட்டுக் கலாசாரத்தின் தாக்கததால் உருவான ஒரு சமூக வகுப்பு இது. ஆங்கிலேயரின் பின்பே இவ்வர்க்கம் வளரத் தொடங்கிற்று. இலங்கையின் அரசியலமைப்புவரலாறு, இந்த வகுப்பினர் தாம் அதிகாரம் பெற நடத்திய போராட்டத்தின் வரலாறேயாகும். அச்சுயந்திரங்களின் வருகையோடும், எழுத்தறிவின் வளர்ச்சியோடும் இணைந்து வளர்ந்த ஒரு பத்திரிகை உலகு கிறிஸ்தவப் பாதிரியாரின் முயற்சியாலும் ஆங்கிலம் கற்ற மத்திய தர வர்க்கத்தின் இயக்கத்தினலும் இலங்கையில் உருவாகியது என்று பேராசிரியர். சு. வித்தியானந்தன் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.[3]

மிஷனரிமார் பள்ளிக்கூடங்களிலே சிரத்தை எடுத்தார்கள். கல்வியறிவு அப்போதே தத்துவத்தை எடுத்து விளக்கலாம்; அப்போதே தத்துவத்தை சிறுவர் புரிந்து உளமார விரும்பிப் புதிய மதக் கருத்தைப் பேணுவார்கள் என்று எண்ணிக் கல்வி அறிவூட்டியதால் எதையும் படித்தறியும் ஆவல் ஏற்பட்டு விட்டது. நூல்கள் துண்டுப்பிரசுரங்கள் தக்க பலனளித்தன. இவற்றை விடப் பத்திரிகை கூடுதலான பலனளிக்குமென்று வெளியிட்டோர் நம்பினர். புதிய தகவல்களைப் பத்திரிகை தரும் என்று வாசகர்களும் நம்பினார்கள். இதனாலேயே செய்திகளையும் தாங்கி வந்த பத்திரிகைகள் நிலைத்தன. அக்காலத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே எழுந்த பத்திரிகைகள் நிலைபெறவில்லை.

'உதயதாரகை' சமயத்தேவைக்காகவே ஆரம்பிக்கப்பட்டதெனினும் இது செய்திகளை மக்களுக்குத் தெரி

படிப்பகம்

www.padippakam.com



விக்கும் சாதனம் என்ற பிரக்ஞையும் வெளியீட்டாளர் களுக்கு இருந்தது என்பது 1847 ஜனவரி 7ல் வெளியான முதல் இதழில் ஆசிரியர் தலையங்கத்திலிருந்தே புலனா கின்றது.

''உதயதாரகை பத்திரிகையில் கற்கை, சரித்திரம், பொதுவான கல்வி, பயிர்ச் செய்கை, அரசாட்சி மாற்றம் முதலானவை பற்றியும் பிரதான புதினச் செய்திகள் பற்றியும் அச்சடிக்கப்படும்''.

''கல்வியே உலகத்தின் மிகப் பெரிய செல்வமென்றும் பிரயோசனமுள்ள நூல்கள் தமிழ் மொழியிலே இல்லையென்றும் உள்ள சிலவும் பணக்காரர்களின தும் சில ஏழைகளினதும் ஏகபோக உரிமையாக இருக் கின்றதென்றும் இங்கிலிஷ் பள்ளிக் கூடங்களில் படிக்க முடியாதவர்களுக்கு இந்த அறிவைப் பெற்றுக் கொள் வது சாத்தியமில்லையென்றும் உலகச் செய்திகளைத் தங்கள் தங்கள் வேலை முயற்சிகளோட அறிந்து கொள்ளப் பொது மக்களுக்கு வாய்ப்பில்லையென் றும்'' நினைத்தாலும் மக்கள் பலவிதமான அறிவிலும் தேற வேண்டுமென்று கொண்டதனாலும் இப்படி யொரு பத்திரிகையை வெளியிட முயன்றோம் என்று கூறுகிறது. முதலாவது இதழின் ஆசிரியர். தலை யங்கம் மேலும் விளக்கமாக இருந்தது.

நம் நாட்டவருக்கு முக்கியமாக தகவல்களை வழங்க வேண்டுமென்ற ஆவலினாலே உந்தப்பட்டுமேனாட்ட வர்கள் நம் நாடுகளில் வெளியிடுகின்ற பத்திரிகையின் பாணியில் இப்பத்திரிகையை வெளியிடத் தீர்மானித் துள்ளோம்.

இச்சிறிய முயற்சி அறிவை மக்களிடையே பரப்பு வதற்கும் இன்னும் சிறப்பான முறையில்மற்றையோர் இத்துறையில் செயற்படவும் வழிவகுக்குமென்று நம்பு கின்றோம்.

www.padippakam.com



விஞ்ஞானம், வர்த்தகம், விவசாயம், அரசியல், கிறிஸ்தவம் ஆகிய துறைகளில் மக்களின் சிந்தனையைத் தூண்டவல்ல ஏனைய விடயங்களையும் உலகின் நான்கு திக்குகளிலிருந்தும் வரும் செய்திகளையும் காலந்தோறும் வெளியீடுவதே எமது குறிக்கோளாக இருக்கும்.[4]

ஆரம்பத்தில் 'உதயதாரகை'யில் சில பக்கங்கள் தமிழிலும், சில பக்கங்கள் ஆங்கிலத்திலுமிருந்தன.

''அது தமிழ்ப் பாஷையிலும், இடைக்கிடையே தமிழும், இங்கிலிஷும் கூடினதாயும் எட்டுப்புறம் உள்ள நான்காக மடித்த தாள் அளவில் ஒவ்வொரு மாத முதலாம் மூன்றாம் கிழமைகளில் பிரசித்தம் பண்ணப்படும்''[5] என்று கூறப்பட்டது.

'உதயதாரகை' முதலில் மாதம் ஒருமுறையே வெளிவந்தது. பின்னர் இரண்டுவாரங்கட்கொரு முறையாகவும், அதன் பின்னர் வாரம் ஒரு முறையாகவும் வெளிவந்தது. இன்னும் தொடர்ந்து வருவது சிறப்பே.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்ட பத்திரிகையின் ஆங்கிலப் பகுதிக்கு வட்டுக்கோட்டை செமினரியின் ஹென்றி மார்டின் எனும் ஆசிரியரும் செத்பெய்சன் என்ற தமிழாசிரியரும் பத்திராதிபர்களாகவிருந்தனர்.

இவ்விருஆசிரியர்களும் மிஷனரிமாரின் இலட்சியத்தை நன்கறிந்தவர்கள். 'உதயதாரகை' எதற்காக ஆரம்பிக்கப்பட்டது? எத்தகைய சூழ்நிலையிலே ஆரம்பிக்கப்பட்டது? என்பதும் இவர்களுக்குத் தெரிந்தவையே. என்றாலும் மிஷனரிமாரே அதன் கொள்கையை வகுத்து வந்தனர்.[6]

பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் இத்தகைய ஓர் ஏற்பாடு சகஜமானதே. 'உதயதாரகை'க்கு மட்டுமே இருந்த ஒன்றல்ல. பொதுவாக ஒரு பத்திரிகையின் உரிமையாளர்கள் அல்லது இதனை இயக்கும் சபையினரே கொள்கையை வகுப்பார்கள். வாரம்தோறும் அல்லது



படிப்பகம்

www.padippakam.com



காலத்துக்குக் காலம் கூடிப் பேசி ஆசிரியருக்கு பத்திரிகை பின்பற்ற வேண்டிய போக்கைச் சொல்வார்கள். ஆசிரியர் இதன் பிரகாரமே பத்திரிகையை நடத்தவேண்டும். நடத் தத்தவறும்போது அந்த ஆசிரியரைநீக்கிவிட்டு அடிவருடும் மனப் பாங்கு கொண்ட இன்னுமொருவரை நியமிக்க நிர்வாகிகள் முடிவு செய்வர். தம்மோடு சேர்ந்து நின்று தமக்கு உதவக் கூடியவர்களுள் ஆற்றலுள்ள ஒருவரையே ஆசிரியராக நியமிப்பதே ஒழிய தன்னிச்சையாக அன்றேல் சுதந்திரமாக எழுதுகின்றவரை நியமிப்பதில்லை. அவ் வாறு நியமித்தாலும் இவர் நீண்ட காலம் அந்த ஆசிரியர் ஆசனத்தில் இருக்கமாட்டார். நிர்வாகிகளோடு முரண் பட்டு வெளியேறிய பலர் இங்கும் இருக்கின்றனர்.

'உதயதாரகை'யையும் மிஷனரிமாரே கொள்கை ரீதியில் நடத்தி வந்தார்கள். புதுமையான புதினப்பத்திரிகையாக இருந்ததால் பலர் இதனை வாங்கினார்கள். இன்னும் பலர் படித்தார்கள். விற்பனைக்கும் வாசகர் தொகைக்கு மிடையே பெரும்வேறுபாடு இருப்பதுண்டு. வாங்கு பவர்கள் சிலராகவே இருப்பர். அதனைப் படிப்பவர் களோ பலராக இருப்பர். இது பொது இயல்பே.

இவ்வாறுதான் 'உதயதாரகை'யின் வாசகர் தொகை யும் இருந்தது. விற்பனை அளவிலும் பார்க்க மிகக் கூடு தலான வாசகர் தொகை இதற்கு இருந்தது. 1843ல் அச்சக இயக்குநர் மைனர் சமர்ப்பித்த அறிக்கையின்படி அப்போது 804 பேர் சந்தா செலுத்தி இருந்தார்கள்.[7]

1841ல் ஆரம்பமான 'உதயதாரகை' வாசகர்களைப் படிப்படியாகக் கவரத் தொடங்கிற்று.எனினும் ஈஸ்ட்மன் மைனர் பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க முயன் றார். 2000 பிரதிகளையாவது விற்க வேண்டும் என விளைந்தார். முதலில் 'உதயதாரகை'மாசிகையாக வெளி வந்தது, பின்னர் மாதம் இரண்டு இதழ்கள் வெளியாகின. முதல் வியாழக்கிழமையும், மூன்றாம் வியாழக்கிழமையும்

www.padippakam.com



வெளி வந்தது. பின்னர் வார வெளியீடாகிற்று. இன்றும் வெளிவரும் சிறப்புடையது, கிறிஸ்தவ கோட்பாடுகளை இலங்கையில் இப்பத்திரிகை எடுத்துக் கூறி வந்தது. மக்கள் புரிந்து அவ்வழியே சிந்திக்க வேண்டும் என்பதே ஆசிரியர் களின் நோக்கமாக இருந்ததினால் பல யுக்திகளைக் கையாண்டனர். வட்டுக்கோட்டை செமினரியில் பயின்று அங்கேயே ஆசிரியர்களாகவும் கடமையாற்றியவர்களா தலின் ஹென்றி மார்ட்டினும், செத்பெய்ஸனும் சமயப் பிரசாரத்தில் கை தேர்ந்தவர்களாக இருந்தனர். பிற சம யத்தைத் தாக்கி விரோதத்தை சம்பாதிப்பதிலும், தர்க்க ரீதியாக தமது கருத்தை நிரூபித்துக் காட்டுவது பயன்தர வல்லது என நினைத்தார்கள் எனவே பிற சமயத்தவர் களும் ‘உதயதாரகையில்’ தமது கோட்பாடுகளை கூறச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. இவர்கள் எழுதியதும் விவா தத்தை ஆரம்பித்து தம் பதிலைக் கூறிக் கிறிஸ்தவ பிரசாரம் செய்தனர்.[8] இம்முயற்சி தக்க பலன் அளித்தது. நேயர் குரலுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். பல சமயத் தவர்களும் எழுதினார்கள். சைவர்கள், முஸ்லீம்கள் ஆகிய பிற சமயத்தவர்களும் ‘உதயதாரகையில்’ எழுதியிருக்கின்ற னர். ஆசிரியருக்கு எழுதிய கடிதங்களே இவை. கிறிஸ்தவ மிஷனரிமார் ஆரம்பித்த பத்திரிகை எனினும் சகல மதத் தினரும் இதனைப் படிக்கத் தவறவில்லை என்பது தெளி வாயிற்று.

பத்திரிகையாளர்களினால் விரிவாகத் தலையங்கத்தில் வலியுறுத்தப்பட்ட கல்வித்தேவையும், அறிவு விழிப்பும் காலப்போக்கில் அமெரிக்க மிஷனரிமாரின் சமயப் பிர சாரத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டன. ஐரோப்பா வில் கல்வி வளர்ச்சியும் பத்திரிகை வளர்ச்சியும் ஏற்படுத் திய பாரிய விழிப்புணர்ச்சியை புத்தி பூர்வமாக உணர்ந்து அவ்வகை மலர்ச்சி இலங்கையிலும் ஏற்பட வேண்டும் என்பதனை ஆசிரியர்கள் வலியுறுத்தியமையை பின்வரும் வாசகங்கள் தெளிவாக உணர்த்துகின்றன.

www.padippakam.com



> "........ஆகையினால் எங்கள் தேசத்தவர்கள் பலவிதமான அறிவிலும் தேற வேண்டும் என்ற விருப்பத்தினால் இப்படிப்பட்ட பத்திரத்தை காலத்திற்குக் காலம் அச்சடிப்பிக்கை இட்டுக் கொண்டோம். ஐரோப்பாத் தேசத்தார் இவ்வகைப் பத்திரங்களால் வெகு அறிவுகளை அடைந்து வருவதைக் கண்டு எங்கள் முயற்சி மிகவும் அற்பமாக இருந்தாலும் அதனால் உண்டாகும் தேற்றம் பெரிதாக இருக்கும் என்றும், இன்னும் அநேகர் இவ்விதமான முயற்சிகளில் ஏற்பட்டு அறிவைப் பரப்புவார்கள் என்றும் நம்பி இதைத் தொடக்கினோம்."[9]

'உதயதாரகை' தமிழ்ப் பத்திரிகைகளின் முன்னோடியாயிற்று. இதன் செல்வாக்கும் பிரசார வெற்றிகளும் பலரை இத்துறைக்கு ஈர்த்தன.

'உதயதாரகை' முதலாவது தலையங்கத்திலேயே கூறியதுபோல பலரும் பத்திரிகைத்துறையைநோக்கத்தொடங்கினர். அடுத்தடுத்து பத்திரிகைகள்தோன்றின. மறைந்தன. கத்தோலிக்கர் தொடக்கினர். ஏனைய கிறிஸ்தவ திருச்சபைகள் ஆரம்பித்தன. இந்துக்கள், முஸ்லீம்கள் வாளாவிருக்கவில்லை. மிஷனரிமாரின் பிரசாரத்துக்கு முகம் கொடுக்கத் தக்க வகையிற் புதிதாகப் பிரசாரம் தேவைப்பட்டது. எனவே பத்திரிகைகளை ஆரம்பித்தனர். பெரும்பாலும் இவை பல்வேறு சமயப்பிரசார ஏடுகளாகவே இருந்தன. 'உதயதாரகை' தமிழ் மக்களிடம் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்க வேண்டும்; இந்து சமயத்தினரைத் தன்பால் ஈர்க்க வேண்டும் என்று விரும்பிற்று. இதில் அது தோல்வி காணவில்லை என்றே கூற வேண்டும்.

'உதயதாரகை'யைத் தொடர்ந்து சைமன் காசிச் செட்டியின் 'உதயாதித்தன்' தோன்றிற்று. இப்பத்திரிகை வெளியீடுபற்றி 'உதயதாரகை'யே குறிப்பிடுகின்றது. 1844இல் இதன் முதற்பிரதி வெளி வந்திருக்க வேண்டும்.

www.padippakam.com



கொழும்பில் இருந்து இதனை வெளியிட்டனர். மூன்று இதழ்கள் மட்டுமே வெளி வந்தன. அரசியல், வரலாறு, பொருளியல், பலதுறைக் கட்டுரைகள் இதில் இடம் பெற லாயின. குறுகிய வாழ்நாளும், பன்முகப்பட்ட பணியும் கொண்டனவாக இயங்கிய பல பத்திரிகைகள் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெறாவிடினும் அவை அவ்வக் காலங்களில் உருவாக்கிய சிந்தனைப் பின்னணியும் வளர்ச் சிப் போக்கும் இலங்கையின் சமூகபொருளாதார அரசியல் சூழ்நிலையை தெளிய வைக்கும் பிரதான தகவல் தேட்டச் சாதனங்களாக அமைகின்றன என்று சிவநேசச்செல்வன் தெரிவித்ததை இக்காலத்தெழுந்த பத்திரிகைகளின் பின் புலத்தில் நோக்கும்போது மிகவும் அர்த்த புஷ்டியுள்ள கருத்தாகவே தென்படும்.

'உதயதாரகை'யின் பிரசாரம் நடைபெறத் தொடங் கியதும் கத்தோலிக்க திருச்சபையினர் பார்த்துக்கொண் டிருக்க முடியாத நிலை உருவானது. வேண்டுமெனப் பிரச்சினைகளைக் கிளப்பிவிட்டு அவற்றுக்குப் பதில் கொடுக்கும் வகையில் 'உதயதாரகை' பிரசாரம் செய்து வந்தது. தர்க்க ரீதியான விவாத வழியாயிருந்ததெனினும் கத்தோலிக்க மதத்தினர் பதிலளிக்கக் காத்திருக்க வேண் டியதாயிருந்தது. தனக்குச் சாதகமான முறையிலே விவா தத்தை 'உதயதாரகை' நடத்தி வந்ததனால் அப்பத்திரி கையின் பத்திகள் மூலம் கத்தோலிக்கத்தைப் பாதுகாக்க முடியாதென திருச்சபை உணர்ந்தது. 1845இல் 'உரைகல்' என்ற பத்திரிகையை வெளியிட்டனர். இப்பத்திரிகை புரட்டஸ்தாந்து வேதத்தினர் நடத்திய பிரசாரத்துக்கு எதிராகப் பிரசாரம் செய்தது. இப்பத்திரிகை பற்றிய குறிப்பும் 'உதயதாரகை'யிலே காணப்படுகின்றது.[10] 'உதயாதித்தன்' 'உரைகல்' ஆகிய பத்திரிகைகள் தேசியச் சுவடிகள் திணைக்களத்திலும் காணப்படவில்லை. இவற்றைவிட இக்காலப் பகுதியில் வேறு பத்திரிகைகளும் தோன்றியிருக்கலாம். இவை பற்றிய தகவல்கள் கிடைக்கு

www.padippakam.com



வில்லை. 'உதயதாரகை' இவ்விரண்டையும் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் கிறிஸ்தவ மிஷனரிமாரிடையே போட்டி காணப்பட்டது. கத்தோலிக்கரும், புரட்டஸ்தாந்தக் கிறிஸ்தவ சபையினரும் மோதிக் கொண்டனர். கிறிஸ்தவத்தில் எந்தத் தத்துவம் பரவவேண்டுமென்ற சர்ச்சை எழுந்தது. கிறிஸ்தவப் பிரிவுகள் ஒன்றையொன்று சாடின. தத்துவார்த்த வேறுபாடுகளைக் களைந்து அறிவைப் பெருக்கிட வேண்டுமென்ற ஆர்வமேலீட்டினால் சிலர் பத்திரிகைகளை ஆரம்பிக்க முன்வந்தனர்.

அச்சுயந்திரம், அரசாங்க நிர்வாகத்திற்கு மட்டுமே அப்போது அனுமதிக்கப்பட்டது. பிறர் இதனைப் பயன்படுத்த முடியாதிருந்தது. பிரிட்டனில் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்த இயக்கங்களின் தாக்கம் குடியேற்ற நாடுகளில் பிரதிபலித்தமை பற்றி ஏற்கனவேபார்த்தோம். 1-8-35இல் ஜேம்ஸ் கரட் மூலமாக மிஷனரிமார் அச்சகம் நடத்தும் உரிமை பெற்றனர். தொடர்ந்து பலரும் இவ்வுரிமை அனுபவிக்கும் நிலை உருவாகிற்று. இதனால் பலர் பத்திரிகை நடத்த முன் வந்தனர். இந்த உணர்வுக்குக் காரணம் ஒரு வகை தேசிய உணர்ச்சியின் உந்துதலேயாகும். தேச பக்தி, தேசியம் என்பன அன்று வளர்ச்சி அடையாத பருவத்திலேயே இருந்தன. மேலைநாடுகளில்கூட அப்போதுதான் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம் ஏற்படத் தொடங்கியது. 1789'இல் நடைபெற்ற பிரெஞ்சுப் போராட்டத்தின் தூவானம் இங்கிலாந்திலும் சொரியலாயிற்று. சீர்திருத்த இயக்கம் அங்கே வலுப்பெற்று 1832'ல் சீர்திருந்தச்சட்டம் நிறைவேறிற்று. எனவே, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் குடியேற்ற நாடாக இருந்த இலங்கையிலும் இவற்றைக் காணக்கூடியதாகவிருந்தது. இங்கே ஆங்கிலக் கல்வி வளர்ச்சியுடன் புதிய ஒரு வர்க்கம் உருவாகியது. புத்திஜீவிகள் தங்கள் பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை.

படிப்படியாகப் பத்திரிகை பொது ஜனத்தின் குரலாக மாறிக்கொண்டு வருவதனை அவதானிக்கக்கூடியதாக

படிப்பகம்

www.padippakam.com



இருந்தது. சமயப் பிரசாரம் செய்வதே தலையாய நோக்காகவிருந்தும் எதிர்ஒலிகளைக் கேளாதிருக்க முடியாத நிலையை மிஷனரிமார் உணந்தனர். துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டதோடு பத்திரிகைகளுக்குக் கடிதங்களும் எழுதினார்கள். கண்டனம் தெரிவித்தார்கள். மிஷனரிமார் இவற்றையும் பிரச்சனையாக்கி விவாதம் ஏற்படுத்தி வாதங்களுக்குப் பதிலளிப்பதன் மூலம் தம் கருத்தைப் பதிய வைக்கலாமென்று நினைத்தனர். மிஷனரிமார் இதனையும் பயன்படுத்துகின்றனரென்று அறிய வந்ததும் மேலும் தீவிரமாக தாம் செயற்பட வேண்டும் என்று எண்ணியதனாலேயே சைவ, பௌத்த பிரசாரகர்கள் தோன்றினர். விரும்பியோ விரும்பாமலோ பத்திரிகை வெகுஜனத்தின் தொடர்பு சாதனாக உருப்பெறத் தொடங்கிற்று. சமயக்கட்டுரைகளை வெளியிட்டுச் சமயக்கருத்துக்களைச் சொல்லி வந்த பத்திரிகைகள் பிற விஷயங்களையும் அறிவிக்கத் தொடங்கின. செய்தியை அறிய பத்திரிகையைப் படிப்போர் தாம் கூறும் சமயக் கருத்துக்களையும் மனதிலிருத்தட்டும் என்று கேள்விகளைப் பிரசுரித்துத் தர்க்கத்தை உருவாக்கி, சைவ, முஸ்லிம் மக்களைத் தம்பால் ஈர்க்க முயன்றவர்கள் இப்போது செய்திகளையும் கொடுக்க முன் வந்தார்கள். 'உதயதாரகை' சமய ஏடாக இருந்து வந்ததனால் இதன் விற்பனை குறையத் தொடங்கியதனையும் அவர்கள் அவதானிக்கத் தவறவில்லை. பிற பத்திரிகைகள் தோன்றியமைவிற்பனையைப்பாதித்திருந்தாலும் ஏனைய துறைச் செய்திகளை வெளியிட ஆரம்பித்தமை வாசகர்கள் மனவியல்பை மிஷனரிமார் உணர்ந்து கொண்டார்கள் என்பதனைத் தெளிவாகிற்று. ஆரம்பத்தில் 804 சந்தாதாரரைக் கொண்டிருந்த 'உதயதாரகை' 1861'இல் 675 ஆகக் குறைந்தது.

1835 இல் வைமன் கதிரவேற்பிள்ளை 'வித்தியாதர்ப்பணம்'என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். நிக்கலஸ்கூல்ட்

www.padippakam.com



'ஜவ்னா பிறீமன்' (JAFFNA FREEMEN) பத்திரிகையை ஆரம்பித்தார். இதன் பிரதிகள் கிடைக்கப்பெறுவதில்லை. 'உதயதாரகை'யிலும் மற்றும் சில ஆங்கில ஏடுகளிலும் இவை பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு காணப்படுகின்றனவேயொழிய பூரணமான விவரங்கள் கிடைக்கவில்லை. சமய சமூக அறிவியற் கருத்துக்களை இவை தாங்கி வந்தன என்பது பிற பத்திரிகைகளில் காணும் குறிப்பிலிருந்து தெரிய வருகிறது.

1863இல் சி. வை. கதிரைவேற்பிள்ளையின் 'இலங்காபிமானி' என்ற பத்திரிகை தோன்றிற்று. மானிப்பாயிலிருந்த மிஷனரிகளுடன் தொடர்பு கொண்டிருந்த 'றிப்ளி அன்ட் ஸ்றோங்' அச்சகத்தினர் இதனை வெளியிட்டார்கள். புரட்டஸ்தாந்து மதச் சார்பாக இது இருந்தது. எனினும் பிறதுறைச் செய்திகள் இதில் இடம் பெறத் தவறவில்லை. 1864இல் கொழும்பில் 'இலங்கைக்காவலன்' வெளியிடப்பட்டது. றொபர்ட் நியூட்டன் என்பவரே இம்முயற்சிகளை மேற்கொண்டவர்.

மிஷனரிகள், வளர்ந்தவர்களில் மட்டுமே கவனம் செலுத்தவில்லை. பாடசாலைகளை எதற்காக அமைத்தார்களோ, பிரசவகால இறப்பும், குழந்தைப் பராய இறப்பும் அதிகரித்ததைக் கண்டு ஆஸ்பத்திரிகளை எதற்காக நிறுவினார்களோ அதே நோக்கத்தைப் பிரசுரத்திலும் மறந்துவிடவில்லை. வருங்காலப்பிரஜைகள் குழந்தைகளே என்பதனை மறக்காது இவர்களையும் கவர நினைத்தார்கள். சீனிபூசிய வில்லைகளை குழந்தைகள் 'லபக்'கென விழுங்கிவிடும் என்பது உளநூல் படித்த மிஷனரிகளுக்குத் தெரியும். எனவே 1864'இல் 'பாலியர் நேசன்' தோன்றிற்று. அமெரிக்க மிஷனரிகள் ஆதரவுடன் வில்லியம் சின்னத்தம்பி இதனை ஆரம்பித்து நடத்தினார். குழந்தை மனோதத்துவ அடிப்படையில் இது வெளிவந்ததால் சிறுவரிடையே ஆதரவு பெருகிற்று.

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்ப் பத்திரிகையிலே காலப்போக்கில் புகுத்தப் பட்ட புதுமை இயல்புகளையும், புதிய வாசகர் வட்டத் தைக் கவர கையாண்ட யுக்திகளையும் கவனிக்கின்ற போது, 'உதயதாரகை'யின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவ ரான டாக்டர் டானியல் பூவர் தெரிவித்த கருத்தே நினைவுக்கு வருகிறது. ''நாகரிகம் படைத்த மனிதனுக் குள்ள முதலாவது அறிவுத்தேவை புதினப்பத்திரிகையே'' என்றார் அவர். எனவேதான் புதினப் பத்திரிகையை மிஷ னரிமார் பயன்படுத்தினர். எத்தகைய முறைகள் வாசகர் களைக் கவரமுடியுமோ அவை அத்தனையையும் பயன் படுத்தினர். 'உதயதாரகை'யிலும், 'இலங்காபிமானி' யிலும் பரசமய கோளரி என்னும் புகழ்பெற்ற ஆறுமுக நாவலரே எழுத அனுமதித்தினர் என்றால் மிஷனரிமாரின் செயல் சாதுரியத்தை என்னென்று வர்ணிப்பது?

*1864*ல் கொழும்பிலிருந்து சி. முத்தையாபிள்ளை என்பவர் 'இலங்கைப் பாதுகாவலன்' என்ற பத்திரிகையை வெளியிட்டார்.

'இலங்கைக்காவலன்', 'இலங்கைப் பாதுகாவலன்' 'இலங்காபிமானி' போன்றவை புதிய திசையில் சென்றன. கல்வியறிவு ஊட்டுவதன் மூலம் சமயப் பிரசாரம் செய்த பத்திரிகைகள் இப்போது புதிய சிந்தனைக்கு இடம் கொடுத்தன. அரசியல் விமர்சனம், சமூக சீர்திருத்தம், பொருள் வள விருத்தி போன்ற பல துறைகள் சம்பந்த மான கட்டுரைகள் வெளிவரலாயின. இவற்றின் பொரு ளமைப்பைப் பார்க்கும்பொழுது சமயம் வளர்ப்பது முக்கிய குறிக்கோளெனக் கொள்ளப்படவில்லையோ என்ற சந்தேகம் எழவே செய்கிறது.

சமயப் பிரசாரம் முக்கியமானதெனக் கொண்டே இவை ஆரம்பிக்கப்பட்டன. என்றாலும் மிஷனரிமார் வந்த காலத்தில் இருந்த நிலை தொடரவில்லை என்ப தனால் மாற்றம் தேவைப்பட்டது. கல்வியறிவு வளர,

படிப்பகம்

www.padippakam.com



குறிப்பாக ஆங்கில மொழி அறிவு அதிகரிக்க, முந்திய முறையிலே பிரசாரம் செய்வது வில்லங்கமான விஷயமாயிற்று. பகுத்தறிவு அடிப்படையில் யாவற்றையும் நோக்கும் பண்பு மக்களிடையே வளர ஆரம்பித்தது. எனவே தான் பத்திரிகையில் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கினர். பல புதிய விஷயங்கள் இடம் பெறத் தொடங்கின. வெகுசனத்தொடர்பு சாதன் வளர்ச்சி எத்துணை வேகம் பெற்றது என்பது இதனால் தெளிவாகின்றது. பத்திரிகைகள் புதிய இயல்புகளைப் பெறத் தொடங்கின. தேசத்தின் சுபீட்சத்தை உருவாக்குவதிலே எவ்வளவிற்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்ற கேள்வி எழத்தான் செய்தது.

இத்தகைய புதிய சூழ்நிலையில் கிறிஸ்தவப் பிரசாரம் சிலரை வாட்டிற்று. ''பரம்பரை பரம்பரையாகச் சைவம் வளர்ந்த நாட்டிலே கிறிஸ்தவம் புகுவதா?'' என்ற பிரச்சினை எழுப்பப்பட்டதும் இந்துசமய ஏடு இல்லாமை துலாம்பரமாகிற்று. முதன்முறையாக 1877 இல்தான் இந்து சமயச்சார்புள்ள ''இலங்கை நேசன்'' வெளிவரத்தொடங்கிற்று. திரு. சின்னத்தம்பி என்பவர் ஆசிரியராக இருந்தார். இதில் வெளியானவற்றுள் பலவற்றை நாவலர் எழுதினார். 1877ல் கார்த்திகை 22-ம் திகதி 'இலங்கை நேச'னில் ''இது நல்ல சமயம்'' என்ற தலைப்பில் நாவலர் எழுதியவை பல விஷயங்களுக்கு எடுத்துக்காட்டாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. சுவடிகள் திணைக்களத்துக்குக் கிடைத்த 'இலங்கை நேச'னின் ஆக முந்திய பிரதி 1877ல் கிடைத்ததே என்று அங்குள்ள இடாப்பில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆறுமுக நாவலர் எழுதிய வாத விடயங்களுள் ஒன்று ஓர் வினாவுக்கு விடை என்பதாகும்.

பத்திரிகை என்றால் பலதரப்பட்ட செய்திகளையும் தாங்கி வர வேண்டும். இல்லாவிட்டால் குறுகிய ஒரு வட்டாரம் மட்டுமே இதில் சிரத்தையெடுக்கும். அக்காலத்தில் எழுந்த பத்திரிகைகளில் இந்தப் பிரக்ஞை

www.padippakam.com



காணப்படுகின்றது. 'இலங்கைக் காவலன்', 'இலங்கைப் பாதுகாவலன்', 'இலங்காபிமானி' ஆகிய பத்திரிகைகளை ஆய்பவர் ஓர் அளவிற்கு அக்காலச் சிந்தனையோட்டத்தை உணர்ந்து கொள்ளலாம். இவற்றில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் நாட்டின் வளர்ச்சியின் பன்முகப்பட்ட கூறுபாடுகளை உள்ளடக்கியிருக்கின்றன. சமயசர்ச்சைகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடாது தேச முன்னேற்றம் கருதி இயங்கும் நிலை தோன்றியமை பத்திரிகை சாதனத்தின் நிதானமான செயற்பாடு உருவாகியமையை உணர்த்துகின்றது.[11]

சிவநேசச்செல்வன் அவதானித்ததான இவ்வியல்பு இதற்குப் பின்னர் உதயமான பத்திரிகைகளில் மேலும் தெளிவாகிற்று. தமிழ்ப் பத்திரிகைகள் புதிய பாதையிலே செல்லத் தொடங்கின. தமிழ்ப் பத்திரிகையின் பிதாமகன் என்ற மிஷனரி கிறிஸ்துவத்தை பத்திரிகை என்ற தொடர்பு சாதனத்தின் மூலம் புகுத்த எடுத்த நடவடிக்கை பிரதிபலன் தரத் தவறவில்லை.

உள்நாட்டு சமயங்கள் துள்ளி எழுந்தன. தமக்குச் சாவுமணி அடிக்கப்படுவதனை உணர்ந்தன. சமய தத்துவங்களால் கவரப்பட்டவர்கள் பிற சமயம் புகுவதனை பார்த்திருப்பது பாவம் என்று நினைத்தார்கள். தேசப் பற்றினால் உந்தப்பட்டவர்கள் இது ஏகாதிபத்தியப் பெருக்கமும் விஸ்தரிப்பும் என்றார்கள். ஒரு சிலரே முன்னின்று உழைத்தவரெனினும் பலர் பின்னணியில் இருந்திருக்கவே வேண்டும். இல்லாவிட்டால் எதிர்ப்பு நடவடிக்கைகள் தேசிய இயக்கமாக மாறியிருக்க முடியாது.

சமயம் என்பது திட்டமிடப்பட்ட ஏமாற்று வித்தை என்றும் சில தத்துவ ஞானிகள் கூறி இருக்கின்றார்கள். சமயத்தைப் பயன்படுத்தி முன்னேற்றம் கண்டோர் அன்றும் இருந்திருக்கலாம். இனம் என்றும், மொழி

www.padippakam.com



என்றும், சமயம் என்றும், கூறி மக்களை ஏமாற்றி தங்கள் முன்னேற்றத்தைக் கவனிக்கின்ற அரசியல் வாதிகள் இன்றிருப்பது போல அன்றும் இருந்திருப்பார்கள். மிஷனரிமாரை இங்கே இயக்க அனுமதித்ததும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்காகவே என்பர்.

சமயத்தைப் பயன்படுத்தித் தமது ஆதிக்கம் செறியச் செய்யலாம் என்று நினைத்தவர்கள் ஓரளவு வெற்றியும் பெற்றனர்

கிறிஸ்தவம் சமூக வாழ்க்கையில் இடம்பெறத் தொடங்கிவிட்டது. சமூகப் புரட்சியே மெதுவாக நடை பெறத் தொடங்கிற்று. கிறிஸ்தவத்தைத் தழுவிய நடுத்தர வகுப்பினர் அரசாங்க உத்தியோகம் பெற்றனர். வசதிகள் சலுகைகள் பெற்றதினால் சமூகத்தில் அந்தஸ்தும் கௌரவமும் பெற்றார்கள். முன்னர் சமூகத்திலே பெறமுடியாதிருந்த அதிகாரமும்; மதிப்பும் பெற்றனர். உயர் ஜாதியினர் தமக்கு உதவி கேட்டு வரவேண்டிய நிலை உருவாகிற்று. மக்களின் நடை உடை பாவனைகள் மாறின. வேட்டி சால்வைக்குப் பதிலாக கால்சட்டை, சேர்ட் அணியத் தொடங்கினர். சாமுவேல் ஜேம்ஸ் என்றும் ஹென்ஸ்மன் என்றும், மக்கின் டயர் அக்கிடெல் என்றும் பெயர் மாற்றினார்கள். டாக்டர் கிறீனின் வைத்தியக் கல்லூரியில் பயின்ற வேலுப்பிள்ளை, எஸ். மில்லர் என்றும், கணபதி, ஸி. மீட், என்றும், அருணாசலம் என். பாக்ஸர் என்றும், பெரிய தம்பி, ஜே. டான்போர்த் என்றும், பூபாலசிங்கம், ஜே. எச். ரவுன் என்றும், குமாரு, ஏ. ஸி. ஹோல் என்றும் பெயர் மாற்றம் செய்து கொண்டனர்.

பத்திரிகைகளின் அமைப்பு, பொருள் அடக்கம்பற்றிய கருத்துக்கள் தினமும் வளர்ச்சி கண்டு கொண்டேவந்தன. வெறும் சமயக்கருத்துக்களையும்,வியாக்கியானங்களையும் மக்கள் எதிர்பார்க்கவில்லை. பலதுறைச் செய்திகளையும்

www.padippakam.com



அதாவது மக்களின் வாழ்க்கையோடு இணைந்த பல வற்றையும் எதிர்பார்க்கிறார்கள் என்பது வெளியீட் டாளர்களுக்கு நன்றாகத் தெரியவந்தது பத்திரிகைகளில் புதுமை காணப்படலாயிற்று. 1870-இல் கொழும்பிலி ருந்து அப்புத்துரை ஐயர் வெளியிட்ட 'புதினாதிபதி' புதிய பாணியில் அமைந்திருந்தது. இது கையெழுத்துப் பத்திரிகை. கேலிச் சித்திரங்கள் இடம்பெற்றன. புகைப் படத்திற்குப் பதிலாக வரைபடமாக தேசாதிபதிகளின் படங்கள் இடம்பெற்றன.

காகித முறையில் இதற்கு முன்னரும் சில பத்திரி கைகள் உலவின. 1873-இல் கொழும்பு சோனக பட்டித் தெருவைச் சேர்ந்த நெய்னா மரைக்கார், வாப்பு மரைக் கார் ஆகியோர் 'புதினாலக்காரி' என்ற பத்திரிகையை வெளியிட்டார்கள். இதுவே இலங்கையில் வெளியிடப் பட்ட முதலாவது தமிழ் முஸ்லிம் பத்திரிகையாகும். ''ஏனைய சனங்கள் பத்திரிகையால் பெறும் நன்மையை முஸ்லீம்களும் பெற வேண்டும்'' என்ற குறிக்கோளு டனேயே இது தோன்றிற்று. அரசியற் சம்பவங்கள், பொதுச் செய்திகள் விமர்சிக்கப்பட்டன. ஆசிரியர் உரை யிலேயே இப்போக்கு தெளிவாயிற்று. தலையங்கம் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டது.

'உதயதாரகை' புரட்டஸ்தாந்து வேதக் கொள்கை யைப் பரப்பும் நோக்குடையதாக இருந்தது. கத்தோ லிக்க திருச்சபை இவர்களுடைய முயற்சிகளைக் கவனித்து வந்தது. காலப்போக்கில் பிரதிகூலம் ஏற்படலாம் என அஞ்சியதால் தன் கருத்தைத் தெரிவித்து எதிர்ப்பிரசாரம் செய்ய வேண்டும் என்று துணிந்தது. எனவே 'உதய தாரகை'யின் சமயப்பிரச்சார முயற்சிகளுக்கு எதிர் முனைப்பு கொடுக்க முடிவு செய்தது. 1876-இல் 'கத்தோ லிக்க பாதுகாவலன்' வெளியிடப்பட்டது, பிலிப்பையா, முருகையா ஆகியோர் ஆசிரியர்கள். ஆனால் தொடர்பு

படிப்பகம்

www.padippakam.com



சாதனம் என்ற வகையிலே இதனை ஒரு முன்னேற்ற நடவடிக்கை என்று சொல்ல முடியாதிருந்தது. சமயப் பிரசார ஏடாகவே இது இருந்தது. 'உதயதாரகை'க்குப் பதில் அளித்து வர இது தவறவில்லை.

இலங்கையின் பத்திரிகை வரலாற்றில் ஆறுமுக நாவலர் (1822 - 1879) மிக முக்கியமான ஓரிடத்தைப் பெறுவர்.

கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலையில் படித்து பீற்றர் பேர்சிவலின் பெருமதிப்புக்கு ஆளாகி. அவர் வாயி லாகக் கிறிஸ்தவ மிஷனரி இயக்கத்தின் உள்ளார்ந்த விஷயங்கள் யாவற்றையும் நன்கறிந்து மிஷனரி நடவடிக் கைகளின் பாரிய தாக்கங்களை உணர்ந்து அவற்றுக்கு எதிராகக் கிளம்பிய ஆறுமுக நாவலர், மிஷனரிமார் கையாண்ட 'தொடர்பு முறைமை'களையே கையாண்டு அவர்களைச் சாடினார். நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்தன. இவையே சைவத் தமிழ்ப் பத்திரிகையில் முன்னோடிகள். சைவச் சூழலில் சைவச் சிறுவர் சிறுமியருக்குக் கல்வி புகட்டப் பாடசாலைகளை நிறுவினார். 1868-இல் வண்ணார் பண்ணையில் 'சைவப் பிரகாச வித்தியாசாலை' நிறுவப்பட்டது. அச்சகம் நிறுவிச் சைவ நூல்களைப் பதிப்பித்தார். கிறிஸ்தவர்கள் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டதால் நாவலரது பல பிரசுரங்கள் அவற்றிற்கு மறுப்பாக எழுந்தவையே. கிறிஸ்தவர்களிடமிருந்து கற்றுக்கொண்ட இதே முறை யைக் கொண்டு தனது கொள்கையைப் பரப்ப முயன்றார். ''நல்லூர் கந்தசுவாமி கோவில்'' போன்றவற்றால் இது தெரிய வருகிறது.

பத்திரிகையின் சக்தியை உணர்ந்தவர் நாவலர். எனவே பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதித் தர்க்கங்களை நடத்தினார். பொய் உரைகளை மறுத்தார். 'உதய தாரகை'யில் இவரது கடிதங்கள் பலவும் வந்துள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



'இலங்கை நேச'னையும் இவர் நன்கு பயன்படுத்தத் தவற வில்லை. இவற்றை எழுதியபோது பல் உத்திகளைக் கையாண்டார். கேள்வி பதில் முறை 'கட்டகிஸிம்' இவற்றுள் ஒன்று. ''யாழ்ப்பாணச் சமயநிலை''யில் கிண்டல் நடை காணப்படுகிறது. சர்ச்சைகளையும் நடத்தி மக்களின் கவனத்தை ஈர்த்தார். மொழி நடை யிலும் வேறுபாடு கர்ணப்பட்டது. நூல்களில் ஒருவகை நடை; பத்திரிகையில் வேறுவகை நடை காணப்பட்டது.

நாவலர் பத்திரிகைகளின் அவசியத்தை உணர்ந்தி ருந்தாரெனினும் நாவலரின் சிஷ்யர்களே இவரது இயக் கத்தைக் கொண்டு நடத்தப் பத்திரிகை வேண்டும் எனக் கொண்டு சில ஏற்பாடுகளைச் செய்தனர்.

நாவலர் நடத்திய சமய இயக்கம் அவருடைய காலத்திலே வெற்றிகரமாக நடைபெற்றிருந்தாலும் அவருக்குப் பின்பு தொடர்ந்து வெற்றிகரமாக நடை பெற்றிருந்ததென்று கூற முடியாது என்று கலாநிதி இந்திரபாலா கூறுகிறார்.[12] கிறிஸ்தவர்களாகவோ கிறிஸ்தவ செல்வாக்குக்கு உட்பட்டவர்களாகவோ மாறு வதைத் தடுப்பதற்கு நாவலர் இந்து பாடசாலைகளை நிறுவ விரும்பியதனால் 'சைவபரிபாலன' சபை இந்துப் பாடசாலைகளை நிறுவிற்று. ஆனால், கிறிஸ்தவ பாட சாலைகள் செல்வாக்கை இழக்கவில்லை. இந்துப் பாட சாலைகளுட் பெரும்பாலானவை செல்வாக்குப் பெற்ற நிறுவனங்களாகவுமில்லை.

பத்திரிகையின் வலிமையை உணர்ந்த பொண்டன் மிஷனரிமார் அச்சகத்தில் தேவையை உணர்ந்து இங்கே செயலாற்ற முற்பட்டனர். பல இடையூறுகளை முகங் கொள்ள நேர்ந்தும் இவர்களின் ஆர்வம் குன்றவில்லை. தமிழ் நாட்டில் போல இலங்கையில் இவர்களால் இயங்க முடியவில்லை. துண்டுப் பிரசுரங்கள், நூல்களை வெளி யிட்டுக் கல்விப் பணியினூடாக சமயப் பிரசாரம்

www.padippakam.com



செய்யவே முயன்றனர். இந்து சமயக் காவலர்கள் எதிர்ப் போராட்டம் நடத்தத் தொடங்கினரெனினும் மிஷனரிமார் தயங்கவில்லை. பிரசாரம் திட்டப்படி நடைபெற்றே வந்தது.

'உதயதாரகை'யில் இடம்பெற்ற ஆசிரியர் தொகுப்புரை ஒன்றில் ''வாசனையிற் பிரியம் கொண்ட ஒவ்வொரு இந்துவும்'' என்ற தொடர் காணப்படுகிறது. இரு விஷயங்களை இத்தொடர் உணர்த்தும். வாசனையிற் பிரியம் ஏற்படுத்தல், இந்துக்களின் கவனத்தை ஈர்த்தல் ஆகியவையே இவை. இந்துக்கள் இதனைப் படிப்பதன் மூலம், தர்க்கரீதியில் சமயங்கள் இரண்டையும் நோக்கி ஆராய்வர். இந்த வாதப் பிரதிவாதங்கள் நல்ல பயனைத் தரும் என்று மிஷனரிமார் நம்பினர்.[13] 'உதயதாரகை'யின் தலையங்கம் ஒன்று பின்வருமாறு அமைந்திருந்தது.

> ''சன்மார்க்கம், நன்மார்க்கம் முதலான காரியங்களை முன்னிலும் அதிக உணர்வினூடே பராமரிப்போம். சன்மார்க்க நன்மார்க்கம் என்பவை மற்றக்காரியங்களிலும் விசேடித்தவை என யாவரும் ஒத்துக்கொண்டாலும் அவை செய்கையினிடத்து மறுக்கப்படுவதனால் அந்த உண்மையை மேன்மேலும் வலியுறுத்த வேண்டுமென நினைக்கின்றோம். இக்காரியங்களில் தாக்கம் கொள்ளும் சத்திய நிலை விவிலியம் என்பதை வாசிப்பவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. விவிலியம் போதிக்கின்ற தருமக் கருத்தினூடே எங்கள் இயல்புக்கும் காலமிட முதலான சமயத்துக்கும் தக்கதாய் கூடியளவு அதில் வெளிப்பட்டிருக்கும் சக்தியம், நீதி முதலான நெறிகளையும் பரிபாலனம் பண்ணுவோம்.[14]
>
> ''உதயதாரகையில் சமய சாத்திர சம்பாஷணை, சுவிசேஷக் கருத்துக்கள், சமயக் கண்டனங்கள் இடம் பெற்றன. பரசமயிகள் உதயதாரகைக்கு அஞ்ஞானிகளாயினர்.''

www.padippakam.com



ஆரம்பகாலத் தமிழ்ப் பத்திரிகைத்துறை சமூக அல்லது அரசியல் துறையில் அதீதமாக ஈடுபடவில்லை. மிஷனரிமார்களாலே நடத்தப்பட்ட பத்திரிகைகளில் அரசின் அனுசரணைக்குட்பட்ட விஷயங்களே வெளிவந்தன.

'உதயதாரகை'க்குப் பின்னர் தோன்றிய முக்கிய பத்திரிகை இலங்காபிமானி ஆகும். இது 1863'ல் வெளியிடப்பட்டது. கிறிஸ்தவ வாதங்கள் இதில் இடம் பெற்றன. இதில் சங்கரபண்டிதர் வண்ணார்பண்ணை மதவாத சபையின் அக்கிராசனபதியாகிய கில் பாதிரியாருக்கு எழுதிய 'விக்கியாபதம்' வெளியிடப்பட்டது. இவ்வாறாக கிறிஸ்தவம் பலவழிகளில் பரப்பப்பட்டு வரலாயிற்று. இப்படியிருந்தும் சைவம் சார்பான பத்திரிகைகள் தோன்றவில்லை. சைவர்களுக்கென ஒரு பத்திரிகை வேண்டும் என்று வற்புறுத்தப்படாமலில்லை. நாவலரோடு தொடர்பு கொண்டிருந்த சாமுக்குருக்கள் முயற்சியொன்றினை மேற்கொண்டதாகவும் 'இலங்காபிமானி'க்குக் கிடைத்த கடிதம் ஒன்றில் கூறப்படுகிறது.

கொழும்பிலுள்ள சுப்பிரமணியர் ஆலயத்தில் சுக்கிர வாரத்தில் சாமுக்குருக்கள் பிரசங்கம் செய்துவந்தார். ஒரு சைவப் பத்திரிகை வேண்டும் என்ற இவரது ஆர்வமும் வெளியானது. 'இலங்காபிமானி' இவர் பற்றிக்கூறிய போது சிவத்துப்பெருமான் ஸ்ரீ ஆறுமுக நாவலர் என்று கிண்டலாகக் குறிப்பட்டது.

> ''சிவத்துப் பெருமாள் ஸ்ரீ ஆறுமுக நாவலருடைய மாணாக்கருளுள் ஒருவராகிய ஸ்ரீ சாமுக்குருக்கள் இங்குள்ள சைவ சமயிகளுக்கு அவரது குருவை நிகர்க்க வாரந்தோறும் சைவப்பிரசங்கம் செய்ய எத்தனிக்கின்றார். அத்துடன் பரதேசத்தவர்களுக்கு உபயோகமாயிருக்கும் வண்ணம் சைவப் பொருளை உள்ளுக்கு வைத்து ஒரு பத்திரிகையோ, புத்தகமோ



படிப்பகம்

www.padippakam.com



> பிரசாரம் செய்வாரெனவும் ஒரு பக்கியாதியுண்டு. இவைகள் மாத்திரமா? இல்லையில்லை. கொழும்புச் செட்டிகளுக்குள் சிலரும் வேறொரு புதினப்பத்திரிகை சமைக்கக் கருதுகிறார்கள். கிரிஸ்றோபர் பிறிற்றோ வந்தவுடன் சாமுக்குருக்களும் ஒரு பத்திரிகை நடத்துவாராம். ஒருவேளை அஸ்றேலியாவின் குதிரைகள் போல பத்திரிகையுமாமோ நாமறியோம்''.

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறிஸ்தவம் பத்திரிகை மூலம் பரவுகின்றது என்பதனை உணர்ந்து எதிர்ப்பிரசாரம் செய்யச் சைவப் பத்திரிகை வேண்டும் என்ற கோஷம் சாமுக்குருக்களால் எழுப்பப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

நாவலரைப் போலச் சங்கரபண்டிதர், மற்றும் சீடர்களும் பிரசங்கங்கள் மூலம் எதிர்ப்பிரசாரம் செய்தார்கள். முதலில் துண்டுப்பிரசுரங்களாக எதிர்க்கருத்துக்கள் வெளியிடப்பட்டன. 'இலங்காபிமானி'யில்வெளியான விளம்பரமொன்றில் உவெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த செட்டித்தெருப் பள்ளிக்கூடத்தில் நடந்த கூட்டம் பற்றிய அறிவிப்புள்ளது. இதே போல சங்கரபண்டிதர் தலைமையில் ''பரமத கண்டனச் சுயமத ஸ்தாபன சங்கம்'' வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கூலிக்கு மாரடிப்போரை ஒத்த 'சம்பளக் கிறிஸ்தவர்கள்' மலிந்த காலமாதலின், சங்கரபண்டிதர் போன்றோர் அயராது உழைக்க நேர்ந்தது. துண்டுப்பிரசுரங்கள், சமய வாதங்கள் மூலம் தர்க்கங்கள் நடைபெற்றுவந்த இவ்வேளையில் 1877ல் எச். எம். சின்னத்தம்பி, 'இலங்கை நேச'னை வெளியிட்டார். இதில் சைவம் முக்கிய இடம் பெற்றது. மொழி பெயர்ப்புடன் செய்திகள் வெளியானதோடு, ஆசிரியர் கடிதங்கள், அரசியல், சமூகச் செய்திகள் ஆகியனவும் இதில் இடம்பெறலாயின. 'கத்தோலிக்க

www.padippakam.com



பாதுகாவல'னுடன் நேரடியாகத் தர்க்க போராட்டம் நடத்தியது உண்டு. சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், வண்ணை மயில்வாகனம்பிள்ளை ஆகியோர் வைமன் கதிரவேற்பிள்ளையுடன் விவாதித்தார்கள்.

பத்திரிகை மூலமாக நடைபெற்ற பிரசாரப்போராட்டத்தை 'இலங்கை நேசன்', 'புதினக் கடுதாசிகள் யுத்தம் என்று வர்ணித்தது. 'இலங்கை நேசன்' செய்தியொன்றில் ''யாழ்ப்பாணத்தில் 'உதயதாரகை', 'பாலியர் நேசன்', 'கத்தோலிக்க பாதுகாவலன்', 'உதயபானு', 'சென்னைப் பட்டினம்—வேதாந்த நிர்ணயப் பத்திரிகை, தத்துவ விசாரிணி முதலிய பத்திரிகைகளுக்கிடையே ''வாத யுத்தம் இறு பூசலாய்'' நடைபெற்றதாகத் தெரிவிக்கப் படுகிறது.[16]

காலகதியில் இப்பத்திரிகையின் உள்ளடக்கம் மாற்றம் பெற்று வந்தது. தேசிய ரீதியில் செய்திகள் வெளிவரலாயின. ஆங்கிலக் கல்வியின் தாக்கம் இப்போது தான் புலனாயிற்று. கல்வி அறிவுள்ள உயர்ந்தோர் குழாம் உருவானது. பொருளாதாரம் மலர்ச்சி கண்டது. பெருந்தோட்டங்கள் தோன்றியதும், போக்குவரத்துப் பிரச்சனையும் ஏற்பட்டது. ரயில்சேவைகள் ஆரம்பமாயின. 1865ல் சட்டசபையின் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர் நியமிக்கப்பட்டனர். படித்தவர்கள் இடையே பரபரப்பு ஏற்பட்டது. அரசியல் படிப்படியாகப் பத்திரிகையில் புகுந்தது. சட்டநிருபணசபை விவாதங்கள் பிரசுரமாயின. சேர் முத்துக்குமாரசுவாமியின் உரைகள் வெளியிடப்பட்டன 'இலங்கைக் காவலன்' 'இலங்காபிமானி' போன்றவை முன்னேற்றக் கருத்துக்களைப் பரப்பின. என்றாலும் பத்திரிகைகள் சமய இயக்கங்களையும் வழி நடத்தத் தவறவில்லை. கிறிஸ்தவ இயக்கங்கள் வலுவிழக்கக்கூடிய வகையில் சைவப் போராட்ட வீரர்கள் பணிபுரிந்தனர். அரசியல் பிரக்ஞை இருந்ததெனினும் சமயப் போராட்டத்தைக் கைவிடவில்லை. நாவலரைப் பின்பற்றியோர் மீது பெரும்

www.padippakam.com



பொறுப்பு சுமத்தப்பட்டது. பல மாற்றங்கள் எழுந்தன. நாவலரின் பணியைத் தொடர்ந்து சமய ஏகாதிபத்தி யத்தை முறியடிக்க வேண்டும் என்ற வேட்கையால் பலர் உந்தப்பட்டனர். அன்று தோன்றிய ஸ்தாபனங்களில் சைவப்பிரகாச சமாசம் முக்கியமானது.

இவர்கள் நிறுவிய அச்சகமே 1880 ஆகஸ்ட் 16ல் சைவ 'உதயபானு'வை வெளியிட்டது. இரண்டாம், நான்காம் போம சுரங்களில் இது வெளிவந்தது. சைவ சித்தாந்தத் தத்துவங்களை விமர்சித்ததோடு பொதுச் செய்திகளும் இதில் வெளிவந்தன. இப்பத்திரிகை புதிய வழியே சென்றது எனலாம். சைவர்களிடம் காணப்பட்ட குறைபாடுகளைத் தானே அறிய முயன்றது. கிறிஸ்த வர்கள் என்ன கண்டனத்தைத் தெரிவிக்கின்றனர் என ஆராய்ந்து சைவர்கள் மத்தியிலே இக்குறைபாடுகளை நீக்க முயன்றது. சைவசித்தாந்த விளக்கம், தத்துவ நிர்ணயம், நாயன்மார்கள் வாழ்க்கையில் தெரியும் தத்துவங்கள் ஆகியவற்றை வெளியிட்டு குறைபாடுகள் நீங்க வேண்டும் என விரும்பி உழைத்தது. 'உதயபானு'வே நாவலர் வழியில் சென்றது எனலாம். துண்டுப் பிரசுரங்கள் மூலமும் 'இலங்கை நேசன்' மூலமும் நாவலர் எடுத்த பணியை 'உதயபானு' தொடர்ந்தது. கிறிஸ்தவ பாடசாலைகள் புது வசதிகளை அளித்தன. கிறிஸ்தவருக்கு செல்வாக்குக் கிடைத்தது. மாணவர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாகக்கூட மதமாற்றம் செய்யப்பட்டனர். சைவப் பாடசாலைகள் மட்டுமே இந்நிலையை மாற்ற முடியும் என்று 'உதயபானு' நம்பி சைவப்பள்ளிக் கூடங்கள் பெருகவேண்டும் எனக்கோரி உழைத்தது. மிஷன் பள்ளிக்கூடங்களில் பயின்று வெளி யேறியவர்கள் சமூக அந்தஸ்தும் அதிகாரமும் பெற்ற தால் தலைவீங்கி, கண்டபடி பேசத்தொடங்கினர். சைவர்களையும் இவர்களது சமய அனுஷ்டானங்களை

www.padippakam.com



யும் கண்டித்துக் கேலி செய்தனர். 'உதயபானு' இந்த ஆபத்தை உணர்ந்தது.

> "பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலே உங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்க விடுவீரேயானால் அவர்கள் பிற்காலத்திலே நீங்களோ தங்கள் பிதாக்கள் என்பது தோன்ற வையாது தங்கள் பெயர்களையும் மாற்றி யோவான், யாக்கோப்பு என்று இட்டுக்கொண்டு உங்கள் பேருக்கெல்லாம் தீராப் பெரும் இழிவை நாட்டுவார்கள். மாதம் எ. அ. ரூபாவுக்காகத் தங்கள் அநாதி பிதாவாகிய பரமேசுரனை விற்றுவிடும் மானிடப் புல்லரை நீக்கப் பலகாலம் கண்டிருப்பீர்களோ. இவர்களைப் போல் உங்கள் புத்திரரும் பின்னைக்காலத்தில் உங்கள் பெயரையும் உங்களுக்கும் எங்களுக்கும் எல்லோருக்கும் பிதாவாகிய சிவபிரானுடைய திருப்பெயரையும், மாதம் ரூபாவுக்காக விற்று விடுவார்கள். இது நிச்சயம். ஆதலாற் பிரபுக்களே ஒரு சிறுபொழுதும் தாழ்த்தாது அரசாட்சியாரிடம் ஓர் பள்ளிக்கூடத்தினைப் பெற்று அங்கே உமது பிள்ளைகளை அனுப்புங்கள்.[17]

இக்கடிதம் அன்றைய மனோநிலையை எடுத்து விளக்குகின்றது. அன்றைய அரசாங்கம் மிஷனரிகளின் கல்விப் பணிக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவி அளித்தது. 'சைவ உதயபானு' இதனை உணர்ந்து சைவப்பாடசாலைகளைத் தோற்றுவிக்கும் இயக்கத்துக்கு ஊக்கமளித்தது.

நாவலரின் சீடர்கள் அவரது பணியைச் செவ்வனே தொடர நிறுவன ரீதியாக செயல்திட்டம் அவசியம் என்பதனை உணர்ந்தே 'சைவ பரிபாலன சபை'யை 1888இல் நிறுவினர். சைவக் கல்விப்பணி சிறக்க வேண்டும் என்று விரும்பிய இவர்கள் 1889ல் இந்துக் கல்லூரியையும், 'இந்து சாதனம்' என்ற தமிழ்ப் பத்திரிகையையும் 'ஹிந்து

படிப்பகம்

www.padippakam.com



ஓர்கன்' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் ஆரம்பித்தனர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் ஆரம்பித்த இப் பத்திரிகைகள் இன்றும் தொடர்ந்து பிரசுரமாகி வருகின்றன. கி.பி. செல்லப்பாபிள்ளை ஆங்கில ஆசிரியராகவும், நல்லூர் த. கைலாசபிள்ளை தமிழில் வெளியான ஏட்டின் ஆசிரியராகவும் பணியாற்றினர். இந்து சமயத்தைப் பரசமயிகளிடமிருந்து காப்பாற்றும் நோக்கே தலையாயதாக இருந்ததெனினும், தேசியப்பிரக்ஞையுடன் விவகாரங்களை நோக்க ஆசிரியர்கள் தவறவில்லை.

தமிழருக்காக நடத்திய பத்திரிகை; எனவே தமிழில் மட்டும் வெளிவந்திருந்தால் போதுமானதாயிருந்தது. ஆனால் ஆங்கிலத்திலும் வெளியிட்டார்கள். ஆங்கிலம் கற்று, புதிய உயர்ந்தோர் குழாத்தினர் மட்டுமல்லாது பிரசாரம்செய்கின்ற அந்நியசக்திகளும்அறிந்து கொள்ளட்டும் என்று எண்ணியே தமிழில் மட்டும் வெளியிடாது ஆங்கிலத்திலும் வெளியிட்டனர். ஆனால் அன்றிருந்த தேசிய உணர்ச்சி, சுதந்திரப் போராட்டத்தின் போது காணப்பட்ட உணர்ச்சியைப் போன்றதோ அல்லது இன்று தமிழர் மத்தியிலோ காணப்படும் உணர்ச்சியைப் போன்றதோ அல்ல. சமயப் பின்னணியில் உருவான தேசிய உணர்ச்சியே அது. தேசாபிமானம் என்பதிலும் சமயாபிமானம், மொழி அபிமானம் என்று இதனைக் குறிப்பிடுதலே பொருந்தும். ஏனென்றால் தமிழர் அன்று ஈழத்தைச் சேய்நாடு என்றே கருதி வந்தனர். தாய் நாடாகத் தமிழகமே கருதிப் போற்றப்பட்டது. ஆனால் 'இந்து சாதன' ஆசிரியர் தன் குறிப்பிலே இலங்கை மக்களின் மனோபாவத்தைக் கண்டிக்கும் வகையிலே தேசாபிமானம் என்றே தலைப்பிட்டுள்ளார். ஆட்சி மாற்றத்தைப் பற்றிச் சிந்திக்காமல் சமய மாற்றத்தைப் பற்றிச் சிந்திக்கிறார்களே என்று வருத்தப்படுகின்றார்.

அப்போதே புதிய சிந்தனை தொடங்கிவிட்டது. தேசிய அரசியல் பிரவாகத்துடன் தமிழர் சேர்ந்தோட

www.padippakam.com



வேண்டும், அந்நிய ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டும் என்ற வேட்கை தமிழரிடம் ஏற்படவேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் எனலாம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் அன்றும், விதிவிலக்கே அளிக்கப்பட்டது. தமிழகம் தாயகம் என்ற உணர்வு, தனித்துவம் பேசுவோர் மத்தியிலும் காணப்படுவதில் வியப்பில்லை.

'இந்து சாதன'த்தில் எழுதப்பட்ட இக்குறிப்பு பின் வருமாறே அமைந்திருந்தது.

> ''இராமனாண்டாலென்ன? இராவணன் ஆண்டாலென்ன? வென்றிருந்தமையால் நமது தேசமானது நடை, உடை, பாஷை, மதம், ஆசாரம், முதலிய எவையுமல்லாத அந்நியரிலும் அந்நியர் ஆட்சிக்குட்பட்டது. அதோடு கல்வி குறைந்தது; வர்த்தகம் பாழாய்ப் போய்விட்டது; கைத்தொழில் வாயில் மண் விழுந்தது; ஒற்றுமையில்லை; தேசாபிமானம் கிடையாது; தேச நன்மைக்குழைப்பவரில்லை. நமது தேசத்திலுண்டாகும் பஞ்சு முதலிய காரணப் பொருளைச் சொற்ப விலைக்கு அந்நிய தேச வாசிகளுக்கு விற்று காரியப்படுத்திய பிறகு ஒன்றுக்குப் பத்து விலை கொடுத்து நாமே அவர்கள் காலில் விழுந்து வாங்கி வருகின்றோம். நமது தேசப் பணத்தை அந்நிய தேசத்தார்க்கு வலியக் கொடுத்து இஞ்சி தின்ற வானரம் போல விழிக்கின்றோம். பலமில்லாதவர்களாகவும், அதைரியமுள்ளவர்களாகவும், தரித்திரர்களாகவும், அடிமைகளாகவும், ஆங்கிலேயர்க்கு ஊழியர்களாகவும் இருக்கின்றோம். நமக்குத் தேசாபிமானம் நிரம்பியிருக்குமானால் அந்நிய தேசத்தாரைப் போல் நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவராதிருக்க மாட்டோம்.''[18]

இக்குறிப்பில் காண்கின்ற வேட்கை அந்நியருக்கு இங்கே இடம் கொடுக்கக்கூடாது, மதம் மாறி, பேசும்;

www.padippakam.com



மொழி மாற்றி அந்நியர்கள் இங்கே குடிகொண்டு நிலை பெறத் தமிழ் மக்களும் உதவக்கூடாது என்பதே. ஆசிரியரின் கருத்தில் இதுவே தொனிக்கின்றது. அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போராட்டமே இருந்தது. தம் நாடு உயர வேண்டும் என்ற சிந்தனை இருக்கவில்லை. இவ்வாறிருந்ததெனின் தமிழ் நாட்டுடன் தொடர்பு பக்தியாக இருந்திருக்காது. இன்றுசிலர் இலக்கியம், கலை முதலாய துறைகளிலும் தனித்துவம் வேண்டும் என்கின்றார்கள். அன்று இவ்வுணர்வு இருக்கவில்லை. மேலை நாட்டாரை எதிர்த்தார்கள். அவ்வகையில் அது தேசாபிமானமாயிற்று. சமயப்பின்னணியிலான தேசிய உணர்ச்சி என்றும் இதனைக் குறிப்பிடலாம். இத்தகைய உணர்வுக்கு உருவம் கொடுக்கும் வகையிலேயே 'இந்துசாதனம்' இயங்கிற்று. எனவே முன்னர் தோன்றிய பத்திரிகைகளைப் போலன்றி இதில் பலதரப்பட்ட செய்திகளும் மேற்கூறிய தேசிய உணர்வுடன் கொடுக்கப்பட்டன. முன்பு போலச் சமய வாதங்களையும் சமய உலகச் செய்திகளையும் வெளியிடுவது மட்டுமே தங்கள் நோக்கம் என்று ஆசிரியர்கள் கருதவில்லை.

'இந்து சாதனம்' 1889' முதல் தொடர்பாக வெளிவந்து கொண்டிருக்கின்றதெனினும் அன்றுபோல இன்று தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. பத்திரிகையின் போக்கும் நெறிப்படுத்தும் முறையும் இதற்கு இலட்சியம் ஒன்று உண்டா என்ற கேள்வியை எழுப்புகின்றது. இப்பத்திரிகை ஏன் உதயமானது? இதே ஆபத்து இன்றும் உண்டுதானே? வேறு உருவில் தோன்றியிருப்பதால் இது தேவையில்லையா? நீதிமன்ற இடைக்காலக் கட்டளைகளைச் செலவுச் சுருக்கத்துக்காக இங்கே பிரசுரிக்கின்றனர். சமயத்துறைச் செய்திகள் பதிவுக்காக வெளியிடப்படுகின்றன. இதனால் சந்தாதாரர்களை விடப் பிறர் இதனை விலை கொடுத்து வாங்குவதில்லை. நிர்வாகமும் விற்பனையைக் கூட்ட நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. நாவலர்

படிப்பகம்

www.padippakam.com



காலத்தெழுந்த மறுமலர்ச்சியின் விளைவாக எழுந்த 'இந்து சாதன'த்தின் உள்ளடக்கத்தை ஆராயும்போது எவ்வாறு மக்களின் சிந்தனையும் மன இயல்பும் மாறி வருகின்றன என்பது தெளிவாகும். ஆரம்பத்தில் சமயக் கருத்துக் களையே சிறப்பாக இப்பத்திரிகை கூறிற்று, ஆனால் காலப்போக்கில் இக்குறுகிய வட்டத்துக்குள் இருக்காது வெளியே தாவத் தொடங்கிற்று. அரசியல் விமர்சனங்கள் இடம் பெறலாயின. இதே வேளையில் 'உதயதாரகை'யும், 'கத்தோலிக்கப் பாதுகாவல'னும் (1901 முதல் சத்தியவேத பாதுகாவலன் என்ற பெயருடனும்) வெளியாகிக் கொண் டிருந்தன. இவற்றிலும் இக்காலத்தில் வெளிவந்து கொண் டிருந்த 'இலங்கை நேசன்' 'சன்மார்க்க போதினி' ஆகியவற் றிலும் பல்வேறு துறைகளையும் பற்றிய செய்திகள் வெளி யாகிக் கொண்டிருந்தன. சமயம் மட்டுமல்லாது ஏனைய துறைகளையும் கவனிக்க வேண்டும் என்ற உணர்வு தலைப்பட்டதே முக்கிய காரணம் எனலாம். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பமானதுமே பத்திரிகை உலகில் புதிய இயல்புகள் காணப்படுகின்றன. 1902ல் வெளிவந்த 'சுதேச நாட்டியம்' புதிய பாணியை ஆரம்பித்திருந்தது. வசாவிளானிலிருந்து, கல்லடி வேலுப்பிள்ளை இதனை வெளியிட்டார் செய்திகளைத் தாங்கி வந்ததோடு சமூக முன்னேற்றத்தை நாடும் பல விஷயங்களும் இதில் இடம் பெற்றன. இவ்வாறிருந்தும் சமயச் சார்பான பத்திரி கைகள் தோன்றவில்லை. 1907ல் 'ஆத்மபோதினி' 1908ல் 'இந்து பால போதினி', 'சைவசுக்குமார்த்தபோதினி', 'வானசித்தி' ஆகியனவும், 1910ல் 'சைவ பாலிய சம்போ தினி'யும், 1911ல் 'மகாவிஜய லட்சுமி'யும் 1924இல் 'சைவசித்தாந்த பானு'வும் வெளிவந்தன.

'உதயதாரகை' மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட தெனினும், பிற சமயத்தவர்களையும் ஈர்த்தபோதே தம் மதத்தைப் பரப்பலாம் என்ற நம்பிக்கையில் அவர்களுக் கான விஷயங்களையும் வெளியிட ஆரம்பித்தது.

www.padippakam.com



'உதயதாரகை'யில் முகமது சமயம் என மகுடமிட்டு, ''கோறானை''த் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டு வந்தார்கள். தொடர்ந்து திருக்குர் ஆனை வெளியிட்டால் இஸ்லாமியர்கள் 'உதயதாரகை'யைப் படிக்க ஆரம்பிப்பார்கள்; அப்போது சீனி பூசி மருந்து வில்லைகளைக் கொடுப்பது போல கிறிஸ்தவத்தைப் புகுத்தமுடியும் என நம்பினார்கள். யேசுவை முஸ்லிம்கள் ஈஸா நபி என்றே அழைப்பர். ஆனால் முஹம்மத் நபிகள் நாயகமே இறுதி நபி என்பர். எனவே யேசுவை ஏற்க முஸ்லிம்கள் என்றுமே தயாராயிருந்ததில்லை.

கிறிஸ்தவர்கள் திருக்குர் ஆனை இப்படியாகப் பயன்படுத்தியதும். முஸ்லிம்கள் கொதித்தெழுந்தார்கள். பகிரங்கமாகக் கண்டித்தார்கள்.

1843 மே மாதம் 23-ம் தேதியன்று பக்கீர் மாலுமி என்பவர் பின்வருமாறு எழுதியிருந்தார்.

> ''நீங்கள் இந்தக் காலமெல்லாம் சில ஏழைச் சைவரை உங்கள் மாய்கைப்புரட்டான வார்த்தைகளினால் மருட்டி வருவதைப் போல எங்களையும் அழகுக்கும் மாடலுக்குமுடைய மயிலை அந்தமும் ஆடலும் கெட்ட வான் கோழி பழிக்கத் துணிந்த மேரை போலும், விளையேறப் பெற்ற ரத்தினத்தைக் கால்வாசி பெறாத வீதுறினால் பழுக்கத் துணிந்த மேரை போலும், மருட்டலாமென வீண் சிந்தனையால் குருவுக்கு உபதேசம் கூறி குசம சச்கை பண்ணுகிறதேவிட மற்றும்படியல்ல என்பதற்குப் பிசகில்லை.''[19]

இவ்வாறு பலர் கடிதம் எழுதத் தொடங்கினர். கண்டனங்கள் தெரிவித்தனர். மதமாற்றம் தமிழர் சிங்களவரிடையே நிகழ்ந்தது. ஆனால் முஸ்லீம்களை எவ்விதத்திலும் இவை பாதிக்கவில்லை.[20]

www.padippakam.com



ஏனைய சாகியத்தினரைத் தாக்கிய கிறிஸ்தவ தீவிர வாதிகள் முஸ்லீம்களையும் மாற்ற முயலாமவில்லை. ஆனால் முஸ்லீம்களிடையேயும் தேசிய உணர்வு ஏற்பட்டிருந்தது. 1873ல் தோன்றிய 'பதினாலக்காரி' எல்லோரையும் கவர்ந்தது. சமயத்தத்துவங்களை விடுத்து ஏனைய விவகாரங்களையும் எடுத்துச்சொன்ன 'பதினாலக்காரி'யை வாப்பு மரைக்கார் தெரிந்த மரைக்கார் வழி நடத்தினர். சமூக முன்னேற்றத்துக்கு அரசியல் அறிவு அவசியம் என்று கருதி வேறுபாதையில் சென்றனர்.

1882இல் அறிஞர் சித்தி லெப்பையின் (1838 - 1898) 'முஸ்லிம் நேசன்' தோன்றிற்று. முஸ்லீம்களின் கல்வி அபிவிருத்தியே தன் இலட்சியம் எனக் கொண்டு உழைத்த சித்திவெப்பை இப்பத்திரிகையின் மூலம் சமுதாயத்தில் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்.

இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கு உழைத்த பெரியார்கள் பலர். இவர்களுள் அறிஞர் சித்திலெப்பை, ஐ. எல். எம். அப்துல் அஸீஸ் (1867 - 1915) வாப்பிச்சி மரைக்காயர் (1829 - 1925) சிறப்பு வாய்ந்தவர்கள். கல்வி வளர்ச்சியோடு, சமய கலாசார, மறுமலர்ச்சியும் ஏற்பட இவர்கள் உழைத்தார்கள். அறிஞர் சித்திலெப்பை கண்டியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் முஹம்மது காஸிம். செல்வாக்கு மிக்க குடும்பத்தவர். வழக்கறிஞராகத் தேறி சட்டத்தொழில் புரிந்தவர். இஸ்லாமிய மார்க்கத் தத்துவங்களில் நாட்டம் கொண்டதால் தொழிலைத் துறந்து சமூக சேவைக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர். நாவலரைப் போலவே எழுத்தாளராகவும் கல்விமானாகவும், சமயப்பிரசாரகராகவும், அரசியல் அறிஞராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் இவர் விளங்கியவர். நாவலர் காலத்தில் எழுந்த கண்டன நூல்களைப் போலவே இவர் காலத்திலும் கண்டனப் பிரசுரமொன்று எழுந்தது. இப்பெரியாரின் தகைமை இதில் விரிவாகத் தரப்பட்டுள்ளது. சித்திவெப்பையின் சமகாலத்

www.padippakam.com



தவரான அ. காதிருபாட்சா என்பவர் இப்பெரியாரின் அறிவாற்றலையும், நற்பண்புகளையும் தனது 'தத்துவபர கண்டன திக்கார கண்டனம்' என்ற சிறு நூலில் விளக்கியுள்ளார்.

''பல பாஷைகளைப் பயின்று தெளிந்த நிபுணத்துவமுடையவரும் தீன் நெறியறிவுகளை விளக்கிய சிறந்த தீபிகையொத்தவரும், தயை ஈகை பொறுமை யாதிய மேன் குணாலயம் போன்றவரும், 'சூபிர்' மத சத்துரு சங்கார வெற்றிமாலை பூண்டவரும் அட்டதிக்கெங்கணும் அரும்பெரும் பிரக்யாதி பெற்றவரும் மஹாசன சாதுக்கள் சபைகளிடத்தும் சாதுரியா சல்லாப உல்லாச வசன கம்பீர சர்ச்சனரென மதிக்கப்பெற்ற கண்ணிய புருடரும், புண்ணிய சீலருமான சி. மு'' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.[21]

பத்திரிகையின் இன்றியமையாமையினை உணர்ந்த சித்திலெப்பை 'முஸ்லீம் நேசனை' ஆரம்பித்தபோது நாவலர் இறந்துவிட்டார். எனினும், இவரது சிந்தனையின் தாக்கம் சித்திலெப்பையில் காணப்பட்டது.

தன்பத்திரிகையை எல்லோரும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் சித்திலெப்பையிடம் இருந்ததால், காதிறு பாட்சா மேலே கூறிய பந்தியில் பயன்படுத்திய உரை நடையைப் போன்றல்லாது மிக எளிய நடையில் சித்திலெப்பை எழுதினார்.

''இக்காலத்திலும் அதிகப் பிரயாசப்பட்டு இலக்கண இலக்கியங்களை வாசித்துத் தேர்ந்தவர்களும் அப்படியே பாடல்களைப் பாடுகின்றார்கள், அவைகளெல்லாம் வித்துவான்களுக்கு உபயோகமாயிருக்கும். ஆதலால் யாவருக்கும் விளங்கக்கூடிய வசனநடையில் புத்தகங்களைச் செய்வது மிக்ககுறைவாயிருக்கின்றது. பாஷையானது தம்முடைய கருத்திலே தோன்றிய பொருளைப் பிறருக்கு விளக்குதலாம்.[22]

www.padippakam.com



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் முதலாயினோர் இலகு தமிழ்ச் சொற்களைப் பிரயோகித்து வந்தார்கள், என்றும் 'முஸ்லீம் நேச'னில் ஒரு கடிதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. சித்திலெப்பை பின்பு வெளியிட்ட 'ஞான தீப'த்திலும் இதே தன்மையைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

'உதயபானு'ப் பத்திரிகையில் 'முஸ்லீம் நேச'னைப் பற்று பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

> ''இது (முஸ்லீம் நேசன்) கண்டியிலே பிறக்டர் காசீம் மரைக்காயருடைய முயற்சியினாலே தொடங்கப் பட்டது...... மகமதியர்க்கு மிகப்பிரயோசனமுள்ளது வசனம் இயன்றளவு தெளிவாகவிருக்கிறது.''

'இதன் விளைவாகவும்' 'முஸ்லீம் நேசன்' பிற துறைகளில் கொண்டிருந்த ஈடுபாட்டினாலும் இந்தியாவிலும், மலாயாவிலும் இதற்குப் பெரும் வரவேற்பு இருந்தது.

வாப்பு மரைக்கார், நெயிந்த மரைக்கார் ஆகியோர் நடத்திய 'பதினாலக்காரி'யைத் தொடர்ந்து, முஸ்லீம் நேசன் வெளிவந்தது போல, இன்னும் பல பத்திரிகைகள் தோன்றின. முஸ்லீம்களின் உலகளாவிய கலாசாரச் செறிவை எடுத்துக் கூறும் வகையில் 1890ஆம் ஆண்டிலே 'சைபுல் இஸ்லாம்' கொழும்பிலே வெளியிடப்பட்டது. இதன் முதல் ஆசிரியர் அ. அப்துல் ரகுமான். குர் ஆனை முஸ்லீம் மக்கள் மனதில் பதியவைக்கும் முயற்சியில் இது கவனம் செலுத்திற்று. இதனைத் தொடர்ந்தது 1893இல் 'இஸ்லாம் மித்திரன்.' இதன் ஆசிரியர் எல். எம். ஒத்மன். இதில் உள்நாட்டுச் செய்திகளோடு உலகச்செய்திகளும் இடம்பெற்றன. 1900இல் 'முஸ்லீம் பாதுகாவலன்' வெளிவந்தது. இதனை ஐ. வே. ம. அப்துல் அசீஸ் நடத்தி வந்தார். அவரே இச் செய்திப்பத்திரிகையின் ஆசிரிய

படிப்பகம்

www.padippakam.com



ராகவும் இருந்தார். 1906இல் கொழும்பிலே வெளியிடப் பட்ட மிஸ் பாருள் இஸ்லாமின் ஆசிரியராக எம். எல். எம். முகமது காசிம் ஆலிம் இருந்தார். முஸ்லீம்களின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு வெளியிடப் பட்டது. 1908இல் முஸ்லீம் ஐ. எல். எம். அப்துல் அசீஸால் கொழும்பு முஸ்லீம் கல்வி விருத்திச் சங்கத் திற்குக்காக வெளியிடப்பட்டது. இதில் இஸ்லாமிய மார்க்க விஷயங்கள் முக்கிய இடம் பெற்றன.

1914 வெளியான 'இலங்கை முஸ்லிமின்' ஆசிரியராக கே. கே. ஹமீத் இருந்தார். புதினங்களும் நாட்டு முன்னேற்றம் கருதிய வேறு அம்சங்களும் இதில் இடம் பெற்றன. ஐ. எல். எம். முகமது யூசுப் ஆலியின் 'சம்சுன் இஸ்லாம்' 1920இல் வெளியானது. இஸ்லாமிய விவகாரங்களே இதில் சிறப்பிடம் பெற்றன. 1930இல் 'தப்லிக்குள் இஸ்லாம்'என்றபத்திரிகை வெளியானது. மார்க்க விஷயங்களே பெரும்பாலும் இடம்பெற்றன. இஸ்வாமியர் வாழ்கின்ற வெளிநாட்டுச் செய்திகளும் இதில் இடம் பெற்றன. இதே ஆண்டிலேயே க. அ. மீறா முஹைதீன் 'தினத்த பாலை' ஆரம்பித்தார். இந்திய இலங்கை சுதந்திரப் போராட்டங்கள் நடந்த காலமாதவின் இச் செய்திகள் இங்கே பிரதிபவிக்கின்றன. மார்க்கம் அதிகமுக்கியத்துவம் பெறவில்லை.

. இஸ்லாமிய ஏடுகள் பெரும்பாலும் மார்க்க வழியிலேயே நின்றன. பௌத்தர்கள், இந்துக்களைப் போல கிறிஸ்தவ மதத்தின் தாக்கம் இங்கே செறியவில்லை. மதம் மாறியோர் தொகை மிகக் குறைவே. முஸ்லீம்களிடையே ஆவேசம் குறைந்து காணப்பட்டதற்கு இது முக்கிய காரணம். சமயத்தைப் பிறரிடமிருந்து பாது காக்க வேண்டிய நிலை இருக்கவில்லை. மார்க்க அறிவுத் தேவையைப் பூர்த்திசெய்ய வேண்டிய அவசியம் மட்டுமே இருந்தது.

www.padippakam.com



எகிப்திலிருந்து ஏகாதிபத்திய அதிகாரிகளிடமிருந்து தப்பியோடி இலங்கையில் தஞ்சம் புகுந்த, அறபி பாஷாவின் சிந்தனைத் தாக்கத்தால் சித்திலெப்பை போன்றவர்கள் சமூக முன்னேற்றத்தில் தீவிர ஈடுபாடு கொண்டனர். ஆனால் சமயத்துக்கு ஆபத்து இருக்கவில்லை. முஸ்லிம்கள், சைவர்கள், பௌத்தர்களைப் போல ஏமாறவில்லை. மார்க்க அறிவை முஸ்லீம்கள் பெற வேண்டும் என்ற சிந்தனையெ காணப்பட்டது.

www.padippakam.com



## அடிக்குறிப்புகள் :

1. Vithiananthan Prof.S — Tamil Literature and Scholarship-The Pioneer wcrk of Christians in Ceylon; Proceedings of the First International Conference session of Tamil studies I. A. T. R. Vol. II Kaula Lampur 1969 Pages 330—337.
2. 'உதயதாரகை' — ஆசிரியர் தலையங்கம் ஜனவரி 1841.
3. வித்தியானந்தன்-பேராசிரியர்.சு — 'இலக்கியத் தென்றல்'
4. 'உதயதாரகை' — ஆசிரியர் தலையங்கம் 7—1—184ɪ
5. ஷை — தலையங்கம்
6. The Company of them that publish — American Ceylon Press. Page 6.
7. ஷை — பக்கம் 6.
8. சிவநேசச் செல்வன் ஆ. — இலங்கைப்பத்திரிகைத் துறையின்தோற்றமும் வளர்ச்சியும். முதுகலைமாணிப் பட்டப் பரீட்சை ஆய்வுக் கட்டுரை. பக்கம் 40.

படிப்பகம்

www.padippakam.com



| | | | |
|---|---|---|---|
| 9. | உதயதாரகை | — | ஆசிரியர் தலையங்கம் ஜனவரி 1841 |
| 10. | உதயதாரகை | — | மே 1845 |
| | சிவநேசச் செல்வன். ஆ | — | இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் சில குறிப்புக்கள்-நான்காவது தமிழ் ஆராய்ச்சி மாநாடு நினைவு மலர். பக்கம் 347. |
| 11. | ஷ்டி | — | பக்கம் 348. |
| 12. | இந்திரபாலா-கலாநிதி. கே | — | நாவலர் பெருமான் ஜெயந்தி மலர் பக்கம் 80. |
| 13. | உதயதாரகை | — | டிசெம்பர் 1841. |
| 14. | ஷ்டி | | |
| 15. | இலங்காபிமானி | — | ஏப்ரல் 1863. |
| 16. | இலங்கை நேசன் | — | பங்குனி 1877. |
| 17. | சைவ உதயபானு | — | மாசி 1882. |
| 18. | இந்து சாதனம் | — | தலையங்கம் ஆவணி 28, 1889. (கைலாசபிள்ளை எழுதியது) |
| 19. | இக்பால். ஏ | — | மறுமலர்ச்சித் தந்தை பக்கம் 82. |
| 20. | கமால்தீன். எஸ். எம். | — | நாவலர் மாநாடு விழா மலர் பக்கம் 83. |
| 21. | ஷ்டி | — | பக்கம் 83. |
| 22. | ஷ்டி | — | பக்கம் 84. |
| 23. | உதயபானு | — | 22—1—1883. |

த—7

www.padippakam.com

# பகுதி: நான்கு

## தினகரனின் தோற்றமும், தோற்ற காலச் சமூக அரசியற் சூழலும்.

படிப்பகம்

www.padippakam.com

**1900**ல் இருந்த உலகம் 1800ஆம் ஆண்டுகளில் இருந்த உலகிலிருந்து வேறுபட்டு இருந்தது. உலகின் ஜனத்தொகை ஏறத்தாழ இரட்டித்துவிட்டது. வாழ்க்கை முறை திருந்திவிட்டது. புதிய நிலப்பரப்புகளுக்கு மனிதன் செல்லத் தொடங்கிவிட்டான். விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மனிதனின் அறிவு வட்டத்தை விஸ்தரித்து விட்டன. தான் வாழும்சூழலைக் கட்டுப்படுத்துதில் அவன் வெற்றி கண்டுவிட்டான். சுதந்திர உணர்வு வளர்ந்து விட்டது. கல்வி வசதிகள் அதிகரித்து அறிவுப் பெருக்கம் காணப்பட்டது. சமய அனுஷ்டானத்தின் விளைவாகச் சகிப்புத் தன்மையைக் கடைபிடிக்க வேண்டிய நிலை உருவாகிவிட்டது. நீராவி, மின்சார சக்திகள் நகரங் களுக்கு வெளிச்ச வசதி அளிக்கவும் மற்றும் பல வேலை களைச் செய்யவும் பயன்படத் தொடங்கின.கைத்தொழில் வளர்ச்சியும் வர்த்தக விருத்தியும் முன்பு எப்போதுமே கண்டிராத சுபீட்சத்தைத் தோற்றுவித்தன.

கழிந்த நூற்றாண்டின் விசேஷ அம்சம் பத்திரிகை களின் வளர்ச்சியேயாகும். அச்சுத்தொழில், போக்கு வரத்துத் தொழில், கைத்தொழில் ஆகிய தொழில் துறைகளில் புதிய தொழில்நுட்ப அறிவு பயன்படுத்தப் பட்டதும் பூமியின் தோற்றமே மாறத் தொடங்கிற்று. வாழ்க்கை முறை, தத்துவங்களில் புதிய இயல்புகளை ஏற்படுத்திற்று. வர்த்தகத்தின் எல்லைகள் விஸ்தரிக்கப் பட்டன. குறித்த ஒரு பிராந்தியத்திலேயே மக்கள் கூட்டங்கள் பிறருடன் தொடர்பின்றி வாழும் நிலை நீங்கிற்று.

பத்திரிகைத் தொழில் புது சகாப்தம் கண்டது. 1900 அளவிலே உலகின் பலபகுதிகளை இது மிக அண்மை யான நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது.[1] பிரிட்டிஷ்

www.padippakam.com



சாம்ராஜ்யம் பொதுநல அமைப்பாகிவிட்டது. தொடர்பு சாதனம்வளர்ச்சி கண்டதும் பல்வேறு நாடுகளிலும் பிரிந்திருந்த மக்கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கிய தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்பு கிட்டியது.

சுதந்திரத்துக்கும் ஜனநாயக அமைப்புகளுக்கும் ஆபத்து நிலைதோன்றிய காலம் இது. ருஷ்யாவில் 1917 அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து தீவிரவாத கம்யூனிஸம் தோன்றிவிட்டது. இத்தாலியில் புதிய வகையிலான பாஸிஸம் தோன்றியது. ஸ்பெயின், பிரேசில், ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளிலும் சர்வாதிகார அமைப்புகள் உருவாகின. இந்நாடுகளில் முதலில் வெகு ஜனத்தொடர்பு சாதனமான பத்திரிகையின் மிதவாதப் பயன்பாடு பாதிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊடாகவே பிரிட்டிஷ் ஆதிக்கம் இலங்கையில் பரவிற்று. 1802இல் இலங்கை முடிக்குரிய காலனித்துவ நாடானதும் நிர்வாகம் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் நேரடியாகச் சென்றது.

வர்த்தகம் பெருகி, ராணுவ நிர்வாகச் செயற்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியதும் போக்குவரத்துச் சேவைகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் தோன்றிற்று. பத்திரிகைத் துறையும், வர்த்தகத்தின் தாக்கத்தால் வளர்ச்சி கண்டது. ஆங்கிலப் பத்திரிகைகளிலேயே இவற்றின் தாக்கம் கூடுதலாகத் தென்படலாயிற்று. கல்வி அறிவுள்ள உயர்ந்தோர் குழாம் உருவானதால் அரசியலில் இவர்கள் சிறிது சிறிதாக அக்கறைகொள்ளத் தொடங்கினர். இந்த அக்கறையே விருத்தியடைந்து சுதந்திரப் போராட்டமாகப் பரிணமித்தது.

1946ஆம் ஆண்டுக்கும் 1946ஆம் ஆண்டுக்குமிடையில் காலனித்துவ நாடுகளைக் கொண்ட ஆசியாவில் வாழ்ந்த 600,000,000 மக்கள் விடுதலை பெற்றார்கள். சுதந்திர

www.padippakam.com



நாடுகள் பத்து உருவாகின. இவற்றுள் ஒன்றே இலங்கை. இலங்கை சுதந்திரத்தை எவ்வாறு பெற்றது என்பது நீண்டவரலாறு. இந்தியாவிலே பெரும் போராட்டத்தின் பின்னரே விடுதலை கிடைத்தது. இலங்கைக்குத் தவணை அடிப்படையில் இரத்தம் சிந்திப் போராடாமல் பிரிட்டிஷ் பாராளுமன்ற முடிவுகளின்படி சுதந்திரம் படிப்படியாகக் கிடைத்தது.

புதியதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகளின் ஒன்றான இலங்கை மற்றைய நாடுகளிலும் பார்க்க நவீனமாக சமூக, அரசியல் அமைப்பைக் கொண்டிருந்தது. பிலிப்பைன்ஸ் நீங்கலான நாடுகள் தொகுதியில் இலங்கை முன்னிலையில் நின்றது. இங்கு வாழ்ந்த மக்களில் 60 சதவீதத்தினர் கல்வி அறிவு பெற்றிருந்தனர். 1931 முதல் வாக்குரிமையைப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். பிரிட்டன் ஆக மூன்று வருடங்களுக்கு முன்னரே வாக்குரிமை பெற்றது. அரசாங்க சேவையில் இலங்கைப் பிரஜைகளில் தகுதி பெற்றவர்கள் சேர்க்கப்பட்டனர். இதன்பின்னரே பிற நாடுகள் இவ்வாறு செய்தன. அன்றிருந்த சுகாதார சேவைகள் இன்றும் பாராட்டப்படுகின்றன. அரசியல் துறையில் வன்முறை அதிக இடம் பெறவில்லை. 1956ன் பின்னரே தமிழரின் நிலை மாறிற்று. தொடர்ந்து காலத்துக்குக் காலம் இன வெறியாட்டம் நடைபெறுகிறது. வன்செயல்கள் மலிந்து வருகின்றன.

தெற்காசிய நாடுகளில் சமகால அரசியலினதும் அரசியல் நிறுவனங்களினதும் அடிப்படை அம்சம் ஒன்று சுதந்திரப் போராட்டங்களின் தன்மையாகும். இது நாட்டுக்கு நாடு வேறுபட்டுள்ளது. இந்தோனீசியாவில் ஒல்லாந்தருக்கு எதிரான போராட்டத்தில் ராணுவம் பெரும் பங்கு கொண்டது. இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் அமைப்பு, தலைவர்களின் நிலை, இவர்கள்

www.padippakam.com



மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான ஆற்றல் ஆகியன சுதந்திரப் போராட்டத்தில் தாக்கம் செலுத்தின. அரசியல் சீர்திருத்தமும் சுதந்திரப் போராட்டமும் படிப் படியாக இணைந்தே நடைபெற்று வந்துள்ளன.

இலங்கையிலே,அரசியல் அமைப்புச் சட்டம் காட்டிய வழியே பின்பற்றப்பட்டது. பல வழிகளில் இது நாட்டுக்கு நன்மை பயக்குவதாகவும் அமைந்தது. தலை வர்களோ மக்களோ போராட்டத்தின்போது துன்புறுத்தி இம்சைப்படுத்தப்படாததால் தேசிய ஒருமைப்பாடு வலுப் பெற்று ஸ்திரமடையவில்லை. இது பெரும் குறைபாடு. பௌத்த மறுமலர்ச்சியில் மட்டுமே மக்கள் அளாவிய கூட்டு அமைப்பு தெளிவாயிற்று நேரடியான அரசியல் கிளர்ச்சியிலே இது தென்படவில்லை.

1915ல் முஸ்லீம்களும் பௌத்தர்களும் மோதிக் கொண்டார்கள். கண்டியில் புதிதாக உருவான பள்ளி வாசலுக்கு முன்பு முரசறைந்ததால் ஏற்பட்ட குழப்பம் இது. பிரிட்டிஷ் ஆட்சியினருக்கு அசௌகரியம் ஏற்ப டுத்துவதற்காக பௌத்த தலைவர்கள் வேண்டுமென்றே இதனைச் செய்தனர் என்றும் அப்போது சந்தேகிக்கப் பட்டது. முதலாவது உலக யுத்தம் நடைபெற்ற காலம் அது. முஸ்லீம் மத்திய கிழக்குச் சம்பவங்கள் முக்கியத் துவம் பெற்றன. ஏதும் அறியாத சிங்களவர் பலர் விசாரணையின்றி மரண தண்டனை பெற்றனர். தலைவர் களுக்குத் தொடர்பிருக்கவில்லை. பிரிட்டிஷாருக்கு இவர்கள் குற்றஞ் செய்யாதவர்கள் என்று நிரூபித்தவர் ஒரு தமிழ் ஹிந்து ஆவார். எனினும் இந்த விவகாரத்தின் விளைவாக சிங்களத் தலைவர்கள் அரசியல் அரங்கில் முக்கியத்துவம் பெற்றனர். இவர்களுள் ஒருவர் டீ. எஸ். சேனநாயக்கா.

பிரிட்டிஷாரும் இலங்கையர்களும் மோதிக்கொண் டமை இயல்பான விஷயமன்று. 1848 கிளர்ச்சியின் பின்பு

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு நடைபெறவில்லை. சிங்களத் தலைவர்கள் விடுதலை செய்யப்பட்டதும் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. 1948ல் அரசியல் சுதந்திரம் கிடைத்த போது, உண்மையில் விடுதலை கிடைத்துவிட்டது என்று ஒரு சிலரே நம்பினர். இதனைப் பெறத்தாமும் உழைத்த தனையும் நம்பவில்லை. இலங்கை மிகச் சுலபமாகச் சுதந்திரம் பெற்றுவிட்டது என்று கேலியாகச் சொல்வோரும் உளர்.[3]

இலங்கையைப் பொறுத்தவரையில் சலுகை பெற்ற சிறு கோஷ்டியே இவ்வேலைகளைச் செய்தது. இவர்களே அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை வழி நடத்தினர். அதிகாரம் பரவலாக்கப்படும் நடவடிக்கையையும் எடுத்தனர். இன வேறுபாடுகளை மீறிச் செல்கின்ற தேசிய பிரக்ஞையை ஏற்படுத்தவில்லை.

காலனித்துவ அதிகாரச் செறிவு மிக்க ஆட்சியிலிருந்து பாராளுமன்ற முறைக்குச் செல்வது இலகுவான விஷயமல்ல. சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டு பொறுப்புணர்ச்சி வாய்ந்த அமைச்சர்களால் அங்கீகரிக்கப்படும் முறை நீண்டகாலமாக படிப்படியாக வளர்ச்சிகண்ட ஆட்சி முறையாகும்.

ஐரோப்பிய வர்த்தகவளர்ச்சியின் விளைவாக, 'கோல் புறூக்கமறோன்' சிபார்சின் பேரில் சட்ட நிருபண சபை 1833லேயே நிறுவப்பட்டது. நிறைவேற்றுச் சபைக்கு இது ஆலோசனை கூறும் நிறுவனமாக இருந்தது.

1912லேயே முதல் முறையாகத் தேர்தல் கோட்பாடு ஏற்கப்பட்டது. ஐரோப்பிய முறையில் கல்வி பயின்றவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது. இவ்வாறு சனத்தொகையில் நான்கு சதவிகிதத்தினருக்குக் கொடுக்கப்பட்டது. புதிய சபையிலே பல்வேறு இனங்களுக்குமாக ஆறு அங்கத்தினர் இடம்பெறக் கூடியதாகவிருந்தது. ஒரு கண்டிச் சிங்களவர், ஒரு முஸ்லீம், இரு கரைப் பகுதிச்

படிப்பகம்

www.padippakam.com



சிங்களவாகள், இரு தமிழர்கள் இருக்கக்கூடியதாக இருந்தது. படித்த இலங்கையருக்கென ஓர் ஆசனம் இருந்தது. தமிழரான சேர். பொன்னம்பலம் இராம நாதன் இதற்குத் தெரிவு செய்யப்பட்டார்.

முதலாவது உலக மகாயுத்தம் தேச விடுதலைப் போராட்ட உணர்ச்சியை ஏற்படுத்திற்று. 1915 குழப்பங்கள் அரசியல் அமைப்பில் மேலும் சீர்திருத்தம் காணவேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கிற்று. இது வரை குறுகிய மேலைத்தேய நாகரிகத்தின் தாக்கத்துக்குட் பட்ட மத்தியதர வகுப்பினரின் இயக்கமாக இருந்த ஒன்றிற்கு இப்போது சிங்கள பௌத்தர்களின் ஆதரவு கிடைக்கத் தொடங்கிற்று.

மேலைத்தேய முறையிலான கல்வியை இவர்கள் பெற வில்லையாயினும் இவர்கள் இப்போது நம்பிக்கையுடன் இலங்கையின் அரசியல் விவகாரங்களில் அக்கறைகொள்ள லாயினர். சமகாலத்தில் இந்தியாவில் நிகழ்ந்தவை இவ் வியக்கத்துக்கு மேலும் வேகம் கொடுத்தன. இந்தியாவிலே யுத்த நிலையைப் பயன்படுத்திக் கிளர்ச்சி நடைபெற்றதும் 'மொண்டேக் செம்ஸ்போர்ட் ஆணைக்குழு' இந்தியா வுக்கு வந்து பார்வையிட்டுச் சில சிபார்சுகளைச் செய்தது. இந்நிகழ்வு இலங்கைச் சீர்திருத்தவாதிகளின் இயக்கத் துக்கு ஊக்கம் அளித்தது. இதற்கிடையில் 1927லே 'இலங்கை சீர்திருத்த இயக்கம்' நிறுவப்பட்டது.

1919இல் 'இலங்கை தேசிய காங்கிரஸ்' உருவானதும் இது விரிவு பெற்றது. சேர்.பொன்னம்பலம் அருணாசலம் போன்ற தலைவர்கள் சேர். ஜேம்ஸ் பீரிஸ், சேர். டொன் பாரன் ஜயத்திலக, டீ. எஸ். சேனநாயக்க, எஃப். ஆர். சேனநாயக்க போன்ற தாழ்ந்த பிரதேச சிங்களத் தலை வர்களுடன் இணைந்து அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் கோரினார்கள். கவர்னர் சேர். வில்லியம் மனிங் (1918—1925) பிரிட்டிஷ் அமைச்சர் மில்னர் பிரபு கேட்டுக்

www.padippakam.com



கொண்டபடி அரசியல் அமைப்பு திருத்தம் பற்றி அறிக்கை சமர்ப்பித்தார்.[4] மேலும் திருத்தங்கள் செய்யப் பட்டன.

1920 அரசியல் அமைப்பில், சபையில் தமிழர் முன்பு போல அந்தஸ்து பெறவில்லை. மூன்று ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. சிங்களவர் 13 இடங்கள் பெற்ற னர். முன்பு ஒரேயளவு பிரதிநிதித்துவம் கிடைத்தது. இலங்கை மக்களைத் தன் கொள்கையால் ஒன்றுபடுத்திய கவர்னர் மனிங் என்று குறிப்பிட்ட சேர். பொன்னம்பலம் அருணாசலம் உட்படத் தமிழர் தேசிய காங்கிரஸிலிருந்து வெளியேறினர். தமிழர் ஒருவருக்கு மேற்கு மாகாணத்தில் ஒதுக்கிய ஆசனத்தைக் கைவிட சிங்களவர் பிரிட்டிஷா ருடன் உடன்பட்டுள்ளனர் என்பதே குற்றச்சாட்டு. இவ்வாறு செய்வதில்லை என்று தனிப்பட்ட முறையில் இரு சிங்களத் தலைவர்கள் முன்பு உறுதியளித்திருந்தனர். சிங்களவர் பெறும் ஆசனங்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பகுதி வேண்டுமென்று தமிழர் கேட்டி ருந்தனர். இதில் அரைவாசிதானும் அவர்கள் பெற வில்லை.

பொன்னம்பலம் அருணாசலம் சகல சக்திகளையும் ஒன்றிணைத்ததனாலேயே 1919' டிசம்பரில் 'இலங்கை தேசிய காங்கிரஸ்' உருவாயிற்று. ஆனால் இரண்டு வருடங்களுக்குள் காங்கிரஸிலிருந்து விரக்தியால் ராஜினா மாச் செய்தார்.

இனி வேறுபாடுகள் தலைதூக்கின. போட்டி, பொறாமை தோன்றியதால் அமைதியின்மை காணப் பட்டது. உடனடியான காரணம் தேர்தலுடன் வந்தது. அருணாசலம் எங்கு போட்டியிடுவது என்ற பிரச்சினை எழுந்தது. அதாவது ஜேம்ஸ் பீரிசுக்கு எந்தத் தொகுதி என்பதே கேள்வியாக இருந்தது. அருணாசலம் கொழும்புத்தொகுதியில் போட்டியிட விரும்பினார்.

www.padippakam.com



ஜேம்ஸ் பீரிசுக்கு அதிக செல்வாக்கு இருந்தது. அருணாசலம் இறுதியில் போட்டியிடவில்லை. காங்கிரஸிலிருந்து வெளியே சென்றார். அருணாசலத்துடன் இன்னும் பலர் வெளியேறினர். இது காங்கிரஸுக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. காங்கிரஸிலிருந்து பிரிந்ததும் மீண்டும் குறுகிய துறைக்குள் இவர் புகுந்தார். கொழும்பு தமிழ் மன்றத்தை ஆரம்பித்த பின்னர் 1922இல் சகோதரரோடு இணைந்து 'யாழ்ப்பாண மகாசபை'யை நிறுவினார். இச்சம்பவங்களின் பின்னணியில் எல்லாம் சூத்திரதாரிகளாக நின்ற டீ. எஸ். சேனநாயக்க சகோதரர்களை 'முடிசூட்டுவோர்' என்று டெய்லி நியூஸ் கண்டித்தது.[5] இதேவேளை சேர். பொன் இராமநாதன் கவர்னர் மனிங்குடன் இணைந்து தேசிய காங்கிரஸின் வீழ்ச்சிக்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

சேர். இராமநாதன் கொழும்பு கொச்சிக்கடையில் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்தவர். பாடசாலைகளை நிறுவினார். தமிழரின் பண்பாட்டுத் தனித்துவத்தை உணர்த்தினார். சேர். பொன்னம்பலம் இராமநாதனைப் பற்றி ஏ. ஏ. டி. சில்வா பின்வருமாறு கூறியிருக்கிறார்: 'ஆற்றல்மிக்க சேர். இராமநாதன் பல துறைகளில் சிறப்பு மிக்கவர். ஆங்கிலத் தினசரியான 'சிலோனிசை' வெளியிட உதவியளித்தார். இதன்மூலம் இவர்களது கொள்கைக்கு ஆதரவு கிடைத்தவண்ணமே இருந்தது.' இவர் இறந்தபோது ஈ. டபிள்யூ. பெரேரா பின்வருமாறு சொன்னார்.

> "1915ல் நாட்டு மக்களுக்கு இவர் ஆற்றிய பணியைக் குறிப்பிடாது விடுதல் தவறு. நாட்டுக்குச் செய்யும் கடமையிலிருந்து தவறியவனாகிவிடுவேன். அப்போது எமக்கு நண்பர்கள் இல்லை...சேர். இராமநாதன் எமது இனத்தவர் அல்லர் எனினும் தாய் நாட்டுக்காகப் பாடுபட்டார். நாம் துன்பம் அடைந்திருந்தபோது உதவியளித்த ஒரே தமிழர் இவர்."[6]

www.padippakam.com



சட்டசபையிலே தமிழர் கூடுதலான இடத்தைப் பெற வேண்டும் என்று போராடியவர்களில் ஒருவர் இவர் தேசிய சிந்தனை இருந்தாலும் தான் தமிழன் என்பதை மறக்கவில்லை. இதேவேளை சிங்களவரும் அரசியல் அமைப்பைக் கண்டித்தனர். இவர்கள் புதிய அமைப்பு பிரதேச அடிப்படையில் அல்லாது இனவாரியாகப் பிரதி நிதித்துவம் அளிக்கிறது என்று கண்டித்தார்கள்.

எதிர்காலத்தில் இரு இனங்களுக்கிடையிலும் கஷ்டங்கள் ஏற்படுவது தடுக்கமுடியாததாகிற்று. பிரதேச வாரியான பிரதிநிதித்துவம் நல்லதாக இருந்திருக்கலாம். எண்ணிக்கையில் குறைந்த தமிழர்களும் முஸ்லீம்களும் இனவாரிப் பிரதிநிதித்துவச் செல்வாக்கிழந்ததும் தங்கள் பலம் படிப்படியாகக் குன்றிவருவதனை உணர்ந்தார்கள். சிறுபான்மையினர் சிங்களவர் பற்றி அச்சங் கொண்டனர். எனவே அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் வேண்டும் என்ற கிளர்ச்சியில் அதிக சிரத்தை காட்டவில்லை.

பிரிட்டிஷாரின் கீழ் இன அடிப்படையினைக் கொண் டிருக்கும் பிரதிநிதித்துவத்தை வரவேற்கவும் செய்தனர். பிரதேச அடிப்படையிலான சுதந்திரத்திலும் பார்க்க இந்நிலையை இவர்கள் விரும்பினார்கள். சிங்களவர்கள் சிறுபான்மையினர் தங்களின் சுதந்திரப் போராட்டப் பாதையில் தடைக்கல்லாக இருப்பதாகவே நினைத்தனர். சிறுபான்மையினர் உரிமைகளைப் பாதுகாப்பதாகக் கூறிய பிரிட்டிஷார் இந்தத் தடைகள் தொடரச் செய்து தாமே அதிகாரம் வைத்திருக்கப் பயன்படுத்தினர்.

சிங்கள, தமிழ் இனங்களுக்கிடையே நீண்டகாலமாக இருந்த கருத்து வேற்றுமைகளும் பிரிட்டிஷ் ஆட்சியின் போது கிடைத்த சலுகைகளும் மக்கள் ஒன்றுபட்டு பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கும் முயற்சிக்கு ஊக்கந்தர வில்லை.[7]

www.padippakam.com



டாக்டர் ஜீ.ஸி. மெண்டிஸ' தனது ''பிரிட்டிஷாரின் கீழ் இலங்கை'' என்ற நூலில் 1931' டொனமூர் திட்டத்துக்கு முன்பிருந்த அரசியல் நிலைமையைப் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

''இலங்கையிலிருந்த சமூகப் பிரிவுகள் இனவாரியானவை என்று கவர்னர் மஸினிங் தெரிவித்திருப்பது சரியானதே. பல்வேறு இனங்களுக்குமிடையேயும் சாதிகட்கிடையேயும் கலப்புத் திருமணங்கள் மிகக் குறைவே. இவை தனித்துவத்துடன் வேறாக இருக்கின்றன. அண்மைக்காலத்தில் கலாசார மறுமலர்ச்சியின் விளைவாக இனப் பாகுபாடு பெரிதாகி விட்டது. மேலும், பிரிட்டிஷார் கைப்பற்றியபோது சகல சமூகங்களும் ஒரேயளவான முன்னேற்றம் கண்ட நிலையில் இருக்கவில்லை. பின்தங்கியவர்களை முன்னேற்றவோ அல்லது இவர்களுக்குக் கல்வி அறிவூட்டவோ அதிக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக சமூக, பொருளாதார நிலை காரணமாக சலுகையுடன் இருப்பவர்கள் அரசாங்கம் அமைக்கும் புதிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

தாழ்ந்த பிரதேசச் சிங்களவர்கள் தமிழர்கள் பெற்ற கல்வி வசதிகளைப் பெறாததால் கண்டியர்களும் முஸ்லீம்களும் பாதிக்கப்பட்டனர். தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் ஏற்பட்ட பொருளாதார மாற்றத்தினால் வரண்ட பிரதேசத்தில் வாழும் தமிழர்கள் பயனடையவில்லை தங்கள் முன்னேற்றத்துக்கு அரசாங்க சேவைத் தொழிலையே நம்பியிருந்தனர். இந்நேரத்தில் இலங்கைக்கு வெளியே இந்தியாவில் தொழில் பெறும் வாய்ப்புகள் நிறுத்தப்பட்டன. தாழ்ந்த பிரதேச சிங்களவருடன் போட்டியிடவேண்டி இருந்ததால் எதிர்காலம் பற்றி அஞ்சத்

www.padippakam.com



தொடங்கினர். முன்னேற்றம் கண்ட சமூகங்கள் பெற்ற இடத்திலும் அதிகாரத்திலும் பங்கு பெறும் நோக்குடன் கண்டியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஒன்றுபடும் உணர்வு ஏற்படலாயிற்று. தமிழரும் பறங்கியரும் தமது நிலையைப் பாதுகாப்பதற்காக இத்தகைய முறையில் சிந்திக்கத் தொடங்கினர். அதிகாரப் போராட்டமான அரசியல் சீர்திருத்த விவாதத்தின்போது, தமிழரும் சிறுபான்மையினரும் சிங்களவருக்கு எதிரான அதிகாரிகளுடன் நின்றனர்.[8]

1927இல் இலங்கைக்கு வந்து நிலைமையை ஆராய்ந்த 'டொனமூர் பிரபுவின் ஆணைக்குழு' இனங்களுக்கிடையே இருந்த கசப்புணர்ச்சியைக் குறிப்பிடத் தவறவில்லை. ஜனத்தொகை ஒரே இனத்தினரைக் கொண்டதல்ல என்று மட்டுமல்ல, இதிலுள்ள பல்வேறு சக்திகளும் ஒன்றையொன்று நம்புவதில்லை; சந்தேகிக்கின்றன. இலங்கையில் தேசப்பற்று என்ற கோட்பாடு தேசிய ரீதியாக இருப்பதோடு இனவாரியானதாகவும் காணப்படுகிறது என்று கூறுவதில் தவறில்லை என்று குறிப்பிட்டது.[9]

என்றாலும் இவ்வாணைக்குழு, தமிழர் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை விரும்பியதனையும் பொருட்படுத்தாது இதனை நிராகரித்தது.

இனவாரிப் பிரதிநிதித்துவம் அரசியல் சமூகத்தில் புரையோடிய புண்ணைப் போன்றது. மக்களின் அதி முக்கியசக்தியூற்றுக்குள் அரித்து ஊடுருவிச்சென்று சுய நலம், சந்தேகம், வெறுப்பு ஆகியவற்றை வளர்த்து புதிய அரசியல் உணர்வு ஏற்படாது நஞ்சூட்டிக் கொல்கிறது. தேசிய கூட்டு மனப்பான்மை தோன்றாது சாதுர்யமாகத் தடுக்கிறது.

அழித்துச் செல்கின்ற தாக்க இயல்புகளைக்கொண்ட இனவாரிப் பிரதிநிதித்துவம் அரசியல் அமைப்பில் விசேஷ

www.padippakam.com



அம்சமாக இருக்கும்வரை ஜனத்தொகையைச் சேர்த்து உருவாக்கும் பல்வேறு சக்திகளும் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவும் ஒரே மக்கள் என்ற உணர்வை ஏற்படுத்தவும் வல்லமுறையில் ஒன்றுபடுத்தும் நம்பிக்கை ஏற்படமாட்டாது.[10] ஆணைக்குழுவின் யோசனைகள் அடங்கிய அறிக்கையில் மேற்கூறியவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இனவாரிச் சிந்தனை வேரூன்றத் தொடங்கிவிட்டது. இதனால் சுதந்திரப் போராட்டம் தடைப்படத் தொடங்கிற்று. தமிழ் மக்கள் பிரிந்து செல்லாது தேசிய ரீதியில் செயலாற்றச் செய்ய வேண்டும் என்ற ஆவல் சில பெரியார்களிடம் தோன்றிற்று. இந்தச் சிந்தனைப் பிரவாகத்தின் ஊற்றாக இருந்தவர் 'தினகரன்' ஸ்தாபகர் டீ. ஆர். விஜேவர்த்தன.

டொன் றிச்சர்ட் விஜேவர்த்தன (1886—1950) இலங்கையிலே முதன்முறையாக பத்திரிகைத் தொழிலை வர்த்தக ரீதியில் ஆரம்பித்த இலங்கையர். 1913இல் 'டெயிலி நியூஸ்' பத்திரிகையை இவர் வெளியிட்டபோது இலங்கை லண்டனிலிருந்து ஆளப்பட்ட பிரிட்டிஷ் காலனி நாடாக இருந்தது. முப்பத்திரண்டு வருடங்களின் பின்னர் இவர் இறந்தபோது இலங்கை சுதந்திர நாடாகிவிட்டது. இந்நிலையை அடைவதில் டீ. ஆர். செய்த பங்களிப்பு பொது மக்களின் ஞாபகம் எனும் அரங்கிலே இவருக்குத் தகுதியான இடத்தைக் கொடுத்துள்ளது.

இங்கிலாந்திலிருந்து தாயகம் திரும்பிய இளைஞர் என்ற வகையில் அரசியல் விடுதலைப் போராட்டத்தில் பங்களிப்பு செய்யவேண்டும் என ஆர்வம் கொண்டதனால் பத்திரிகைத் தொழிலில் இறங்கினார்.

பத்திரிகைத் தொழிலிலோ வர்த்தக நிர்வாகத்திலோ அனுபவமே இல்லாததால் தொழிலில் தோல்வி காணக்

www.padippakam.com



கூடிய ஆபத்தும் இருந்தது. செல்வ வளம் உள்ளவ ரெனினும், பெரிய செல்வந்தர் அல்லர் என்பதனால் இத்தொழிலில் தோல்வி கண்டிருந்தால் வருங்காலம் நாசமாகியிருக்கும். ஆனால் இவர் இத்தொழிலில் வெற்றி கண்டு இறக்கும் போது கணிசமான அளவு செல்வத் தையும் விட்டுச் சென்றார். கிடைத்த இலாபத்தைதான் எடுக்காது முதலீடு செய்ததால் பத்திரிகைகள் சக்திமிக்கன வாய் மாறின.

பல பத்திரிகைகளின் உடைமையாளன் என்பது இவருக்கு அதிகாரம் கொடுத்தது. இந்த அதிகாரத்தை நாட்டின் நலனுக்காகப் பயன்படுத்தினார்.

டீ. ஆர். விஜேவர்த்தன இலங்கையின் ஏனைய தேசிய இயக்கத் தலைவர்களைப்போல கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்துக்கே சென்றார். சேர். பொன் அருணாசலம், சேர். ஜேம்ஸ் பீரிஸ் போன்றவர்கள் முன்பு கேம்பிரிட்ஸ் சென்றிருந்தார்கள். இந்தியாவிலிருந்து ஜவஹர்லால் நேருவும் இங்கேதான் சென்றிருந்தார்.

டெயிலி நியூஸ் பத்திரிகையின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழா 'மல'ரிலே விஜேவர்த்தனாவே பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

> ''கேம்பிரிட்ஜில் நான் பட்டப்படிப்பில் ஈடுபட்டிருந்த போது அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. இந்தியா, இலங்கை மற்றும் கிழக்கு உலகின் ஏனைய நாடுகளி லிருந்தும் சகோதர மாணவர்கள் வந்திருந்தார்கள். வங்காளத்தைக் கேர்ஸன் பிரபு பிரிந்ததன் விளைவாக இந்தியாவில் அமைதியின்மை ஏற்பட்டது. பிரபல இந்தியத் தலைவர்கள் இங்கிலாந்துக்கு வந்து இந்தியாவின் நிலை பற்றி பிரிட்டிஷ் மக்களுக்கு விளக்கம் கொடுப்பதற்காகக் கூட்டங்களில் பேசி னார்கள். பெரும் தேசியவாதியும் கல்விமானுமான

www.padippakam.com



லாலா ரஜபதி ராய், பிபின் சந்திர பால், வங்காளத்தில் பிரபல பேச்சாளரான சுரேந்திரநாத் பானர்ஜி இவர்களுள் சிலர்.

சாம்ராஜ்ய சட்டசபையின் அங்கத்தவரும், நாட்டின் சேவையில் ஈடுபட்டுப் பல தியாகங்களைச் செய்தவருமான கோபால கிருஷ்ண கோகலேயும் வந்திருந்தார். இவர் தலைசிறந்த அறிவாளி. நாட்டு மக்கள் அவரை நேசித்ததுபோல ஆட்சியாளர்களும் அவர்மீது மதிப்பு வைத்திருந்தனர். கல்வி அறிவு பெற்ற ஒவ்வொரு இந்தியரும் இலங்கையரும் நாட்டின் பொது வாழ்க்கையில் பங்குகொள்ள வேண்டும் என்றும், நாட்டின் நலனுக்காகத் தியாகம் செய்யத் தயாராயிருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார். 'நர்ஷனல் லிபரல் கிளப்'பில் அடிக்கடி கோகலேயைச் சந்திப்போம். அன்றைய அரசியல் பிரச்சனைகள் சம்பந்தமாக நீண்ட நேரம் பேசுவேன். தென்ஆப்பிரிக்காவுக்குச் சென்றபோது தன் செயலாளராக வரும்படி பெரியார் கோகலே என்னைக் கேட்டார். நான் ஏற்க முடியாத நிலையிலிருந்ததனையிட்டு கவலைப்பட்டேன்.''[12]

இந்நேரத்திலேயே தென் ஆப்ரிக்காவில் வழக்கறிஞராகத் தொழில் புரிந்த எம். கே. காந்தி அங்கு குடியேறியிருந்த இந்தியர்களுக்குக் குடியுரிமை அளிப்பதற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். ஆனால் விஜேவர்த்தன ''விக்டோரிய லிபரலிஸம்'' தத்துவத்தின் தாக்கத்தில் அகப்பட்டிருந்தார். எனவே இதில் தானும் மூழ்கவில்லை என்றாலும் முப்பது ஆண்டுகளாக இவரது பத்திரிகைகள் வேறு எந்த மனிதரிலும் பார்க்க காந்தியைப் பற்றியும் காந்தியின் இந்திய விடுதலைப் போராட்டங்கள் பற்றியுமே செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தன.

www.padippakam.com



இலங்கையில் பிறந்து இங்கிலாந்தில் பரிஸ்டராகத் தொழில்புரிந்த எஃப். எச். எம். கோர்பெட்டும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர். இவரது அலுவலகத்திலேயே முதன் முதலில் ஈ. டபிள்யூ. பெரேராவை டி, ஆர். சந்தித்தார். கோர்பெட் அவர்களே பொதுஜன அபிப்பிராயத்தின் முக்கிய தத்துவத்தை விஜேவர்த்தனாவுக்கு எடுத்துக் கூறி இதற்குச் சுதந்திரமான கட்டுப்பாடற்ற பத்திரிகை அவசியம் என்பதனை வலியுறுத்தினார்.

அப்போது இலங்கையிலே ''சிலோன் இன்டிபென்டென்ட்'' என்ற ஆங்கிலப் பத்திரிகை நன்கு இயங்கிக் கொண்டிருந்தது. சேர், ஹெக்டர் வான் கைவன்பர்க் இதனை நடத்திக் கொண்டிருந்தார். பறங்கியர் சமூகத்தின் அங்கத்தவராகச் சட்ட நிரூபண சபையில் இவர் இருந்தார்.

'இன்டிபென்டென்ற்' பத்திரிகையை விற்பார்களா என்று கோர்பெட்டே விஜயவர்த்தன சார்பில் லண்டனிலிருந்து எழுதிக் கேட்டார். கைலன்பார்க் சம்மதிக்கவில்லை. ஆனால் பல ஆண்டுகட்குப் பின்னர் 'இன்டிபென்டென்ற்' விற்பனைக்கு வந்தபோது விஜேவர்த்தன இதனை வாங்கினார். இதனை நன்கு நடத்தியிருக்கலாம். ஆனால் தனது 'டெயிலி நியூஸு'க்குப் போட்டியாகிவிடும் என்று நினைத்த விஜேவர்த்ன வாங்கிய பத்திரிகையை தன் பாட்டிலே மடிந்து போகவிட்டார்.

விஜேவர்த்தன அதனை வாங்கியதனைப் பலர் அறியு முன்னர் அது மூடப்பட்டும் விட்டது. டி. ஆர். பல்கலைக் கழகப் பருவத்திலிருந்து மறையும் வரை அரசியலில் தீவிர அக்கறை கொண்டிருந்தார். குடியேற்ற நாடுகளிலிருந்து இங்கிலாந்துக்குக் கல்விக்காகச் சென்ற ஒவ்வொரு இளைஞரையும் போல இவரும் அடிமை மக்கள் தமது நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக இருக்கும் நிலை மாறும் காலத்தை எதிர்பார்த்திருந்தார். இங்கிலாந்தில் காணப்பட்ட சுதந்திரச் சூழல் இந்த வேட்கையை அதிகரித்தது.

த—8

படிப்பகம்

www.padippakam.com



இக்காலத்திலேயே அரசியல் சீர்திருத்த இயக்கம் வலுப்பெற்றது. இலங்கை தேசிய சங்கம், யாழ்ப்பாணச் சங்கம், சிலாபச் சங்கம், தாழ்ந்த பிரதேச உற்பத்திப் பொருட் சங்கம் ஆகியன மகஜர்களை லண்டனுக்கு அனுப்பின. எச். ஜே. ஸி. பெரேரா தலைமையில் 760 பிரமுகர்களும் மகஜர் அனுப்பினர். இந்த நடவடிக்கை களுடன் டி. ஆர். தொடர்பு கொண்டு ஆதரவு திரட்டி னார். இந்தக் கிளர்ச்சியின் விளைவாகவே பொதுமக்கள் தெரிவுசெய்யும் கல்விகற்ற இலங்கையருக்கான ஓர் ஆசனம் சட்ட நிரூபண சபையில் கிடைத்தது. சொலிஸிட்டர் ஜெனரல் பதவியிலிருந்து இளைப்பாறிய திரு. (சேர்) பொன்னம்பலம் இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். டாக்டர் (சேர்) மாக்கஸ் பர்னன்டோ தோல்வியுற்றார்.

விஜேவர்த்தன இலங்கை திரும்பியபோது, சுதந்திரப் போராட்ட சக்திகளை ஒன்றினைக்க வேண்டும் என்ற முடிவுடனேயே வந்தார். லண்டனில் வெளிவந்து கொண் டிருந்த 'டெயிலி நியூஸி'ன்பெயரையே இலங்கையில்தான் ஆரம்பிக்கும் பத்திரிகைக்கும் வைக்க வேண்டும் என்ற முடிவுடன் வந்தார். இவர், தான் தலைவராக விரும்ப வில்லை. தலைவர்களுக்கு அத்தியாவசியமான ஒருவ ராகவே இருந்தார்.

பத்திரிகைகள் மூலமாகவே விஜேவர்த்தன நாட்டின் நலனுக்கு முக்கியத்துவம் மிக்க பெரும் பங்களிப்பைச் செய்தார். வர்த்தகத்தில் கண்ட வெற்றியோ, அதிகாரத் தைப் பெற்றமையோ இத்துறையில் இவரை நிரந்தரமாக ஈடுபடுத்தவில்லை. உலகிலுள்ள சுதந்திர நாடுகள் வரிசை யிலே இலங்கையும் ஓர் இடத்தைப் பெறவேண்டும் என்ற தாகத்தின் காரணமாகவே பத்திரிகைகளுக்குத் தன் நேரத் தையும் சக்தியையும் செலவிட்டார்.[13] உண்மையில் தன் இறுதி நாட்களில் கஸன் பொத்தேஜுடன் பேசிக் கொண் டிருந்தபோது, தான் புதிதாக வாழ்க்கையை ஆரம்பிக்கப்

www.padippakam.com



போவதாயின் நிச்சயமாகப் பத்திரிகை நடத்துவது பற்றி யோசிக்கவே போவதில்லை என்று கூறினாராம். ஆரோக்கியத்தையும் நேரத்தையும் தியாகம் செய்தே செல்வத்தையும் அதிகாரத்தையும் அவர் பத்திரிகைமூலம் பெற்றார்.[14]

விஜேவர்த்தன தன் பத்திரிகை தொழிலை 'சிலோனிஸ்' என்ற பத்திரிகை வாங்குவதன் மூலம் ஆரம்பித்தார். இப்பத்திரிகை 1913-இல் பொன்னம்பலம் இராமனாதனால் ஆரம்பிக்கப்பட்டது. கல்வி கற்றவர்களுக்கான ஆசனத்துக்கு நடத்திய தேர்தலையொட்டி இதனை ஆரம்பித்திருந்தார். ஹெக்டர் ஜயவர்த்தன கேணல் டி. ஜி. ஜயவர்த்தன, டாக்டர் ஈ. வி. ரத்னம் ஆகியோர் உதவி அளித்தனர்.

'மோர்னிங் லீடர்' இராமநாதனை எதிர்த்தது. இராமநாதனை ஆதரித்த இன்னும் பலர் ''சிலோனீஸ்'' பத்திரிகைக்குப் பண உதவி அளித்தனர். இதற்கு அமெரிக்கர்களே ஆசிரியர்களர்க இருந்தனர். பத்திரிகையை அழகுபடுத்தியதோடு வேறு உத்திகளையும் கையாண்டனர். விற்பனை செய்யும் இடங்களில் பான்ட் வாத்திய இசை எழுப்பி வாசகர்களை ஈர்த்தனர் என்றும் கூறுவர். நிர்வாகம் சரிவர நடைபெறாததாலும் தணிக்கைக் கெடுபிடிகள், பத்திரிக்கைக் காகித விலை அதிகரிப்பு ஆகியவற்றால் கஷ்டங்கள் ஏற்பட்டதாலும் பத்திரிகை கஷ்ட நிலையில் இருந்தது. அப்போது எஃப்-ஆர்-சேனநாயக்கா ரூ. 21,000 கடன் தொகையைத் தரும்படி வழக்குத் தொடர்ந்து 'றிட்' ஆணை பெற்றார். ஏலத்தின்போது டீ. ஆர். ரூபா 16,000க்கு வாங்கிவிட்டு மேலதிக பணம்போட்டு எஃப். ஆர். சேனநாயக்காவின் ஈட்டை மீண்டார்.

டீ. ஆர். 'டெயிலி நியூ'ஸை ஆரம்பித்தபோது 'டைம்ஸ் ஆஃப் சிலோன்', 'ஒப்சேவர்', 'சிலோன் மோர்னிங் லீடர்' ஆகியன இருந்தன. 1923-இல் 'ஒப்சேவரை' டீ. ஆர். வாங்கினார்.

www.padippakam.com



எச். எல். பேரேரா ஆரம்பித்த 'தினமின'வையும் டீ. ஆர். வாங்கி சிங்களப் பத்திரிகையையும் தன் ஆதிக்கத்தில் கொண்டுவந்தார்.

'டெயிலி நியூஸி'ன் முதல் ஆசிரியராக ஏ. வி. குலசிங்கம் இருந்தார். இவர் நீண்ட ஆசிரியர் தலையங்கங்களை விரும்புவார். வாயில் யாழ்ப்பாணம் சுருட்டை வைத்துக்கொண்டு அறையில் அங்குமிங்கும் நடந்த வண்ணம் தலையங்கத்தைச் சொல்ல ஒரு விகிதர் எழுதுவாராம். டீ. ஆர். இன மத பேதமின்றித் திறமைக்கு இடம் அளித்தவர் என்பதனை குலசிங்கத்தின் நியமனம் உணர்த்துகிறது. இவரைத் தொடர்ந்து இன்னும் பல தமிழர்கள் உயர் பதவிகளில் வைக்கப்பட்டிருந்தனர்.

தமிழர்களையும் தேசிய அரசியலில் இழுத்து வந்துவிடவேண்டும்; இனவாதம் வளரவிடக்கூடாது என்ற ஒரே சிந்தனையுடனேயே தமிழிலும் பத்திரிகையை ஆரம்பிக்க டீ. ஆர். விரும்பினார். இச்சிந்தனையின் பயனே 'தினகரன்'. விஜேவர்த்தனவின் நோக்கம் 'தினகரன்' முதல் இதழில் இடம்பெற்ற ஆசிரியர்தலையங்கத்திலும் கட்டுரையிலும் கூறப்பட்டிருந்தது.

(இணைப்பைப் பார்க்கவும்)

ஈராண்டுகட்கு முன்னதாகவே 1930ல் இலங்கையிலிருந்த இந்தியச் செட்டிமார் சமூகத்தினர் 'வீரகேசரி'யை ஆரம்பித்திருந்தனர். சுப்பிரமணியம் செட்டியார் தன் மகனின் பெயரையே பத்திரிகைக்கும் சூட்டினார். 1930இல் இதன் முதற் பிரதி வெளியானது. இந்தியர்களின் நலனைக் கவனிப்பதற்காகவே இது ஆரம்பிக்கப்பட்டது. விஜேவர்த்தன நினைத்ததற்கு மாறாகவே 'வீரகேசரி' இயங்கத் தொடங்கிற்று. தேசிய ரீதியில் பிரச்சனைகளை அணுகாமல், இந்தியர்களுக்கு இந்தியச் செய்திகளைக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



'வீரகேசரி'யின் சகோதரப் பத்திரிகையாக 1966இல் 'மித்திரன்' என்ற மாலைப் பத்திரிகையையும் வெளிவரலாயிற்று.

1932 மார்ச் மாதம் 15ஆம் திகதி காலை 'தினகரன்' உதயமானது. அன்றுமுதல் இன்று வரை தொடர்ந்து வெளிவருகின்றது. மற்றைய தமிழ்ப் பத்திரிகைகள் வேலை நிறுத்தங்களால் பாதிக்கப்பட்டு வெளிவராது இருந்திருக்கின்றன 'வீரகேசரி' இரண்டுமுறை பல மாதங்களாக மூடிக் கிடக்க நேர்ந்தது. வேலை நிறுத்தத்தில் ஊழியர்கள் இறங்கியதால் பத்திரிகை வெளிவரவில்லை.

அப்போது நிர்வாகியாக இருந்த டீ. பி. கேசவன் வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக வேறொரு பத்திரிகையில் பணியாற்றி நீக்கப்பட்டிருந்த ஒருவரைத் திருட்டுத் தனமாகப் பயன்படுத்தி சில நாட்கள் பத்திரிகை வெளியிட்டாரெனினும் இம்முயற்சியும் நீடிக்கவில்லை. சில மாதங்களுக்குப் பின்னர் புதிய ஊழியரை நியமித்து 'வீரகேசரி'யைத் தொடர்ந்து நடத்திவிட்டு சிங்களவர்களுக்கு அவர் விற்றுவிட்டார். 'தினகரனை' வழிநடத்திய எஸ்மன்ட் விக்கிரமசிங்க தலைமையில் ஒரு குழு இதனை வாங்கி நடத்திற்று.

இவர்கள் இதன்மூலம் ''உதய'' என்ற சிங்களப் பத்திரிகையையும் வெளியிட்டனர். அரசியல் தேவைகளுக்காகவே அச்சகத்தை வாங்கினார்களாதலின் சிங்களப் பத்திரிகையிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தினர். நிலைபெற்ற பத்திரிகைகளுடன் இதனால் போட்டியிட முடியாது போயிற்று.

இந்நிலையில் முதலீடு செய்த டட்லி சேனநாயக்காவுக்கும், ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டதும் இவர்கள் தொடர்ந்து பத்திரிகையை நடத்த விரும்பவில்லை. இதற்கிடையில்

படிப்பகம்

www.padippakam.com



சிறிமாவோ பண்டாரநாயக்க 'உதய' பத்திரிகைமீது மான நஷ்ட வழக்கும் தொடர்ந்துவிட்டார். எனவே விக்கிரம சிங்க இரும்புக்கடை வைத்துப் பின்னர் புடவை ஆலை ஆரம்பித்த பிரபல வர்த்தகர் ஏ. லை. எல். ஞானம் என்பவருக்கு 'வீரகேசரி நிறுவன'த்தை விற்றுவிட்டார்.

'தினபதி'யும் இரு தடவைகள் மூடப்பட்டது. ஒரு முறை வேலை நிறுத்தம் காரணமாக முதலாளிகளே அச்சகத்தைப் பூட்டி வைத்தார்கள். சில மாதங்களுக்குப் பின்னர் தாம் விரும்பிய ஊழியரை மட்டும் புதிதாக வேலைக்கமர்த்திவிட்டு மேலும் புதிய ஊழியர்களுடன் மீண்டும் பத்திரிகையை வெளியிட்டனர்.

பின்னர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலும் ஏறத்தாழ இரண்டு வருட காலம் அச்சகம் மூடப்பட்டது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் 'தினபதி' நிறுவனத்தின் போக்கை அனுமதிக்க முடியாததால் அச்சகத்திற்கு சீல் வைத்து மூடினர்.

யாழ்ப்பாணத்தில் வெளியாகும் 'ஈழநாடு'ம் வெளி வராது இருந்திருக்கிறது. 1982இல் பொலிசார் யாழ்ப் பாணத்தில் அராஜக நிலையை ஏற்படுத்தி கடைகள் வீடுகளைக் கொளுத்தியபோது 'ஈழநாடு'ம் தப்பவில்லை. வேறு அச்சகத்தில் சில நாட்களுக்குப் பின்னர் 'ஈழ நாட்'டை அச்சிட்டு முகாமையாளர் கே. சி. தங்கராஜா வெளியிட்டார்.

'தினகரனை'ப் பொறுத்தமட்டில் இத்தகைய நிலை எழவில்லை. மின்சாரக் கோளாறு காரணமாக தனியார் நடத்திய காலத்தில் இரண்டுமூன்று நாட்கள் வெளிவர வில்லை. ஆனால் அரசாங்கம் பொறுப்பேற்க நினைத்த பின்னர் புதிய நிலைமை உருவாகத் தொடங்கிற்று.

டட்லி சேனநாயக்க தேர்தலில் தோல்வியுற்று 1970இல் சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமரானதும் ஜனக்கூட்டமொன்று அணிவகுத்துக் கோஷமிட்டுக்

www.padippakam.com



கொண்டு வந்து 'லேக் ஹவுஸ் நிறுவனத்'தைத் தாக்கிற்று. இரும்புக் கதவுகளைப் பெயர்த்து உள்ளே புகுந்து தீயிட முனைந்தார்கள். நூல் நிலையத்தின் ஒருபுறத்தில் தீ பிடித்தது. பழைய பத்திரிகைத் தொகுப்புகள், படங்கள், நெகட்டிவ்கள் எரிந்தன. சிலர் பொருட்களை எடுத்துக் கொண்டும் போனார்கள்.

இயக்குநர் சபைத் தலைவரும் ஸ்தாபகரின் புதல்வரு மான ரஞ்சித் விஜேவர்த்தனாவை இவர்கள் தேடி னார்கள். பலவிதமான கதைகள் கூறப்பட்டன. அவரைக் கொல்ல முயன்றார்கள் என்றனர் சிலர் வேறு சிலர் நிறுவனத்தைத் தொழிலாளரிடம் ஒப்படைக்கப் பலவந்தமாகக் கைச்சாத்துப்பெற முயன்றார்கள் என்றும் கூறினர்.

விஜேவர்த்தன அங்கிருக்கவில்லை. அவர், உபாலி விஜேவர்த்தனாவின் இல்லத்திற்குச் சென்றிருந்தார். 'தினகரன்' ஆசிரியரும் இன்னுமொருவரும் அவரை அங்கு சந்தித்து, அவரை யு.கே. எட்மன்ட் என்ற சுதந்திரக் கட்சிப் பிரமுகரிடம் அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை களை நடத்தியதனைத் தொடர்ந்து சிறிமாவோ பண்டார நாயக்க எடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகளால் மீண்டும் 'லேக் ஹவுஸ்' திறக்கப்பட்டது. மறுதினமே பத்திரிகை வெளியாகியிருக்கும். ஆனால் காப்புறுதிக்கூட்டுத்தாபனம் நட்டஈட்டை மதிக்க அவகாசம் கேட்டதனால் பத்திரி கைகள் சில நாட்கள் வெளிவரவில்லை.

கட்டடம் தாக்கப்போவதாக முன்னதாகவே செய்தி கிடைத்ததும் ரஞ்சித் விஜேவர்த்தன ஊழியர்களைப் பாது காப்பாக வீட்டுக்குச் செல்லும்படி கேட்டுக்கொண்டார். பெண்களுக்குப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தார். எல்லாரும் வெளியேறிய பின் கடைசியாக வெளியேறியவரே இவர். எந்த ஊழியரும் உள்ளே அகப் பட்டு உயிரிழக்கக்கூடாது; அவர்களின் பாதுகாப்புக்குத்

www.padippakam.com



தானே பொறுப்பு என்று நினைத்த கனவான் இவர். பொலிசாருக்கு அறிவித்திருந்தும் தக்க ஏற்பாடுகளைப் பொலிசார் செய்யவில்லை. பொலிஸ்காரர்கள் சிலர் குறுந்தடிகூட இல்லாமல் 'லேக் ஹவுஸ்' வாயில்களில் நின்றார்கள். 'லேக் ஹவுஸை'த்தாக்கிய கூட்டம் பொலிஸ் காரர்களைத் தள்ளியபோதும், அவர்கள்மேல் ஏறிய போதும் அவர்கள் சும்மா நின்றார்கள். கைகளால் அடிக்க வுமில்லை.

பௌத்த குரு ஒருவர் கட்டடத்தின் சுவரில் பொருத் தப்பட்டிருந்த நீர்க்குழாயைப் பற்றிக்கொண்டு மஞ்சள் உடை அவிழ அவிழ ஏறிய காட்சி இன்றும் நினைவுக்கு வருகிறது. இரண்டு மாதங்கட்குப் பின்னர் இவர் துறவு வாழ்க்கையைத் துறந்தார் என்ற செய்தி வெளியாயிற்று. ஒன்றரை மணி நேரத்துக்குப் பின்னரே பிரதமரின் உத்தரவின் பேரில் போலிசார் கண்ணீர்ப்புகை பிரயோ கித்துக் கூட்டத்தைத் கலைத்தனர்.

1977 லும் 'தினகரன்' சில நாள்கள் வெளிவரமுடியா திருந்தது. சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் கீழ் 'லேக் ஹவுஸ்' இருந்ததனால் சிறியமாவோ அரசாங்கத்தை ஆதரித்துத் தேர்தல் காலச் செய்திகள் பிரசுரிக்கப்பட்டன. இங்குள்ள 'ஜாதிக சேவக சங்கமய' எனும் ஐக்கிய தேசியக் கட்சித் தொழிற்சங்கக் கிளை இதனை எதிர்த்தது. இது சம்பந்தமாக இருஊழியர்களை நிர்வாகம் இடைநிறுத்தம் செய்தது. அடையாள வேலை நிறுத்தத்தில் அச்சகப்பகுதி ஊழியர் இறங்கினர். கூட்டம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட பத்திரிகையாளர் சிலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மறுநாள் காலை ஊழியர்களில் பெரும் பான்மையினர் கட்டடத்துக்கு வெளியே நின்று மறியல் செய்தார்கள். இவ்வாறு ஊழியர்கள் வெளியே சென் றிருந்தும் தினகரன், டெயிலிநியூஸ், தினமின பத்திரிகை களை வெளியிடஏற்பாடுகள் செய்யப்பட்டன. தினகரனில்

படிப்பகம்

www.padippakam.com



எவருமே உள்ளே இருக்கவில்லை. எனவே 'தினகரன்' வெளிவரவில்லை.

மாலையில் பிரதமரின் உத்தரவின்பேரில் அச்சகம் மூடப்பட்டது. உள்ளேயிருந்த ஊழியர்களை அறிவித்தல் கிடைத்ததும் வரும்படி கேட்டுக்கொண்டார்கள். இரண்டு தினங்களின் பின்பு வானொலி மூலம்வேலைக்கு வரும்படி அழைத்தனர். தினகரனில் எவருமே செல்லவில்லை. டெயிலிநியூஸ், தினமின ஊழியர் சென்றதனால்இப்பத்திரிகைகள் வெளிவந்தன.

தேர்தலுக்கு மூன்று தினங்களுக்கு முன் மீண்டும் 'லேக் ஹவுஸ்' மூடப்பட்டது. புதிய அரசாங்கம் பதவி ஏற்றதும் 'லேக் ஹவுஸ்' திறக்கப்பட்டது. உள்ளேயிருந்த ஊழியரில் சிலரே ஆரம்பத்தில் மீண்டும் வேலைக்கு எடுக்கப்பட்டனர். தொழிற்சங்கம் ஆட்களைத் தெரிவு செய்தது. தொழிற் சங்கத்தின் செயலாளர் இயக்குநர் சபையில் இடம் பெற்றார். தொழிற்சங்க ஆண்டுக் கூட்டம் ஏழாண்டுகளாக நடத்தப்படாததால் ஒருவரே தொடர்ந்து இயக்குநர் சபையில் இருக்கின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசாரத்தில் உதவிய பௌத்த குரு தேவமொட்டாவ தேரோவின் உறவினர் இவர் என்பதனாலே சலுகை அளிக்கப்பட்டது.

1983 லும் 'தினகரன்' ஒரு வாரத்துக்குமேல் வெளிவரவில்லை. இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கள் வேலைக்கு வரவில்லை 'தினகரன்' ஆசிரியரின் இல்லமும், அவரது நூலகமும், காரும் மற்றும் உடமைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. ''கொட்டியா பத்திர் காறய'' (புலிப்பத்திரிகைக்காரன்) என்று கோஷமிட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். அவர் அகதி முகாமில் தஞ்சம் புகுந்தார். உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் என்றதால் சகல பத்திரிகையாளர்களும் அனுதாபம் தெரிவித்தனர். 'தினத்தந்தி,' 'மாலைமுரசு,'

www.padippakam.com



மலேஷியாவின் 'தமிழ் நேசன்' ஆகிய பத்திரிகைகள்கூட ஆசிரியர் பாதிக்கப்பட்ட இச்செய்தி வெளியிடப்பட்டது.

'வீரகேசரி' ஆசிரியரின் இல்லமும் கொழுத்தப்பட்டது. அவர் உடுத்திருந்த சாரத்துடன் மதிலைத் தாண்டி ஓடினார். அதோடு வேலையையும் சில வாரங்களிடி இராஜினாமச் செய்துவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார்.

'தினகரனை' விற்பனை செய்த தமிழ் ஏஜென்சிகளின் தளபாடங்கள் எறிக்கப்பட்டன. தெருவில் விற்க முடிய வில்லை. 'தமிழ்ப்பத்திரிகையினை வாங்கிச் செல்பவர் தாக்கப்படுவார், விற்பவர் தாக்கப்படுவார், என்ற அச்சம் இருந்தது. எனவே தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவர வில்லை. நிலைமை சுமுகமான பின்னரே வெளிவரத் தொடங்கின. முதலில் 'தினகரன்' வெளிவந்தது. ஒரு வாரத்தின் பின்னர் 'வீரகேசரி'யும் அதற்குப் பின்னர் 'தினபதி'யும் வெளி வந்தன. 'வீரகேசரி'யைப் பொறுத்த வரையில் இன்னுமொரு பிரச்சினையும் இருந்தது. தமிழ் நிறுவனமான 'வீரகேசரி'யைத் தாக்கவிடாது ஒரு காடையர் கூட்டம் பாதுகாத்தது. 'வீரகேசரி' காப்பாற் றப்பட்டது. ஆனால் இக்கூட்டம் பின்னர் தமக்குப் பெருமளவு பணம் தரும்படி வற்புறுத்தி வந்தது. நிலைமை மோசமடைந்ததும் போலிசார் தலையிட்டு சம்பந்தப் பட்டவர்களைக் கைது செய்தனர். இதுவும் தாமதத்துக்கு ஒரு முக்கிய காரணம்.

என்றாலும் 'வீரகேசரி'க்கு ஒரு பாதுகாப்பு உண்டு. அச்சகம் இருக்கும் கட்டிடத்தைக் கொளுத்த முடியாது. ஏனென்றால் 'வீரகேசரி' இருக்கும் கட்டிடமே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா சிறு பையனாக ஓடித்திரிந்து விளையாடிய வீடு. இங்கேதான் தந்தையாரோடு இவர்கள் வாழ்ந்தனர். எனவே இக்கட்டிடத்தை 'ஜயவர்த்தன மியூசியம்' ஆக்கவேண்டும் என்ற கோரிக்கையுண்டு. 'வீரகேசரி' முகாமையாளர்களையும் அச்சகத்தை வேறிடத்

படிப்பகம்

www.padippakam.com



துக்கு மாற்றும்படி கேட்டுள்ளனர்.

'வீரகேசரி'யே முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இந்தியர்கள், இந்தியர்களுக்காக இந்தியர்களைக்கொண்டு வெளியிட்ட பத்திரிகையாகவே இது இருந்து வந்தது. நாட்டுக் கோட்டைச் செட்டியார் சமூகம் ஆரம்பித்த பத்திரிகை இது என்பதினால் இவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதே இதன் தலையாய நோக்கமாக இருந்தது. எழுத்துத் தொழிலில் ஈடுபட்டபோது திருநெல்வேலி என்றதும் உடனே தமிழ்நாடு திருநெல்வேலியை நினைத்தார்களேயொழிய யாழ்ப்பாணத்திலும் திருநெல்வேலி இருக்கிறதென்பதை இவர்கள் எண்ணியதேயில்லை. ஆரம்பகால 'வீரகேசரி' இதழ்களைப் பார்க்கின்றபோது இது மிகத் தெளிவாகத் தோன்றும். தலைப்புச் செய்திகள்கூட இந்தியச் செய்திகளாக இருந்ததும் உண்டு. ஆரம்பகால இதழ்களை ஒருவர் சுவடிகள் திணைக்களத்துக்குச் சென்று படித்தால் அப்பத்திரிகையோ இலங்கைப் பத்திரிகையோ என்ற சந்தேகம் தோன்றும். செய்திகளை விட மொழி நடையும், தமிழகப் பாணியிலேயே இருந்தது. இதற்குப் பெரும்பாலும் காரணம் அப்போது 'வீரகேசரி'யில் பணிபுரிந்தவர்களே. தேசிய உணர்வு இவர்களிடம் இருந்தது. அதாவது தங்கள் தாய் நாடான இந்தியாமீது பக்தி இருந்தது. கொழும்பிலிருந்துகொண்டும் சென்னையை நோக்கிய வண்ணமே இருந்தனர். பத்திரிகை மொழியும் இந்தியப்பாணியிலேயே அமைந்திருந்தது.

இந்த அம்சமே 'வீரகேச'ரியின் பலமும் பலவீனமும் ஆகும்.

'தினகரன்' இவ்வாறிருக்கவில்லை. விஜேவர்த்தன எப்போதும் இலங்கையர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறவில்லை. காலனித்துவ சிந்தனையின் விளைவாக ஆங்கில மோகம் பிடித்து அலைந்தவர்கள்

www.padippakam.com



தமிழ்க் கைங்கரியங்களில் உதவ முன்வரவில்லை. பல் தமிழ் அறிஞர்கள் இருந்தார்கள். இவர்கள் கைகொடுத்து உதவவில்லை. இதே வேளையில் தமிழ் என்றால் தமிழ் நாட்டில்தான் உண்டு; இங்கே இல்லை என்று நினைத்தவர் களும் இருந்தனர். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப் பேற்கும்வரை இந்தியாவில் தமிழ் பயின்றவர்களே தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்கள்; இலங்கையில் என்ன தமிழ்க் கல்வி கிடைக்கின்றது என்ற தவறான எண்ணம் இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தினர் மத்தியில்கூடக் காணப்பட்டது. ஆசிரியர் பதவிகளை இவர்கள் இலகுவில் இலங்கைப் பட்டதாரிகட்குக் கொடுக்கவில்லை. அண்ணா மலையில் சாதாரண வித்துவான் பட்டம் பெற்றவர் பெரும் புலவர் என்ற தவறான எண்ணம் இருந்தது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோரே இத்தவறான கருத்தை நீக்க உதவியவர்கள். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையின் சிறப்பை எடுத்து விளக்கியவர்கள் இவர்களைத் தொடர்ந்து இவர்களது மாணாக்கர்களான பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி. தமிழ் நாட்டுக்கே சென்று தமது திறமையைக் காட்டியதால் இன்று உயர் கல்வி நிலையங்களிலும் பல்கலைக் கழகங் களிலும் இவர்களது நூல்கள் கட்டாய நூல்களாக ஆராய்ச்சி மாணவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. மகாநாடுகள், கருத்தரங்களுக்கு அழைக்கப்படுகின்றனர்.

அன்று இந்தியருக்கே தமிழ் தெரியும் என்ற கருத்து இருந்ததாலும் வீரகேசரிக்கு வ. ரா, செல்லையா போன்ற வர்கள் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாலும் விஜேவர்த்தனவும் சிலரைத் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு வந்தார். ஆனால் முக்கிய பொறுப்பு இலங்கையரிடமே கொடுக்கப்பட்டது. முதல் ஆசிரியராக திரு. கே. மயில் வாகனமும் நிர்வாக ஆசிரியராக திரு. இராம நாதனும் கடமையாற்றினர். இந்த இயல்பு தொடர்ந்தது.

படிப்பகம்

www.padippakam.com



1942இல் ஜப்பானியர் கொழும்பில் குண்டு வீசிய போது தமிழர்கள்பலர் இடம் பெயர்ந்தனர். கோட்டைப் பகுதியில் வேலை செய்தவர்கள் பலர் வேலைத்தலங் களுக்குச் செல்லவில்லை. இந்தியர்கள் பலர் இங்கே தனியே வாழ்ந்து வந்ததால் தனுஷ்கோடி மூலம் தமிழ் நாட்டிலிருந்த மனைவி பிள்ளைகளிடம் சென்றுவிட் டார்கள். யுத்த காலம் என்பதனால் எதுவும் ஏற்படலாம் என்ற அபாயம் இருந்தது. இந்தியா சுதந்திரப்போராட் டத்தில் ஈடுபட்டிருந்தால் ஜப்பானியரின் நாட்டம் இலங்கைத் துறைமுகங்களிலேயே இருந்தது. இந்த அச்சத் தினால் பலர் தாம் இறந்தாலும் குடும்பத்தினரோடு இறப்போம் என்றகருத்துடன் தமிழகம் சென்றுவிட்டனர்.

'தினகரனை' வெளியிட ஆட்கள் இருக்கவில்லை. இரண்டு கொழும்புப் பகுதி முஸ்லீம்களே இருந்தார்கள். புதியவர்களை நியமிக்கமுடியாதுமிருந்தது. அன்று போதனாமொழி ஆங்கிலமொழியாயிருந்தமையால் தமிழ் பயிலும் வசதி சிங்களப் பகுதிகளில் இருக்கவில்லை. இன்று சிங்களப் பகுதி முஸ்லீம்கள் பலர் தமிழில் பாண்டித்தியம் பெற்றிருக்கின்றார்கள். போதனாமொழி தமிழாக இருப் பதுவும், போதியளவு தமிழறிவுள்ள முஸ்லிம் ஆசிரியர்கள் இருப்பதுவும் இதற்கு முக்கிய காரணம். கிழக்கு மாகாணத் திலிருந்து வரும் முஸ்லீம்கள் பலர் இதர பகுதித் தமிழர் களிலும் பார்க்க சிறப்பான கவிதைகளைப் புனைவதும் மறக்கமுடியாததொன்று. பெரும்பாலும் இச்சிருஷ்டிகள் 'தினகரனி'ல் வெளியாவதுண்டு. அன்று இத்தகையவர் களைப் பெறமுடியாதிருந்தது.

அக்காலம் ஓரளவு படித்தவர்கள்கூட அரசாங்க சேவையில் சேரக்கூடியதாக இருந்த காலமாதலின் கல்வி அறிவு நிலை திருப்திகரமாக இருந்திருக்க முடியாது.

இவ்வாறிருக்க டீ. ஆர். விஜேவர்த்தன தமிழ்ப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று

படிப்பகம்

www.padippakam.com



விரும்பினார். தமிழ்மொழி தெரிந்திருந்தால் தானே எழுதி வெளியிட்டிருப்பார். அவ்வேளையில் அங்கே ஒரேயொரு தமிழர் 'லேக் ஹவுஸி'ன் வேறுபகுதியில் ஊழியர் உள்ளே வரும் நேரம், வெளியே போகும் நேரத்தைக் குறித்துக் கொண்டிருந்தார். இன்றுபோல இவ்வேளைகளைச் செய்ய ''பஞ்சிங்'' இயந்திரம் அன்று இருக்க வில்லை. இவரை விஜேவர்த்தன அழைத்து, ''தமிழ் எழுதுவீரா? ஆங்கிலத்தில் நான் தருவதை மொழிபெயர்த்து அச்சிட முடியுமா?'' என்று கேட்டார். அவர் இணங்கியதும் 'தினகரன்' தொடர்ந்து வெளிவந்தது. ஐந்தாண்டுகள் இவரே பொறுப்பாக இருந்து 'டெயிலி நியூஸை' மொழி பெயர்த்தார்.

கொம்பனித்தெரு வாசியானதால் அப்பகுதிச் செய்தி களையும் பிறர் கொண்டு போய்க் கொடுக்கும் தமிழர் செய்திகளையும் வெளியிட்டுக்கொண்டு வந்தார். பத்திரிகை வெளிவந்தது. ஆனால் விஜேவர்த்தனவின் இலட்சியம் நிறைவெய்தவில்லை. தமிழ் மக்களைத் தேசிய நீரோட்டத்தின் பிரவாகத்தில் சேர்த்துவிட வேண்டும் என்ற வேட்கை தணியவில்லை.

பத்திரிகையின் விற்பனை மிகக் குறைவாகவே இருந்தது. பொறுப்பாக இருந்தவர் இந்தியர் என்பதனால் அவரை நிரந்தரமாக்கவில்லை. கல்வி அடிப்படையோ, அனுபவமோ இல்லாததால் இதனைச் செய்யவில்லைப் போலும். ஆங்கில சிங்களப் பத்திரிகைகளுக்குப் பல துறைகளிலும் அனுபவம் பெற்றவர்களும் கல்விமான் களுமே நியமிக்கப்பட்டனர். 'டெயிலிநியூஸி'ற்கு அத்துவக் காத்து ஏ. வி. குலசிங்கம், ஒரியன் டீ சில்வா, ஐறாந்தா பத்மநாப போன்றவர்களும் தினமினவுக்கு பியசேன நிஸங்க, மார்டின் விக்கிரமசிங்க, எச். எஸ் பெரேரா போன்றவர்களும் நியமிக்கப்பட்டனர். எனவே தமிழ்ப் பத்திரிகைக்கும் நல்ல ஒருவரைத் தேடிக்கொண்டே இருந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவிலிருந்து நல்ல ஒருவரைக் கொண்டு வந்து ஆசிரியராக்கியிருக்கலாம். ஆனால் அதனைச் செய்ய வில்லை. இந்நாட்டில் மண்வாசனை அறியாத ஒருவருக்கு தேசப்பற்றோ உணர்வோ இருக்கமாட்டாது என நினைத்தே இவர் இதனைச் செய்யவில்லை.

அரசியல் கருத்துரைகள் அவராலேயே எழுதப்பட்டு அல்லது எழுதுவிக்கப்பட்டுத் தினகரனில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டன. இந்தியாவிலிருந்து பின்பு சிலர் திரும்ப வந்தார்கள். இவர்கள் பழைய பதவி களிலேயே அமர்த்தப்பட்டனர்.

இந்நிலையிலேயே எஸ்மான்ட் விக்கிரமசிங்க என் பவர் விஜேவர்த்தனவின் மருமகனானார் ஐஸ்வரியம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் சிவில் சேவையில் உயர் பதவி வகித்து வந்தவர். சமூகத்தில் உயர் மட்டத் தில் இருந்தவர் என்றாலும் இளவயதிலிருந்தே மார்க்ஸிய தத்துவத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். பல்கலைக் கழக மாணவனாக இருந்தபோது மார்க்ஸியவாதிகளுடன் குறிப்பாக டிறெட்ஸ்கி அனுதாபிகளுடன் ஊசலாடியவர். சரித்திர மாணவனாக இருந்து புரட்சி வரலாறுகளைப் படித்ததனாலோ என்னவோ இந்த வழியே அவரது சிந்தனை சென்றது. பல்கலைக் கழக மாணவர் சங்க மான யூனியன் சொஸைட்டியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 'சூரியமல் இயக்கத்தி'ல் தீவிர பங்கு கொண்டிருந்தார்.

சமசமாஜத் தலைவர்கள் சிறையிலிருந்து தப்பியோடி யதற்கு இவர் உதவி அளித்ததாகவும் சொல்வர். அரசாங்க அதிகார வட்டத்துக்குள் தந்தை மூலமாக இவருக்குச் செல்வாக்கிருந்ததால் சிலவற்றைச் செய்யக் கூடியதாக விருந்தது. விக்கிரமசிங்க, பத்திரிகையின் பொறுப்பை ஏற்றதும் இவரோடு பல்கலைக் கழகத்தில் இவற்றிலெல் லாம் துணையாகவிருந்த எம். ஏ. டி. சில்வாவும், சிறை

www.padippakam.com



உடைப்பின்போது சிறைச்சாலையில் சிறை அதிகாரியாக (ஜெயிலர்) இருந்த டி.லா. மௌட் 'என்பவரும் லேக் ஹவுஸு'க்குக் கொண்டுவரப்பட்டனர்.

டி லா மௌட் விவாகமாகாதவர்; சிறையில் உத்தி யோகம் செய்தவர். அக்காலத்துப் பழக்க வழக்கங்கள் பின்னரும் இவரிடம் காணப்பட்டன என்பர்.

மார்க்ஸிய தத்துவத்தில் ஈடுபாடு கொண்டிருந்த விக்கிரமசிங்க, விஜேவர்த்தனவின் மகளைத் திருமணம் செய்து, பத்திரிகைக் கம்பெனிக்குள் வந்ததும் லேக் ஹவுஸ் புதுமை காணத் தொடங்கிற்று, விஜேவர்த்தன இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தாய் மாமன். இக்குடும்பத்தின் சமூகத் தொடர்புகள் சிந்தனைகள் வேறு வர்க்க ரீதியானவை. விக்கிரமசிங்கவின் சிந்தனையும் விஜேவர்த்தனாவின் சிந்தனையும் வெவ்வேறு வழியில் சென்றாலும் மோதல் ஏற்படவில்லை. விஜேவர்த்தனவே கொள்கையை வகுத்து வந்தார். நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருந்தபோதும் அங்கிருந்தபடியே யாவற்றையும் பணித்து வந்தார். 'லேக் ஹவுஸ்' அவரது உயிராக இருந்தது. நூலகத்தில் விசேஷ அக்கறை செலுத்தியவர்; அவர் இறந்த பின்னர் மூட நம்பிக்கை கொண்ட சில நூலக ஊழியர்கள் இரவு அதற்குள் தங்கியிருக்க விரும்பு வதில்லை. விஜேவர்த்தன அதற்குள் நடந்து திரிவது போலச் சப்பாத்துச் சத்தம் கேட்டது என்றுகூட ஒருவர் சொன்னார். இவையெல்லாம் டீ. ஆர். எவ்வளவு பற்றினை அந்த நூலகத்தின் மீது கொண்டிருந்தார் என்பதனையே உணர்த்துகின்றன.

விஜேவர்த்தன மறைந்ததும் நிர்வாகம் இயக்குநர் சபையின்கீழ் இருந்தாலும் பத்திரிகை உள்ளடக்கம் சம்பந்தமான அதிகாரம் எஸ்மண்ட் விக்கிரமசிங்கவிடம் சென்றது. இப்போது எஸ்மண்ட் விக்கிரமசிங்க தன் கொள்கைகளுக்குப் பத்திரிகை மூலம் உருவம் கொடுக்க

www.padippakam.com



முயன்றார். ஆனால் இந்நிலையில் மாணவனாக இருந்த போது வைத்திருந்த கொள்கைகள் மாறத் தொடங்கி விட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் செல்வாக்கு இவர் மீது தாவிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு இலங்கைப் பிரதிநிதியாக அமைச்ச ருக்கான விசேஷ அதிகாரங்களுடன் செல்லும் அளவுக்கு இவர் கட்சிக்குள்ளும் அரசாங்கத்துக்குள்ளும் ஊடுருவி விட்டார். இதன் தொடர்பாகவே இவரது மகன் ரனில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் கல்வி அமைச்சராகும் சந்தர்ப்பம் கிட்டிற்று என்பர்.

இவ்வாறிருந்தும் விக்கிரமசிங்க சமசமாஜிகளுடன் விரோதம் கொள்ளவில்லை. உறவு நீடிக்கவே செய்தது. இவர், லேக்ஹவுஸி'லிருந்து வெளியேறிய பின்னரே 'லேக் ஹவுஸி'னை அரசாங்கம் பொறுப்பேற்க முனைந்தது.

விக்கிரமசிங்கவின் அந்தரங்கச் செயலாளராகவிருந்த ஏலியன் நுகேரா 'லேக் ஹவுஸி'ன் லண்டன் கிளையில் இருந்தபோது கம்பெனியின் வர்த்தக விஷயங்களை அறியக்கூடிய நிலையில் இருந்தார். கடிதங்கள் அவர் மூலமாகவே விநியோகிக்கப்பட்டன. 'லேக் ஹவுஸ்' அவரில் அதிக நம்பிக்கை வைத்திருந்தது. நுகேரா தன் மூலம் அனுப்பிய கடிதங்கள் அனைத்துக்கும் ஃபோட் டோப் பிரதிகளை எடுத்து வைத்திருந்தார்.

நுகேராவுடன் 'லேக் ஹவுஸ்' கொண்டிருந்த தொடர் புகள் மாறத் தொடங்கின. 'லேக் ஹவுஸ்' நிர்வாகம் இவர் கோரிக்கை ஒன்றுக்கு இணங்கவில்லை. இவரது அதிகாரி யாகவிருந்த விக்கிரமசிங்கவும் 'லேக் ஹவுஸி'ல் இல்லை. ஆத்திரம் கொண்ட நுகேரா இக்கடிதங்களை வருமான வரி திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் ஒருவருக்கு அனுப்பினார். விசாரணை நடைபெற்றது. வெளிநாடு கட்கும் சென்று விசாரித்தனர். செலாவணிக் கட்டுப் பாட்டுச் சட்டத்தை மீறியதாகக் குற்றஞ் சாட்டப்பட் டது. இதன் விளைவாகவே 'லேக் ஹவுஸை'ப் பொறுப்

த—9

www.padippakam.com



பேற்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. 'லேக் ஹவுஸ்' ஏன் கூட்டரசாங்கத்தை எதிர்க்கிறது என்ற தலைப்புடன் பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது.[15] இதில் நுகேரா அனுப்பிய கடிதங்கள் அனைத்தும் பிரசுரிக்கப்பட்டன.

1973-இல் தேசிய அரசுப்பேரவையில் விசேட சட்டம் நிறைவேற்றப்பட்டு 1973 ஜூனில் 'லேக் ஹவுஸ்' பொறுப் பேற்கப்பட்டது. தேசியப் பிரக்ஞையால் எழுந்த பத்திரிகையாதலின் அன்றும் இன்றும் 'தினகரனி'ல் தேசிய உணர்வு பிரதிபலிப்பதனைக் காணலாம். உணர்ச்சி வசப்படும் வேளையிலும் 'தினகரன்' நிதானம் தவறவில்லை. 'தேசியப் பத்திரிகை' என்ற அடிப்படைக் கோட்பாட்டை மறக்கவில்லை. ஆரம்ப காலம் முதல் இன்று வரை 'தினகரனை'ப் புரட்டிப் பார்த்தால் இத்தேசிய உணர்வு இழையோடுவது புலனாகும். இதனால் சில சந்தர்ப்பங்களில் இதன் உள்ளத்தைச் சந்தேகித்ததும் உண்டு.

www.padippakam.com

## அடிக்குறிப்புகள் :


1. Desmond Robert W. — Windows on the world. World News reporting 1901-1920 Page 1-7.
2. மேற்படி — 6
3. Hulugalle-H.A.J. — Don Stephen Senanayake. Page 4.
4. Hulugalle-H.A.J. — Life and times of British Governors of Ceylon Page 168
5. Hulugalle-H.A.J. — D.R. Wijewardene P. 1,2.
6. De Silva A. A. — Lives that inspire.
7. Wriggins Howard W. — Ceylon - Dilemmas of a New Nation-Page80-85.
8. Mendis Dr. G. C. — Ceylon under the British.
9. Government of Ceylon — Report of the special Commission on the Ceylon Constitution Colombo. 1928. Pages 1-18.
10. மேற்படி — பக்கம் 39.
11. Hulugalle-H.A.J. — Life and times of D. R. Wijewardene P. 1.
12. மேற்படி — பக்கம் 12.
13. மேற்படி — பக்கம் 23.
14. மேற்படி — பக்கம் 22.
15. Why Lake house is against the cralition — Phamplet by Mr. L.S.S.P.


படிப்பகம்

www.padippakam.com

# பகுதி : ஐந்து

**இலங்கையின் தேசிய வளர்ச்சி நிலைகளும், தினகரனும்...**

www.padippakam.com

விஜேவர்த்தன காலத்திலும் எஸ்மண்ட் விக்கிரம சிங்க காலத்திலும் 'லேக் ஹவுஸ்' பிரசுரங்களில் தனித் துவம் காணப்பட்டன. 'தினகரனி'ல் காணப்பட்ட தேசிய இயல்பையே முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். சிங்களம் வேறு நாட்டில் பேசப்படுவதில்லை. சிங்களப் பத்திரி கைகள் வேறு நாட்டிலிருந்து இங்கு வருவதுமில்லை. எனவே சிங்களவரே இலங்கையில் உருவாக்கிய பத்திரி கையில் இலங்கையின் மண்வாசனை மட்டுமல்லாது தேசியமும் செறிந்திருப்பது இயல்பே.

ஆங்கிலப் பத்திரிகைகள் குறித்த ஒரு சமூகக்குழுவின ருக்காக வெளியிடப்படுவன. எனவே முற்றுமுழுதான நாட்டுணர்வை இவ்வாங்கிலப் பத்திரிகைகளில் எதிர் பார்க்க முடியாது. எனினும் இதிலும் அன்று தேசியம் காணப்பட்டது. ஆனால் தமிழோ பாக்குநீரிணைக்கப் பால் கோடிக்கணக்கான மக்களால் பேசப்படும் மொழி. அந்நிலத்தின் பெயரே தமிழகம். தமிழகத்துப் பத்திரி கைகள் பெருமளவில் இன்றுபோல வந்து குவிந்த வண்ணமே இருந்தன.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ்ப் பத்திரிகைகள் யாவும் 'வீரகேசரி' உட்பட தமிழ் நாட்டை நோக்கியவை யாகவே இருந்தன. தமிழ்ப் பத்திரிகைகளை நடத்துவ தற்கான பத்திரிகையாளர் இந்தியாவிலிருந்தே வந்தனர். எனவே இவற்றில் தேசியத்தையோ ஈழ மண்வாசனை யையோ காணலாம் என அன்று எதிர்பார்க்க முடியாது இருந்தது.

'தினகரன்', சிங்களவர் தமிழ் பேசும் மக்களுக்கென நடத்திய பத்திரிகை. வேண்டுமென்றால் வர்த்தக சாத்தியக் கூறுகளை மனதிற்கொண்டு ஏனைய தமிழ்ப் பத்திரிகைகளைப் பின்பற்றி அதே பாணியில் சென்றிருக்

படிப்பகம்

www.padippakam.com



கலாம். விஜேவர்த்தன இதனை விரும்பவில்லை. ஆரம்ப காலத்தில் மட்டுமல்லாது தொடர்ந்து சில ஆண்டுகளாக ஈராயிரம் பிரதிகளே விற்பனையாகினவென்றால், சாதாரணமாக இதனைத் தொடர்ந்து எவரும் வெளியிட்டிருக்க மாட்டார்கள். நஷ்டம் கண்டும் இலட்சியத்தை நாடி நின்ற விஜேவர்த்தன தொடர்ந்து நடத்தி வந்தார். 'தினகரனில்' தனித்துவம் காணப்பட்டது. தேசியம் மிளிர்ந்தது. தேசிய ஒருமைப்பாடு வற்புறுத்தப்பட்டது.

புதிய இலக்கிய பாரம்பரியமொன்றினை உருவாக்குவதிலும் 'தினகரன்' ஈடுபட்டது. தேசியக் கண்கொண்டே சகலபிரச்சினைகளையும் அது நோக்கி வந்துள்ளது. பத்திரிகை என்ற முறையிலே அதன் வாசகர்களின் குறைகளை எடுத்து அதிகாரிகளுக்குக் கூறும் கடமையை 'தினகரன்' மறுக்கவில்லை. ஆசிரியர் கடிதங்கள், தலையங்கம் போன்றவற்றைப் பயன்படுத்தி மக்களின் குறைபாடுகளை அதிகார பீடத்தினருக்கு எடுத்துக்கூறி வந்தது. தேசியக் கண்கொண்டு நோக்கிய போதும் தமிழ்ப் பத்திரிகையைத் தமிழ் பேசுவோரே படிப்பர் என்பதனையும் மறந்துவிடவில்லை. தேசிய அடிப்படையில் பத்திரிகை இயங்கியதால் சிக்கலான கட்டங்களைப் பத்திரிகை சமாளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

சுதந்திரம் பெற்ற பின்பு தேசிய ரீதியிலான சட்டங்கள் நிறைவேற்றப்படலாயின. சுதந்திரம் பெற்ற நாடு, தன் பிரஜைகளை வரையறுத்துக் கூறுதல் இயல்பு. இல்லாவிட்டால் அந்நியர்கள் வந்து குடியேறிவிட்டு உரிமை கோரலாம். எனவே இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டம், இந்தியர் பாகிஸ்தானியர் பதிவுச்சட்டம் ஆகிய சனப்பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்டன. நேருவுடன் பேசிய பின்பே இச்சட்டங்கள் வந்தனவெனினும் இரு அரசுகளும் வெவ்வேறு விளக்கங்கள் கொண்டிருந்தன.[1]

www.padippakam.com



இச்சட்டங்களால் லட்சக்கணக்கான இந்திய வம்சாவளித் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். மலையிலும், மடுவிலும் ஏறி இறங்கிக் கடுங்குளிரையும் பனியையும் பொருட்படுத்தாது இறந்தும், தாமே தேயிலைச் செடிக்கு உரமுமாகிய மலையகப் பாட்டாளிகள் ஓரிரவில் நடுத் தெருவில் விடப்பட்டார்கள். நாட்டை வளம்படுத்திச் சுவர்ணபூமியாக்கியவர்கள் உரிமைகளை இழந்தனர். நாடற்றவர்களானார்கள். பிரிட்டிஷ் பிரஜைகளாக இருந்தவர்கள் இந்த அந்தஸ்தையும் இழந்து அரசியல் அநாதைகளாக நின்றார்கள்.

கோ. நடேசையர் போன்றவர்கள் இலங்கை இந்தியக் காங்கிரஸ் மூலமாக எடுத்த முயற்சிகளும் போராட்டங்களும் வீணாயின. 1922'இல் கோ. நடேசையர் 'தேச நேசனை' ஆரம்பித்து இந்திய வம்சாவளியினருக்காகப் போராடினார். 1924'இல் இவரே 'தேசபக்தனை'யும் நடத்தினார். சாம்ஜோன் இதே ஆண்டில் 'இந்தியனை' வெளியிட்டார். 1928இல் நடேசையரின் மருமகன் டி. சாரநாதன் 'ஜனநேச'னை ஆரம்ரத்தார். 1928இல் வெளியான 'இலங்கை இந்தியன்' என்ற நெல்லையாவின் வெளியீடும் இந்திய வம்சாவளியினருக்காகவே சேவை செய்தது. இப்போராட்டங்களின் விளைவாகவே அப்போது சனப்பிரதிநிதிகள் சபையில் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டு இருந்தனர். பல தொகுதிகளில் சிங்களவர்கள் தெரிவாவதற்கும் இவர்களின் வாக்குகள் காரணமாயிருந்தன. ஐக்கியதேசியக் கட்சிக்கு இவர்கள் ஆதரவு அளிக்கவில்லை, என்பதனால் வஞ்சம் தீர்க்கும் முகமாகவே பிரஜா உரிமைச் சட்டங்களை நிறைவேற்றி மலையகத் தமிழர்களை அரசியல் அநாதைகளாக்கினர் என்று தமிழ்த் தலைவர்கள் பலர் எண்ணினர்.

'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்' தமிழ் உணர்ச்சியைத் தூண்டிவிட்டே 1948இல் நடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ்ப் பகுதியில் வெற்றி கண்டது.

www.padippakam.com



தலைசிறந்த தமிழ்த் தலைவர் சேர். பொன்னம்பலம் அருணாசலத்தின் புத்திரரே சேர். அருணாசலம் மகா தேவா என்பதனையும் பொருட்படுத்தாது அவரைத் தோற்கடித்து ஜி. ஜி. பொன்னம்பலத்தைப் பாராளு மன்றத்துக்குத் தமிழ் மக்கள் அனுப்பினர்.[2]

தமிழ்க்காங்கிரஸ் 'சுதந்திரன்' பத்திரிகையை 1947 இல் ஆரம்பித்திருந்தது. அரசியல் நோக்கத்துக்காக இது ஆரம்பிக்கப்பட்டதெனினும் தனிப்பட்ட பத்திரிகை போலத்தான் பதிவு செய்யப்பட்டது. பெயரளவில் 'சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்' இதனை வெளி யிட்டது.[3] கட்சி வெளியிடவில்லை. காங்கிரசுக்குள் கருத்து பேதம் ஏற்பட்டுத் தமிழரசுக்கட்சி என்கின்ற சமஷ்டிக் கட்சி தோன்றியது. 'சுதந்திரன்' சமஷ்டி வாதிகள் பக்கம் சென்றது. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்குத் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே 'சுதந்திரனி'ல் இருந்த வி. கே. பி. நாதன் என்பவரை 'லேக் ஹவுஸ்' நிறுவகத்துக்குக் கொண்டு வந்தார். தமிழ்ப் பத்திரிகை மூலம் அரசுக்கும் அதனை ஆதரிக்கும் தனக்கும் பிரசாரம் செய்ய வேண்டும் என்று கூறித் 'தினகரனி'ல் இவருக்கு இடம் கொடுக்கப்பட்டது.

ஞாயிறு 'தினகரன்' அப்போதிருக்கவில்லை. இதனை ஆரம்பித்து நடத்தியதோடு பின்னர் தினசரிப் பத்திரி கையும் இவர் பொறுப்பேற்றார்.

நாதன் 'தினகரன்' வளர்ச்சிக்கும், ஈழத்துத்தமிழ் இலக்கியப் பாரம் பரியத்துக்கும் கணிசமான பங்களிப்புச் செய்துள்ளார் என்பதனை மறுக்கமுடியாது. இவர் காலத்தில் மூதறிஞர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை, சோ. இளமுருகனார், சோமசுந்தரப் புலவர், எப். எக்ஸ். சி. நடராஜா போன்ற ஒரு சிலரே மாறி மாறி எழுதி வந்தனர் என்று இவர் மீது குற்றஞ் சாட்டப்படு வதுண்டெனினும் இலங்கை எழுத்தாளருக்கு இவர் முதன்

www.padippakam.com



முறையாக இடம் அளித்தார் என்பதனை ஏற்கவே வேண்டும். அக்காலத்தில் விளம்பரங்கள் குறைவாகவே கிடைக்கும். சகல பக்கங்களிலும் செய்திகளையோ கட்டுரைகளையோ போட்டே பத்திரிகையை உருவாக்க வேண்டியிருந்தது. எனவே தினசரிப் பத்திரிகைகளிலும் சிறுகதை போன்றவை பிரசுரிக்கப்பட்டன. இலங்கையர் சிருஷ்டிகளும் இடம் பெற்றன. ஜனரஞ்சகமான கதைகள் ஈர்ப்புச் சக்தி வாய்ந்தவை என்பதனால் இவற்றைத் தேடிப்பிரசுரித்தனர்.

வே. க. ப. நாதன் கொள்கை அடிப்படையில் இலங்கை எழுத்தாளருக்கு ஓரளவு இடம் கொடுத்தார் என்றாலும் தமிழகத்து எழுத்தாளர்களே முக்கியமான இடத்தைப்பெற்றிருந்தார்கள். மாயாவி, கே. ஆர். பானு, எண்சாஸ்திர மேதை சேதுராமன், திருச்சி ரசூல் போன்றவர்களே பெரும்பாலும் எழுதியவர்களாவர். இந்தியத் தொடர்பை மிக நெருக்கமாக இவர் பயன்படுத்தினார்.[4] இலங்கை ஆசிரியர்களும், இலங்கையர் நூல்களும் இவர் கையில் முக்கியம் கவனம் பெறவில்லை. தமிழ் நாட்டிலிருந்து தமிழ் நூல்கள் பெறப்பட்டு விமர்சனம் செய்யப் பட்டன. இலங்கையர் நூல்கள் இத்தகைய மதிப்பைப் பெறவில்லை. என்றாலும் விஜேவர்த்தன தேசிய ரீதியில் பத்திரிகை செல்ல வேண்டும் என்ற பணிப்புரை வழங்கியிருந்ததால் நாதனும் இலங்கைச் சிருஷ்டிகளைப் புறக்கணிக்க முடியாத நிலை இருந்தது.

பின்னர் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப் பட்டதும் 'தினகரன்' சங்கடமான நிலையில் இருந்தது.[5] அப்போது எஸ்மண்ட் விக்கிரமசிங்கவின் பொறுப்பில் 'லேக் ஹவுஸ்' பத்திரிகைகள் இருந்தன. இவர் சாதுரியமாக நடந்துகொண்டார். 'தினகரனில்' ''கருத்துமேடை'' நடத்தப்பட்டது.[6] பொதுசன அபிப்பிராயம் தெரிவிக்கப்

www.padippakam.com



ப்பட்டது. பின்னர் நியாயமான அளவு தமிழ் உபயோகச் சட்டம் நிறைவேறியதும் 'தினகரன்' திருப்திபட்டுக் கொண்டது.

தேசிய ரீதியில் 'தினகரன்' சென்று கொண்டிருந்த தனாலே காலத்துக்குக் காலம் 'தினகரன்' இத்தகைய பிரச்சனைகளை எதிர் கொள்ள நேர்ந்தது. தமிழருக் கெனப் பிரசுரிக்கப்படும் பத்திரிகையாதலின் தமிழர் செய்திகளை மட்டுமல்லாது தமிழரின் அரசியல், சமூக அபிலாஷைகளையும் பிரதிபலிக்க வேண்டும் என்றே வாசகர்கள் எதிர்பார்த்தார்கள், ஆனால் இதேவேளையில் 'தினகரன்' கட்சிப் பத்திரிகையாகவும் நடத்தப்படவில்லை குறித்த ஒரு சமூகத்துக்கென ஆரம்பிக்கப்பட்டு அவர்க ளாலே நடத்தப்படவுமில்லை. சிங்களவர் ஒருவர், தமிழர் முஸ்லீம்களாகிய தமிழ் பேசும் மக்களுக்கென இப்பத்திரி கையை நடத்தினார். நீர்கொழும்பு, உடப்பு, கூமுனை ஆகிய இடங்களில் வாழ்ந்த தமிழ் பேசும் சிங்களவரையும் இவர் கருத்திற் கொண்டிருந்தார். 'தினமின', 'ஒப்ஸேவர்', 'டெயிலி நியூஸ்' போல நாடளாவிய முறையில் விரிந்து பரந்த மனப்பான்மையுடன் எல்லோ ருக்கும் உரிய பத்திரிகையாக அவர்களை மனதிற் கொண்டு வெளியிடப்படும் பத்திரிகை 'தினகரன்' என்ப தனை வாசகர்கள் மறந்து விடுவதுமுண்டு. இவ்வாறி ருந்தும் இத்தேசியப்பார்வையே 'தினகரனி'ன் பலமும் பல வீனமும் என்று சொல்லலாம்.

சில இடங்களில் 'வீரகேசரி', 'சுதந்திரனைப்' பார்க்க முடியாது. ஆனால் அங்கேயும் 'தினகரன்' இருக்கும். அம்பலாந்தோட்டை, திஸ்ஸ மஹரகம, நாத்தாண்டிய போன்ற தமிழர் இல்லாதஇடங்களிலும் 'தினகரனை' வாசிக்கலாம். காய்தல் உவத்தலின்றிச் செய்தியை செய்தி யாகக் கொண்டு 'தினகரன்' வெளியிட்டு வந்தது. எந்த அரசியல் தத்துவத்துக்கும் பிரசார ஏடாகச் செயல்பட வில்லை.

www.padippakam.com



அண்மைக் காலத்திலே தமிழர் பிரச்சினையில் பல் திருப்பங்கள் ஏற்பட்டன. அரச நடவடிக்கைகள் பல் எடுக்கப்பட்டன. ஆனால் 'தினகரன்' செய்தியைக் கொடுத்ததேயொழிய இரு தரப்பினருக்கும் பிரசார இயந்திரமாகஅமையவில்லை. தமிழர் நடவடிக்கைகளைப் பற்றி'டெயிலி நியூஸி'ல்,இது தமிழராலும் வாசிக்கப்படும் பத்திரிகை என்பதனையும் பொருட்படுத்தாது, ஆசிரியர் தலையங்கக் கண்டனங்கள் எழுதப்பட்டன. ஆனால் 'தினகரன்' நிதானமாகவே நடந்து கொண்டிருக்கிறது.[7] தமிழருக்கான பத்திரிகை என்பதனை மறுக்கவில்லை. அதேவேளையில் தமிழருக்கு எதிரான கருத்துக்களை மறைத்து வைக்கவும் முயலவில்லை. இப்போது அரச பொறுப்பில் இருக்கின்றதெனினும் விஜேவர்த்தன ஊட்டிய தேசிய உணர்வு இன்னும் பிரதிபலிக்கின்றது. சுதந்திரக்கட்சி அரசின் போது தலைவராக இருந்த ஏ. கே. பிரேமதாஸவும் ஐக்கிய தேசியக்கட்சி அரசியல் தலைவராயிருக்கும் ஆர். போதினகொடவும் இதனை மறக்கவில்லை.

இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றிலே 1956 ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்தது எனலாம். 'தனிச்சிங்களச் சட்டம்' என்ற அரசகரும மொழிச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் சிங்களத் துக்கு முதலிடத்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா கொடுத்தாரெனினும் சுதேசி மொழிகள் இவருக்குப் பின் முக்கியத்துவம் பெறத்தொடங்கின என்பதனை மறுக்க முடியாது. தமிழ் மொழி உபயோகச் சட்டமும் நிறைவேற்றப்பட்டதனால் தேசிய மொழி களுக்கு இடமளிக்கப்பட்டது. முன்பு ஆங்கிலம் பெற்றி ருந்த இடம் சிங்களத்துக்குச் சென்றதெனினும் மொழி அந்தஸ்து சட்டத்தொகுப்பில் இப்போதே இடம் பெறத் தொடங்கிற்று. கலாசாரத் துறையிலே பெரும் மறுமலர்ச் சியும், விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டன. கலாசார அமைச்சு

www.padippakam.com



நிறுவப்பட்டு இரு இனங்களின் கலைகளும் பேணிப் பாது காக்கப்பட்டதோடு வளர்ப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

காலனித்துவ ஆட்சியைத்தொடர்ந்து நடத்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி பழைய பாணிலேயே சென்றது. வர்க்க நலன் பேணப்பட்டது. முரண்பாடு காணப்பட்ட போது புதியதை நிராகரித்தனர். ஆனால் 1956 இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. புதியசிந்தனைகள், புதிய தத்துவங்கள் தலைதூக்கியது. உற்பத்தி சாதனங் களைப் பொதுவான அடிப்படையில் வைத்திருத்தல், எல்லோருக்கும் அவற்றை விநியோகித்தல் என்ற சோஷ லிசத் தத்துவம் ஆதரவு பெறத் தொடங்கிற்று. போக்கு வரத்து சேவைகள் தேசியமயமாகின. எண்ணெய்க் கம்பெனிகள் தேசியமயமாகின. மதஸ்தாபனங்களின் பாட சாலைகளே அரசின் கீழ் வந்தன. காப்புறுதிக் கம்பெனிகள், அரசாற் கையேற்கப்பட்டன. இலங்கை வங்கி தேசியமயமாகிற்று. இறக்குமதி சேவைகள் தேசிய மயமாகின. இவ்வாறாகத் தேசியமயமாக்கப்பட்ட சேவைகள் ஆரம்பமாகிய காலம் இது. மக்களின் சிந்தனை யிலும் மாற்றம் காணப்பட்டது.

1948 - 1955 கால ஐ. தே. க. ஆட்சியில் ஆங்கிலத் துக்கும் மேற்கத்திய நாகரிகத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதனால், தேசிய கலைகள் வளர்ச்சி காண வில்லை. உரிய ஊக்கமும் இவற்றிற்கு அளிக்கப்பட வில்லை. மக்கள் நேரடியாகப் பங்கு கொள்ளாத முறை யில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தி, பிரிட்டிஷ் மன்னருக்கு மனு சமர்பித்தல் முதலிய வழிவகை கள் மூலம்சுதந்திரம் இலங்கைபெற்றதனால் உடனடியான தாக்கத்தை மக்கள் பெறவில்லை. சுதந்திரம் பெறுமுன்னர் சேர். ஹென்றி மொங்க் மேசன் மூர் (1944-1949) கவர்ன ராக இருந்தார். சுதந்திரத்துக்குப் பின்னரும் அவரே

படிப்பகம்

www.padippakam.com



க்வர்னர் ஜெனரலாக இருந்தார். டி. எஸ் சேனநாயக்கா இவரையே நியமிக்கும்படி கேட்டிருந்தார்.[8] இதற்குப் பின்னர் சோல்பரிப் பிரபு இருந்தார். வழக்கமாக சிம்மாசனப் பிரசங்கத்தை கவர்னர் வாசித்து அரசாங்க சபைக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைப்பதுண்டு. இப்போது சுதந்திர வைபவத்துக்கு குளெஸ்டர் கோமகன் வந்து பிரசங்கம் நிகழ்த்தினார். ஆறாம் ஜோர்ஜ் மன்னனின் சார்பில், சகோதரரான இவர் 1948 பெப்ரவரி 10'ல் பாராளுமன்றத்தைத் திறந்து வைத்த போது,

> ''இலங்கையிலுள்ள எனது மக்கள் சுதந்திர மக்கள் கூட்டுக்குப்பயனுள்ள பங்களிப்பு செய்வார்கள் என்பதனை அறிவோம். உங்கள் பொறுப்புக்களை இறுதிவரை நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இத்தினத்தில் எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்''[9]

என்று கூறினார்.

இதே வேளையில் இந்திய சுதந்திரத் தினமும் கொண்டாட்டங்களும் இலங்கையில் கூட பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இரத்தம் சிந்தி எத்தனை பேர் மாண்டிருப்பார்கள்? காந்திஜியின் சத்தியாக்கிரகத்தினாலே எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருப்பார்கள்? ஜுலியன் வாலாபக் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இறந்தவர்களின் கதைகளை துப்பாக்கிச்சன்னங்கள் சுவர்களில் ஏற்படுத்திய துளையல்கள் நினைவுறுத்திக் கொண்டேயிருந்தன. மகாகவி பாரதியின் ''ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே'' போன்ற தேசிய கீதங்கள் இங்கும் ஒலித்தன.[10] 'நாம் இருவர்' என்ற படத்தின் மூலம் இவை ஜனரஞ்சகமாக்கப் பட்டன.

இத்தகைய தாக்கம் இலங்கைச் சுதந்திரத்தின் போது ஏற்படவில்லை. இன்று போல அன்று பத்திரிகைகள் மூலை முடுக்கெல்லாம் செல்லவில்லை. நூலகங்கள், வாசிக

www.padippakam.com



சாலைகள் இருக்கவில்லை. மலிவான விலையில் வானொலிப் பெட்டிகள் கிடைக்கவுமில்லை. யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பார்க்கில் வானொலிப்பெட்டியை கோபுரத்தில் வைத்துச் செய்திகளையும், இசையையும் வழங்கிய காலம் அது. மக்கள் இந்நிலை காரணமாகப் பிரக்ஞையுடன் இருக்கவில்லை. இவை எல்லாவற்றிற்கும் மேலாக கொழும்பு, கொள்ளுப்பிட்டி பிரிட்டிஷ் விமானப் படை நிலையத்தில் (இன்று பிரிட்டிஷ் தூதரகம் இருக்கும் இடத்தில்) யூனியன் ஜாக்கொடி பறந்து கொண்டிருந்தது. திருகோணமலை சீனன்கூடாவிலும் பறந்து கொண்டிருந்தது. நீதி பரிபாலனத்தில் இறுதி மேன்முறையீடு லண்டனிலிருந்த 'பிரிவி கவுன்ஸில்' எனும் கோமறைக் கழகத்திடமிருந்தது. இலங்கையில் மரண தண்டனை விதிக்கப்பட்டால் வெஸ்ட்மினிஸ்டரிலிருந்து பிரபுக்கள் சபையின் நீதிபரிபாலனக் கமிட்டி இலங்கை சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை ஒதுக்கித்தள்ளி எதிரியை விடுதலை செய்யக்கூடியதாகவிருந்தது.[11]

*1959'* இலோ புதிய மாற்றத்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கொண்டு வந்தார். அரசாங்க மொழி மாற்றம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திற்று. தமிழர் பாதிக்கப்பட்டவரெனினும் தாம் தமது பாதுகாப்பைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று எண்ணும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். பிரிட்டிஷார் இல்லை; ஆங்கிலம் போய்விட்டது; தமிழுக்கு அந்தஸ்து பெற்றுக் கொடுத்து தமிழர் உரிமைகளுடன் இருக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. இதே வேளையில் பண்டாரநாயக்காவின் தேசியமய முயற்சிகள் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தத் தவறவில்லை. குறிப்பாக ஷெல் கம்பனி, ஸ்டான்டர்ட் வக்குவம் ஓயில் கம்பனி, கல்டெக்ஸ் போன்ற எண்ணெய்க் கம்பெனிகளைத் தேசிய மயப்படுத்தி பெற்றோலியம் கூட்டுதாபனத்தை நிறுவியதும் மக்கள் விழிப்படைந்தார்கள். துறை

www.padippakam.com



முகச் சேவைகள், ஏற்றுமதி இறக்குமதி வேலைகளில் அரசே புகுந்ததும் சுதந்திரநாடு என்றநம்பிக்கை ஏற்படத் தொடங்கிற்று. இலங்கையிலிருந்த பிரிட்டிஷ் இராணுவத் தளங்கள் இலங்கையால் கையேற்கப்பட்டன. பிரிட்டிஷ் தளங்களில் இருந்த பிரிட்டிஷ் தேசியக்கொடியும் இறக்கப் பட்டு, சிங்கக்கொடி ஏற்றப்பட்டதும் புதிய சகாப்தம் ஆரம்பமாகியதனை அறிய வந்தார்கள்.

இத்தாக்கம் கலை இலக்கியத்துறைகளிலும் பிரதி பலித்தது. பத்திரிகைகளிலும் இம் மனமாற்றம் தெளி வாயிற்று.

'தினகரன்' வரலாற்றிலும் புதிய இயல்பைக் காணக் கூடியதாக விருந்தது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் மட்டுமே முதற் கவனம் செலுத்திய 'லேக் ஹவுஸ்' நிர்வாகம் சிங்கள, தமிழ்ப் பத்திரிகைகளில் சிரத்தை காட்டத் தொடங்கிற்று. 'டெயிலி நியூஸ்' பத்திரிகை போல இவை வளர்ச்சி காண வேண்டும் என்று விரும்பிற்று. அரசாங்கம் நிர்வாக மொழியைமாற்றியதால் விரைவில் ஆங்கிலப்பத்திரிகைகள் செல்வாக்கை இழந்து தேசியமொழிப் பத்திரிகைகள் இவ்விடத்தைப் பெறும் என நம்பினர்.

எனவே 'தினகரனை' நன்முறையில் பிரசுரிப்பதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. உருவத்திலும், உள் ளடக்கத்திலும் மாற்றம் ஏற்படுத்த விரும்பினர். இதே வேளையில் வெளிநாட்டுச் செலாவணிச் சட்டங்கள் தீவிர மாக அமுல் செய்யப்பட்டன. குடியகல்வு, குடிவரவுச் சட்டமும் இறுக்கமாக இருந்தது. இந்தியாவுக்குப் பணம் அனுப்பும் கஷ்டம் உருவாயிற்று. தினகரனில் இருந்த பல இந்தியர்கள் தாய்நாடு திரும்பினர். புதியவர்களைக் கொண்டு வரவும் முடியாதிருந்தது. எத்துறையாயினும் வெளிநாட்டிலிருந்து நிபுணர்களை மட்டுமே கொண்டு வரக்கூடியதாகவிருந்தது. 'லேக் ஹவுஸ'க்கு ஒதுக்கிய

www.padippakam.com



வெளிநாட்டுச் செலாவணியில் தினகரனுக்கு மிகக்குறைந்த அளவே கொடுக்கக் கூடியதாகவிருந்தது. இலங்கையில் தமிழ் சினிமாப்படத் தயாரிப்பு இல்லாததால் சென்னைத் திரை உலகச் செய்திகளை அனுப்பவும், இடையிடையே தொடர் நவீனம் போன்றவற்றைப் பெறவும் நிதி வசதி இருந்தது.

ஆதலின் உள்நாட்டுக் கலை வளத்தைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தினகரனுக்கு இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் எடுக்கப்பட்டனர். ஆய்வாளர், மாவிட்டபுரம் த. சண்முகசுந்தரம் இவர்களுள் ஒருவர். இவர்களுக்குப் பயிற்சி அளித்து முக்கிய பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டன.

இந்நிலையிலேயே க. கைலாசபதி, சி. தில்லைநாதன், ஆர். சிவகுருநாதன் போன்றவர்கள் 'தினகரனு'க்கு வந்தனர். முதல் இருவரும் 'தினகரனில்' முக்கிய பொறுப்புகளைச் சிலகாலம் ஏற்றிருந்த பின்னர் பல்கலைக்கழக ஆசிரிய பீடத்துக்குச் சென்றுவிட்டனர். மூன்றாமவரான ஆசிரியர் தொடர்ந்து இங்கே பணியாற்றி வருகின்றார்.

'தினகரனின்' வரலாற்றிலே கைலாசபதி ஆசிரியராக இருந்த இரண்டு வருட காலம் பல வகைகளில் சிறப்புப் பெறுகின்றது. அவரது காலப்பகுதி ஒரு திருப்புமுனை என்று கூறுவதும் மிகையாகாது.

ஈராயிரம் பிரதிகள் விற்பனையுடன் ஆரம்பித்த 'தினகரன்' இக்காலம் வரை பன்னிரண்டாயிரம் பிரதிகட்கு மேல் விற்கவில்லை. தேர்தல்கள் நடைபெற்றன. பிரசார இயக்கங்கள் நடைபெற்றன. சாதி ஒழிப்புப் போராட்டம் போன்ற சமூக இயக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. எனினும் 'வீரகேசரி'யின் விற்பனை பெருகி வந்ததேயொழியத் 'தினகர'னில் இவற்றின் தாக்கம் காணப்படவில்லை.

www.padippakam.com



தமிழரிடையே 'தினகர'னின் செல்வாக்குக் குறைவாக இருந்ததற்கு முக்கிய காரணம் இது சிங்களவர் தமிழருக்காகஅச்சிடும் பத்திரிகை என்பதாகும். 'வீரகேசரி' இந்தியர்களால் நடத்தப்பட்டதெனினும், இவர்கள் தமிழர்கள் என்பதனால் அதன் மீது பற்றுதல் இருந்தது.

'தினகர'னின் தேசியப் போக்கும் அதன் பெரு வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது எனலாம். தேசியக் கண்கொண்டே 'தினகரன்' எதையும் நோக்கி வந்தது. தமிழர் பிரச்சினையை மட்டும் கவனிக்கும் பத்திரிகையாக இது விளங்கவில்லை. முஸ்லீம்களின் ஆதரவு 'தினகர'னுக்கு எப்போதும் இருப்பதற்கு இது முக்கிய காரணம்எனலாம். 'தினகரன்' முஸ்லீம் மஞ்சரி தொடங்கிய பின்பே பிறர் தொடங்கினர்.[12] 'வீரகேசரி' இந்து மதம் சார்பான பத்திரிகை என்ற கருத்து இருக்கின்றது. நவராத்திரி விழாவைக் கொண்டாடும் ஒரே இலங்கைத் தமிழ்ப்பத்திரிகை நிறுவனம் 'வீரகேசரி'யே.

'வீரகேசரி' இந்தியப் பத்திரிகைகளைப் பின்பற்றியே நடந்து கொள்ளும். நடை, செய்தி அமைப்பு ஆகியவற்றில் தமிழ்நாட்டுப் பாணியே பின்பற்றப்படும். 'தினகரன்' செந்தமிழுக்கு இடம் கொடுக்கும். இலக்கண ரீதியான மொழிப் பிரயோகம், வசன அமைப்பு இருக்கும். பொதுப் பரீட்சைகளின்போது மொழி பெயர்ப்புப் பத்தி தேவைப்படும் இடங்களில் 'தினகரனை'யே பயன்படுத்தவர். இவ்வியல்பு சாதாரண தொழிலாள வாசகனுக்கு அதிகம் பிடிப்பதில்லை. எனவேதான் பேச்சு மொழியைப் பயன்படுத்தும் பத்திரிகையை நாடுவர்.

மேலும் 'லேக் ஹவுஸ்' நிறுவனப் பத்திரிகைகளை விற்பவர்கள் தனியே 'தினகர'னுக்கு மாத்திரம் விற்பனையாளராக முடியாது. ஏனைய பிரசுரங்களையும் வாங்க வேண்டும். இது பொறுப்பான வேலை. விற்பனை முகவர் பத்திரிகை பெறுவதாயின் ஏழு வாரங்களுக்கான

த—10

www.padippakam.com



பணத்தை முற்பணமாகக் கொடுக்க வேண்டும். ஏஜெண்டுகள் குறைவான கழிவுகளைப் பெறுவர். என்றாலும் பல பத்திரிகைகளை ஏஜெண்டுகள் விற்பதனால் இவர்கள் கூடுதலான வருவாய் பெறும் சாத்தியக்கூறு இருக்கின்றது என்று கூறி முற்பணம் பெற்றே விற்பனை உரிமை கொடுப்பர். இவ்வாறான கஷ்டங்கள் பல தடையாக இருந்த வேளையிலேயே கைலாசபதி பொறுப்பேற்றார்.

இவரது அதிர்ஷ்டம் இக்காலம் 'வீரகேசரி'யைப் பொறுத்தமட்டில் மிகவும் துர்ப்பாக்கிய காலப்பகுதியாயிருந்தது. வேலை நிறுத்தம் இரண்டு தடவைகள் நடந்தது. முதலில் சில நாட்கள் மட்டுமே வேலை நிறுத்தத்தில் ஊழியர் ஈடுபட்டனர். பத்திரிகை வெளிவரவில்லை. இரண்டாம் முறை வேலைநிறுத்தம் செய்ததும், பெரும் பிரச்சினையே எழுந்தது. நிர்வாகம் ஊழியர்களை விலக்கிவிட்டது. எவரும் மீண்டும் வேலைக்குச் செல்ல முடியாதிருந்தது. ஆறு மாதங்கட்கு மேலாக 'வீரகேசரி' வெளிவரவில்லை. அப்போது 'சுயாதீன'ப் பத்திரிகை சமாஜனத்தினர் 'தினபதி'யை ஆரம்பிக்கவில்லை. எனவே அன்று 'தினகர'னுக்குப் போட்டியிருக்கவில்லை. 'தினகர'னின் விற்பனை அதிகரித்தது. 'வீரகேசரி' வாங்கிப் படித்தவர்கள் அனைவரும் 'தினகர'னை விலை கொடுத்து வாங்கவில்லை என்றாலும் அவர்களில் பெரும்பான்மையினர் வாங்கிப் படித்தார்கள். 'தினகரன்' விற்பனை அதிகரித்தது.

இக்காலப்பகுதி சிறப்படையச் செய்யும் இன்னுமோர் அம்சம் கைலாசபதி முன்வைத்த தேசிய இலக்கியக் கோட்பாடாகும். இலங்கைக்குத் தனியே ஒரு இலக்கியப் பண்போ பாரம்பரியமோ இருக்கவில்லை. ஈழத்துப் பூதன்றேவனார் காலத்திலிருந்து இக்காலம் வரை இலங்கை இலக்கியத்தில் தமிழ் நாட்டின் பண்புச் செறிவு காணப்பட்டது. 'ஈழகேசரி' எழுத்தாளர் பலரின் கதை

www.padippakam.com



களைப் படிக்கின்றபோது கதாபாத்திரங்களின் பெயர்கள் கூட இந்தியப் பெயர்களாயிருப்பதனைக் காணலாம். நாவலர் தமிழ் நாட்டையே முன்மாதிரியாகக் கொண்டிருந்தார் என்பர்.

கைலாசபதி தேசிய இலக்கியக் கோட்பாட்டை விளக்கி மண்வாசனையுள்ள இலக்கியத்தின் பெருமையை எடுத்துச் சொன்னார்.[13] தேசிய இலக்கியம் என்றால் என்ன என்று 'தினகரன்' விளக்கம் கூறிக் கட்டுரைகளை வெளியிட்டது. தொடர்ந்து பல கட்டுரைகள் வெளியிடப்பட்டன. 'தினகர'னில் மட்டுமல்ல மற்றும் சஞ்சிகைகளிலும் இக்கருத்தைக் கைலாசபதி, சிவதம்பி ஆகியோர் சொல்லியிருந்தனர். இதைத் தொடர்ந்து மற்றும் அறிஞர்களின் கருத்துகளும் வெளியிடப்பட்டன. கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோருட்பட்ட முற்போக்கு இலக்கிய வாதிகள் முன்வைத்த தேசிய இலக்கியக் கோட்பாடு செயற்படத்தக்க வகையில் அன்று சூழ்நிலையும் அமைந்திருந்தது.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் இறுதிக் காலம் அது. பொருளாதார நெருக்கடி மிக்க காலம். இவரது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையால் வெளி நாடுகள் உதவி அளிக்க முன்வரவில்லை. சர்வதேச நிறுவனங்கள் நிபந்தனையின்றி நிதி உதவி அளிக்கப் பின் வாங்கின. அணிசேராத நடுநிலை நாடாக, பாண்டுங் பிரகடனத்தை ஆதரித்த நாடாக இலங்கை இருந்தாலும், கிழக்கு ஜனநாயக நாடுகள் இவர் பக்கம் நின்றன. சோவியத் யூனியன், மக்கள் சீனா, யூகோஸ்லாவியா போன்ற நாடுகளின் பேராதரவு இவருக்கு இருந்ததால் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் இலங்கையைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கின.

இந்நிலை காரணமாக செலாவணி நெருக்கடி இருந்தது. வெளிநாட்டுக்கு உத்தியோக பூர்வமாகப்

www.padippakam.com



பணம் அனுப்ப முடியாத நிலை இருந்தது. ஆரம்பத்தில் ஓரளவு செலாவணி கிடைத்தது. 'தினகர'னுக்கும் ஓரளவு ஒதுக்கப்பட்டது. சினிமாச் செய்திகளுக்கும், எல்லார்வி, கே. ஆர். பாலு போன்ற சிலரின் நெடுங்கதைகளுக்குப் பணம் கொடுக்கப்பட்டது. தேசிய இலக்கிய கோரிக்கை எழுந்தபோது செலாவணி முற்றாகக் கிடைக்கவில்லை. இலங்கை எழுத்தாளர்களையே 'தினகரன்' நம்பி நிற்க வேண்டிய நிலை இருந்தது. இலவசமாக இந்தியர்கள் யாராவது எழுதினாலொழிய இந்தியச் சிருஷ்டிகளை வெளியிட முடியாத நிலை உருவாகிவிட்டது. இச்சந்தர்ப்பம் தேசிய இலக்கியம் பேசிய கைலாசபதிக்கு நன்கு உதவிற்று. மண்வாசனைச் செறிவுள்ள இலக்கியங்கள், 'தினகர'னில் இடம் பெற்றன. தேசிய ஒருமைப்பாட்டையும் தனித்துவத்தையும் எடுத்துக்கூறும் சிருஷ்டிகள் இடம் பெறலாயின. கதைகளை செ. கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, காவலூர் ராசதுரை, அ.முத்துலிங்கம், எஸ். பொன்னுத்துரை போன்றவர்கள் எழுதினார்கள். கா. சிவத்தம்பி, ஏ. ஜெ. கனகரட்னா, சொக்கன் போன்றவர்கள் விமர்சனக் கட்டுரைகளை எழுதினார்கள். சில்லையூர் செல்வராசன், நீலாவணன், மஹாகவி, இ. நாகராஜன் போன்றவர்கள் கவிதை எழுதினார்கள். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்னின்று உதவிற்று. மகாநாடொன்றும் நடத்தப்பட்டது. தேசிய இலக்கியக் கோட்பாடு இதில் முன் வைக்கப்பட்டது.

இவ்வாறாகத் தேசிய இலக்கியம் உருப்பெற்று வளர்ச்சி காண கைலாசபதி களம் அமைத்துக் கொடுத்தார்.

'தினகரனை' நன்முறையில் பயன்தரும் வகையிலே நடத்தும் இவ்விஷயத்தில் இவருக்குத் துணையாக நின்றவர்கள் இவரது ஆசானான பேராசிரியர் சு. வித்தியானந்தனும், நண்பர் சின்னத்தம்பியுமெனலாம். கைலாசபதி 'தினகரனுக்'கு வருவதற்கே முன்னின்று உதவியவர் பேரா

படிப்பகம்

www.padippakam.com



சிரியர் வித்தியானந்தன். பல்கலைக்கழகத்தில் அவரது நண்பனானவும், அவர் பின்பற்றும் தத்துவ ஞானியாக வும், அவரது வழிகாட்டியாகவும் நின்று, பத்திரிகை ஆசிரியராக்கிப் பின் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் ஆக்கித் தந்தைபோல உதவியவர் பேராசிரியர் வித்தியா னந்தன்.

பல்கலைக்கழகக் காலத்திலிருந்து இலக்கிய நண்பர் களாக இருந்ததால் சிவத்தம்பியின் ஆலோசனைகளைக் கேட்டார். முற்போக்கெழுத்தாளர் மகாநாட்டில் கலாநிதி சிவத்தம்பி தேசிய இலக்கியக் கோட்பாட்டினை விளக்கி யிருந்தார். மரபு பற்றிய தத்துவரீதியான போராட்ட களத்திலேயும் இவர் முன் நின்று கருத்துப்போர் செய் தார்.

இலக்கியத் துறையிலே பல புது முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இளங்கீரன் போன்றவர்களின் நாவல்கள் தொடராக வெளியிடப்பட்டதுடன் பேரா சிரியர் ஸி. ஜே. எலியசர், பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் போன்றவர்கள் விண்வெளி ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினர்.

பிறமொழி இலக்கிய சிருஷ்டிகள் பிரசுரிக்கப்பட்டன. முக்கியமாகச் சிங்கள இலக்கியங்கள், ஆங்கில, பிரெஞ்சு இலக்கியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலக்கிய விமர்சனம் முக்கியத்துவம் பெற்றது. மகாகவி கண்ட மகாகவி என்ற கட்டுரைத்தொடர் நூலா கவும் வெளியிடப்பட்டது. இலக்கியச்சிறப்புள்ள படைப்பு களை விட ஜனரஞ்சகமான அம்சங்கள் பலவும் இடம் பெற்றதனால் மக்களின் ஆதரவு 'தினகர'னுக்குப் பெரு கிற்று. 1960 ல் எடுத்த தமிழ்ப் பெருவிழாவின் போது தமிழ் ஏட்டுச் சுவடிகள்-ஊர்வலம் எல்லோரையும் கவர்ந்தது. நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், 'கலைக்குரிசில்'

www.padippakam.com



என்ற பட்டம் அளித்து சிவாஜி கணேசனைக் கௌர வித்தமை போன்றவற்றிற்கும் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

கைலாசபதியின் பாணி வெற்றி அளித்தமைக்கு முழு முதற் காரணம் காலச்சூழலே. முன்னே கூறிய பொருளா தாரச் சூழலைவிட தமிழ் அரசியல் நிலையும் மிகச் சாதக மாக அமைந்தது.

தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து 'கோல்பேஸ்' சத்தியாக் கிரகம், யாழ்ப்பாணக் கச்சேரி, திருமலை, மட்டக்களப்பு கச்சேரிகளின் முன்னிலையில் நடந்த சத்தியாக்கிரகங்கள், சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு போராட்டம் நடந்தன. இவற்றின் விளைவாக 1956'ல் கல்லோயாவிலும், 1958'ல் இலங்கை பூராவும் இனவெறி வன்செயல்கள் நடைபெற்றன.

> ''பல நூறு வருட காலமாக இரு இனங்களுக் கிடையே நிலவி வந்த பரஸ்பர மதிப்பும் நல்லுறவும் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு சிறு காலப் பகுதியில் எவ்வாறு சிதைக்கப்பட்டது என்பதனை மக்கள் கண்டார்கள்.''

என்று டார்ஸி விட்டாச்சி தனது 'எமர்ஜென்ஸி 58' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கின்றார்.[14] டார்ஸி விட் டாச்சி ஒப்ஸேவர் ஆசிரியராக இருந்தவர். 1958 மே, ஜூன் மாதங்களில் நடைபெற்ற வன்செயல்களை விளக்க மாக இதில் எழுதியிருந்தார். இனவெறி நெருக்கடியை ஏற்படுத்திய நிகழ்ச்சிகள் உணர்ச்சிப் பிரவாகங்களின் அடிப்படைக் காரணங்களையும், வெறுப்பு அதிகரித்த வேளையிலே மனிதன் எவ்வாறு மனிதத்தன்மை அற்ற முறையில் தாக்குகின்றான் என்பதனையும் இதில் விளக்க மாகக் கூறியுள்ளார்.இந்நிகழ்ச்சிகள் தமிழ் உணர்ச்சியைத் தூண்டி விட்டிருந்தன.

படிப்பகம்

www.padippakam.com



'லேக் ஹவுஸ்' நிறுவனம் அப்போது தனியார் கையில் இருந்தது. ஐக்கியதேசியக் கட்சிக்கு 'லேக் ஹவுஸ்' ஆதரவு இருந்ததெனினும் கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. என்ன செய்தியையும் பிரசுரிக்கக்கூடியதாயிருந்தது. தணிக்கைக் காலத்திலன்றி ஏனைய நாட்களில் அரசாங்க அதிகாரிகள் எதையும் செய்ய முடியாதிருந்தனர். தனிப்பட்ட முறையில் கேண்மை காரணமாக முதலாளிகளுடன் தொடர்பு கொண்டு வேண்டுகோள்களை விடுக்கக்கூடியதாயிருந்ததேயொழிய கட்டளையின் மூலம் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. கொலட் என்ற கேலிச் சித்திரக்காரர் பிரதமரையே கேலி செய்த காலம் அது.[15] பத்திரிகைச் சுதந்திரம் உண்மையாக அமுலில் இருந்த காலம் அது. அத்துடன் பண்டாரநாயக்காவின் கொள்கைகளை 'லேக் ஹவுஸ்' நிறுவனம் எதிர்த்தது. இந்த எதிர்ப்புக் காரணமாகச் சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுவதை ஓரளவு எதிர்த்தது எனலாம்.

இத்தகைய நிலைகள் கைலாசபதியின் பாணி வெற்றி காண உதவின. அப்போது செய்திகளுக்குப் பொறுப்பாக இக்கட்டுரை ஆசிரியர் இருந்தார். சில இதழ்களைப் பார்க்கும்போது 'தினகரன்' தமிழரசுக் கட்சி ஏடோ என்று சந்தேகிக்கக்கூடிய வகையில் செய்திச் சேவை அமைந்திருப்பதனைக் காணலாம். தமிழ் மக்கள் 'தினகரன்' மீது கொண்டிருந்த சந்தேகம் நீங்கித் தமது செய்திகளைப் படிக்கத் தினகரனை நாடும் நிலை எழுந்தது.

பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப்பட்டார். 'தினகரன்' விசேஷ பதிப்புக்களை வெளியிட்டது. அதனைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் அனைத்தும் பத்திரிகையை எல்லோரும் நாடி வரச் செய்தன.

கைலாசபதியின் தேசிய இலக்கிய நோக்கை கம்யூனிஸப் பிரசாரம் என்று கூறிய சிலரும் இருந்தனர். கம்யூ

www.padippakam.com



னிஸ்டுகளுக்கு ஆதரவான இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் முக்கிய பிரமுகராக இவரும், சிவத்தம்பியும் இருந்தனர். இந்த இயக்கத்தினரின் புதுமைப் போக்குக்குப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, கலாநிதி வித்தியானந்தன் ஆகியோர் ஆதரவு இருந்தது. புரட்சிகரமான இலக்கியப் போக்கு மார்க்ஸிய தாக்கத்தால் ஏற்பட்டது என்று கூறிய பண்டிதர் வர்க்கம் இவர்களைச் சாடத் தொடங்கிற்று. அக்காலத்தில் இலங்கை அரசின் கலாசார அமைப்பின் கீழ் இயங்கிய சாகித்திய மண்டலத்தின் பண்டித வர்க்கம் அதிகாரம் பெற்றிருந்தது. இவர்கள் 1963'ல் நடத்திய சாகித்திய விழா இப்போக்கைக் கண்டிப்பதாக அமைந்தது. முற்போக்காளருக்கு அகெளரவம் ஏற்படுத்துவதாக நினைத்துக்கொண்டு 'இழிசினர் வழக்கு' என்று முற்போக்காளரைக் கேலி செய்த இப்பண்டிதர் குழாம் முற்போக்கு இலக்கியக்காரர் அல்லாத பலருக்குத் தகுதியை ஒரு புறம் தள்ளிவைத்துவிட்டுப் பரிசில்கள் வழங்கினார். சிறந்த நூல்கள் பல இருந்தும் இவற்றிற்கு பரிசு வழங்கப்படவில்லை. இது கண்டிக்கப்பட்டது. விழாவன்று தான் தோன்றிக் கவிராயர் 'பரிசு கெட்ட அம்மானை' என்ற கவிதையை 'தினகரனில்' எழுதியிருந்தார்.

இத்தகைய சூழ்நிலையில் ஒரு சிலர் விரக்தி அடைந்தார்கள். இந்த எழுத்தாளர்களுள் ஒருவர் முற்போக்கு வட்டாரங்களில் சில ஆண்டுகள் சஞ்சரித்தவர். இவர்கள் 'நற்போக்கு இலக்கியம்' என்ற ஒரு கோட்பாட்டை முன்வைத்தனர். ஆனால் எழுத்துலகம் இதனை நிராகரித்தது.

1961'ல் கைலாசபதி பல்கலைக்கழகம் சென்றதும் இக்கட்டுரை ஆசிரியர் 'தினகரனின்' பொறுப்பை ஏற்று இன்று வரை நடத்தி வருகின்றார். இவரும் பேராசிரியர் வித்தியானந்தனின் மாணவர். பல்கலைக்கழக வெளியீடான 'இளங்கதிர்' ஆசிரியராகவிருந்தவர்.

www.padippakam.com



1965'ல் இலக்கிய விஷயதானங்களைக் கொண்டு வரும் ஞாயிறு இதழ் 'தினகரன்' 'வாரமஞ்சரி' எனப் பெயரிடப்பட்டது. டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தின் போது 1965'ல் போயா தினங்களை வார விடு முறையாக்கியதும் இப்பெயர் மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டது. அதாவது பௌர்ணமி அஷ்டமி, அமாவாசை அஷ்டமி என்ற பௌத்த மக்கள் சமய அனுஷ்டானம் செய்ய வசதியாக இவற்றை வார விடு முறை தினங்களாக்கிய போது, ஞாயிறு கட்டாயமாக விடுமுறை தினமாக வரவில்லை என்றதனால் 'தினகரன்' வாரமஞ்சரி என்று பெயர் மாற்ற நேர்ந்தது. சன்டே ஒப்ஸேவர் மகஸீன் என்று பெயர் கொண்டது. இலக்கியக் கொள்கையைப் பொறுத்த மட்டில் கைலாசபதி ஆரம் பித்த வழியிலேயே 'தினகரன்' சென்று கொண்டிருந்தது. கைலாசபதிகாலத்தில் செய்யப்படாத இலக்கியப் பரிசோதனைகள் பல பின்னர் செய்யப்பட்டன. இதனை பொறுப் பேற்றபோது தினசரி விற்பனை 33000 ஆகவும், 'வாரமஞ்சரி' 39000 ஆகவும் இருந்தன.[16] 'தினகரன்' தமிழர் முஸ்லீம்கள் மத்தியில் பெரு மதிப்பைப் பெற்று வந்தது. நாட்டின் கலை கலாசார வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைத்தது. கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுத்தலைவராகப் பேராசிரியர் வித்தியானந்தன் இருந்த காலை இவரது முயற்சிகளுக்கு ஊக்கமும் உற்சா கமும் அளித்தது. நாடக விழாக்கள், கருத்தரங்குகள் நடத்திய போது தலையங்கங்கள் தீட்டிப் பாராட்டத் தவறவில்லை. விசேடமாக மலர்களும் வெளியிட்டது.

பேராசிரியரைத் தொடர்ந்து கலாநிதி சிவத்தம்பி நாடகக்குழுவின் பொறுப்பை ஏற்றபோதும் இவ்வாறு செய்து வந்தது. 1969'ல் 'தினகரனே' தமிழ் நாடகவிழா வொன்றினைக் கொழும்பில் நடத்தி கலைஞருக்குப் பரிசில்கள் வழங்கிற்று. கலையரசு சொர்ணலிங்கம் கௌர

www.padippakam.com



விக்கப்பட்டார். பேராசிரியர் வித்தியானந்தன் விழாவுக்குத் தலைமைதாங்கி விழா வெற்றி காணச்செய் தார்.

தினகரனே பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் விஷயதானங்களைத் தாங்கி வரத்தொடங்கிற்று. கைலாசபதியின் சீனாவும் தமிழும் தொடராக வெளி வந்தது. இன்னும் பல இலக்கிய விமர்சனக் கட்டுரை களையும் அவர் எழுதினார். கலாநிதி சிவத்தம்பி நாடகம் சம்பந்தமான கட்டுரைகளை வழங்கினார். கலாநிதி பூலோகசிங்கம் ஈழத் தமிழ்ப் புலவர்கள் பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். கலாநிதி எம். எம். உவைஸ் இஸ்லாமிய இலக்கியக் கட்டுரைகளை எழுதினார். இவ்வாறாக வேறு பத்திரிகையில் காண முடியாத கனம்மிக்க கட்டுரைகள் 'தினகரனில்' இடம் பெற்றதனால் கற்றவர்கள் பாராட்டினார்கள். பிறர் விரும்பி வாசித்தார்கள்.

'தினகரனின்' கட்டுரைப் பகுதி முன்னேறியதற்குக் காரணகர்த்தராயிருந்தவர் பேராதனைப் பல்கலைக்கழகத் தின் தமிழ்த்துறையில் அண்மைக் காலம்வரை தலைவராக இருந்த சி. தில்லைநாதன் ஆவர். இவர் சிறந்த சிந்தனை யாளர். பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்று முதற்தரப் பட்டதாரியாகிய இவர் 'தினகரனில்' கட்டுரைப் பகுதி ஆசிரியராகவிருந்தார். இலக்கியப் பிரச்சினைகள் பல வற்றை இவர் ஆரம்பித்துவிட்டவர். குறிப்பாக ''மரபுப் போராட்டம்'' என்ற சர்ச்சை அப்போது நல்ல சூடு பிடித்திருந்தது. புதிய உத்திகளைக் கையாண்டு வாசகர் கூட்டத்தை அமைத்தார். 'தினகரன்' முன்னேறிற்று. உயர் விஷயங்களை வெளியிட்டதாலும் பெரும்பாலும் பாமரர் வாசிக்கும் பத்திரிகை 'தினகரன்' என்பதனை மனதிற்கொண்டு களம் அமைத்தவர். வெற்றியும் கண் டார்.

www.padippakam.com



சமகாலத்தில் வித்தியோதய பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் டாக்டர். எம். எம். உவைஸுடனும் விரிவுரையாளராகவிருந்து வந்து, பின்னர் பேராதனை ஆசிரிய பீடத்தில் வெற்றிடம் கிடைத்ததும் மேற்படிப்பைத் தொடர்வதற்காக அங்கே சென்றுவிட்டார். அங்கிருந்து கொண்டும் 'தினகரனுக்கு' முக்கிய கட்டங்களில் ஆலோசனை கூறி வழிநடத்துகின்றார். தினகரனின் வெற்றிக்குக் காரணமாயிருந்தவர் இதன் ஸ்தாபகர் டி. ஆர். விஜேவர்த்தனவின் புத்திரரான ரஞ்ஜித் சுஜீவா விஜேவர்த்தன ஆவர். இவர் அன்புள்ளம் கொண்டவர். இனத்துவேச உணர்வே இல்லாதவர். தமிழர் மீது அனுதாபமும் பாசமும் உடையவர்.

சிங்களப் பத்திரிகைக்கு எதையாவது செய்தால் தமிழ்ப் பத்திரிகைக்கும் தானாகவே அதனைச் செய்வார். 'தினகரனை' மேலும் வளர்க்க வேண்டும் என்று உளமார விரும்பி வர்ண அச்சு வசதிகளைச் செய்து கொடுத்தார். இவரது நேரடிக் கவனமிருந்ததால் 'தினகரன்' வளர்ச்சி துரிதம் கண்டது. இத்துணை சிறப்பாக வெளிவந்த 'தினகரனை' அரசாங்கம் 1973 ஜூனில் பொறுப்பேற்றதும், ரஞ்ஜித் விஜேவர்த்தன விலகிச் செல்ல நேர்ந்தது.

கைலாசபதி விலகிச் சென்ற காலத்தில் (1961) வீரகேசரி மீண்டும் ஆரம்பித்துவிட்டது. மூடப்பட்டுக் கிடந்ததனால் வாசகர்கள் பலர் விலகிச் சென்றிருந்தார்கள். வீரகேசரி மீண்டும் வெளிவந்ததால் இவர்களை இழுத்துப் பிடித்து வைத்திருக்க வேண்டிய நிலை புதிய ஆசிரியருக்கு ஏற்பட்டது. 'தினகரன்' மேலும் சில தமிழ்ப் பத்திரிகைகளுடன் போட்டியிட வேண்டிய நிலையும் உருவானது. 1958 இனக்கலவரங்களைத் தொடர்ந்து தமிழருக்கு ஒரு பத்திரிகையை வட பகுதியில் வெளியிட வேண்டும் என்று விரும்பிய கே. ஸி. தங்கராஜா என்ற வர்த்தகப் பிரமுகர் 1959'ல் 'ஈழநாடு' எனும்

www.padippakam.com



பத்திரிகையை ஆரம்பித்தார். 1930'ல் நா. பொன்னையா ஆரம்பித்த 'ஈழகேசரி' மூடப்பட்ட பின் வடக்கே தினசரிப் பத்திரிகை வெளியிடப்படவில்லை. 1961க்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலும் மற்றும் தமிழ்ப் பிரதேசங்களிலும் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகம், போராட்டங்கள் முதலியன நடைபெற்றன. ஈழநாடு பிரதேச வெளியீடான தால் உடனடியாகவே கொழும்பிலிருந்து வரும் பத்திரி கைகளுக்கு முன்பே செய்திகளைக் கொடுக்கக் கூடியதாக விருந்தது. சில வேளைகளில் விசேஷ பதிப்பும் வெளி வந்தது. இதன் விலையும் பத்து சதமாக இருந்ததால் இதன் விற்பனை அதிகரித்தது.

சுயாதீனப் பத்திரிகை சமாஜம் என்கின்ற எம்.டி.குண சேன கம்பெனி சிந்தாமணியை 1966 ஆகஸ் டில் ஆரம்பித்தனர். சிறிது காலத்தால் தந்தி என்ற மாலைப் பத்திரிகையை 1967-இல் ஆரம்பித்தனர். 'தின கர'னில் முன்பிருந்த வே. கே. ப. நாதன் இதன் ஆசிரிய ராகவிருந்தார். இதன் விலை 5 சதம் என்றிருந்தும் வளர்ச்சி காணவில்லை. வேலை நிறுத்தத்துடன் அதனை நிறுத்திவிட்டார்கள்.[17]

இந்நிறுவனத்தினர் முதலில் 'ராதா' எனும் சினிமாப் பத்திரிகையை வெளியிட்டு வந்தனர். அது நீடிக்கவில்லை. 'சுந்தரி' எனும் மாத இதழையும் வெளியிட்டனர். இதுவும் வெற்றி காணாததால் தொடரவில்லை. 'தினபதி'யும், 'சிந்தாமணி'யும் தேசியப் பத்திரிகைள் என்றதனாலே தமிழ் முஸ்லீம் மக்களிடையே செல்வாக்கைப் பெற்றுள் ளன. 'சுதந்திரன்' ஆசிரியராகவிருந்த எஸ். டி. சிவநாயகம் ஆரம்ப காலத்திலிருந்து இவற்றின் ஆசிரியராகவிருக்கின் றார். இவற்றில் வரும் செய்திகள் சுவாரஸ்யமாக இருப்பதற்கு வேண்டிய வகையில் அமைக்கப்பட்டிருக்கும். சர்ச்சைகள், மோதல்கள் முக்கிய கவனத்தைப் பெறும். இதனால் வாசகர்கள் இச்செய்திகளை விவாதிப்பதுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



1966-ல் 'வீரகேசரி', 'மித்திரனை' ஆரம்பித்தது. மாலைப் பத்திரிகையாகத் தமிழ் நாட்டுப் பத்திரிகையான 'தினத் தந்தி'யின் பாணியில் இதனை வெளியிட்டு வருகின்றனர். 'மித்திரன்' வார மலரும் உண்டு. 'நவீன விஞ்ஞானி', 'ஜோதி' ஆகிய வெளியீடுகளை 'வீரகேசரி' நிறுவனம் ஆரம்பித்ததெனினும் இவை நீண்ட காலம் உயிர் வாழவில்லை.

டைம்ஸ் ஒவ் சிலோன் நிறுவனம் 1972 ல் 'ஈழமணி' என்ற தமிழ்த் தினசரியை ஆரம்பித்தது. ஆனால் மற்றைய தமிழ்ப் பத்திரிகைகளுடன் போட்டியிட முடியாது விரைவில் இது நின்றுவிட்டது.

www.padippakam.com

## அடிக்குறிப்புகள் :


1. Hulugalle H.A.J. — Don Stephen Senanayake — Page. 234.
2. Parliament of Ceylon — Lake House Publication — 1947.
3. Fergussons Directory — 1964.
4. தினகரன் ஞாயிறு வெளியீடுகள் — 1949, 50, 51.
5. தினகரன் நாளிதழ்கள் — 1956, 1957.
6. தினகரன் நாளிதழ்கள் — 1957.
7. டெயிலி நியூஸ், தினகரன் தலையகங்கள் — 1983 ஆகஸ்ட், செப்டம்பர்.
8. Hulugalle H.A.J. — British Governors of Ceylon — Page. 105.
9. மேற்படி — பக்கம் 206.
10. பாரதியார் பாடல்கள் — வானவில் பிரசுரம். பக்கம் 181
11. 68 New Law Reports — Page 282. Liyanage Vs the Queen.
12. தினகரன் வெள்ளிக்கிழமை இதழ்கள் — 1961.
13. புதுமை இலக்கியம் — வெள்ளிவிழா மலர், முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடு.
14. Vittachi Targie — Emergency 58 — Page 5.
15. Ceylon Observer — Issues of 1950.
16. Certificate of Audit Bureau of Circulation Bombay, 1968, 69, 70.
17. Thinapathy, Chintamany issues. 1969 onwards.


படிப்பகம்

www.padippakam.com

# பகுதி : ஆறு

## தினகரனும்,
## இலங்கைத் தமிழிலக்கிய வளர்ச்சியும்

படிப்பகம்

அரசியலும், பொருளாதார, கலாசாரத் துறைகளிலே மிகப்பெரிதான மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதி 1930-ஆம் ஆண்டுகளாகும். இந்தக் காலக்கட்டத்திலேதான் 'தினகரன்' பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்கள் மத்தியிலே சுதந்திர வேட்கையும், தேசிய, கலாசார பொருளாதாரத் துறைகளினை மேன்மையுறச் செய்ய வேண்டுமென்ற இலட்சியத் தாகமும் உருவாகிக் கொண்டிருந்த காலப் பகுதியிலே இந்த இலட்சியத்தினை வளர்த்துச் செல்கிற ஒரு நடவடிக்கையாக 1932-ல் இப்பத்திரிகை வெளியீடும் அமைந்தது. இந்தியாவில் அப்போது நிகழ்ந்து கொண்டிருந்த சுதந்திரப் போராட்ட இயக்கம் பல வகைகளில் இலங்கைக்கும் முன்னோடியாக விளங்கிற்று. இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன போன்ற இலங்கை அரசியல்வாதிகள் இந்திய தேசிய காங்கிரஸ் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

இத்தகைய காரணத்தினால் ஏனைய துறைகளின் பாதிப்பும் இலங்கை வெகுஜனத் தொடர்பு சாதனங்களினைப் பற்றிக் கொள்வது தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது.

ஒருவிதத்திலே தமிழில் வெளியாகிக் கொண்டிருந்த பாரததேவி, சுதேசமித்திரன் போன்ற இந்தியப் பத்திரிகைகள் 'தினகரன்' ஏட்டில் ஆரம்ப காலங்களிலே இதற்கு முன்னோடியாய் அமைந்தன. மொழிப் பிரயோகம், நடை, சொற்பிரயோகங்கள் என்பன தென்னிந்தியப் பத்திரிகைகளை அடியொற்றியே நின்றன. எப்படி இந்திய விடுதலை இயக்கத்தை தனது இலட்சியத்துக்கு ஆதார சக்தி என்று 'தினகரன்' உரிமையாளர் விஜேவர்த்தன

www.padippakam.com



கருதியிருந்தாரோ அதேபோலவே சுதந்திரப்போராட்டச் செய்திகள், அதையொட்டிய கட்டுரைகள், இலக்கிய ஆக்கங்கள் என்பனவற்றைக் கூடியவரை தனது பத்திரிகையிலே வெளியிடுவதிலும் உற்சாகம் காட்டி வந்தார். மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர், ஜவஹர்லால் நேரு, நேத்தாஜி, சுப்பிரமணிய பாரதியார் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் கட்டுரை, கவிதை, செய்திகள் என்பனவற்றை 'தினகரன்' மிகவும் அக்கறையோடும், முக்கியத்துவம் கொடுத்தும் 1932-1948 காலப் பகுதியிலே பிரசுரித்து வந்திருக்கிறது. இலங்கைச் செய்திகளிலும் பார்க்க இவை அதிக இடம் பெற்றன.

கட்டுரை இலக்கியத்தையே 'தினகரன்' தொடக்க காலத்திலே தனது முதன்மை வாய்ந்த வடிவமாகப் பயன்படுத்தி வந்தமைக்கு அப்போதிருந்த அரசியற் சூழ்நிலையே காரணமாகும். சர்வதேச அரசியல் நிலைமை, இந்திய விடுதலைப் போராட்டம், டொனமூர் ஆணைக்குழு யோசனைகளுக்கெதிராக இலங்கையர் காட்டிய வெறுப்புணர்ச்சி போன்ற அம்சங்களினைப் பிரதிபலிக்கவும் கூர்மையாக வெளிப்படுத்தவும் கட்டுரை வடிவமே ஏற்றதாக அமைந்திருந்தது. 23-1-1937ல் நடுப்பக்கக் கட்டுரையாக வெளியான 'ஹிட்லர் குறிப்பு' 26-1-37-இல் வெளியான 'மகாத்மா, காந்தி மனோவேதனை' ஆகிய இரு கட்டுரைகள், 'இந்திய அரசியல் நிலை' என்ற தொடரிலே வெளியான அரசியல் விமர்சனக் கட்டுரைகள் போன்றவை உரைநடை இலக்கியம் வளர்ச்சி கண்டபோக்கினைச் சுட்டிக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

கவிதைத் துறையிலும் இதே தாக்கங்கள் ஆரம்ப காலத்தில் 'தினகரனிலே' அழுத்தமாக ஏற்பட்டன. மகாத்மா காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்ட செய்தி இந்தியாவிற் போலவே இலங்கையிலும் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி மக்களை கவலையிலும் ஆழ்த்தியிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com



1932ல் நடந்த இச் சம்பவத்தாற் பாதிப்புற்ற புலவர் மு நல்லதம்பி இதையொட்டி பத்துப்பாடல்களை எழுதினார். இவை 'தினகர'னில் பிரசுரமாகியிருந்தது. ஒரு பாடலினை மட்டும் இங்கே எடுத்துக் காட்டலாம். 'உத்தமன் உண்ணா நோன்பு' என்ற தலையங்கத்தின் கீழே இக்கவிதைகளைப் புலவர் புனைந்திருந்தார்.

**தரவு கொச்சகம் :**

சீரார் திருவருளே திகழறிவாம் பேரொளியே
பாரெலா மாகி நின்ற பண்புடைய பழம் பொருளே
காராய் மழை பொழியும் கடவுளே காந்தியெனும்
பேராளரிவ் வுலகிற் பிறங்கநலம் பெய்வாயே. 1

**— புலவர் மு. நல்லதம்பி.**

கவிதைத் துறையில் தனக்கென ஒரு தனித்துவமான வழியினைக் கைக்கொண்டு வளர்ந்தது போல, இலங்கையின் புனைக்கதைத்துறை வளர்ச்சி பெறாமல் தொடக்க நிலையிலே இந்திய அம்சங்களையும் மொழி நடையினையுமே கொண்டிலங்கின, என்ற இலக்கிய விமர்சகர்கள் கூற்றிற்கு சிறந்த உதாரணங்களை 'தினகர'னில் தொடக்க கால இதழ்களிலே நாங்கள் கண்டறியலாம். 24 ஜூலை1937 ஆம் ஆண்டிலே, 'வழிப்போக்கன்' என்பவர் 'அனாதை அம்புஜம்' என்ற தொடர்கதையினை வரைந்தார். அதில் ஒரு பகுதி,

''ஆ கடவுளே! அனாதை ரக்ஷகா! ஆபத் பாந்தவா இப்படித்தானா! என் கதியாகவேண்டும்.'' என்று அம்புஜம் பலவாறாகக் கதறுகிறாள். இவளது சூழ்ச்சியை எல்லாம் அறிந்துகொண்டே இருகாலிகளும், இவளைக் கொன்று விடுவதாகவே பயமுறுத்திக்கொண்டே காரை ஓட்டிச் சென்றனர். காரும் பல ரோடுகளைத் தாண்டி கடைசியில் சமுத்திரக் கரையோரமாகச் செல்லலாயிற்று...''

www.padippakam.com



"இதற்கப்புறம் அதிகம் எழுதுவது அனாவசிய மானது. பிரிந்தவர் கூடினால் ஆனந்தத்தைச் சொல் லவும் வேண்டுமோ? இன்று அவர்களிருவரும் சதிபதி களாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டு விரக்தியுண்டான போதிலும் கதிர்காமக் கடவுளிடம் அவர்களுக்கு உள்ள நம்பிக்கை மட்டும் தினந்தோறும் அதிகரித்து வருதே யன்றி குறைவதில்லை. எல்லாம் தெய்வச் செயல்! சுபம்! சுபம்!! சுபம்!!!"[2]

இந்திய எழுத்தாளர்கள், இந்திய மொழிநடை என்ற அம்சங்களே கூடுதலாகத் 'தினகரன்' இதழிலே ஆரம்ப காலத்தில் இடம் பிடித்திருந்தன. மாயாவி,[3] வாசவன்[4] ஆகிய தமிழகத்தின் பிரபல நாவலாசிரியர்கள், திருச்சி ரசூல்[5] ஆகியோரது படைப்புகளே இடம் பெற்றிருந்த நிலைமை மெதுவாக மாறுவதை அவதானிக்க முடி கின்றது. இந்தியப் பேச்சுத் தமிழ் நடையிலே, இந்தியப் பின்னணியிலே எழுதப்பட்ட படைப்புகளோடு, இலங்கைப் பேச்சுத் தமிழ் நடையிலே எழுதப்பட்ட இலக் கியங்கள் பக்கத்திற்குப் பக்கமாக தோன்றுவதை 1949 காலப்பகுதியிலே தெளிவாகக் காணமுடிகிறது. பின் வருவன சிறந்த உதாரணங்கள்,

"ரகுவின் மீது தப்பில்லையம்மா... எங்காத்துப் புருஷருக்கு என்னமோ தன் கைகளாலே சமையல் செய்து சாப்பிட வேண்டுமென்றுதோன்றிவிட்டதாம். அதனால்தான் அவனைப் போகச்சொல்லி விட்டார் கள்..."

"கோபாலனின் புகழ், திருச்சி ஜில்லாவும்மாத்திர மல்ல ராஜதானி முழுவதுமே பரவிவிட்டது. அவனைத் தேடி நோயாளிகள் வந்தனர். ஆஸ்பத்திரி விஸ்தரிக் கப்பட்டது..."[6]

— சக்களத்தி (தொடர்கதை)

www.padippakam.com



இதே காலப்பகுதியில் ''சீதனக்காதை'' என்ற பெயரிலே பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் தொடர் கவிதை வெளியாகிற்று. பேச்சு வழக்கினை வைத்துதமிழ் மொழியிலே உள்ளடக்க உருவகச் சிறப்போடு கவிதையை எழுத முடியுமென்பதற்கு முன்னுதாரணமாக முயற்சி இதென்பதை எவருமே ஒப்புக்கொள்வார்கள். இப்போது வாசிக்கின்ற போதும் பிரமிப்பினையூட்டுகின்ற நயமும், யாப்பமைதியும் கொண்டவை இக்கவிதைகள். உதாரணமாகப் பின்வரும் அடிகளைக் காட்டலாம்.

''அக்கை பாறாத்தை அருமைத்தனையன்
தகவுறென் மருகன் சந்திரசேகரன்
ஆங்கிலப் பள்ளியில் ஆறாம் வகுப்புப்
படித்து முடித்துப்பாசும் பண்ணி
விட்டன ரென்று விளம்பினரத்தான்
ஈராண்டோர் வகை இழுத்துப் படித்தால்
எட்டாம் வகுப்புத் தட்டிலா முடித்து
பாசு பண்ணினால் கவுண்மேந்
துத்தியோகம் ஒன்றினை எடுப்பன்
கோழி மேச்சாலும் கோறணமேந்துக்கு
மேச்சுத் திரிதல் மேன்மையோ வன்றோ...''

— சீதனக்காதை. 7

இந்திய எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் பிரசுரிக்கின்ற அதேவேளையில் இலங்கை எழுத்தாளர்களையும் உற்சாகப்படுத்துகின்ற முயற்சியினைத் 'தினகரன்' மேற்கொண்டு வந்ததென்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். 1949—50 ஆண்டு காலப் பகுதியிலே இந்தியாவில் அறிஞர்களது ஆக்கங்களினைப் பிரசுரித்த அதே வேளை இலங்கை அறிஞர்களுக்கும் 'தினகரன்' முன்னுரிமை கொடுத்து வந்திருக்கிறது. 'போர்க்களங்கள்' என்ற பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளையின் கட்டுரை[8], 'தமிழன் கண்ட சமுதாய வாழ்வு' என்ற அ. மு. பரம

படிப்பகம்

www.padippakam.com



சிவானந்தம் கட்டுரை[9], 'தமிழ் நடை' என்ற பேராசிரியர் மு. வரதராசனார் கட்டுரை[10], 'கருத்தலைகளில் மிதக்கின்ற கலைஞர்கள் சிருஷ்டிக்கும் இலக்கியங்கள்' என்ற தேசிகனின் விமர்சனம்[11], 'உபவாசமிருந்து உயிர் நீத்தல்',[12]ஏ என்ற மயிலை சீனி வேங்கடசாமி கட்டுரைகள் வெளியான இக்காலப் பகுதியிலேயே 'கைலாச வாகனம் கற்பிக்கும் பூலோக உண்மை' என்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் கட்டுரை[12], 'தமிழ்ப்பள்ளிகளில் தமிழ் படும்பாடு' என்ற சோ. இளமுருகன் கட்டுரை[13], 'இலங்கை வளம்' என்ற சோமசுந்தரப் புலவர் கவிதை[14], 'மக்கள் மனதைப் பண்படுத்துவது மாசில்லா இலக்கியம்' என்ற பேராசிரியர் வி. செல்வநாயகம்[15] கட்டுரையும் பிரசுரமாயின என்பது கவனிக்கப்பட வேண்டியது.

இக்காலப் பகுதியில் கலாசாரப் போக்கினை அனுசரித்தே 'தினகரன்' இத்தகைய நிலைப்பாட்டினைக் கைக்கொண்டிருந்தது என்ற உண்மை சொல்லாமலே விளங்கத்தக்கது. தமிழ்க் கலாசார இயக்கத்தை, தமிழகத்து அறிஞர்களை முன்னோடியாக வைத்தே மேற்கொள்ள வேண்டுமென்ற கருதுகோளினை அப்போதைய, சமூகச் செல்வாக்குள்ள இலங்கை அறிஞர்கள் சிலர் கொண்டிருந்தனர். பின்னர் அதுவே தலைகீழ் மாற்றங் கண்டதாயினும், இத்தகைய போக்கு நிலவியதென்பது வரலாற்று உண்மையாகும். பின்னர் இந்தப்போக்கை திசை திருப்பிவிடும் முயற்சிகளையும் 'தினகர'னே மேற்கொண்டதென்பதும் இங்கு மனங் கொள்ளத்தக்கதாகும்.

'கஞைன் தியாகம்' 'பித்தன்', சிறுகதை[16], வி. கே. பி. நாதனின் தொடர்கதையான[17] 'கண்டி நாட்டுக் கபட நாடகம்', புதுமைலோலனின் 'முதற் சந்திப்பு,[18], பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் 'இருவரும் ஒருவர்'[19] கட்டுரையோடு, 'பொதுநலம் பேசித் திரியும்தன்னலவாதிகள்' என்ற மு. வரதராசனார்

www.padippakam.com



கட்டுரை,[20] 'திரௌபதியின் திருமணம்' என்ற ச. கு. கணபதி ஐயர் கட்டுரையும்[21], சோமசுந்தரப் புலவர் அவர்களின் 'மரதன் அஞ்சலோட்டம்'[22] கொத்த மங்கலம் சுப்புவின் 'பானையைக் கும்பிட்டு வாழ்ந்திடுவோம்,'[23] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் எங்கும் உள்ள இறைவனே'[24] கவிதைகளும், 'தினகர'னின் இக்காலத்துக் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும். ஆயினும் 1950-ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே. ஈழத்துஇலக்கியப் பார்வையானது 'தினகரன்' இதழ்களிலே முக்கியத்துவம் பெற்றுவரத் தொடங்குகின்றது.

இலண்டன் சென்று கலாநிதிப் பட்டத்துடன் திரும்பிய சு. வித்தியானந்தன் தமது இலண்டன் அனுபவக் கட்டுரைகளிலே, பயணக் கட்டுரை இலக்கியம் எப்படி அமையவேண்டும் என்ற இலக்கணத்தை வெகு சிறப்பாகவே கையாண்டு எழுதினார். பின்னர் பயணக் கட்டுரை எழுதிய பல எழுத்தாளர்களுக்கு இக்கட்டுரைத் தொடர் சிறந்த வழிகாட்டியாக அமைந்தது. 'இன்பமுடன் வாழ்வோமிந்த நாட்டிலே என்னும் எண்ணம்'[25] 'வாக்குரிமையை விலை கொடுத்துப் பறிக்கும் வம்பரில்லை',[26] என்ற கட்டுரைகள் பயண அனுபவங்களை மட்டுமல்லாது, எவ்விதம் எளிதான உரைநடையில் பயண அனுபலங்களை சுவாரஸ்யமாகச் சொல்லமுடியும் என்பதற்கு உதாரணங்களாக அக்காலத்தில் விளங்கின.

'கைப்பச்சை காட்டவும், சூத்திருக்கவும் வேண்டாம்' என்ற தலையங்கத்திலே கலாநிதி வித்தியானந்தன் எழுதிய இலண்டன் பயண அனுபவக் கட்டுரையில் ஒரு பகுதியை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

''...அடுத்தபடியாக மேனாட்டுப் பொலிசுக்காரர் (POLICE) தமது வேலையைத் திறமையாக யாவரும் போற்றும் முறையில் நடத்துவதைக் கூறுதல் மிகையாகாது நான் லண்டனுக்குச் சென்ற சிலநாட்களில் சில

படிப்பகம்

www.padippakam.com



இடங்களுக்குப் போகும் வழி கண்டுபிடிப்பது மிகவும் பொறுப்பாகவிருந்தது. இலங்கையில் வழிகாட்டுவதில் பொலிசுக்காரர் எவ்வளவு பேர் பெற்றிருக்கிறார்கள் என்பதை அனுபவ வாயிலாக அறிந்த நான் முதலில் அவர்களிடம் விவரம் கேட்பதற்கு தயங்கியதுண்டு. என்றாலும் என்ன செய்வது? ''பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளியமரத்தில் ஏறித்தானே ஆகவேண்டும்'' என்று சமாதானம் கூறிக்கொண்டு அவர்களை அடைந்து வழி கேட்பதுண்டு. அவர்களுக்கு அதிகமாக எல்லா இடங்களும் தெரியும். தெரியாவிட்டால் லண்டன் வழி காட்டி நூலைக் 'கோட்பைக்குள்' (COAT POCKET) இருந்து எடுத்துப் போவதற்குரிய வழியைக் காட்டு வார்கள், கிட்டவாக இருந்தால் போவதற்கு உடன் வருவார்கள். இப்படி இலங்கையில் நடக்குமா? யாழ்ப் பாணத்தில் பெரியகடை முச்சந்தியில் நிற்கும் பொலிசுக் காரரை ஆனைக் கோட்டைக்கு வழி கேட்டால் கள்ளியங் காட்டுக்குப் போகும் வழியைக் காட்டுவார். முதலாவதாக அவருக்கே வழி தெரியாது.[27]

ஐம்பதுகளிலேயே இலங்கையின் உரைநடை இலக்கி யத்துறையினில் பெருமாற்றம் ஒன்றினை ஏற்படுத்து வதிலே 'தினகரன்' முன்னிடத்தைப் பெறலாயிற்று. என்பதனை அவ்விதழிலே வெளியாகிக் கொண்டிருந்த ஆசிரிய தலையங்கங்கள், செய்தி விவரணங்கள், கட்டுரைகள் என்பன தெளிவாக நிருபித்தன. எடுத்துக் காட்டிற்கு சில கட்டுரைகள் :

1. தமிழில் முதல் முதலாக வெளிவந்த கலைக் களஞ்சியம்.
—பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை.[28]
2. முருகனென்னும் நாமம் முருகனாம் முதல்வனுக்கு கிட்டியதேன்?
—நவாலியூர் சோமசுந்தரப்புலவர்.[29]

www.padippakam.com



3. புகையிலை மீது புலவர் கொண்ட மோகம்.
—நடராசா.[30]
4. பெண்களுக்கு பெருந்தன்மை அளிக்கும் கற்பு.
—மகாவித்வான். சி. கணேசையர்.[31]
5. நாட்டுப்பாடல்கள் செறிந்திலங்கும்...
—பேராசிரியர் சு. வித்தியானந்தன்.[32]
6. சைவசமயத்தாரின் தனிப்பெரும் பொக்கிஷம்.
—வித்துவான் வேந்தனார்.[33]
7. ஞானப்பள்ளு
—நடராசா [34]
8. வாழையும் புலவனும்.
—சோமசுந்தரப் புலவர்.[35]
9. வன்னிநாட்டை அரசு புரிந்த வனிதையர்.
—பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை.[36]

பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, வித்துவான். வேந்தனார், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், சோ. இளமுருகன், எப். எக்ஸ். ஸீ. நடராசா போன்றோர் இக்கால கட்டத்திலே எழுதிய கட்டுரைகள் விஷயச் செறிவு கொண்டனவாக மட்டும் அமையாது உரைநடை இலக்கியத்துறையிலேயும் புதிய பரிமாணமொன்றினையும் தோற்றுவித்தன. எளிமை, ஆழம், தெளிந்த சிந்தனை, புதியன புகுத்துதல் என்பன இக்கட்டுரைகளின் பண்புகளாகவமைந்தன.

1940ம் ஆண்டுகளிலே தமிழ்ப் பத்திரிகைத் துறையிலே முன்னேற்றமான கொள்கைகளையும், தேசியத் தன்மைகளையும் முன்னெடுத்துச் செல்வதிலே 'தினகரன்' எத்தகைய பாத்திரம்வகித்தது என்பதனை அறிய வேண்டுமானால் அக்காலத்து வெளியான ஏனைய தேசியத் தினசரி ஒன்றோடு ஒப்பு நோக்கி ஆராய்வதே பொருத்த

www.padippakam.com



மானதாகும். இவ்விதத்திலே அக்காலத்து வெளிவந்த 'வீரகேசரி' வார இதழோடு 'தினகர'னை ஒப்பிட்டு ஆய்வு செய்வது பொருத்தமுடையதாகும்.

**'வீரகேசரி' 5-11-50 இதழ் :**

விஷய உள்ளடக்கம் :

1. முதற்பக்கம்,
   செய்திகள்.
2. இரண்டு, மூன்றாம் பக்கங்கள்.
   விளம்பரங்கள்
   'ஐம்புலிங்கம்' தொடர்கதை. கே. வி. எஸ். வாஸ் எழுதியது.
3. நான்காம் பக்கம்.
   திபெத் விவகாரம்.
   ½பக்க விளம்பரம், 'கிங்ஸ்லியில்,ரத்னகுமார்'
4. ஐந்தாம் பக்கம்.
   தலையங்கம் — 1கலம்.
   பெர்னாட்ஷோ தத்துவ சிந்தனைக்கட்டுரை.
5. ஆறாம் பக்கம்.
   சோதிடம் — ½பக்க பல விளம்பரங்கள்.
6. ஏழாம் பக்கம்.
   புத்தக அரங்கம் — ½ பக்க சினிமா விளம்பரம்.
7. எட்டாம் பக்கம்.
   முழுப்பக்க சினிமா விளம்பரம்.
8. ஒன்பதாம் பக்கம்.
   'அந்தக் கடிதம்' — சிறுகதை.
   ½ பக்க சினிமா விளம்பரம்.
9. பத்தாம் பக்கம்.
   டார்ஜான் தொடர்கதை. (மொழிபெயர்ப்பு)

படிப்பகம்

www.padippakam.com



10. பதினோராம் பக்கம்.
'அந்தக் கடிதம்' (சிறுகதை)
(தொடர்ச்சி)
½ பக்க விளம்பரம்.

11. பன்னிரெண்டாம் பக்கம்.
— வைத்தியப் பகுதி ½ பக்கம்.
— கவிமணி கட்டுரை ½ பக்கம்.

பன்னிரெண்டு பக்கங்களைக் கொண்ட 'வீரகேசரி'யின் உள்ளடக்கத்தோடு இனி 'தினகரனை' வைத்து ஆராய்வோம்.

**'தினகரன்' 5-11-50 வார இதழ்**
விஷய உள்ளடக்கம் :

1. முதற் பக்கம்.
செய்திகள்.

2. இரண்டாம் பக்கம்.
'அந்தத் தீபாவளி' (சிறுகதை),
ஜோதிடம், ½ பக்க விளம்பரம்.

3. மூன்றாம் பக்கம்.
பேராசிரியர் சு. வித்தியானந்தன் கட்டுரை.
தீபாவளி கவிதை.

4. நான்காம் பக்கம்.
மட்டக்களப்புத் தமிழ் வளம்.

5. ஐந்தாம் பக்கம்.
செய்திகள்.

6. ஆறாம் பக்கம்.
பாவலர் பகுதி / சிறுகதை.

படிப்பகம்

www.padippakam.com



7. ஏழாம் பக்கம்.
கபட நாடகம், லே. க. ப. நாதன் எழுதிய தொடர்கதை—விக்கிரமராசசிங்கனின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டது. 'எல்லோராலும் எழுத முடியுமா?' –– நடைச்சித்திரம். சிறுகதை — பெரிய கோபுரம்.

8. எட்டாம் பக்கம்.
அந்தத் தீபாவளி (சிறுகதைத் தொடர்ச்சி)
— சிறு விளம்பரம்.

எட்டுப் பக்கங்களைக் கொண்ட 'தினகரன்' இதழிலே தேசியத் தன்மையையும் தேசிய இலக்கியப் பற்றையும், விஷயச் செழுமையையும் இதன்மூலம் நாங்கள் தெளிவாகவே கண்டறிய முடியும். இத்தகையதொரு புதிய கண்ணோட்டமும், அரசியல் போக்குகளும் சேர்ந்தே 1956 காலப் பகுதியிற் புதியதொரு இலக்கியக் கண்ணோட்ட சிந்தனையினைத் தமிழ் அறிவாளிகள், இலக்கிய ஆர்வலர்கள் மத்தியிலே தோற்றங்கொள்ள வைத்தன என்பதனை நாங்கள் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இத்தோற்றுவாய்க்கு 'தினகர'னின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென்பதை எவரும் மறக்க மாட்டார்கள்.

1956ம் ஆண்டுக்காலப் பகுதியிலே அரசியல் துறையி யிலேற்பட்ட மாற்றமானது எவ்விதம் தமிழ் பேசும் மக்களின் சிந்தனைப் போக்கிலேயும் திருப்பங்களினை ஏற்படுத்தியுள்ளது என்பது ஏற்கனவே ஆராயப்பட்டது. தமிழ்ப்பேசும் மக்களிடையே இன உணர்ச்சியானது தீவிர எழுச்சி கண்டது போலவே தமிழிலக்கியத் துறையிலும் புதிய பார்வைகள் ஏற்படலாயின. இன எழுச்சிக் கவிதைகள், தமிழர் பெருமை கூறும் கட்டுரைகள் என்பன இக்காலத்திலே பெருமளவு எழுதப்படலாயின. மக்களில் இந்த உரிமையுணர்வு எண்ண ஓவியங்களைத் 'தினகர'

படிப்பகம்

www.padippakam.com



னும் ஏற்றுப் பிரசுரித்தது. சிறந்த களமாயும், இலக்கியத் தளமாயும் இவ்வுணர்வு படைத்தோருக்கு 'தினகரன்' விளங்கியது என்பதனை இக்காலத்து வெளியான 'தினகரன்' இதழ்கள் மெய்ப்பிப்பவையாக உள்ளன. இன எழுச்சியும், பெருமிதமும், போராட்ட உணர்வுகளும் கலந்த மக்களின் மனோநிலையினை உணர்த்துவது போல 'தினகரன்' பல தலையங்கங்களையே எழுதிற்று என்பது இங்கே குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதாகும். அதற்குச் சிறந்த உதாரணமாகப் பின்வரும் தலையங்கத்தினைக் குறிப்பிடலாம்.

**என்றுதானே?**

தொன்மை மிக்க இந்த தமிழ்மொழி பற்றிய வரலாறு ஒன்று இன்று உண்டா? அங்குமிங்குமாக உள்ள குறிப்புகளே யன்றி நிறைவுள்ள, தொடர் புள்ள தமிழ்மொழி வரலாறோ தமிழன் வரலாறோ இல்லை; இதுவரை எவரும் அத்தகைய முயற்சியில் ஈடுபடவும் இல்லை.

..........

தமிழன் வரலாறு இந்நிலையில் இருப்ப, இலங் கைத் தமிழன் வரலாறு எந்நிலையில் இருக்கிறது? அதுவும் அதேதான்!

ஈழத் தமிழன் வரலாறு என்று கூறக்கூடிய நூல் எதுவும் இன்று இல்லை.

யாழ்ப்பாணச் சரிதங்கள் என்ற பெயருடைய பல நூல்கள் உண்டு.

பெரும்பாலும் அவை கட்டுக்கதைகளைக் கொண்டவைகளாகவே காணப்படுகின்றனவேயன்றி அணுகி ஆராய்ந்து கண்ட முடிவுகளைக்கொண்டவை களாக இல்லை.

www.padippakam.com



சிறந்த முறையில் ஈழத் தமிழர் வரலாறு எழுதப் படும் நாள் என்று தானோ? [37]

உலக, இலங்கை நிலைமைகள் குறித்து எழுதப்பட்டு வந்த 'வானம்பாடி' என்ற அரசியல் விமர்சனப் பகுதியும் கூடிய அளவிற்கு தமிழ் இன உணர்வினைப் புலப்படுத்தி நிற்ப தாகவே எழுதப்பட்டு வந்தது.

1956, ஜூலை மாதத்திலிருந்து 'தினகரன்' தமிழுணர்ச் சிக் கவிஞர்களின் பாடல்களைத் தொடர்ந்து பிரசுரித்து வரலாயிற்று. 'இன்பத்தமிழ் மொழி எங்களுயிர்[38] 'தமிழ் மொழி வாழச் செய்வோம்'[39] 'திருமலைக்குச் செல்லு வோம்' என்ற[40] கவிதைகள் வெளிவந்ததோடு, மேலும் பல புதிய கவிஞர்கள் வேகமும், வீச்சும் நிறைந்த கவிதை களோடு 'தினகரன்' களத்திற்கு வந்து சேர்ந்தனர். இன எழுச்சி, தமிழ் மொழிப் பெருமை, அரசியலில் தமிழுக்கு உரிய இடம் கோரி நின்ற இயக்கத்தின் போக்குகளிற்கு வாழ்த்து என்பனவற்றைப் புலப்படுத்தி நின்ற இக்கவி தைகள், இசைப் பாடல்களாக ஊர்வலங்களிலே பாடப் பட்ட தன் மூலமாக பெருமளவு மக்களைச் சென்றடைந்து மக்கள் எழுச்சி இலக்கியங்களாகப் பரிணமித்தன. இதே விதமானதொரு இலக்கிய எழுச்சியை இலங்கையிலுள்ள வேறு எந்த ஒரு தேசியப் பத்திரிகையாலும் இதுவரை சாதிக்கமுடியவில்லை என்ற வரலாற்று உண்மையினை எடுத்துக் காட்டுவதின் மூலமாக 'தினகர'னின் பாத்திரத் தினை உணர்த்த முடியும். எவ்விதம் மக்களின் அப் போதைய எழுச்சியினை கலைஞர்கள் உள்ளது உள்ள படியே பிரதிபலிப்பதற்கு 'தினகரன்' களம் அமைத்துக் கொடுத்தது என்பதனை அறிந்து கொள்வதற்கு 'திருமலைக்கு செல்லுவோம்' என்ற தலையங்கத்திலே பண்டிதர் சோ. இளமுருகனார் எழுதிய கவிதை உதவியா யிருக்கும்.

www.padippakam.com



திருமலைக்குச் செல்லுவோம்
சிறுமையடிமை வெல்லுவோம்

ஃ ஃ

எங்கள் அன்னை எங்கள் அன்னை
எழில் மிகுந்த செந்தமிழ்
பொங்கும் ஈழநாட்டில் வாழப்
புதிய கோயில் கட்டவே....

(திருமலைக்கு)

ஃ ஃ

அடிமையில்லை அடிமையில்லை
ஆண்டானடிமையில்லையே
மடிமை கொண்டு வாழ்வோமாயின்
மானங்கப்பலேறுமே.

(திருமலைக்கு)

ஃ ஃ

எங்கள் பூமி எங்களாட்சி
எவர்க்கு முரிமையில்லையே
பொங்கு கழனியடவி தோறும்
போயிருந்து வாழ்வமே...

(திருமலைக்கு)

ஃ ஃ

ஆதித்தமிழர் ஈழநாட்டில்
அரசிழந்த அகதியோ?
சாதியுரிமைச் சங்கநாதம்
தமிழர் காதிலோதுவோம்...

(திருமலைக்கு)

படிப்பகம்

www.padippakam.com



இன்னொரு கவிதை சத்தியாக்கிரக இயக்கம் வலுப் பெற்ற காலத்திலே பல கவிஞர்கள் உணர்ச்சிமயமான கவிதைகள் பாடி தினகரன் மூலம் மக்களிடையே பிரபல்யம் பெற்றனர். இது 'அம்பி' என்ற புனைபெயரில் எழுதுகிற இ. அம்பிகைபாகனின் கவிதை.

குண்டர்கள் சேர்ந்து கூறிட்டுப் போட்டாலும்
மண்டை பிளந்து மண்ணிற் புரண்டாலும்
பண்டைத் தமிழ் வீரப்பண்புடனே நீ இன்று
தொண்டு செய்ய முன் சென்றால்
தோல்வி இல்லை! வெற்றியுண்டு.[42]

கவிதை ஒருபுறம் இப்படி வெளியாக இதே ஆண்டில் 'சூரியன்' என்பவரது 'தமிழக வரலாறு' கட்டுரைத் தொடரும் வெளியாகிற்று. பண்டைத்தமிழர் பெருமை, பண்பாடு, வீரம், எழுச்சிகள் ஆகியவற்றை இக்காலத்துத் தமிழருக்கு உணர்த்துவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாயிருந்தது. உணர்ச்சியைத் தூண்டும் விதத்திலே துள்ளித் தெறிக்கும் தமிழிலே இளையதலை முறையினருக் கான அநேக கட்டுரைகள் தமிழ் அறிஞர்களாலும், சிந்தனையாளர்களாலும் இக்கால கட்டத்திலே எழுதப் பட்டு வந்தன. எடுத்துக்காட்டாக 'தன்னேர் இல்லாததமிழ்' என்ற தலையங்கத்திலே[42] வித்துவான் க. வேந்தனார் எழு திய கட்டுரைத் தொடரினைக் குறிப்பிடலாம். இக் கட்ரைத்தொடர் 'தினகரன்' வார இதழிலே வெளிவந்து முடிந்த உடனேயே நூலுருப் பெற்று வெளியிடப்பட்டது. இது இதன் உள்ளடக்கப் பரப்பை விளக்கப்போவது மானதாக உள்ளது.[43]

1950ல் இன எழுச்சி தொடர்பான எண்ணங் களினைப் பிரதிபலித்த 'தினகரன்' தேசிய இலக்கியக் கோட்பாட்டினையும் தனது பிரதான இயல்பாகக் கொண்டிலங்கத்தொடங்கிற்று. இலங்கையிலே வாழுகின்ற

www.padippakam.com



தமிழ் பேசும் மக்களின் மனோ உணர்வுகளை, வாழ்வு முறைகளை, சம்பிரதாயங்களை, அடிப்படை இயல்பு களினை அவர்களது பேச்சுமொழி, வழக்கு, பிரதேச உணர்வுகளின் ஊடகத்திற்கு ஊடாகவே வெளியிட வேண்டுமென்ற கருத்துருவம், ஒரு செழுமையான வடிவத் தினைப்பெறுவதற்கு 'தினகரன்' இதழ் முன்னோடியாய் நின்று உதவிற்று அந்தச் சிந்தனைக்கருத்தினைக் கலா சாரத்துறையிலே புகுத்துவதிலே தன்னால் இயன்றளவு பங்கினை ஏற்று, இக்கருத்தினை அடிநாதமாகக் கொண்டு எழுதிய படைப்பாளிகளின் ஆக்கங்களை முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிப்பதிலே தலைமைத்துவ நிலையை வகித்து வரலாயிற்று. இதன் மூலம் புனைகதை இலக்கியத் துறையில் மகத்தான மாறுதல் சாத்தியமாயிற்று.

இளங்கீரன், செ. கணேசலிங்கன், கே. டானியல், எஸ். பொன்னுத்துரை, என். கே. ரகுநாதன், தாழையடி சபாரெத்தினம், வரதர், சொக்கன், டொமினிக் ஜீவா, சிற்பி, இலங்கையர்கோன், அருள்செல்வநாயகம், வ. அ. இராசரெத்தினம், அ. ந. கந்தசாமி, நீர்வைப் பொன்னையன், போன்ற படைப்பாளிகளும், முருகையன், சில்லையூர். எஸ். செல்வராஜன், மகாகவி,அம்பி, போன்ற கவிஞர்களும், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, கனக. செந்திநாதன் முதலான விமர்சகர்களும், 'தேசிய இலக்கியம்' என்ற கோட்பாட்டினைத் தழுவி, 'தினகரனிலே' அடிக்கடி எழுதி வரலாயினர். இவர்களின் எழுத்திலேற்பட்ட கவர்ச்சியும், 'தினகரன்' அளித்த உற்சாகமும் சேர்த்து புதிய தலைமுறை எழுத்தாளர் அணி ஒன்று உருவாக வழி வகுத்ததென்பது இலக்கிய ஆய்வாளர் களின் ஒருமித்த அபிப்பிராயமாகும். இதற்குப் பின்வரும் அட்டவணை தகுந்த ஆதாரமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



**1956 ஜனவரி இதழில், இலக்கிய- படைப்பிலக்கிய அம்சங்கள் :**

1. 15.1.56 — 'மலர்ப்பலி'
   —எஸ். பொன்னுத்துரை.

   22.1.56 — 'வள்ளி புறப்பட்டாள்'
   —செ. கணேசலிங்கன்.

   29.1.56 — 'விதியின் விளையாட்டு'
   —'சிற்பி'

2. ஜனவரி இதழிலேயே வேந்தனாரின் தொடர் கவிதை.

3. புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை எழுதிய 'வள்ளுவம்'.

4. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் தொடர் கட்டுரையான, கம்பராமாயணக் காட்சிகள்.

5. இளங்கீரன் எழுதிய 'சொர்க்கம் எங்கே?' தொடர் கதை தின இதழில் தொடர்.

6. ம. முகமது உவைஸ் தொடர் கட்டுரை.

7. பேராசிரியர் வித்தியானந்தன் கட்டுரை.

தமிழ் வளர்ப்பதிலே முஸ்லீம்களுக்குள்ள பெரும் பங்களிப்பினை 'தினகரன்' என்றென்றுமே வற்புறுத்தி வந்திருக்கிறது. இதற்கு ம. முகமது உவைஸ் அவர்களின் பல கட்டுரைத் தொடர்களே சிறந்த உதாரணமாகும். சு. சுபில் ஈமான் என்ற இஸ்லாமிய அடிப்படைக் கொள் கைகளை விளக்கும் நூலினைப் பற்றி 'தினகரனில்' அவர் நீண்டதொரு பயன்வாய்ந்த கட்டுரையினை எழுதினார்.[44] பின்னரும் முஸ்லீம் மக்களின் இலக்கியம், நாட்டுப் பாடல்கள், வாழ்வுமுறை பற்றிய படைப்புகள் என்பன நிறையவே 'தினகரனி'ல் வெளிவரலாயின: அதைப் பிறி தோரிடத்திலே காணலாம்.



படிப்பகம்

www.padippakam.com



பாரதியைப் பற்றியும், பாரதி இலக்கியம் பற்றியும் புதிய கண்ணோட்டத்தையும், விமர்சனங்களையும் முன் வைப்பதிலே 'தினகரன்' குறிப்பிடத்தக்க பங்கினை அன்றி லிருந்து இன்றுவரை வகிதது வந்திருக்கிறது. உதாரணத் திற்கு 1956ம் ஆண்டு பாரதி தினவேளையிலே வந்த ஆசிரிய தலையங்கத்தினைக் கூறலாம்.

**மகாகவி பாரதி :**

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
எங்கள் தந்தையர் நாடன்ற போதினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே'
வரை தாய் மொழியாம் தமிழ் மொழியின்
சிறப்பை இதனிலும் சிறப்பாகக் கூறமுடியுமா?
இதைக் கேட்கும், பாடும் எவரும்
தாய் மொழியாம் தமிழ் மொழியினை
மறுத்தல் முடியுமா?[44]*

இதுபோலவேபாரதி ஆய்வாளரான தொ.மு. சிதம்பர ரகுநாதனின் 'பாரதியின் பாரதம்' என்ற கட்டுரைத் தொடரும் 'தினகர'னில் வெளியாகிப்[45] பாரதி அன்பர் களின் கவனிப்பையும் கணிப்பினையும் பெற்றது. இதை அடியொற்றி மேலும் பல அறிஞர்களின் கருத்துக்களைத் 'தினகரன்' வெளியிட்டு அதன் மூலமாக 'பாரதி இயலுக்கு' இலங்கையின் செழுமையான பங்களிப்புக் கிடைப்பதற்கு வழிவகுத்தது. இதே காலப் பகுதியில் தேசிய இயக்கத்துடன் இலக்கியம் இணைந்து கலந்து செழிக்க வேண்டும்; எழுத்தாளர்களுக்கும் சமூகத்துக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுவது அவசியம், அரசியல் பொது ஸ்தாபனங்கள் இலக்கியத் துறையிலும் கவனம் செலுத்த வேண்டும் போன்ற கருத்துக்கள் 'தினகரன்' கட்டுரைகளிலே வற்புறுத்தப்பட்டு வரலாயின.

www.padippakam.com



இந்த அம்சங்களின் வளர்ச்சியினை 'தினகரன்' 1958ம் ஆண்டு இதழ்களிலே வெகு ஆழமாக அவதானிக்க முடியும். தேசிய இலக்கியமாக உருவெடுத்த ஈழத்து இலக்கியம், உலக இலக்கியங்களோடு தன்னைப் பரிச்சயம் செய்து கொள்ள வேண்டுமென்ற சிந்தனை உருவாயிற்று. உலகத்து சிறந்த நாவலாசிரியர்கள், அவர்கள் படைத்த இலக்கியங்கள் பற்றி 'தினகரன்' இதழ்களில் எழுத்தாளர்கள் ஆய்வு செய்தனர். மார்க்சிம் கோர்க்கி, ஜேம்ஸ் ஜொய்ஸ், ஏனெஸ்ட் ஹெமிங்வே, எமிலிஜோலா, தகழி சிவசங்கரப்பிள்ளை, சரத்சந்திரர், வெர்ஜினியா வுல்ப் போன்ற பிறமொழி எழுத்தாளர் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட ஒரே ஒரு பத்திரிகை அறுபது காலப்பகுதியிலே தினகரனே என்பது எவராலுமே மறுக்க முடியாத உண்மையாகும். இது பிற மொழி இலக்கியங்கள் பால் ஈழத்து வாசகர்களுக்கு அக்கறையைத் தோற்றுவித்தன.

அறுபதுகளில் இது போலவே பல எழுத்தாளர்களின் கூட்டு முயற்சியால் 'வண்ணமலர்' என்ற நாவல் வெளியாயிற்று. இதுவும் தமிழிலக்கியத் துறைக்கு புதியதொரு அறிமுகமென்றே கொள்ள வேண்டும். ஈழத்தில் பிரபல்யம் வாய்ந்த எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு ஒரு அத்தியாய வீதமாக இந்த நாவலினை எழுதி முடித்தார்கள்.

இக்காலப் பகுதியிலே நாவல் இலக்கியத் துறை புதிய பரிமாணத்தையும், பொலிவினையும் பெற்றது என்றே கூற வேண்டும், ஈழத்தில் தனித்தன்மை வாய்ந்த நாவல், இலக்கியம், தமிழகத்து நாவல் வளர்ச்சிக்கு உரிய திசையினைக் காண்பிக்கக் கூடிய அளவிற்கு செழிப்பான உள்ளடக்கத்தையும், வலுவும் அழகும் நிறைந்த உருவத்தையும் பெற்றிருந்தது. தினகரனிலே வெளியான அ. ந. கந்தசாமியின் 'மனக்கண்', இளங்கீரனின் 'இங்கிருந்து எங்கே?.' 'நீதியே நீ கேள்?' ஆகிய நாவல்களை

படிப்பகம்

www.padippakam.com



இந்தக் கூற்றிற்கு சிறந்த ஆதாரங்களாகக் கூறலாம். வாசகர்கள் மத்தியிலே பெரும் ஆர்வத்தையும் பரபரப்பையும் தூண்டிய நாவல்கள் இவையாகும்.

வெகுஜனத் தொடர்பு சாதனங்களிலே குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்ற பத்திரிகைகள், மக்களை நேரே அணுக விரும்புவது இயற்கையே. அவ்விதமாக 1960 சித்திரையில் 'தினகரன்' சிறப்பான முறையிலே தமிழ் விழா ஒன்றினை நடத்தியது. சான்றோரும், கலைஞரும், ஆர்வலரும் இவ்விழாவிற்குத் திரண்டு வந்தனர். கல்விமான்களும், கலைஞரும், படைப்பாளிகளும் இவ்விழாவினிலே கௌரவம் பெற்றார்கள். இதையொட்டி ஒரு சிறப்பு மலரும் வெளியிடப் பெற்றது. இவ்விதழை நுணுக்கமாக்ப் பார்ப்போமாயின் தமிழரின் சமுதாய பண்பாட்டுத் துறையிலே 'தினகரன்' காட்டிய ஆர்வத்தினையும், அக்கறையையும் கண்டுகொள்ள முடியும்.

'தினகரன்' தமிழ் விழா மலர் பின்வரும் அம்சங்களினைக் கொண்டிருந்தது.

**1) கவிதைகள் :**

1. 'வெல்க தமிழ், வெல்க தமிழர்' — பாரதிதாசன்.
2. 'கலங்குவதேன் தமிழரசி' — சாரண பாஸ்கரன்.
3 'எண்ணுங்கால்'—'திருச்சிற்றம்பலக் கவிராயர்.'
4. முந்து தமிழுக்கு முஸ்லீம்கள் தொண்டு'.
   ம. கா. மு. காதீர் முஹ்யித்தீன் மரைக்காயர்.
5. 'முயற்சி வெல்க'! — 'புரட்சிக் கமால்'.
6. 'புழுதிக்குள்' — முருகையன்'.
7. 'ஒன்றும் நினைவில்லையாம்' — 'செந்தாமரை'.
8. 'தமிழ் விழாத் தூது' — 'ஆசிநாத பண்டிதர்'.
9. 'நெஞ்சைக் கிழித்துவிடு' — 'சொக்கன்'.

www.padippakam.com



10. 'பிறப்பு' — 'நீலாவணன்'.
11. 'பிஞ்சுக் கீதம்' — 'குரு-பரன்'.
12. 'நானூறு தொல்லை நமக்கு' — 'மகாகவி'.
13. 'முழங்குக முரசே' — 'பரமஹம்ஸதாஸன்'.

2) **சிறுகதைகள் :**

1. 'அனாதை' — 'இலங்கையர்கோன்'.
2. 'அபேதவாதி' — வ. அ. இராசரத்தினம்.
3. 'ஊரறியாச் செய்தி' — அ. ஸ. அப்துஸ்ஸமது.
4. 'அக்கா' — அ. முத்துலிங்கம்.

3) **நாடகம் :**

'தினை விதைத்தவர்கள்'—எஸ். பொன்னுத் துரை.

4) **கட்டுரைகள் :**

1. முருக வழிபாடு—பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை.
2. மொழி ஆராய்ச்சி—தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.
3. ஈழத்திலே தமிழ்க் கல்வியும், பல்கலைக் கழகமும் — சு. வித்தியானந்தன்.
4. சைவம் வளர வழிகள்—மா. இராச மாணிக்கனார்.
5. நாடகக் கலை—டி. கே. சண்முகம்.
6. காக்கை உகக்கும் பிணம்—வி. செல்வநாயகம்.
7. 17-ஆம் நூற்றாண்டில் இந்தியப் பத்திரிகைகள் — ஆர். பி. எம். கனி.
8. சமூகமும் இலக்கியமும்—வ. மகாலிங்கம்.

படிப்பகம்

www.padippakam.com



9. தமிழ் வளர்ச்சியில் இஸ்லாம்—ஐ.எல்,எம். மஷ்ஹூர்.
10. மட்டக்களப்பு வாவியில் பாடும் மீன்கள் — செ. கணபதிப் பிள்ளை.
11. மணமக்களும் குடிமக்களும்—வெள்ளவத்தை மு. இராமலிங்கம்.
12. முஸ்லிம் பண்பாடு — முகமது சமீம்.
13. மட்டக்களப்பு நாட்டுக் கூத்துகள்— வி. சீ. கந்தையா.
14. இலட்சியமுள்ளது இலக்கியம்—ஏ. பெரியதம்பிப் பிள்ளை.
15. தமிழுணர்ச்சி—''இளங்கீரன்''.
16. இலக்கியமும் மலைநாட்டுத் தமிழரும் — சி. வி. வேலுப்பிள்ளை.
17. ஈழத்து முஸ்லீம்களின் தமிழ்த் தொண்டு — எம். எம். உவைஸ்.
18. சென்ற இருபது ஆண்டுகள்... — கி. லஷ்மண ஐயர்.
19. ஆறுமுக நாவலர் வசன நடை — கனக. செந்தில்நாதன்.
20. ஏன் இந்தத் தமிழுணர்ச்சி?—க. கைலாசபதி.
21. முஸ்லீம்களின் வரலாறு—ஜே. எம்.எம். ராஜி.

இந்தப் பட்டியலில் 1960 ஆம் ஆண்டுக் காலத்தில் முதன்மை வகித்த கல்விமான்களும் படைப்பாளிகளும் அடங்குவதை அவதானிக்கலாம். தமிழ் மொழியின் பல் வேறுபட்ட துறைகளிலும் 'தினகரன்' கொண்டிருந்த ஆர்வத்தையும், இத்துறைகளிலே புதிய பார்வையினை ஏற்படுத்துவதன் மூலம் தமிழியல் துறைகளை அது வளப் படுத்த மேற்கொண்ட முயற்சிகளையும் இது புலப்படுத்து கிறதென்றே கொள்ள வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



'தினகர'னின் வளர்ச்சிக் காலத்தினை — அதன் இலக்கிய தாக்கங்களைக் கருதி பின்வரும் அடிப்படையிலே பிரிக்கலாம்.

1. தொடக்க காலம் முதல்.
   வே. க. ப. நாதன் வரை.
2. தேசிய இலக்கிய காலம்
   க. கைலாசபதி.
3. தேசிய இலக்கிய வளர்ச்சி முதல்,
   இன்றைய காலம்.

இந்த மூன்று காலப் பகுதிகளிலும் தமிழியல் வளர்ச்சியின் முக்கிய பண்புகளை இலங்கையிலே வளர்த்தெடுப்பதிலே பெரும்பங்கு வகித்த காலமாக 1956 தொடங்கியுள்ள வளர்ச்சிக் காலத்தைக் குறிப்பிட்டு உரைக்கலாம். இத்தகைய புதிய எண்ணமும், சிந்தனை வீச்சும் உருவானதை இத்தலையங்க வரிகள் எடுத்துரைக்கின்றன.

> '...மேற்குலகில் தினம் புதியவைகள் உருவாகிக் கொண்டேயிருக்கின்றன. அவைகளில் நல்லவைகள் இங்கும் பொலியட்டும். தீங்குள்ள பழையதுகள் ஒழியட்டும். நன்மையுள்ள புதியது மலியட்டும்.'[45]

எழுபதாம் ஆண்டுக் காலத்தில் தமிழ்ப் படைப்பிலக்கியம், விமர்சனம், கவிதைத் துறை ஆகியவற்றிலே 'தினகரன்' கூடிய அக்கறை கொண்டிருந்தது. பேராசிரியர் சு. வித்தியானந்தன், கலாநிதிகள் கா. சிவத்தம்பி, பொ. பூலோகசிங்கம் ஆகியோரது தமிழியல் துறை சார்ந்த கட்டுரைகள் அடிக்கடி வெளியாகின. 'பேராசிரியர் கணபதிப்பிள்ளையைப் போல ஒருவருமில்லை' என்ற பேராசிரியர் சு. வித்தியானந்தனின் கட்டுரை,[46] பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் ஆளுமைச் சிறப்பினை வெகு தத்ரூபமாக சித்தரித்ததெனப் பலராலும் பாராட்டப் பெற்றது. வேந்தனார்.[47] கனக செந்தி

படிப்பகம்

www.padippakam.com



நாதன்,[48] கட்டுரைகள், கலாநிதி சிவத்தம்பி அவர்களின் பேட்டி,[49] ஆப்பிரிக்க ஆசிரிய எழுத்தாளர் மகாநாட்டு தொடர் கட்டுரை,[50] சிறந்த மொழி பெயர்ப்பு நூல்,[51] பிரயாண இலக்கியத் துறையில் அஸீஸ்[52] ஆகியன குறித்து பேராசிரியர் கைலாசபதி எழுதிய குறிப்புகள், சோவியத் நாட்டுத் தமிழறிஞர் செம்பியன் பற்றி கலாநிதி அ. சண் முகதாஸ்[53] கட்டுரை ஆகியன, தரையும் தாரகையும்[54] ஆற்றுப்படை இலக்கியம் குறித்து இ. இரத்தினத்தின் விமர்சனம், கவிஞர் காசி ஆனத்தனின் முற்றுப் பெறாத கவிதைத் தொடரான — 'எங்கள் செல்வம்— அறத்தின் கதை,[55*] 'அம்பியின்' தொடர் கவிதை நாடகம், 'வேதாளம் சொன்ன கதை'[55] என்பன 70 காலப்பகுதியில் தாக்கத்தினை ஏற்படுத்திய 'தினகரன்' பிரசுரித்த சிறப்பம்சங்களாகும். முஸ்லீம் மக்களின் சமயம், பண்பாடு, இலக்கியத்தை நெறிப்படுத் தியும் வளர்த்தும் 'தினகரன்' தாக்கம் ஏற்படுத்தியிருக் கின்றது.

'மதீனாப் பயணம்' பற்றி எம். எம். உவைஸ்[56] எழுதிய கட்டுரைத் தொடர், 'மக்காப் பயணம்'[57] பற்றிய தொடர், பிறை வளர்ந்த கதை[58] என்பன முஸ்லீம் பயண இலக்கியத்தில் குறிப்பிட்டுச் சொல்லத் தக்கவை. இவை முஸ்லீம் இளைய தலைமுறையினருக்கு மிகவும் பயன்பாட் டினைக் கொடுத்ததோடு, முஸ்லீம் தமிழ் உரைநடைத் துறையிலும் கணிசமான செழுமையினை ஏற்படுத்தின. எஸ். எம். கமால்தீன் 'கடல் கட்டி' என்ற தொடர் நவீனத்தை எழுதினார்.[59] முஸ்லீம் மக்களின் கலாசாரம், பின்னணி, மொழி வழக்கு என்பனவற்றை இந்த நாவலிலே அவர் மிகவும் சிறப்பாகவே சித்தரித்தார். முஸ்லீம் மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், மொழி வழக்கு என்பனவற்றை அழகுறவே சித்தரித்த இந்நாவல் விமர்சகர்களாலும் வாசகர்களாலும் பாராட்டி மேற்

படிப்பகம்

www.padippakam.com



கோள் காட்டப்பட்டன. 'கடல்கட்டி'யின் யதார்த்தப் பண்பிற்கு ஒரு உதாரணமாகப் பின்வரும் பகுதியைச் சொல்லலாம்.

"வள்ளங்கல்லாம் இன்னம்
கொஞ்சத்தில கரக்கு வந்திடும்
நான் போய் என்ன நடந்திரிக்
கிண்டு விசாரிக்கப் போறான்."
"நானும் ஓங்களோட வாரன்
தம்பி"

நாடகத் தமிழ் வளர்ச்சிக்கு 'தினகரன்' உறுதுணையாக நின்று வந்துள்ளது. நாடகங்கள் நடிக்கப்பட வேண்டியவை. எனவே நாடகங்களைப் பத்திரிகையில் பிரசுரிப்பதில் 'தினகரன்' அதிக சிரத்தை எடுக்கவில்லை. ஆனால் நாடக முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வந்திருக்கிறது. பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் 'உடையார் மிடுக்கு', 'தவறான எண்ணம்', 'சுந்தரம் எங்கே' என்ற நாடகங்கள் வெற்றி காணத் 'தினகரன்' உதவியுள்ளது. செய்திகளையும் படங்களையும் சிறப்பாக வெளியிட்டதோடு, அவ்வப்போது நல்ல விமர்சனங்களையும் எழுதி ஊக்குவித்திருக்கின்றது.

கலையரசு சொர்ணலிங்கத்தின் ஒரே நூலான 'என் நாடக அனுபவங்கள்' 'தினகரனிலேயே' தொடராக வெளிவந்தது. இக்கட்டுரைத் தொடரே பின்னர் நூலுருப் பெற்றது. இலங்கைத் தமிழ் நாடக வரலாற்றுத் துறை பற்றிய வரலாற்று நூல்களில் ஒன்றாக இந்த நூல் அமைந்துள்ளது.

நாடகப் பணியின் சிகரமாய் அமைந்தது தமிழ் நாடக விழாவும், விழா மலரும். 1969ல் நாடகவிழா நடத்தப்பட்டது. கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். விழா மலர், நாடக ஆய்வாளருக்கு மிகவும் அவசியமான ஒரு பிரசுரமாகும்.

www.padippakam.com



கிராமியக் கூத்து முறைக்கும் 'தினகரன்' உதவியிருக்கின்றது. எத்தனையோ தலையங்கங்கள் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இலங்கை அரசின் கலைக்கழகத்தின் தமிழ் நாடகக் குழுத் தலைவராக இருந்த போது 'தினகரன்' அவருக்கு உறுதுணையாக நின்றிருக்கிறது. விசேட கட்டுரைகள் தலையங்கங்கள் அவ்வப்போது பிரசுரமாகியுள்ளன.

சமகாலத்து வாழ்ந்த சான்றோரை அறிமுகப் படுத்தியும், கௌரவித்தும், அவர்களின் படைப்புகள் பற்றி விமர்சித்தும் வந்திருக்கிறது 'தினகரன்'. திராவிட மொழிகளில் ஆழ்ந்த புலமையுள்ள கலாநிதி. ஆஷர் உடன் திரு. தனஞ்செயராஜசிங்கம் பேட்டி[60] மூதறிஞர் சுப்பையாபிள்ளை பற்றி திரு. இ. சபாலிங்கம் கட்டுரை,[61] கரம்பொன் தந்த கலைப்புலவர் பற்றி க. இளையதம்பி[62] ஆகியோரது கட்டுரைகள் குறிப்பிடற்குரியவை. 35 ஆண்டு காலத்துப் புதுக்கவிதை பற்றி எம். ஸ்ரீபதி எழுதிய கட்டுரை[63] விவாதங்களையும், புதிய பரிசீலனைகளையும் உருவாகிற்று.

சமய இலக்கியத்தை வளர்ப்பதிலே 'தினகரன்' தொடக்க காலத்திலிருந்தே ஆர்வமும், கவனிப்பும் கொண்டிருக்கிறது. செ. தனபாலசிங்கத்தின் தொடர் க்கட்டுரைகள் சமய இலக்கியத்திற்கு 'தினகரன்' வாயிலாகப் பெரும் தாக்கம் விளைத்தவை. இக்கட்டுரைகள் பல பெயர்களில் நூலுருப்பெற்றன. சமய இலக்கியத் திற்காய் ஒரு பகுதியையே வாரம் தோறும் 'தினகரன்' பிரசுரிக்கிறது. நுண்கலைத்துறைகளை உற்சாகப்படுத்து வதிலே 'தினகரன்' ஆரம்பகாலந்தொட்டே முன்னணியில் நிற்கிறது. சினிமா, ஓவியம் சம்பந்தமான புதிய துறை களில் நவீன தன்மைகள் உருவாகிறபோது அவற்றை உடனுடனே தனது வர்சகர்கட்கு அறிமுகமாக்கி வந்திருக் கிறது. ஈழத்துத் திரைப்படங்களுக்கு தெளிவான விமர்சன

www.padippakam.com



ஆய்வுகள் செய்திருக்கிறது. "குத்துவிளக்கு,'' ''பொன்மணி'', சினிமாப் படங்களுக்குத் தலையங்கம் எழுதி வாழ்த்தியதோடு நில்லாமல் அவை பற்றிய விரிவான விமர்சனக் கட்டுரைகளும் வெளியிட்டுள்ளது. ''பொன்மணி'' பற்றிய சினிமா விமர்சனம், பின்னர் அப்படத் தயாரிப்பாளர்கள் அப்படத்தை மீள்தொகுப்புச் செய்வதற்கு உதவிற்று.

கலைத்துறை முன்னோரை 'தினகரன்' இனங்கண்டு கௌரவித்து பேட்டிகள், கட்டுரைகள் வெளியிட்டிருக் கிறது. சிறப்பு மலர்கள் வெளியிட்டுள்ளது. கலையரசு சொர்ணலிங்கம் பற்றிய ஒரு தலையங்கம் :

**தொடர்பு வளரட்டும்**

> ''ஈழத்து தமிழ் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கட்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதென தமிழகம் செய்த முடிவு கலா ரசிகர்கள் உள்ளங்களில் மகிழ்ச்சிப் பிரவாகத்தினை ஏற்படுத்தும் என்பதிலே ஐயமில்லை: ஈழத்துக் கலைஞர்களை தமிழ் நாட்டில் கௌரவிப்பதில்லை யென்பது நீண்டகாலக் குற்றச் சாட்டு. முன்னொரு காலத்திலே நல்லை ஆறுமுகனாருக்கு நாவலன் என்ற பட்டத்தைச் சூட்டி தமிழ் நாடு ஈழத்திற்குக் கௌரவமளித்ததென்பது வாய்மையே எனினும் அண் மைக் காலத்தில் இம்மனப்பாங்கு வெளிப்படை யாகவோ, மறைமுகமாகவோ காணப்படுவதில்லை என்று கூறுவது வழக்கம்.''[64]

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக 'தினகரன்' தமிழ் மக்களின் பண்பாடு, இலக்கியம், கலாசாரம் ஆகிய துறை களிலே ஆழ்ந்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கிறது. என்பதை மேலும் விரிவாக விளக்க வேண்டியதில்லை. கிட்டத்தட்ட மூன்று தலைமுறை காலத்து இலங்கைத்

www.padippakam.com



தமிழர்து அபிலாஷைகளை 'தினகரன்' பல்வேறு துறைகளூடாகப் பிரதிபலித்து, அவர்களது முன்னேற்றத்தோடு தன்னையும் இணைத்து ஒரு வரலாறு என இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது.

*1973 ஜூன் 22ன் பின்னர் :*

1973 ஜூன் 22 முதல் 'தினகரன்' அரசாங்கத்தின் கீழ் வந்துள்ள தெனினும் தமிழ் இலக்கியத்தின் இன்றைய கலைகள், கலாசாரம் என்பனவற்றைப் பொறுத்தமட்டில் தன் பணியைத் தொடர்கிறது. அரசின் அங்கம் என்ற முறையில் அரசியல் காரணங்களால் சில இடர்கள் இருப்பினும் தமிழ்ப் பணியில் சிறிதும் பின்வாங்கியதில்லை. ஏனைய தமிழ்ப் பத்திரிகைகளிலும் பார்க்க தினகரன் சிறந்த களமாகவே இலக்கியப் பிரியர்களால் கொள்ளப்படுகிறது.

ஏனைய பத்திரிகைகள் பழைய எழுத்தாளர்களுக்கே முக்கிய இடம் அளிக்கும் வேளையில் தினகரன் புதிய தலைமுறைக்கு இடம்அளித்து பல எழுத்தாளர்களை உருவாக்கி வருகிறது.

www.padippakam.com

## அடிக்குறிப்புகள் :

1. தினகரன், செப்டம்பர் 22, 1932.
2. தினகரன், ஜூலை 24, 1937.
3. தினகரன், 'சக்களத்தி', ஜுன் 12, 1949.
4. தினகரன், 'சந்திப்பின் முடிவில்' ஆகஸ்ட் 21, 1949
5. தினகரன், 'அந்தக்கண்கள்' ஜுன் 12,1949.
6. தினகரன், ஜுன் 12, 1949.
7. தினகரன், ஜுலை 24, 1949.
8. தினகரன், ஜனவரி 18, 1949.
9. தினகரன், ஜனவரி 18, 1949.
10. தினகரன், ஜனவரி 18, 1941.
11. தினகரன், ஒக்டோபர் 16, 1949.

11ஏ. தினகரன், மே 28, 1950.

12. தினகரன், செப்டம்பர் 9, 1950.
13. தினகரன், செப்டம்பர் 3, 1950.
14. தினகரன், செப்டம்பர் 10, 1950.
15. தினகரன், பெப்ரவரி 5, 12, 1950.
16. தினகரன், ஜுலை 10, 1949.
17. தினகரன், செப்டம்பர் 9, 1950.
18. தினகரன், பெப்ரவரி 2, 1950 தொடர்.
19. தினகரன், மே 7, 1950.
20. தினகரன், மே 21, 1950.
21. தினகரன், மே 29, 1949.
22. தினகரன், பெப்ரவரி 5, 1950.
23. தினகரன், ஜனவரி 15, 1950.
24. தினகரன், ஜனவரி 15, 1950.
25. தினகரன், நவம்பர் 12, 1950.
26. தினகரன், நவம்பர் 19, 1950.
27. தினகரன், நவம்பர் 5, 1950.
28. தின்கரன், ஜனவரி 22, 1950.
29. தினகரன், ஒக்டோபர் 8, 1950.

படிப்பகம்

www.padippakam.com



30. தினகரன், செப்டம்பர் 17, 1950.
31. தினகரன், டிசம்பர் 10, 1950
32. தினகரன், நவம்பர் 11, 1950.
33. தினகரன், நவம்பர் 11, 1950.
34. தினகரன், நவம்பர் 11, 1950.
35. தினகரன், நவம்பர் 11, 1950.
36. தினகரன், நவம்பர் 11, 1950.
37. தினகரன், ஜனவரி 15, 1956.
38. தினகரன், ஜூலை 1, 1956.
39. தினகரன், ஜூலை 8, 1956.
40. தினகரன், ஜூலை 15, 1956.
41. தினகரன், ஜூலை 15, 1956.
42. தினகரன், பெப்ரவரி 26, 1956.
43. முருகன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்- 'தமிழன் குரல்' 1956 ஆகஸ்ட்.
44. தினகரன், ஆகஸ்ட் 28, 1956 முதல் ஆறு வாரங்கள் தொடர்.
44ஏ. தினகரன், செப்டம்பர் 9, 1956.
45. தினகரன், செப்டம்பர் 30, 1956 முதல் மூன்று வாரத் தொடர்.
46. தினகரன், மே 5, 1971.
47. தினகரன், செப்டம்பர் 19, 1971.
48. தினகரன், செப்டம்பர் 19, 1971.
49. தினகரன், ஜூலை 25, 1970.
50. தினகரன், செப்டம்பர் 30, 1973 முதல் நான்கு வாரத் தொடர்.
51. தினகரன், செப்டம்பர் 30, 1973.
52. தினகரன், டிசம்பர் 2, 1973.
53. தினகரன், டிசம்பர் 9, 1773.
54. தினகரன், ஜூன் 19, 1970.
55. தினகரன், செப்டம்பர் 19, தொடங்கி ஐந்து வாரத் தொடர்.

படிப்பகம்

www.padippakam.com



55ஏ. தினகரன், மே 5, 1970.
56. தினகரன், மே 5, 1970
57. தினகரன், நவம்பர் 21, 1970.
58. தினகரன், நவம்பர் 7 முதல் தொடர்.
59. தினகரன், செப்டம்பர் 7, 1973 முதல் தொடர்.
60. தினகரன், ஜனவரி 4, 1973.
61. தினகரன், மார்ச் 4, 1973.
62. தினகரன், மார்ச் 11, 1973.
63. தினகரன், ஜனவரி 7, 1973 தொடர்.
64. தினகரன், மே 25, 1971.

ஃ ஃ ஃ

www.padippakam.com

## முடிவுரை :

ஈழத்தில் தமிழ்ப் பத்திரிகைத் துறை எவ்வாறு வளர்ச்சி கண்டது, 'தினகரன்' தமிழ்ப் பத்திரிகைத் தொழில் வளர்ச்சி காண்பதற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்தது, இவ்வாறு செய்கின்றபோது தமிழ் மொழியும் தமிழ் இலக்கியமும் எவ்வாறு வளர்ச்சி கண்டன, இவை மக்கள் வாழ்வில் எத்துணை தாக்கத்தினை ஏற்படுத்தின என்பனவற்றையெல்லாம் சுருக்கமாக இவ்வாய்வின்போது எடுத்துக் கூற முயன்றேன். தமிழ்ப் பத்திரிகையின் கதை நீண்டது. ஈழத்தில் இது கண்ட வளர்ச்சி பல கோணங் களிலிருந்தும் ஆராயப்பட வேண்டியதாகும். தமிழ் நாட்டில் இன்று வெளியாகும் தமிழ் நாளேடுகள், கோடிக் கணக்கில் தமிழ் மக்கள் அங்கு இருப்பதனால், லட்சக் கணக்கில் விற்பனையாகின்றன.

தமிழ் நாட்டின் ஜனத்தொகையுடன் ஒப்பு நோக்கும் போது இவற்றின் விற்பனைத் தொகையை நாம் பெரி தெனக் கொள்ள முடியாது. அங்கே வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகட்கு வெளிநாட்டுப் போட்டியும் இல்லை. ஆனால் எமது நாட்டிலோ நான்கு தமிழ்த் தினசரிகளே உண்டு. என்றாலும் தமிழ் நாட்டு வெளியீடுகளுடன் போட்டியிட வேண்டிய நிலையில் இவை இருக்கின்றன. தினமணி, தினந்தந்தி போன்றவை சிறிய அளவிலேனும் இறககுமதியாகின்றன. ஆங்கில மொழி ஏடுகளாக இருந் தாலும், 'ஹிந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்றவையும் தமிழ் மக்களால் வாசிக்கப்படுவதனால் 'டெயிலி நியூஸ்' போன்ற இலங்கை ஆங்கிலப் பத்திரிகை வாங்கிப் படிப் பவர்கள் கூட இலங்கையில் பிரசுரிக்கப்படும் தமிழ்ப் பத்திரிகையை வாங்காது இந்திய ஆங்கிலப் பத்திரிகை களை வாங்குகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியச் செய்திகளைத் தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டும் தான் பார்க்கலாம் என்றில்லை. மேலும் 'குமுதம்' 'ஆனந்தவிகடன்', 'துக்ளக்' போன்றவையும் இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளைப் பாதிக்கவே செய்கின்றன. தமிழ் நாட்டிலிருந்து வரும் 'பேசும்படம்', 'பொம்மை', 'ஜெமினி சினிமா' 'சினிமா எக்ஸ்பிரஸ்' போன்றவற்றைப் படிப்பவர்கள் 'தினகரன்' 'வீரகேசரி' சினிமாப் பக்கத்தைப் பார்ப்பதற்கென இவற்றை வாங்குவார்களா? சில ஏடுகள் ஒரு படி மேலே சென்று தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளில் பிரசுரமாகும் படங்களைப் புளொக் செய்து தன் சினிமா மலரைத் தயாரிக்கின்றபோது ஏன் இதனை நாடப் போகின்றார்கள்? இவ்வாறிருந்தும் எமது பத்திரிகைகளின் விற்பனைப் பிரதி எண்ணிக்கையை ஜனத்தொகையோடு ஒப்பிடும்போது திருப்திப்படவே வேண்டும்.

தமிழ் நாட்டில் பத்திரிகைகள் லட்சக் கணக்கில் விற்பனையாகின்றன. இங்கோ ஆயிரக் கணக்கிலேயே விற்பனையாகின்றன. அது பெரிய நாடு. இது சிறிய நாடு. ஆனால் இரு நாட்டு பத்திரிகைகளையும் ஒப்பு நோக்கும்போது எமது பத்திரிகைகள், குறிப்பாக 'தினகர'னும் தினபதி சிந்தாமணியும், பத்திரிகைக் கலையில் வளர்ச்சி கண்ட நிலையிலேயே இருப்பதனை அவதானிக்கலாம்.

தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் மலேசிய 'தமிழ் நேசன்' 'தமிழ் முரசு' போன்றவை ஒரு ரகத்தவையாக இருப்பதனையும் உணரலாம். இவற்றில் அமைப்பு முறை அனுஷ்டிக்கப்படாமை தெளிவாகும். ஒவ்வொரு பக்கத்திலும் பல துறைச் செய்திகளும் காணப்படும். அமைப்பு முறை இல்லை. ஆங்கிலப் பத்திரிகைகளோடு ஒப்பு நோக்கும் போது இது மிகத் தெளிவாகத் தோன்றும். ஆனால் 'தினகரன்' தினபதியில் ஓர் ஒழுங்கு முறை அனுஷ்டிக்கப் படுவது கண்கூடு. இவையிரண்டும் ஆங்கிலப்பத்திரிகைகள்



படிப்பகம்

www.padippakam.com



வெளியிடும் அச்சகங்களில் தயாரிக்கப்படுவதால் இவ் வைப்பு காணப்படுகின்றது. உள்ளூர்ச் செய்திகள் சில பக்கங்களில், வெளிநாட்டுச் செய்தி ஒரு பக்கத்தில், கட்டுரை பத்திகள், கதைகள் வேறொரு பக்கத்தில் என்று திட்டமிட்டு ஒரு ஒழுங்கு முறையின்படி பத்திரிகை உருவாக்கப்பட்டிருப்பதனை காணலாம். ஒவ்வொரு பக்கமும் பலதும் பத்தும் உள்ள சாம்பாராகக் காட்சி தருவதில்லை.

தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சி கண்ட நிலையையே இது உணர்த்துகின்றது. ஆரம்பகால 'உதயதாரகை' 'உதயாதித்தன்' போன்றவற்றையும், இன்றைய 'தினகரன்', 'தினபதி'யையும் ஒப்பு நோக்கும்போது எவ்வளவுக்குத் தமிழ்ப் பத்திரிகை உருவிலும் உள்ளடக்கத்திலும் மாற்றம் கண்டு வளர்ந்துள்ளது என்பது தெளிவாகும். இந்த வளர்ச்சி நிலைகளைத் 'தினகர'னுடன் நீண்டகாலத் தொடர்பு கொண்டவன் என்ற வகையிலே, அதாவது ஐம்பத்தொரு ஆண்டு காலம் உயிர் வாழ்ந்த 'தினகரனின்' ஆசிரியராக இருபத்திரெண்டு ஆண்டு காலமும் செய்தி யாசிரியராக, அதற்கு முன் இரண்டாண்டுகளும், உதவி ஆசிரியராக அதற்கு முன் நான்கு ஆண்டுகளும் இருந்தவன் என்ற முறையிலே 'தினகரனையே' அளவு கோலாகவும், கனமாகவும் கொண்டு வரலாற்றை நோக்கினேன். ஓரளவுக்கு ஈழத்திலே தமிழ் பத்திரிகைத் தொழில் எவ்வாறு வளர்ச்சி கண்டது என்பதனைக் கட்டங்களாக வகுத்து விளக்கியுள்ளேன்.

வெகுஜன தொடர்பு எவ்வாறு ஆரம்பித்து வளர்ச்சி கண்டது என்பதனையும். மேலைத்தேயத்தவர் வருகைக்கு முன்பு குறிப்பாகப் பிரித்தானியர் ஆட்சி ஏற்படு முன்பு, இலங்கைத் தமிழரிடையேயும், பொதுவாக இலங்கை யிலும் தகவல் பரம்பல் எவ்வாறு செயற்பட்டது என்ப தனையும், மிஷனரிமாரின் சமயப் பிரசாரமும் இதனை

படிப்பகம்

www.padippakam.com



எதிர்த்து சுதேசிகளின் ஆவேச முயற்சிகளும் எவ்வாறு பத்திரிகை வளர்ச்சிக்கு உதவின என்பதனையும் முதல் மூன்று பகுதிகளிலும் ஆராய்ந்துள்ளேன்.

நான்காம் பகுதியிலேயே தமிழ்ப் பத்திரிகைத் துறையின் வளர்ச்சியில் திருப்பு முனை தோன்றியது கூறப்படுகின்றது. சமயப் பிரசாரத்திலும் எதிர்ப்பிலும் ஈடுபட்ட தமிழ்ப் பத்திரிகைகள் தேசிய ரீதியில் சிந்திக்க வேண்டிய கட்டம் வந்ததனை இங்கே காணலாம். இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கம் இங்கே ஏற்படுத்திய விளைவுகள் தெளிவாகின்றன. 'தினகரன்' தோற்றத்துக் கான பின்னணி இங்கே விளக்கம் பெறுகிறது. டி. ஆர். விஜேவர்த்தனனின் வழி நடத்தலில் தேசியமார்க் கத்திலே 'தினகரன்' ஆற்றுப்படுத்தப்படுகின்றது என்பத னையும் இதில் சுட்டிக்காட்டினேன்.

இதன் பின்னர் 'தினகரனின்' வளர்ச்சிக் கட்டங்களை ஆராய்ந்து, எவ்வாறு தேசிய ரீதியில் தமிழரை வழி நடத்த ஆரம்பிக்கப்பட்ட 'தினகரன்' தமிழ் நலனைப் பாதிக்கின்ற விவகாரங்களை முகம் கொடுக்க வேண்டிய சங்கட நிலையை அடைந்தது என்பதனையும் எடுத்துச் சொன்னேன்.

ஆறாம் பகுதியில் இலக்கிய வளர்ச்சியில் 'தினகரனின்' பங்களிப்புச் சொல்லப்படுகிறது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே 'தினகரன்' முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. புதுயுக எழுத்தாளர்களை உருவாக்கிய தோடு ஈழத்து இலக்கியம் செல்ல வேண்டிய வழியினைச் செப்பனிட்டு கொடுத்த பெருமை இதற்குண்டு. தேசிய இலக்கியம் தோன்ற உறுதுணையாய் நின்ற சாதனம் 'தினகரன்'. அம்மாமித்தமிழே இலக்கியம் என்றிருந்த ஈழத்தலைவர்களுக்கு மண்வாசனை, பேச்சு வழக்கு, இவற்றின் அழகு நிதர்சன இயல்பு ஆகியவற்றை எடுத்துக் கூறிய பெருமை 'தினகரனுக்கு' உண்டு. இன்று புதுமை

படிப்பகம்

www.padippakam.com



இலக்கியம் படைக்கும் சிருஷ்டிகர்த்தார்க்கள் பலர் 'தினகரன்' பாசறையில் பயிற்சி பெற்றவர்கள் என்கின்ற போது 'தினகரன்' பூரிப்படையவே செய்யும். ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பொன்விழாக்கண்ட 'தினகரனின்' பங்களிப்பு என்ன என்பது தனி ஆய்வுக்குரிய விஷயம். தமிழ்மொழி இயலுக்குச் சிறந்த களம் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகை காலத்தின் கண்ணாடி என்றால், 'தினகரன்' மூலம் கடந்த அரை நூற்றாண்டில் எமது மொழி நடை மாறி வந்த இயல்புகளை ஆராய முடியுமல்லவா?

இன்று 'தினகரன்' மிகவும் ஆபத்தான கட்டத்தை வரலாற்றில் அடைந்துவிட்டது. தேசிய ரீதியில் தமிழ் மக்களை அழைத்துச் செல்வதற்காகத் 'தினகரன்' ஆரம்பிக்கப்பட்டதனை முன்பு குறிப்பிட்டிருந்தோம். பிரஜா உரிமை, தேசிய மொழிப் பிரச்சினைகள் தோன்றியபோது சமயோசிதமாகத் 'தினகரன்' நடந்து கொண்டது.

ஆனால் இன்று நிலை வேறு. தமிழ் மக்கள் உரிமைப் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றார்கள். சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. 1983 ஜூலை மாத இனவெறி வன்செயல்களைத் தொடர்ந்து இலங்கை எங்கணும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களிடையே புதியசிந்தனை தோன்றியிருக்கிறது. 'தினகரன்' என்ன செய்யும்? 'தினகரனுக்கு' மற்றைய பத்திரிகைகளுக்கு இல்லாத கஷ்டம் ஒன்று இருக்கின்றது. அதாவது 'தினகரன்' அரசிற்கு உரியது என்பதனால் ஏற்படும் கஷ்டம்.

அரசின் கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அதுவும் தமிழருக்குச்சொல்ல வேண்டும். இது எவ்வளவுக்குச் சாத்தியமாகப் போகின்றது? தமிழர் இன்றிருக்கின்ற மனநிலையில் 'தினகரன்' கருத்தை ஏற்பார்களா? காலம் தான் பதில் சொல்லவேண்டும்.

www.padippakam.com



"ஆனால் பேனாவுக்குத் தனிச் சக்தி உண்டு என்பர். விரும்பாததையும் நாசூக்காகச் சொல்லி வைக்கலாமல்லவா? இங்கே தான் பத்திரிகைக்கலையின் உத்திகள் பயன்படுத்தப்படலாம். தகுதியானவர்களே தொடர்ந்து உயிர் வாழலாம். தகுதியின்றேல் செத்து மடியத்தானே வேண்டும்?

ஆனால் இவ்வேளையிலே 'தினகரனின்' முதல் இதழில் அதாவது 1932 மார்ச் 15-ந் தேதி வெளியான இதழிலே அன்றைய ஆசிரியர் நமது நோக்கம் என்று தலைப்பிட்டு எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை நோக்குதல் பயன்தருவதாக அமையும்.

> ''இப்பத்திரிகை யாருக்காகப் பிரசுரம் செய்யப்படுகிறதோ அவர்கள் எம்மீது வைக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கு நாம் பாத்திரங்களாவிருப்பதற்கு மனப்பூர்வமாக முயலுவோம். இலங்கையிலேனும் வேறெந்த நாட்டிலேனும், உள்ள கட்சியாளர்களில் எவராவது ஒரு கட்சியினரின் முகமனைப் பெறுவது எமது நோக்கமல்ல. எமது பத்திரிகை கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எவராவது ஒருவருக்கு மாத்திரம் பணியாற்றுவதற்கு அன்றி ஏதாவது விசேட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இது ஷ்தான்றியதன்று. தமிழ்ப் பாஷையைப் பேசும் மக்கள் எவரெவரோ அவரவர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதே இப்பத்திரிகையின் பெரும் பணியாகும். ஆகவே எல்லோருக்கும் பொதுவாக நன்மை பயக்கத் தக்க நீதியான வழியிலேயே எமது நோக்கம் நடப்பதாகும்''

இவ்வாறு ஆசிரியர் கூறியிருந்தார். பத்திரிகை சுதந்திரமாக அரசியல் வலைக்குள் அகப்படாத அவ்வேளையிலே, சிங்களவராக இருந்தும் டி. ஆர். விஜேவர்த்தன தமிழ் பேசும் மக்களின் நலவுரிமையைப் பாதுகாப்பதும்

www.padippakam.com



பொதுவாகநன்மை பயக்கத்தக்க நீதியான வழியிலே செல்வதும் 'தினகரனின்' நோக்கம் என்று அன்றைய ஆசிரியர் மூலம் தெரிவித்திருந்தார். அவர் உயிருடன் இருக்கும் வரை பத்திரிகை இவ்வழியே கூடியளவு சென்றிருக்கின்றது. அவர் உயிர் நீத்த பின்பும் அணுவளவும் பிறவாது சென்றது என்றும் கூறலாம். ஆனால் அரசு பொறுப்பேற்ற பின்பு இந்த இலட்சிய நோக்கு எவ்வளவுக்குக் கடைப்பிடிக்கப்பட்டது? இது அரசியல் மாணவர்களின் ஆய்வுக்குரிய விஷயமாகும். எவ்வாறாயினும் 'தினகரன்' பணி செய்து வருகிறது என்பதனை மறுக்க முடியாது.

அரசியல் ரீதியில் வழி நடத்த அரசியல் கட்சிகள் இருக்கின்றது. இவற்றிற்கு கட்சிப் பத்திரிகைகளும் உண்டு. இவை பிரசார வேலைகளைக் கவனிக்கலாம். தேசிய செய்திப் பத்திரிகைகள் இந்தப் பணியை ஏற்க வேண்டியதில்லை. கட்சிகளும், பாராளுமன்றமும், மக்கள் பிரதிநிதிகளும் இதனைச் செய்யப்படும் என்று விடுத்து, செய்திகளைக் காய்தல் உவத்தல் இன்றிக் கொடுத்தாலே போதுமானது. அரசு உடைமை என்றாலும் 'தினகரனின்' தேசியத்தன்மை குன்றவில்லை. சகல கருத்துக்களும் இடம்பெறுகின்றன. வர்த்தக ரீதியில் சிந்தித்தேனும் கட்சிகளுக்குப் பின்னே 'தினகரன்' ஓடவில்லை. ஆனால் கட்சி அரசபீடத்திலிருப்பதாலும் அக்கட்சித் தலைவர் அதிகார கோபுரத்தின் உச்சத்திலிருப்பதாலும் இவ்வுரிமை நிலையை அனுசரித்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் 'தினகர'னுக்கு ஏற்படுவது சகஜமே. ஆனால் செய்தியைக் கொடுக்கும்போது எவ்விதத்திலும் வாசகர்களுக்குத் துரோகம் செய்யவில்லை. பிழை வழிச் செலுத்தவுமில்லை. நடுநிலை நின்று உலகைப் பார்த்து வருகிறது. சூழ்நிலை காரணமாகச் சிலர் அதிருப்திப் படலாம். ஆனால் கால வோட்டத்தில் உண்மை நிலை தோன்றாமல் போகுமா? உண்மை நிலை பெறவே செய்யும்.

www.padippakam.com

# பின்னிணைப்பு : ஒன்று

## இலங்கையில் 'தினகரன்' தோற்றம் வரை வெளியிடப்பட்ட பத்திரிகைகள்

படிப்பகம்

'தினகரன்' தோன்றிய காலம் வரை இலங்கையில் வெளியிடப்பட்ட முக்கிய தமிழ் பத்திரிகைகளே இப்பட்டியலில் இடம் பெறுகின்றன. பத்திரிகையின் பரிணாம வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியவற்றிற்கே முக்கியத்துவம் அளித்தோம். பத்திரிகைகள் சிலவற்றில் காணப்பட்ட குறிப்புக்களும், சுவடிகள் திணைக்களத்தில் இருக்கும் ஏடுகள் பெற்ற தகவல்களுமே இப்பட்டியலைத் தயாரிப்பதில் உதவின. ஆ. சிவனேசசெல்வனின் ஆய்வுக் கட்டுரையில் காணப்படும் அட்டவணை, தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை, எவ்.எக்ஸ். ஸி. நடராசா ஆகிய தமிழ் ஆய்வாளர்கள் சேகரித்த குறிப்புகள், பட்டியல்கள் ஆகியனவற்றை மூலாதாரமாகக் கொண்டே இப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு என் நன்றி. கட்டுரையை எழுதத் தொடங்கிய வேளையில் இக்காலம் வரை வெளிவந்த பத்திரிகைகள் அனைத்தையும் பட்டியலில் தரும் எண்ணம் எமக்கு இருந்தது. ஆனால் இனக்கலவரம் இடையிட்டதனால் என் முயற்சி தடைப்பட்டது. மேலும் 'தினகர'னின் பங்களிப்பே ஆய்வின் பொருளாய் அமைந்திருந்ததால் 'தினகரன்' தோற்றத்துடன் பட்டியலை நிறுத்திவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

*1841 உதயதாரகை :* இதன் முதல் ஆசிரியர்கள் ஹென்றி மார்டின், செய் பெய்ஸன் ஆகிய இருவருமாவர். இலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ்ப் பத்திரிகை இது. மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் அச்சுக் கூடத்தில் இது அச்சிடப்பட்டது. ஆர்னல்ட் சதாசிவப்பிள்ளை நீண்டகாலம் ஆசிரியராக இருந்தார். பாவலர் துரையப்பா பிள்ளையும் ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருந்தார். இரு

www.padippakam.com



மொழிகளில் வெளியாயிற்று. மாதம் இருமுறை வெளியீடு. கலாநிதி பூலோகசிங்கத்தின்படி பதின்மூன்று இதழ்களே வெளிவந்தன என்று சொல்ல முடியும். பிரதிகளைப் பெற முடியா திருக்கின்றது.

*1841* உதயாதித்தன் : ஆசிரியர். சைமன் காசிச் செட்டி.

*1845* உரைகல்லு : உதயதாரகையில் வரும் குறிப்பு களைக் கொண்டே இதனைப் பற்றி அறியக் கூடியதாயிருக்கின்றது. கொழும்பில் இதனை வெளியிட்டார்கள். கத்தோலிக்க அச்சகத்தில் இதனை அச்சிட்டனர்.

*1848* இலங்கை நேசன் : ஆசிரியர். முத்துச்சாமி.

*1853* வித்தியாதர்ப்பணம் : இதன் முதல் ஆசிரியராக (மிலிற்றரி மிறர்) வைமன் கதிரவேற் பிள்ளை இருந்தார். ஒப்பு நோக்கவோ, நன்கு பரிசீலனை செய்யவோ இதன் பிரதிகள் கிடைக்கும்.

*1859* பாலியர் நேசன் : சிறுவர் இதழ்,

*1862* பிறீமன் : முதல் ஆசிரியராக நிக்கலஸ் கூல்ட் என் பவர் இருந்தார். சுவடிகள் திணைக்களத்தில் பிரதிகள் காணப்படவில்லை.

*1863* இலங்காபிமானி : சி.ப. கதிரைவேற்பிள்ளை இதன் முதல் ஆசிரியராக இருந்தார். சமயத் துறைச் செய்திகளை மட்டும் கொண்டு பொதுச் செய்தி களையும் தாங்கி வந்தது. மானிப்பாயில் இருந்த ரிப்பிளி அண்ட் ஸ்ரோங் அச்சகத்தில் அச்சிடப் பட்டது. பல்வேறு துறைகளையும் சேர்ந்த விஷ யங்கள் இதில் இடம் பெற்றன. என்றாலும் கிறிஸ்தவ பிரசார இயல்பு காணப்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



1864 பாலியர் நேசன் : இதன் முதல் ஆசிரியர் வில்லியம் சின்னத்தம்பி ஆவர். இதுவும் றிப்ளி அண்ட் ஸ்ரோங் அச்சகத்திலேயே அச்சிடப்பட்டது. கிறிஸ்தவ இளைஞர் சங்கம் இளைஞர்களை வைத்து இப்பத்திரிகையை வெளியிட்டது.

1864 இலங்கை காவலன் : கொழும்பில் இருந்த இலங்கை காவலன் அச்சகத்தில் இதனை அச்சிட்டனர். தமிழிலும் ஆங்கிலத்திலும் செய்திகள் காணப் படுகின்றன. இதுவும் கிறிஸ்துவ பிரசார ஏடே. என்றாலும் சில செய்திகளும் ஆங்காங்கே காணப் படுகின்றன. இதன் முதலாசிரியர் றோபேர்ட் நியூட்டன் ஆவார்.

1868 இலங்கை பாதுகாவலன் : இதுவும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப எடுத்த முயற்சிகளுள் ஒன்றே. ஆனால் செய்திகளும் இடம்பெறத் தொடங்கி விட்டது. இலக்கிய, இலக்கண விஷயங்கள் சம்பந்தமாக வாசகர்களின் கருத்துக்களைப் பிரசுரித்துள்ளனர். இதன் முதல் ஆசிரியர் சி. முத்தையா பிள்ளை.

1870 புதினாதிபதி : இது கு. அப்புத்துரை ஐயர் ஆசிரியராக இருந்து சனிக்கிழமை தோறும் வெளியிட்ட பத்திரிகை ஆகும். ஆனால் அச்சில்லாது கையெழுத்துப் பிரதியாகவே வெளிவந்தது. கொழும்பு இந்துப்பிட்டித் தெருவிலிருந்த 44ஆம் இலக்க இல்லத்திலேயே இதன் அலுவலகம்.

1871 யாழ்ப்பாணச் செய்தி : இப்பத்திரிகை பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றனவே யொழிய சுவடிகள் திணைக்களத்தில் இவை காணப்படவில்லை. கேச்சு என்பவர் முதல் ஆசிரியராக இருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. மானிப்பாய் றிப்ளி அண்ட் ஸரோங் அச்சகத்திலேயே அச்சிடப்பட்டது.

www.padippakam.com



1873 புதினாலங்காரி : முஸ்லீம்களுக்கென்றே தோன்றிய முதல் தமிழ்ப் பத்திரிகை இது. ஆனால் அச்சிடப்படாது கையெழுத்துப் பத்திரிகையாக இருந்தது. தலையங்கங்கள் ஆங்கிலத்தில் காணப்படுகின்றன. பொதுச் செய்திகளைத் தாங்கி வந்தது. வாப்பு மரைக்காயர், நெயித்த மரைக்காயர் இணைந்து ஆசிரியர்களாக விருந்தனர்.

1876 கத்தோலிக்க பாதுகாவலன் : பிலிப் ஏ.முருகப்பா என்பவர் முதல் ஆசிரியராக இருந்தார். இரண்டு வாரங்கட்கொருமுறை சனிக்கிழமைகளில் வெளியானது. பொதுச் செய்திகளையும் தாங்கி வந்த கிறிஸ்தவ பிரசாரப் பத்திரிகை இது. யாழ்ப்பாணம் அர்ச் யோசெப் கத்தோலிக்க அச்சகத்தில் இதனை வெளியிட்டனர். இரண்டாவது பிரதியிலிருந்து சுவடிகள் திணைக்களத்தில் பார்க்கலாம்.

1877 இலங்கை நேசன் : புதன்கிழமைகளில் மாதம் இருமுறை வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணம் லங்கா சநகன் அச்சகத்தில் வெளியிடப்பட்ட இப்பத்திரிகையின் முதல் ஆசிரியர் எச். எம். சின்னத்தம்பி. சைவ ஏடாக விளங்கிற்று என்றும், இதன்கண் இலக்கியவாதங்கள், மற்றும் சமய விஷயங்கள் இதில் சிறப்பான இடத்தைப் பெற்றன.

1880 உதயபானு : பிரதி திங்கள்தோறும் வெளிவந்த சைவப் பத்திரிகை இது. முதல் ஆசிரியராக திரு. த. கைலாசபிள்ளை இருந்தாரெனினும் ஊரெழு சு. சரவணமுத்துப் பிள்ளை நீண்ட காலம் ஆசிரியராகப் பணிஆற்றினார். வண்ணை சைவப்பிரகாச யந்திர சாலையில் இது அச்சிடப்பட்டு வந்தது.

www.padippakam.com



1881 சைவசப்போதினி : கரலிகித பத்திரிகையாக வெளி வந்த இதன் பிரதிகள் கிடைப்பதில்லை. முதலாசி ரியராக உடுவில் வைத்தீக ஐயர் இருந்தா ரென்பர்.

1882 விஞ்ஞான வத்தினி : செட்டிமாரால் மாதம் இருமுறை வெளியிடப்பட்ட சைவ சமயப் பத்தி ரிகை இது. வண்ணார்பண்ணை காங்கேசன் துறை வீதியில் இருந்த மெஞ்ஞானப் பிரகாச யந்திரசாலையில் சிவசம்பூச் செட்டியார் இதனை வெளியிட்டார். இதன் முதல் ஆசிரியர் மூத்த தம்பிச்செட்டியார் ஆவர். சில பிரதிகளே கிடைத் துள்ளன.

1882 முஸ்லீம் நேசன் : மு. கா. சித்திலெப்பை என்ற வழக்கறிஞர் கண்டி கட்டுகஸ்தோட்ட முஸ்லீம் நேசன் அலுவலகத்தில் இதனை வெளியிட்டு வந்தார். திங்கள் தோறும் தொடர்ந்து வெளி வந்தது. முஸ்லீம்களின் கல்வி முன்னேற்றத் துக்கும் அரசியல் மேம்பாட்டுக்கும் இது உழைத்து வந்தது. சட்ட சபைப் பிரதிநிதித் துவத்துக்குப் போராடிற்று.

1882 சைவ உதயபானு : ஆசிரியர் சரவணமுத்துப் புலவர்.

1883 சைவாபிமானி : இதன் முதலாசிரியர் பொ. ஞான சபாபதிப்பிள்ளை. வல்வெட்டித் துறையிலிருந்த பாரதி நிலைய முத்திராட்சர சாலையிலிருந்து மாதந்தோறும் வெளிவந்தது. சமய விவகா ரங்கள் மலிந்து காணப்படினும் பிற செய்திகளும் இடம் பெற்றிருக்கின்றன.

1885 சன்மார்க்க போதினி : அச்சுவேலி வச்சிர அச்சியந் திர சாலையில் அச்சிடப் பெற்ற இதன் முதலா சிரியர் அச்சுவேலி ச. தம்பிமுத்துப்பிள்ளை

www.padippakam.com



ஆவார். கிறிஸ்தவ சமய ஏடாகவிருந்தது. பெயருக்கேற்ப சமய சன்மார்க்க விஷயங்கள் பெருமளவில் இடம் பெற்றன.

1886 இலங்கை தினவர்த்தமானி: இலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ்த் தினசரிப் பத்திரிகை என்ற சிறப்பு இதற்குண்டு. சமயச் செய்திகளோடு பல துறைச் செய்திகளையும் தாங்கி புதிய கண்ணோட்டத்துடன் வெளிவந்தது. இதன் முதல் ஆசிரியர் ரி. ராஜுப்பிள்ளை ஆவர்.

1886 சர்வசன நேசன்: முஸ்லீம்களின் மேம்பாட்டையும் இஸ்லாம் வளர்ச்சியையும் மனதிற் கொண்டுழைத்த இப்பத்திரிகையின் முதல் ஆசிரியர் ஏ. எஸ். சி. மொகய்தீன் ஆவர். கொழும்பு மெசஞ்சர் வீதி முதலாம் இலக்க இல்லத்திலிருந்து இது வெளியிடப்பட்டது.

1888 ஞானாமிர்தம்: சபாபதி நாவலர்.

1889 இந்து சாதனம்: ஆங்கிலப் பகுதியில் ஆசிரியர் கி. பி. செல்லப்பாபிள்ளை ஆவர். தமிழ்ப் பகுதியின் ஆசிரியராக நல்லூர் த. கைலாசபிள்ளை இருந்தார். சைவப் பரிபாலன சபையினர் இதனை வெளியிட்டனர். இந்து சமய முன்னேற்றமே இலட்சியமாகவிருந்ததெனினும் அரசியல் சமூக பொருளாதார விஷயங்களும் இடம் பெற்றன. சபையின் அச்சகத்தில் தொடர்ந்து அச்சிடப்படுகின்றது.

1892 ஞானதிபம்: ஆசிரியர் எம். ஸி. சித்திலெப்பை

1893 இஸ்லாம் மித்திரன்; இதன் முதல் ஆசிரியர் எல். எம். ஒத்மன் என்பவர். கொழும்பு புறக்கோட்டையிலிருந்த இஸ்லாமிய அச்சியந்திர

www.padippakam.com



சாலையிலிருந்து வெளியிடப்பட்டது. வாரப் பத்திரிகையாக ஆரம்பித்த இது பின் மாதப் பத்திரிகையாகிற்று. செய்திகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது. உள்நாட்டுச் செய்திகள் மட்டுமல்லாது உலகச் செய்திகளும் நிறைய வந்தன.

1892 இலங்கை புதினத்தாள் : கொழும்பில்வெளியானது

1896 மாணவன் : கிறிஸ்தவ பிரசார ஏடாக வெளிவந்த தெனினும், செய்திகளுக்கு நிறைய இடம் கொடுக்கப்பட்டது. மட்டக் களப்பு பற்றிய செய்திகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. இதன் முதல் ஆசிரியராக எம். எஸ பாவா இருந்தார்.

1898 வைத்திய விசயின : ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையே இதன் முதல் ஆசிரியர். இதன் பிரதிகள் கிடைக்கப் பெறவில்லை.

1900 முஸ்லிம் பாதுகாவலன் : முஸ்லீம்களின் முன்னேற்றத்தை இலட்சியமெனக் கொண்ட இப்பத்திரிகை செய்திகளுக்கு இடமளிக்கத் தவறவில்லை. கொழும்பு புதிய சோனக தெருவில் இருந்த முஸ்லீம் பாதுகாவலன் அச்சகத்தில் இதனை வெளியிட்டனர். இதன் முதல் ஆசிரியர் ஐ. ம. அப்துல் அசீஸ் என்பவர்.

1900 திராவிட கோகிலம் : இதன் முதலாசிரியர் எஸ். சதாசிவம்பிள்ளை. யாழ்ப்பாணம் விவேகானந்த அச்சகத்தில் வெளியிடப்பட்டது. மாதம் இருமுறை வெளிவந்த இது தமிழ் மொழி, சைவ சமய வளர்ச்சியைத் தன் நோக்காகக் கொண்டிருந்தது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் செய்திகள் வெளியிடப்பட்டன.

www.padippakam.com



1901 சத்தியவேத பாதுகாவலன் : இப்பத்திரிகையின் முதலாசிரியர் முருகப்பா பிலிப்பையா ஆவர். யாழ்ப்பாணம் கத்தோலிக்க அச்சகத்தில் வெளியிடப்பட்டது.

1901 முஸ்லீம் பாதுகாவலன் : ஆசிரியர் ஐ. எல். எம். அப்துல் அஸீஸ்

1902 சுதேச நாட்டியம் : இதன் முதல் ஆசிரியர் ஆசுகவி சு. வேலுப்பிள்ளை. சமூக முன்னேற்றத்தை மனதிற் கொண்டு உருவான பத்திரிகை. எனவே செய்திகள் இடம் பெற்றன. வசாவிளான் சாரதா பீட அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது. வெளியீட்டாளர் என். க. நல்லதம்பி. சமூக முன்னேற்றம் காண உழைக்க வேண்டியிருந்தது.

1902 விவேகானந்தன் : இதன்முதல் ஆசிரியர் ஙி. இளையதம்பி. யாழ் விவேகானந்த அச்சகத்தில் இதனை வெளியிட்டார்கள். இரு மொழிகளும் பயன் படுத்தப்பட்டன. இது மொழிப் பத்திரிகையாக அரசியல், சமூக பொருளாதார, கட்டுரைகள், படங்கள், செய்யுள் இருக்கின்றன.

1903 இலங்கை மித்திரன் : இதன் முதலாசிரியர் சி. எஸ். நமசிவாயம். அரசியல், சமய, சமூகச் செய்திகள் இதில் வெளியாகின. கொழும்பு புதிய சோனக தெருவில் இருந்த அச்சகமொன்றில் இதனை அச்சிட்டனர்.

1905 பூலோக ஔஷதோகாரி : இது ஆயுள் வேத வைத்தியத்தை ஊக்குவிப்பதற்காக எழுந்த பத்திரிகை. உள்நாட்டுச் செய்திகளும், அன்றைய பிற அரசியல் சமூக, நிகழ்ச்சிகளும் இதில் இடம் பெற்றிருந்தன. கொழும்பு சோனகதெரு

www.padippakam.com



வைத்திய ஜீவன அச்சகத்தில் இது வெளியிடப்பட்டது. இதன் முதலாசிரியர் எம். ஞானப்பிரகாச பண்டிதர்.

1906 மிஸ் பாருல் இஸ்லாம் : எம். எல். எம். முகமது காசில் ஆலிம் அவர்கள் இதன் முதல் ஆசிரியர் முஸ்லீம்களின் சமூக வளர்ச்சியைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டு இது வெளியிடப்பட்டது. மாதமொருமுறை வெளியிட்டார்கள். கொழும்பிலிருந்த சென்னைப் பார்வதி விலாச அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர்.

1907 சஞ்சீவ கரணி : இது செய்திப் பத்திரிகை. வாரந்தோறும் வெளியிடப்பட்டு வந்தது. கொழும்பு கொம்பனித்தெரு மீனாம்பாள் அச்சுயந்திர சாலையில் அச்சிட்டு வெளியிட்டனர். இதன் முதல் ஆசிரியர் ஜே. ஏ. சாரங்கபாணி.

1907 ஆத்ம போதினி : சைவ மணம் கமழ்ந்தாலும் ஸதில் உள்நாட்டு வெளிநாட்டுச் செய்திகள் இடம் பெற்றன. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சாரதா லீலா அச்சியந்திரசாலையில் இதனை அச்சிட்டு வெளியிட்டு வந்தனர். இதன் முதல் ஆசிரியர் க. ச. வைத்தியநாத சாஸ்திரிகள்.

1908 சைவ சுக்குமார்த்த போதினி : இதன் முதலாம் ஆசிரியர் செ. கனகசபாபதிப்பிள்ளை ஆவர். இப்பத்திரிகையில் சமய தத்துவங்கள் பற்றிய வியாக்கியானங்கள் இடம் பெற்றன. வண்ணார் பண்ணை வித்தியானுபாலன யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1908 ஞானசித்தி : இதன் முதல் ஆசிரியர் சி. தாமோதரம் பிள்ளை ஆவர். சைவ சமயத் சீர்திருத்தத்தில் இப்

படிப்பகம்

www.padippakam.com



பத்திரிகை சிரத்தை கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சுயந்திரசாலையில் இது அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1908 குருசந்திரோதயம் : முதல் ஆசிரியர்களாக பி. எம். வைத்திலிங்கம்பிள்ளையும் சு. அ. செல்வத்துரையும் இருந்தனர். யாழ்ப்பாண மக்களின் முன்னேற்றமே இதன் இலட்சியமாக இருந்தது. வசாவிளான் ஸ்ரீ சாரதா பீட அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர்.

1908 இந்துபாலன போதினி : இளைஞர்கள் சமய முன்னேற்றப் பணியில் ஆர்வம் கொள்ளச் செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டது. பொதுச் செய்திகளும் இடம் பெறலாயின. யாழ்ப்பாணம் விவேகானந்தா அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. முதல் ஆசிரியர் எம். சபாரத்தின ஐயராவர்.

1908 முஸ்லிம் : இதன் முதலாவது ஆசிரியர் ஐ.எல்.எம். அப்துல் அசீஸ். கொழும்பு முஸ்லிம் கல்வி விருத்திச் சங்கத்தினரால் கொழும்பு பெற்றா இஸ்லாம் மித்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இஸ்லாமிய விஷயங்கள் முக்கியத்துவம் பெற்றன.

1910 விஜயலக்ஷ்மி : சுவடிகள்திணைக்களத்தில் பிரதிகள் இல்லை. ஆசிரியர் இ. சி. விநாயக முதலியார்.

1910 உண்மை தூதன் : இதன் பிரதிகளும் இல்லை.

1910 ஞானப்பிரகாசம் : இதன் முதல் ஆசிரியர் ஆ. சண்முகரத்தினசர்மா. பிரதிகள் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் இல்லை.

1910 சைவ பாலிய சம்போதினி : இதன் முதலாவது ஆசிரியர் வே. சுப்பிரமணியபிள்ளை. கந்த

த—14

படிப்பகம்

www.padippakam.com



ரோடை சாரத லீலா அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வட்டுக்கோட்டை ஸ்ரீபொன்னுச்சாமிப் பிள்ளை வெளியிட்டார். சமய அபிவிருத்தியே முக்கிய இலட்சியமாகவிருந்தது.

1910 பாலசந்திரன் : இதன் முதல் ஆசிரியர் எம். வி. பொன்னம்பலபிள்ளை. இ. செல்லையா பிள்ளையும் இதில் இருந்தார். கல்வி அபிவிருத்தியிலும் அரசியல் சமூக முன்னேற்றத்திலும் சிரத்தை கொண்டு உழைத்தது. கொழும்பு செக்குவீதி குகதாச அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

1910 சைவ பாலிய சம்போதினி : யாழ்ப்பாண வெளியீடு.

1910 திராவிட மித்திரன் : சுவடிகள் திணைக்களத்தில் பழைய பிரதிகள் இல்லை.

1911 விஜயபானு : இதன் முதலாசிரியர் சி. சச்சிதானந்தர் நமசிவாயம் செய்திப்பத்திரிகை, அரசியல் சமூக முன்னேற்றம் காணும் வகையில் உழைத்தது. கொழும்பு சதானந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

1911 மஹா விஜயலட்சுமி : சைவ அபிவிருத்தியை மனதிற் கொண்டுவாழ்ந்த பத்திரிகை. செய்திகள் இடம் பெற்றன. அரசியல் கல்வித்துறை செய்திகள், கருத்துக்கள் வெளியிடப்பட்டன. யாழ்ப்பாணம் செட்டித்தெரு திருமகள் விலாச அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டது. இ. சி. விநாயக முதலியாரே முதலாம் ஆசிரியராவர்.

1911 கலியுகவரதன் : இதன் முதல் ஆசிரியர் கே. எம், சபாபதிப்பிள்ளை. சைவசமய புராணக்கதைகள்.

www.padippakam.com



சமயத் தத்துவங்கள் இதில் இடம் பெற்றன யாழ்ப்பாணம் செட்டித்தெரு திருமகள் விலாச அச்சயந்திரசாலையில் இதனை அச்சிட்டனர்.

**1911** சண்முகநாதன் : வ. மு. இரத்தினேஸ்வர ஐயரே இதன் முதலாம் ஆசிரியர். சைவத்தின் எழுச்சியை மனதிற் கொண்டு உழைத்தது. திருநெல்வேலி ஸ்ரீ வாலாம்பிகை விலாச அச்சியந்திரசாலையில் அச்சிட்டனர்.

**1912** விச்சுவகர்மன் : இதன் முதலாசிரியர் மு. அருணாசல ஆசாரியாவர். சைவ சமய முன்னேற்றம் கருதி வெளியிடப்பட்டதாதலின் சமயத் தத்துவ விளக்கத்துக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது. வண்ணார்பண்ணை காமாட்சி அம்மாள் அச்சியந்திர சாலையில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**1914** இலங்கை முஸ்லிம் : இதன் முதல் ஆசிரியர் கே.கே. ஹமீத் ஆவர். புதினச் செய்திகள், மற்றும் நாட்டு முன்னேற்றம் சம்பந்தமாகப் பல்வேறு துறை விஷயங்கள் இதில் இடம் பெற்றன. கொழும்பு நொறிஸ்வீதி செயின் பீற்றர் அச்சியந்திர சாலையில் அச்சிடப்பட்டது.

**1915** பால பாஸ்கரன் : இதன் முதலாசிரியர் வி. என். ஸ்ரீபதி. சைவ சமய முன்னேற்றம் கருதிய வெளியிடப்பட்ட இப்பத்திரிகையிலே சைவ தத்துவ விளக்கங்கள் முக்கிய இடம் பெற்றன. ஐந்து இதழ்களுக்கு மேல் நீடிக்கவில்லை. வண்ணார்பண்ணை ஸ்ரீ பாஸ்கர இயந்திரசாலையில் அச்சிடப் பட்டது.

**1917** லங்கா மித்திரன் : இதன் முதல் ஆசிரியர் எம்.என். அகமட் லெவ்வை. இஸ்லாமிய தத்துவம் சம்பந்தமான விஷயங்கள், நாட்டில் நடைபெறும் செய்திகள் இதில் இடம் பெற்றன. கொழும்பு புதிய

www.padippakam.com



சோனகத் தெருவிலிருந்த இலங்காமித்திரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1918 ஜனமித்ரன் : இதன் முதல் ஆசிரியர் வாரி முத்துக் கிருஷ்ணா ஆவர். இவர் ஆங்கிலத்தில் 'தபீப்பிள்' என்ற ஓர் பத்திரிகையை வெளியிட்டு வந்தார். இதன் தமிழ்ப் பதிப்பே ஜனமித்ரன். கொழும்பு செின் செபஸ்தியன் ஹில் 'ஜனமித்திரன்' அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

1919 ஹிதாயத் உல் இஸ்லாம் : டாக்டர் எச். எச். மௌலானா செய்யது ஹுசைன் இதன் முதலாவது ஆசிரியர். இஸ்லாத்தின் வளர்ச்சி கருதி வெளியிடப்பட்ட இப்பத்திரிகை மருதானை ஹிதாயத்துல் இஸ்லாம் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

1919 தூதன் : ரி. கே. லை என்பவர் இதன் முதலாவது ஆசிரியர். ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகள் செய்திகள் வெளிவந்தன. இஸ்லாமியமார்க்க விருத்தியே முதல்நோக்காக இருந்தது. கொழும்பு சிலெவ் ஐலண்டில் இதனை வெளியிட்டார்கள்.

1 919 ஆதி திராவிடன் : இதன் முதலாசிரியர் எஸ். பி கோபாலசாமி என்பது குறிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது. ஆனால் சுவடிகள் திணைக்களத்தில் பிரதிகளே இல்லை.

1920 சம்சுல் இஸ்லாம் : ஐ. எம். எஸ். முகமது யூசுவ் ஆலிம் இதன் முதல் ஆசிரியர். திருக்குர் ஆனின் போதனைகளைப் பரப்புவதே முதல் நோக்காக இருந்தது. இஸ்லாத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்தது. கொழும்பு புதிய சோனகதெருவிலிருந்த 'லங்கா மித்திரன்' அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



1921 ஆனந்தசாகரம்: சி. பதுமநாத ஐயர் இதன் முதல் ஆசிரியராவர். இதன் பிரதிகள் சுவடிகள் திணைக்களத்தில் இல்லை.

1922 தேச நேசன்: கோ. நடேசையர் இதன் முதலாசிரியராவார். இந்தியர்களை மனதிற் கொண்டு இதனை வெளியிட்டனர். இந்தியச் செய்திகள் மலைநாட்டுச் செய்திகள் நிறையஇடம்பெற்றன. இந்திய வம்சாவளியினரின் முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டிருந்த பத்திரிகை இது. கொழும்பு செபாஸ்தியான் ஹில் தேசநேசன் அச்சியந்திரசாலையில் இது அச்சாகி வெளி வந்தது.

1923 தேசாபிமானி: டி. பி. மாசிலாமணிப் பிள்ளை முதலாவது ஆசிரியர் இலங்கையின் அரசியல் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்காக இது உழைத்தது. வண்ணார்பண்ணை நாவலர் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

1924 தேச பக்தன்: கோ. நடேசய்யரும் எச். நெல்லையாவும் இதன் முதல் ஆசிரியர்கள். மலையகத் தோட்டத் தொழிலாளியின் உரிமைகளுக்காகப் போராடி வந்தது. அரசியல் சமூக முனனேற்றத்தை மனதிற் கொண்டே இதனை வெளியிட்டு வந்தனர். கொழும்பு தேசபக்தன் அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர்.

1924 தொழிலாளி: இதன் முதல் ஆசிரியர் ஆர். சாரங்கபாணிச் செட்டியார். தொழிலாளரின் நலனைப் பேணுவதே முதல் நோக்காக இருந்ததெனினும், அரசியல், சமூக முன்னேற்றம் சம்பந்தமான செய்திகளை வெளியிட்டது. கொழும்பு றெக்ளமேஷன் றோட் தொழிலாளர் அச்சுக்கூடத்தில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர்.

www.padippakam.com



**1924** சைவசித்தாந்த பானு : என். பண்டிட் நடராசா இப்பத்திரிகையின் முதலாவது ஆசிரியர். சமய தத்துவ விளக்கத்தோடு புராணக் கதைகள் சமயச் சீர்திருத்தக் கருத்துக்கள் இடம்பெற்றன. வசாவிளான் ஜெயஸ்ரீ சாரதா பீட அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டனர்.

**1924** இந்தியன் : இதன் முதலாசிரியர் ஏ. சாம் ஜோன் என்பவர். இந்திய அரசியல் போக்கு பற்றிய செய்திகள் முக்கியத்துவம் பெற்றன. இலங்கை அரசியல் துறை நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கொழும்பு ஆனந்தா அச்சகத்தில் இலங்கை இந்தியச் சங்கம் வெளியிட்டது.

**1924** இலங்கை விகடன் : அரசியல் சமூக முன்னேற்றத்தை முதல் நோக்கமாகக் கொண்டுழைத்த இப்பத்திரிகை செய்திக்கு முதலிடம் கொடுத்தது. கொழும்பு ஹற்றன் அச்சியந்திர சாலையில் அச்சிட்டனர். இதன் முதலாம் ஆசிரியர் கே. டி. சிதம்பரம்.

**1925** கத்தோலிக்க தூதன் : இது கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் சென் அந்தோணி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட இப்பிரசுரம் விவிலிய உண்மைகளை எடுத்துக் கூறுவதனையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. இதன் முதல் ஆசிரியர் வி. எம். யோப்பையா.

**1925** தேசத் தொண்டன் : இதன் முதலாவது ஆசிரியராக கே. டி. சிதம்பரமே இருந்தார். இது செய்திப் பத்திரிகையாகவே மிளிர்ந்தது. நாட்டின் முன்னேற்றத்தை மனதிற்கொண்டு உழைத்தது. இலங்கை, இந்திய அரசியல் விவகாரங்கள் சம்பந்தமாகப் பல விமர்சனக் கட்டு

www.padippakam.com



ரைகள் இதில் வெளிவந்துள்ளன. கொழும்பு யூனியன் பிளேஸ் கற்பக அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டனர்.

1925 மேல்நோக்கம் : இதன் முதல் ஆசிரியர் வி. கந்தையா ஆவர். அரசியல், சமூகத் துறைகள் பற்றி அதிக சிரத்தை எடுத்துள்ளது. சகோதரத்துவம், தீண்டாமையின் தீய இயல்புகள் பற்றி வற்புறுத்திக் கூறி வந்துள்ளது. அச்சுவேலி ஞானப்பிரகாச அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

1925 தமிழர் போதினி : இதன் முதலாசிரியர் கே. விஜயரத்தினம். யாழ்ப்பாணம் நாவலர் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்ட இப்பத்திரிகை பல திறப்பட்ட செய்திகளுக்கும் இடமளித்தது. தமிழ் வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்திற்று.

1926 சத்திய மித்திரன் : இந்திய அரசியல் சம்பந்தமான விஷயங்கள் முக்கிய இடம் பெற்றன. எனினும் இலங்கை அரசியல் துறை நடவடிக்கைகளையும் எடுத்துக் கூறி வந்தது. கொழும்பு பெற்றா சத்திய மித்திரன் அச்சகத்தில் இது அச்சிடப்பட்டது. சி. எம். காளி இதன் முதல் ஆசிரியர்.

1928 ஆதி திராவிட மித்திரன் : இலங்கை இந்தியவம்சாவழியினர் நலனை இது பாதுகாத்து வந்தது. இந்திய அரசியலுக்கே பத்திரிகையில் முக்கியத்துவம் அளித்தனர். இராமநாதபுரம் மகாஜன சங்கம், கொழும்பு கொம்பனித் தெரு ஜான்கி அச்சியந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டது. இதன் முதலாவது ஆசிரியர் கே. டி. சிதம்பரமாவர்.

www.padippakam.com



**1927** கலிகால தீபம் : சைவ முன்னேற்றமே இவ்வெளியீட்டின் முக்கிய நொக்கமெனினும், அரசியல் சமூக விடயங்கள் இதில் இடம்பெற்றன. காரைநகர் மணிவாசக யந்திர சாலையில் அச்சிடப்பட்டது. மு. சபாரத்தினம் என்பவர் முதலாவது ஆசிரியராவர்.

**1927** திராவிடன் : வி. எம். கந்தையாவே ஆரம்பகால ஆசிரியர். செய்திப் பத்திரிகையாயிருந்த போதும் சமூக முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருந்ததால் தீண்டாமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தாழ்த்தப் பட்டோர் சங்கம் வண்ணார்பண்ணை சைவப் பிரகாச அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர்.

**1927** நியாயாபிமானி: இதன் முதலாசிரியர் ஆர். முத்தையா அம்பலம் என்பவர். செய்திப் பத்திரிகையாக இருந்தபோதிலும் அரசியல் சமூக விஷயங்களைக் காய்தலுவத்தலின்றி ஆராய்ந்தது. கொழும்பு செட்டித்தெரு குமரன் அச்சியந்திரத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

**1927** சோதிட பிரபாலினி : ஆர். எஸ். இரகுநாதையர் இதன் முதல் ஆசிரியர். அரசியல், சமூகச் செய்திகளும் சோதிட சர்ச்சைகளும் இடம்பெற்றன. மா. சிவராமலிங்கம் பிள்ளை எழுதிய 'பூங்காவனம்' என்ற தொடர் நாவல் இதில் தொடர்ந்து வெளியிடப்பட்டது. கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையில் இது அச்சிடப்பட்டது.

**1928** ஜனநேசன் : இந்தியத் தொழிலாளரின் முன்னேற்றதையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்ட பத்திரிகை. இலங்கை அரசியல் சுதந்தர போராட்டத்துக்கு ஆதரவு அளித்தனர். இதில்

www.padippakam.com



விளம்பரங்களும் புதுமையாகக் காணப்படு கின்றன. டி. சாரதநாதன் முதலாவது ஆசிரியர்.

1928 இலங்கை இந்தியன் : எச். நெல்லையா இதன் முதல் ஆசிரியராவார். இந்திய சுதந்தர போராட்டத் துக்கு சிறப்பிடம் அளித்தது. மலையக மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழ் மொழி வளர்ச்சியிலும் இது உதவிற்று. கொழும்பு ஹல்ஸ்ரப் இலங்கை இந்திய அச்சகத் தில் இதனை அச்சிட்டனர்.

1928 தேசபந்து : பி. அல்பின் பர்னாந்து இதன் முதல் ஆசிரியர். இடது சாரிக் கருத்துகள் கூறப்பட்டன வெனினும் இது அரசியல் கருத்தை ஆதரிக்கும் கட்சிகள் பெறலாம். கொழும்பு தேசபந்து அச்சகத்தில் அச்சிடப்பட்டன.

1928 தொழிலாளர் தோழன் : எஸ். பி. எட்வர்ட் இதன் முதல் ஆசிரியர். சுதந்திரம் சமத்துவம் சகோ தரத்துவம் என்ற நோக்கத்தைக் கொண்டவை கொழும்பு பாம்வீதி வேபர் அச்சகத்தில் அச் சிட்டு வெளியிட்டனர்.

1929 நேசத் தொண்டன் : ஜம்புசாமிப் பிள்ளை இதன் முதல் ஆசிரியர். இலங்கை இந்திய அரசியல் நிலை பற்றிய விமர்சனங்கள் வெளியாகின. உள் நாட்டைப் பொறுத்த வரையில் சமூக அரசியல் சீர்திருத்தத்தை இது நாடியது. சமயமும் இடம் பெற்றது. கொழும்பு லங்கா மித்திரன் அச்சுக் கூடத்தில் இது அச்சிடப்பட்டது.

1929 இந்தியன் : இதன் முதலாவது ஆசிரியர் எ. என். ஜோன். செய்திப் பத்திரிகை என்ற உணர்வு காணப்படினும் இலங்கை இந்திய அரசியல் முக்கியமாக இடம் பெற்றிருந்தது. சமய சமூக

www.padippakam.com



முன்னேற்றமும் கருத்தில் இருந்தது. கொழும்பு சிலோன் ஐலண்ட் மீனாம்பாள் அச்சகத்தில் இது அச்சிடப்பட்டது.

1930 பஞ்ச சக்தி : ஆர். என். கார்த்திகேய ஆச்சாரி இதன் முதல் ஆசிரியர். தச்சுத் தொழில் சிற்பக் கலை பற்றியே முக்கியமாகக் கூறிவந்ததெனினும் சைவ சமய விடயங்கள் இதில் வெளிவந்தன. தெல்லிப் பழை பஞ்ச கன்மிய பரிபாலன சபை யினர் யாழ்ப்பாணம் ஸ்ரீ கணேச அச்சியந்திர சாலையில் இதனை அச்சிட்டு வெளியிட்டனர்.

1930 தினத்தபால் : க. அ. மீரா முகைதீன் இதன் முதல் ஆசிரியர். இது இலங்கை இந்திய அரசியல் விவகாரங்களுக்கு முக்கிய இடம் அளித்துவந்தது. கொழும்பு செட்டித்தெரு ஆனந்தா அச்சகத்தில் இதனை வெளியிட்டனர்.

1930 ஈழகேசரி : நா. பொன்னையா பிள்ளை இதன் முதல் ஆசிரியர். யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த தெனினும் இலங்கை முழுவதையும் களமாகக் கொண்டு வெளியான தேசிய பத்திரிகை. சேர். பொன்னம்பலம் இராமநாதனுடைய இலச்சியங் களுக்கு முதல் இடம் அளித்து வந்தது. செய்திப் பத்திரிகையாக மிளிர்ந்ததெனினும், ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சிக்கு உதவிற்று. ஈழத்து தேசத் தொண்டு கருதிய வெளியீடு என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. சுன்னாகம் திருமகள் அச்சகத்தில் இது அச்சிடப்பட்டது.

1930 வீரகேசரி : முதலாவது ஆசிரியராக பெரி. சுப்பிர மணியம் செட்டியார் இருந்தார். தேசிய தினப் பத்திரிகையாக இது வெளியிடப்பட்டது. உந்திய சுதந்தரப் போராட்டத்துக்கே முக்கியத்

www.padippakam.com



துவம் கொடுத்ததெனினும் இலங்கையின் அரசியல் விவகாரங்கள் இடம் பெற்றன. டொன மூரின் அரசியல் அமைப்புப் பற்றிய சிபார்சுகளை எச். நெல்லையா மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கின்றாரெனினும், இந்தியப் போராட்டத்துக்கே அதிக கவனம் செலுத்தப்பட்டிருப்பது தெளிவு. கொழும்பு செட்டி வீதியிலிருந்த வீரகேசரி அச்சகத்தில் இது அச்சுப்பதிவாயிற்று.

1930 தமிழர் தொண்டன் : தேசிய சுவடிகள் திணைக்களத்திலும் இதன் பிரதிகள் இல்லை.

1930 தொழிலாளி : இதன் முதலாவது ஆசிரியர் டி. சாரநாதன். இலங்கையில் வாழும் மலையகத் தோட்டத் தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன் இது ஆரம்பிக்கப்பட்டது. தொழிலாளர்களின் கஷ்டமான வாழ்க்கை, அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை அரசின் கவனத்துக்கு கடிதங்கள், விமர்சனங்கள், கட்டுரைகள் மூலம் எடுத்துக் கூறியிருக்கின்றார். அரசியல் விவகாரங்களையும் பதிவு செய்து வந்துள்ளது. கொழும்பு தொழிலாளி அச்சகத்தில் இது அச்சிடப்பட்டது.

1930 ஜனதர்ம போதினி : இதன் முதல் ஆசிரியர் யோவல் போல். பொதுச் செய்திகள், அரசியல் சமூகச் செய்திகள் இதில் இடம் பெற்றன. சமூகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் நிலை முக்கியமாக இதன் கண்ணோட்டத்தில் அகப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் ஸ்ரீ கணேச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

1930 கமத்தொழில் விளக்கம் : விவசாய மாத இதழ்.

1930 தப்லிக்குள் இஸ்லாம் : இது இஸ்லாத்தின் சிறப்புக் கூறுவது. சமய அறிவு வளர்ச்சி காண உதவியது.

படிப்பகம்

www.padippakam.com



நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வரலாற்றையும், திருக்குர் ஆன் கருத்துக்களையும் வெளியிட்டது. இஸ்லாமிய நாடுகளின் செய்திகளும் இதில் இடம் பெற்றன. கொழும்பு இஸ்லாம் அச்சியந்திரசாலையில் இதனை அச்சிட்டனர்.

1930 லங்கா : ஆசிரியர் கே. எஸ் அனந்தராம ஐயர்.

1930 தமிழன் : வீ. சாரங்கபாணி இதன் முதலாவது ஆசிரியர். அரசியல் செய்திகளும் ஏனையவும் இதில் இடம் பெற்றுள. சைவமும் தமிழும் வளர்ச்சி காண வேண்டும் என்ற உணர்வு காணப்பட்டது. யாழ்ப்பாணம் தமிழன் அச்சகத்தில் அச்சிட்டு இதனை வெளியிட்டனர்.

1930 தேசபக்தன் : கோ. ந. மீனாட்சி அம்மான் இதன் முதலாவது ஆசிரியர். இந்தியத் தமிழரே தம் வாசகர்கள் என்று முக்கியமாக மனதிற்கொண்டு இதனை வெளியிட்டனர். இலங்கை அரசியலை நல்ல முறையிலே பாரபட்சமின்றி ஆராய்ந்து விமர்சித்திருக்கின்றனர். தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டு இவர்கள் பற்றிய் செய்திகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன. கொழும்பு செட்டித்தெரு தொழிலாளர் அச்சுக்கூடத்தில் இதனை அச்சிட்டு வெளியிட்டார்கள்.

1932 தினகரன் : முதல் ஆசிரியர்கள் :

நிர்வாக ஆசிரியர்: திரு. மயில்வாகனம்

ஆசிரியர் : திரு. இராமநாதன்

www.padippakam.com

# பின் இணைப்பு : இரண்டு

## நூற்பட்டியல்

www.padippakam.com

இவ்வாராய்ச்சிக் கட்டுரை எழுதுதற்கு பயன்படுத்திய நூல்கள், பத்திரிகைகள் பின்வருமாறு :

**தமிழ் நூல்கள் :**


| | |
|---|---|
| அம்பிகைபாகன் இ. | கிறீனின் அடிச்சுவட்டில். யாழ்ப்பாணம், 1961. |
| அம்பிகைபாகன் ச. | யோகர் சுவாமிகள்— யாழ்ப்பாணம், 1972. |
| ஆர்னல்ட் என். ரி, | ஸ்ரீமத் ஜே. ஆர். ஆர்னல்ட் அவர்களின் சீவிய சரித்திரம்- யாழ்ப்பாணம், 1897. |
| இக்பால் இ. | மறுமலர்ச்சித் தந்தை, கொழும்பு, 1971. |
| கணபதிப்பிள்ளை க. | ஈழத்து வாழ்வும் வளமும்- பாரி நிலையம், சென்னை. ஏப்ரல் 1962. |
| குலரத்தினம் க. சி. | நோர்த் முதல் கோபல்லாவ வரை-யாழ்ப்பாணம், 1966. |
| குலேந்திரன் சபாபதி | கிறிஸ்தவ வேதாகமத்தின் வரலாறு பெங்களூர், 1957. |
| குளத்தூரன் ஜி. | தமிழ்ப் பத்திரிகை வளர்ச்சி- சென்னை. |
| கைலாசபதி க. | மகாகவி கண்ட மகாகவி, சென்னை, 1962. |
| | தமிழ் நாவல் இலக்கியம்- சென்னை, 1968. |
| கைலாசபிள்ளை த. | ஆறுமுகநாவலர் சரித்திரம்- வித்தியானுபாலன அச்சியந்திர சாலை, சென்னை, 1965. |

www.padippakam.com



சிவனேசச்செல்வன் ஆ. — இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத் துறையின் தோற்றமும் வளர்ச்சியும், 1930வரை. (முதுமாணிப் பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை)

சீனி வேங்கடசாமி மயிலை — பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம்-சென்னை, 1962.

செந்திநாதன் கனக. — ஈழத்து இலக்கிய வளர்ச்சி-கொழும்பு, 1962.

செல்வநாயகம் வி. — தமிழ் இலக்கிய வரலாறு, யாழ்ப்பாணம், 1952.
தமிழ் உரைநடை வரலாறு, கும்பகோணம், 1967.

நாவலர் மகாநாடு மலர் — யாழ்ப்பாணம், 1967.

நாவலர் பெருமான் 150 ஆவது ஜயந்தி மலர்.

சம்பந்தன் மா. சு. — அச்சுக்கலை, சென்னை, 1966.

சண்முகதாஸ் மனோன்மணி — சி. டபிள்யூ. தாமோதரம் பிள்ளை-ஓர் ஆய்வு நோக்கு. (முதுமாணிப் பட்டப் பரீட்சைக் கட்டுரை)

சிவத்தம்பி கலாநிதி கா. — தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்-சென்னை, 1969.
யார் இந்த யாழ்ப்பாணத் தான்-அஞ்சலி, கொழும்பு, செப்டெம்பர், 1971.

பத்திரிகையின் கதை — குணசேன வெளியீடு, கொழும்பு, 1966.

படிப்பகம்

www.padippakam.com



பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழா மலர், தெல்லிப்பளை, 1972.
பாரதி பாடல்கள் சென்னை.

புதுமை இலக்கியம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வெள்ளிவிழா இதழ்.

பூலோகசிங்கம் பொ. — 19 ஆம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வளர்ச்சி, அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு நினைவு மலர், 1974.

பொன்னம்பலம் அருணா — 1853-1921 சீவிய சரித்திரச் சுருக்கம், கொழும்பு, 1953.

வித்தியானந்தன் சு. — இலக்கியத் தென்றல்-கண்டி, 1952. தமிழர் சார்பு- சென்னை, 1971. அமெரிக்கன் மிஷனும் தமிழ்க் கல்வியும், உடுவில் மகளிர் கல்லூரியும், 1941-1969. என்ற தொகுப்பில் எழுதிய கட்டுரை. கலையும் பண்பும் (பிறையன்பன்), கண்டி.

ஜெபநேசன் எஸ். — அமெரிக்கன் மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்- வட்டுக்கோட்டை, 1983.

**தமிழ்ப் பத்திரிக்கைகள் :**

இந்து சாதனம் — ஆசிரியர் : த. கைலாசபிள்ளை, சைவப்பிரகாச அச்சியந்திரசாலை-யாழ்ப்பாணம், 1889.

www.padippakam.com



| | |
|---|---|
| இலங்காபிமானி | ஆசிரியர் : சி. ப. கதிரைவேற்பிள்ளை. றிப்ளி அன்ட் ஸ்ரோங் அச்சகம், மானிப்பாய், 1863. |
| இலங்கைத் தினவர்த்தமானி | ஆசிரியர் : ரிசல் ராஜூப் பிள்ளை, கொழும்பு அச்சகம், கொழும்பு. 1886. |
| இலங்கை நேசன் | ஆசிரியர் : எச். எம். சின்னத்தம்பி, லங்காசனகன் அச்சுயந்திரசாலை, யாழ்ப்பாணம், 1877. |
| இலங்கை பாதுகாவலன் | ஆசிரியர் : இ. முத்தையா பிள்ளை, மக்சிரி விகரண அச்சகம், கொழும்பு, 1868 |
| ஈழகேசரி | சுன்னாகம். |
| ஈழநாடு | யாழ்ப்பாணம், 1959 முதல். |
| உதயதாரகை | ஆசிரியர் : ஆர்னால்ட் சதாசிவம்பிள்ளை அமெரிக்கன் மிஷன் அச்சகம், மானிப்பாய், 1841 முதல். |
| செய்தி | ஆசிரியர் : ராமு நாகலிங்கம், கண்டி, 1965. |
| தினகரன் | 1932 முதல். |
| தினபதி | 1966 முதல். |
| தொழிலாளர் தோழன் | கொழும்பு, 1938. |
| பாலச்சந்திரன் | எம். வி. பொன்னம்பலம், ஆசிரியர், கொழும்பு, 1910. |
| பாலியர் நேசன் | மானிப்பாய், 1864. |



படிப்பகம்

www.padippakam.com




| | |
|---|---|
| புதினாலக்காரி | கொழும்பு, 1873. |
| புதினாதிபதி | கொழும்பு, 1870. |
| புதுமை இலக்கியம் | முற்போக்கு எழுத்தாளர் சங்க வெளியீடு. |
| முஸ்லீம் நேசன் | கே. சித்திலெப்பை, கண்டி, 1882. |
| யாழ்ப்பாண கத்தோலிக்க பாதுகாவலன் | யாழ்ப்பாணம், 1876. |
| வீரகேசரி | 1930 முதல். |


## ஆங்கில நூல்களும் கட்டுரைகளும்


| | |
|---|---|
| | 'The American Ceylon Mission, 1816-1866. |
| | Ter Jubilee Brouchure, Manipay, 1966. |
| Chelliah J. V. | Morning Star Centenary, 1941. |
| | A century of English Education. |
| | The Story of Battilaloa Seminary and Jaffna College, American Ceylon Mission Press, 1922. |
| | Inuvil - Story of Mcleod Hospital. American Ceylon Mission Press, 1920. |
| de Silva A. A. | Lives that Inspire, Colombo, 1978. |


படிப்பகம்

www.padippakam.com



de Silva A. V. — Dutch in Ceylon, Dehiwela, 1919.

de Silva Chandra Richard — Portugese in Ceylon, 1617 - 1638.

de Silva - Colvin R. — Ceylon under the British Occupation, Part I.

de Silva K. M. — 'History of Ceylon', Vol. III. (Orgins of nationalism) Social Policy and Missionary Organisation in Ceylon. Royal Common Wealth Society, No. xxvii, 1965.

Desmond — Information Process. The Press in America.

Edward Sabir — Communication Encyclopaedia of Social Service. Vol.: 3-4, New York, 1963.

Firth C. B. — An Introduction to Indian Church History. The Christian Literature Society, Madurai, 1961.

Hulugalle H. A. J. — Don Stephen Senanayake, Colombo, 1975.
The Life and Times of D. R. Wijewardene, Colombo, 1970.
British Governors of Ceylon, Colombo, 1963.

Indrapala K. — Jaffna College Centenary Publication. The American Con-

படிப்பகம்

www.padippakam.com



| | |
|---|---|
| | tribution to the Modernisation of Tamil Studies. |
| Kailasapathy K. | Arnold Sathasivampillai and the Tamil Renaissance, Jaffna College Miscellany. Centenary Publication. |
| Katherine S. Diehl | The Dutch Press in Ceylon. 1734 - 96. Library Quarterly Vol. 42, No.3 |
| Kulathungam Lyman S. | The Story of the Star. The Morning Star 1841-1941. Centenary Memorial Edition, Tellipalai, 1941. |
| Kulendran S. | The Company of them that Publish, Manipay, 1956. |
| Mathiaparanam K. E. | Contribution by Missionaries who have served in Ceylon. Proceedings of the first International Conference on Tamil Studies 1966. |
| Mendis Dr. G. C. | Early History of Ceylon. Ceylon Under the British. |
| Mills B. A. Amirthanayagam | Samuel F. Green M. D. Journal of the Colombo Hospital Oct. 1975, Vol. 2. No. 4. |
| Natarajan J. | History of Indian Journalism Part II Report of the Press Commission, New Delhi, 1955. |

படிப்பகம்

www.padippakam.com



Natarajan S. — A History of Printing in Indi,a Bombay, 1962.

Perera Fr. S. G. — History of Ceylon for Schools, 1932.

The Jesuits in Ceylon in the XVI and XVII Centuries. De Noberit Press, Madurai, 1941.

Prielkar A. K. — The Printing Press in India - Bombay, 1958.

Ragunatha Mudaliar V. — The Contribution of Saiva Paripalana Sabhai in Education. An Essay submitted for the Diploma in Education, University of Ceylon Peredeniya, 1972.

Rhodes E Dennis — The Spread of Printing in Eastern Hemisphee, London, 1969

Selkirk J. — Recollections of Ceylon.

Small Rev. W. J. T. — A History of the Methodist Church in Ceylon, 1814-1864.

Subramaniam V. — Tamil Political. Journalism-Pre Gandiam Period. Tamil Culture Vol. X. No.4.

Thambiah. H.W. — Principles of Ceylon Law' Colombo, 1971

Tennent Sir James Emerson — Christianity in Ceylon, London, 1850.

Velupillai C.D. — History of the AmericanMission

படிப்பகம்

www.padippakam.com



American Ceylon Mission Press 1922.

Vimalachandra A. — The American Contribution to the Development of Tamil Language in Ceylon. Proceedings of conference Seminar of Tamil Studies Kaulalumpur 1966.

Vithianathan Dr. S. — Tamil Literature and Scholarship. The pioneering work of Christians in Ceylon. (International Association of Tamil Research Vol.II, Kualalumpur, 1969.

Vittachi Tarzie — Emergency '58. (1958).

Weerawardene I.D.S. — Government and politics in Ceylon 1931-1948, Colombo, 1951)

Vythilingam M. — The life of sri Ponnambalam Ramanathan, Vol :I, 1971.

Wilson A.J. — Politics in Sri Lanka. (1941-1973), 1974.

Wriggins Howard — Ceylon-Dilemmas of a New Nation. Princetdon-1966.

ஆங்கிலப் பத்திரிகைகள் :

Ceylon Observer.

Ceylon Daily News.

Times of Ceylon.

Morning Leader.

www.padippakam.com



**திரு. இ. சிவகுருநாதன்** கொழும்பிலிருந்து வெளிவரும் **தினகரன்** நாளிதழின் பிரதம ஆசிரியராக சென்ற மூன்று தசாப்தங்களுக்கு மேலாகப் பணி புரிபவர். இந்நாளிதழை இலங்கையின் மிகப்பெரிய செய்திப் பத்திரிகை நிறுவனமான லேக் ஹவுஸ் (LAKE HOUSE) ஸ்தாபனம் வெளியிடுகிறது. ஆசிரியரின் செய்தித்துறைப் புலமை, அனுபவம், வரலாற்றுநோக்கு, தமிழிலக்கிய ஆர்வமும் அதன் வளர்ச்சியில் **தினகரன்** ஊடாக ஆற்றிய பங்களிப்பு யாவையும் இந்நூல் மூலம் அறியலாம். ஆசிரியரின் எம். ஏ. பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரையே நூலுருப்பெறுகிறது.

இவர் ஒரு சட்டவல்லுனருமாவர். பல ஆண்டுகளாக இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தலைவராகவும் பணி புரிகிறார். பத்திரிகையாளரிடை மட்டுமல்ல கலை, இலக்கியப் படைப்பாளரிடையேயும் இவர் நன் மதிப்புப் பெற்றவர்.

உலகில் தகவல் தொடர்பின் தோற்றம், அதன் வரலாறு, இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையின் ஆரம்பம், பொருளாதார அரசியல் சமூக மாற்றங்களூடாக செய்திப் பத்திரிகையின் வளர்ச்சி, தேசிய இன எழுச்சிப் பாதிப்பு யாவற்றையும் ஆசிரியர் ஆழமாகவும் அகலமாகவும் இந்நூலில் விரித்துள்ளார்.

படிப்பகம்